
BIBLE TIMES
LIFE STYLE



# வேதாகம கால வாழ்க்கை முறை

ஆன்ட்ரு தேவ்

# வேதாகம கால வாழ்க்கை முறை

சகோ. ஆன்ட்ரு தேவ்
(இயேசுவின் இயக்கம்)

Bible Calls
CHENNAI. INDIA

***Bible Times & Life Style***
**Andrew Dev ©**

First Edition : Feb. 2012
Second Edition : July 2019

**Published by :**
Bible Calls
Chennai-India.
Mobile : +91-9244448080
E-mail : biblecalls@gmail.com
Website : www.biblecalls.com

**Contact Address:**
The Jesus Mission
P.O.Box1040
Chennai-10, India
Phone : 044-49578080
Mobile : + 91+9444498080
Email : thejesusmission@yahoo.com
Website : www.thejesusmission.org
Youtube : Bible Calls

120/-

**Price: Rs. [redacted] /-**

இப்புத்தகச்செய்திகள் தவறாகக் கையாளப்படுவதை தவிர்க்கவும். ஆசிரியரின் அனுமதியில்லாமல், இப்புத்தகத்திலுள்ள செய்திகள் அச்சிடப்படவோ அல்லது மொழிபெயர்க்கப்படவோ கூடாது.





**வேதாகம கால வாழ்க்கை முறை - முன்னுரை** 1

1. **காலங்கள் - TIMES** ---------------------------------------- 3

**1.** நேரம் (Time ) 3

**2.** மணி ( Hour) 4

**3.** மாதங்கள் (Months ) 5

**4.** வருடங்கள் (Years) 6

**5.** வாரங்கள் ( Weeks) 8

**6.** பருவங்கள் (Seasons) 9

2. **அளவுகள் - MEASUREMENTS** ---------------------------------------- 10

***அ. நீளம் குறித்த அளவுகள்*** ( *Measurements of Length* ) 10

**1.** விரற்கடை (Finger) 10

**2.** நாலுவிரற்கடை**(**உள்ளங்கை**)** (Hand Breadth) 10

**3.** ஜாண் (Span) 11

**4.** முழம் (Cubit) 11

**5.** அளவுகோல் (Rod) 11

**6.** நூல் (Line) 11

**7.** மைல் **(**Mile **)** 11

***ஆ. நிறைகளின் அளவு*** ( *Measurements of Weight* ) 12

**1.** நிறைகற்கள் (Weight) 12

**2.** சேக்கல் (Shekel) 12

3. இராத்தல் (Mina or Maneh) 12
4. தாலந்து (Talent or Kikkar) 12
5. பெக்கா (Beqa) 13
6. கேரா (Gerah) 13
7. வெள்ளி காசுகள் (Pieces of Money) 13
**இ. கொள்ளளவுகள்** ( Measures of Capacity ) 13
***பழைய ஏற்பாட்டுக் கால அளவுகள்*** 13
1. கலம் (Homer) 13
2. மரக்கால் (Cor or Ephah) 13
3. அரைக்கலம் (Letek) 13
4. குடம் (Bath) 13
5. படி (Seah or measure) 13
6. ஹின் (Hin) 14
7. ஓமர் (Omer) 14
8. கால்படி (Cab) 14
9. ஆழாக்கு (Log) 14
***புதிய ஏற்பாட்டுக் கால அளவுகள்*** 14
1. படி (Choinix, Quart) 14
2. மரக்கால் (Modios, Bushel) 14
3. கலம் (Koros, Measure of Wheat) 14
4. கிண்ணம் (Xestes, Pot) 14
5. குடம் (Batos, Measure) 14
6. கற்சாடி (Metretes, Fikrin) 15

3. **வஸ்திரங்கள் – DRESSES** ------------------------------------------ 16
1. அரைக்கச்சை (Loincloth or Waste cloth) 17
2. அங்கி (Tunic or Robe) 18
3. சால்வை (Coat or Cloak) 18
4. முக்காடு (Head Coverings) 19
5. தலைப்பாகை (Turban or Hood) 19
6. வார்க்கச்சை (Belt or Girdle ) 19
7. பாதரட்சைகள் (Sandals) 19

4. **அணிகலன்கள் - ORNAMENTS** ---------------------------------- 22

1. அஸ்தகடகங்கள் (Bracelets) 22
2. மோதிரங்கள் (Rings) 23
3. சரப்பணிகள் (Necklaces) 23
4. சித்திரத் தையலாடை (Embroidery or Needle work) 24

***அ. அலங்காரமும் அழகுசாதனப் பொருட்களும்*** 24

1. தலைமயிர், தாடி (Hair and Beard) 24
2. சீப்புகள் (Combs) 25
3. சவரகன் கத்தி (Razor) 26
4. அழகுசாதனப் பொருட்கள் (Cosmetics) 26
5. எண்ணெய் (Oil) 27
6. சோப்பு (Soap) 27
7. சுத்திகரிப்பின் சாதனங்கள் (Toilet Articles) 27
8. கண்மை (Eye paint) 27
9. பச்சைக் குத்துதல் (Tatooing) 28

5. **வீடுகளும் வாசஸ்தலங்களும்- HOUSES AND DWELLINGS** 29

1. குகைகள் ( Caves) 29
2. கொட்டாரம் (Hut or Booth) 30
3. கூடாரம் (Tent) 30
4. வீடுகள் (Houses) 32
5. அஸ்திபாரம் (Foundation) 32
6. சுவர்கள் (Walls) 32
7. தரை (Floor) 33
8. ஜன்னல்கள் (Windows) 33
9. வாசல்கள் (Doorways) 34
10. கதவு (Door) 34
11. பூட்டுகள் (Locks) 34
12. கூரை (Roof) 35
13. வீட்டு உபயோகப் பொருட்கள் (Household goods) 36
14. திரிகைக்கல் (Millstone) 37
15. சமையல் பாத்திரங்கள் (Cooking Utensils) 37

**16.** தோல்பைகள் (Skin Bags) 37

**17.** கூடைகள் (Baskets) 38

**18.** மேசை (Table) 38

**19.** நாற்காலிகள் (Chairs) 38

**20.** படுக்கைகள் (Beds) 39

**21.** படுக்கை விரிப்புகள் (Bed coverings) 39

**22.** விருந்தோம்பல் (Hospitality) 40

6. **குடும்ப வாழ்வு – FAMILY LIFE** ---------------------------------------- 42

**1.** கோத்திரம் (Tribe) 42

**2.** வம்சம் (Family) 43

**3.** குடும்பம் (Household) 43

**4.** தகப்பன் & புருஷன் (Father & Husband) 44

**5.** தாய் & மனைவி (Mother & Wife) 44

**6.** பெண்கள் (Women) 45

**7.** திருமணம் (Marriage) 46

**8.** லேவிரேட் திருமணம் (Levirate marriage) 49

**9.** விபச்சாரம் (Adultery) 50

**10.** விவாகரத்து (Divorce) 50

**11.** பிரம்மச்சாரியம் (Celibacy) 51

**12.** பிள்ளைகள் (Children) 51

**13.** அடிமைகள் (Slaves) 52

**14.** பெண் அடிமைகள் (Female Slaves) 54

7. **கருவிலிருந்து கல்லறை வரை** ----------------------------------- 55

**FROM CRADLE TO THE GRAVE**

**1.** பிறப்பு (Birth) 55

**2.** பிரசவம் (Delivery) 56

**3.** பெயரிடுதல் (Nameing) 57

**4.** விருத்தசேதனம் (Circumcision) 58

**5.** பாலூட்டுதல் (Nursing) 58

**A. வாலிபமும் கல்வியும்** (Youthhood and Education) 58

**B. திருமணமும் கலாச்சாரமும்** (Marriage and Culture) 61
1. திருமண வயது (Marriage Age) 61
2. நிச்சயம் (Betrothal) 62
3. பரிசம் (Dowry) 62
4. திருமண வைபவம் (Wedding Ceremony) 63
**C. முதுமையும் மரணமும்** (Old Age and Death) 65
1. மரணம் (Death) 66
2. அடக்க ஆயத்தம் (Prepration of Body) 67
3. சரீரத்தை பதப்படுத்துதல் (Embalming) 67
4. அடக்கம் (Burial) 68
5. கல்லறை (Tomb) 68
6. துக்கம் (Grief) 68

8. **சமயவாழ்வு – RELIGIOUS LIFE** ---------------------------------- 70
**1. சீனாய் மலைக்கு முற்பட்டகாலம்** (Before Sinai) 71
1 புனிதமும் புனிதமற்றதும் (Sacred and Profane) 72
2. புனித ஸ்தலங்கள் (Sacred places) 73
3. கானானியரின் தெய்வங்கள் (Asherah) 73
**2. ஆசரிப்புக்கூடார முறைகளைக் கையாண்ட காலம்** 75
1. ஆசரிப்புக் கூடாரம் (Tabernacle) 75
2. காணிக்கைகளும் பலிகளும் (Offerings and Sacrifices) 76
3. சர்வாங்க தகனபலி (Whole burnt offering) 77
4. பாவநிவாரண பலி (Sin offering) 77
5. சமாதான பலி (Peace offering) 77
6. போஜன பலி (Meal offering-Minhah) 78
**3. தேவாலய தொழுகையின் காலம்** 78
**4. புதிய ஏற்பாட்டு ஆராதனைக்காலம்** 79

9. **பண்டிகைகள் – FEASTS** ---------------------------------------- 81
1. ஓய்வுநாள் (Sabbath) 82
2. அமாவாசை (New Moon) 82
3. பஸ்கா பண்டிகை (Passover *or* the feast of unleavened) 83

4. வாரங்களின் பண்டிகை (The feast of weeks) 85
5. கூடார பண்டிகை (The feast of tabernacles) 86
6. பாவ நிவிர்த்தி செய்யும் நாள் (Day of Atonement) 87
7. தேவாலய பிரதிஷ்டைப் பண்டிகை (Feast of Dedication) 88
8. பூரிம் (Purim) 89
9. புதிய ஏற்பாட்டு பஸ்கா பண்டிகை (Passover in the N.T) 89

10. **பண்ணை வேலைகள் - HUSBANDRY** ------------------------- 92

**1. சீதோ ஷ்ணகாலமும், பருவமும்** (Climate and Seasons) 93
**2. நிலத்தைப் பண்படுத்துதல்** 95
1. அறுவடை (Harvest) 96
2. தூற்றுக்களம் ( Threshing Floor) 97
**3. திராட்சைத்தோட்டத் தொழில்** 99
1. திராட்சை ஆலை (Wine Press) 102
2. புது திராட்சை ரசம் (New Wine) 102
2. உலர்ந்த திராட்சை (Dry Graphesaisins) 103
3. அத்திமரம் (Fig Tree) 103
4. முதல் கனி (First Fruit) 104
5. கோடைக்கால அத்தி (Summer Fig) 104
6. குளிர்கால அத்தி (Winter Fig) 105
**4. தோட்டங்கள்** (Gardens) 106
1. சித்தீம் மரம் (Acacia) 107
2. கேதுருமரம் (Cedar -Cedrus libani) 107
3. தேவதாருமரம் (Cypress) 107
4. புன்னை மரம் ( Fir- Plane -Platanus orientalis) 107
5. கதிர் பொறுக்குதல் (Gleaning) 108
6. ஒலிவ மரம் (Olive Tree) 108
**5. வீட்டு விலங்குகள்** 110
1. செம்மறியாடு (Sheep) 110
2. வெள்ளாடு (Goat) 111
**6. மந்தை மேய்த்தல்** 111

1. மேய்ப்பனின் உடை(Cloak) 112
2. தோல் பை ( Scrip & gourd) 113
3. கோல் ( Rod) 113
4. தடி (Staff) 113
5. கவண்கல் (Sling) 114
6. மந்தையை காத்தல் ( Shepherding) 114

11. **தொழிலும் வர்த்தகமும் - BUSINESS & TRADE** -------------- 118

1. ஒட்டகம் (Camel) 119
2. காட்டுக் கழுதை (Wild Donkey) 119
3. குதிரைகள் (Horses) 120
4. பிறதொழில்கள் (Other Business) 120
5. அப்பம் சுடுதல் (Bakeing) 120
6. மீன்பிடித்தல் (Fishing) 122
7. வீசப்படும் வலை (Sling) 122
8. இழுத்தும்கொள்ளும் வலை (Sling) 122
9. தூண்டில் (Hooks) 122
10. வேட்டையாடுதல் (Hunting) 123
11. மண்பாண்டத் தொழில் (Pottery) 124
12. பகற்வேலைக்காரர்கள் ( Day Labourers) 125

12. **வியாபரமும் வியாபாரிகளும் - BUSINESS** ---------------- 126

1. வர்த்தக மார்க்கங்கள்( Business Routes) 127
2. பண்டமாற்றுமுறையும் நாணயங்களும் (Trade & Coins) 129

13. **அரசியல் வாழ்க்கை - POLITICAL LIFE** -------------------- 133

1. பட்டணங்கள்(Cities) 134
2. ராஜ்யம் (Kingdoms) 134
3. இஸ்ரவேல் ராஜ்யம் உருவான விதம் (Origin of Israel) 135
4. நியாயாதிபதிகள் (Judges) 135
5. அரசர்கள் (Kings) 135
6. இராஜாக்களின் திருமண வாழ்க்கை(Kings & Marriages) 138
7. ரோம ஆட்சியும் யூதரும் (Romans & Jews) 139

## தேவன் உங்களைக் கருவியாக பயன்படுத்துவார்...

எனது அன்பிற்குரிய வாசகர்களே! மீண்டும் ஓர் வேத ஆராய்ச்சி புத்தகத்தை எழுதி உங்களுக்கு வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். வேதத்தை வெறுமனே படிப்பதற்கும் அதன் சரித்திரப் பின்னணியை அறிந்து படிப்பதற்கும் எத்தனையோ வித்தியாசங்கள் உண்டு. இப்புத்தகம் வேதத்தின் சரித்திரப் பின்னணிகளையும் வேதாகம கால பழைய ஏற்பாட்டு மக்களின் வாழ்க்கைப் பின்னணிகளையும் சுவராஸ்யமாக விளக்குவதால், இதைப் படித்தபின் உங்கள் வேதவாசிப்பில் நல்ல தெளிவை உணருவீர்கள்.

இதிலுள்ள செய்திகள் வேத தியானத்திற்கு மட்டுமின்றி வேத ஆராய்ச்சிக்கும் வேதபாட வகுப்புகளுக்கும் மிக உதவியாயிருக்கும். குறிப்பாக போதகர், வேதாகமக் கல்லூரி பயிலுவோர் யாவருக்கும் இது மிகவும் தேவையுள்ள ஒரு புத்தகமாகும். இதிலுள்ள 13 பாடங்களும் மிக சுவையான செய்திகளை உங்களுக்குக் கொடுக்கக் கூடியதாய் இருக்கின்றன. உங்கள் பிரசங்க ஊழியத்திற்கும் இவைகள் நல்ல உபகரணமாய் இருக்கும்.

பொதுவாக புத்தகங்களை நான் எழுதுகையில் சில புத்தகங்கள் எழுத துவங்கும் போதே மிகக்கடினமாய் இருப்பதுபோல் தோன்றும். நாட்கள் கூட அதிகம் எடுக்கும். எனது பல புத்தகங்களில் எழுதும்போதே ஒருவகை உற்சாகத்தை ஊட்டியது ஒரு சில புத்தகங்கள் மட்டுமே. அதில் இந்த புத்தகமும் ஒன்று. இதை நான் மிகவும் ரசித்து எழுதினேன். இந்நூல் எழுதுவதற்கு எனக்கு இன்பமாயும் உற்சாகமாயும் இருந்தது.இப்புத்தகத்தை எழுதி முடிக்க என் மனைவியும் எனக்கு அதிக உதவி செய்தார்.

வேதத்தை விரும்பி அதை மிகவும் நேசித்துப்படிக்கிற எவரும் இப்புத்தகத்தை விரும்பிப்படிப்பீர்கள்; இல்லையேல் இது உங்களுக்குப் புரியாத புத்தகமாகவே இருக்கும். இப்புத்தகம் உங்களை தெளிவுள்ளவர்களாக்கி, தேறினவர்களாக மாற்ற உதவும்.கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் தேறினவர்களாய் இருக்கும்படி (கொலோ 1:28) நான் வாஞ்சித்து மிகப் பிரயாசப்பட்டு உங்களுக்கு இதை அன்புடன் அளிக்கிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து ஒரு கருவியாக பயன்படுத்துவார் என்று நான் விசுவாசித்து உங்களை வாழ்த்துகிறேன்.

தேவ கிருபை உங்களோடு இருப்பதாக! அன்புடன் உங்கள்

12-02-2008 **சகோதரன் ஆன்ட்ரு தேவ்**

# வேதாகமக் கால வாழ்க்கை முறை

வேதாகமகால வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள உங்களை அழைத்துச் செல்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நாம் பல ஆண்டுகளாக வேதத்தில் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இருபகுதிகளையும் வழக்கமாய் படித்து பழக்கம் பெற்றிருக்கிறோம். ஆனால் அந்த வேதநிகழ்ச்சி களின் பின்னணி சம்பவங்களையும் அதன் சூழல்களையும் அறிந்து, புரிந்து படிப்பது நமக்கு வாய்ப்பில்லாமலே போவதுண்டு.

வேதத்தை தியானிப்பது என்பது வேறு, வேத ஆராய்ச்சியை செய்வது என்பது வேறு. வேததியானம் என்பது நம்மை ஆவிக்குரிய வாழ்க்கைக்கு முன்னோக்கி நடத்துவதற்கு உதவுகிறது. வேத ஆராய்ச்சி என்பது வேதத்தின் பின்னணி நிகழ்ச்சிகளை புரிந்து நாம் தெளிவாய் நிற்க வழிவகுக்கிறது. வேறு வார்த்தையில் கூறினால் வேததியானம் ஆவிக்குரிய உணவைத் தருகிறது. வேதஆராய்ச்சி அறிவுக்குரிய ஊட்டத்தைத் தருகிறது.

வேதவசனத்தை நாம் படிக்கும் போது நமக்கிருக்கும் குறைவான நேரத்தில் அதன் பின்னணியையும் அதன் கலாச்சார நிகழ்ச்சிகளையும் ஆராய்வதற்கு போதுமான நேரமில்லாமல் போய்விடுகிறது. ஆனால் வேதத்தின் பின்னணி களை நாம் அறிந்து கொண்டால் அந்த நிகழ்ச்சியின் முழு உருவத்தையும் புரிந்து கொள்வதற்கு நமக்கு எளிதாக இருக்கும். இச்சிறு புத்தகமானது வேதத்தின் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டுக் கால பின்னணிகளையும் அக்கால

மக்கள் வாழ்ந்த முறைகளையும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் அவர்கள் கலாச்சார நிகழ்ச்சிகளையும் வெகு சுருக்கமாக வேதவசன ஆதாரங்களோடு விளக்குகின்றது. இச்செய்திகள் இறையியல் மாணவர்களுக்கும் போதகர் களுக்கும் மட்டுமின்றி வேதாகமத்தைப் படிக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் பயன்படும் வகையில் எழுதப்பட்டிருக்கின்றது.

நவீன கால மக்களின் நடைமுறை வாழ்வுக்கும், வேதாகமகால மக்களின் வாழ்வுக்கும் பெருத்த வித்தியாசங்கள் காணப்படுகின்றன. வேதாகம காலத்தில் பயன்படுத்திய பொருட்கள், அளவுகள், காலக்குறிப்புகள் போன்றவற்றிற்கும் நவீன காலத்தில் பயன்படுத்தும் அளவுகள், குறிப்புகள் போன்றவற்றிற்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. உதாரணமாக மெத்தூசலா **969** ஆண்டுகள் வாழ்ந்ததாக வேதம் கூறுகிறது. இவன் உண்மையாகவே இத்தனை ஆண்டுகள் வாழ்ந்தானா? இந்த ஆண்டுகளின் கால அளவு நமது காலத்தில் பயன்படுத்தப்படும் அதே கால அளவா? அல்லது அதிலிருந்து வேறுபட்டிருக்கின்றதா? என பல வேளைகளில் நாம் நினைக்கத் தோன்றும்.

ஒரு ஓய்வுநாள் பயண தூரம் என்பது எவ்வளவு? ஒரு தாலந்தின் நிறை எவ்வளவு? இயேசு அற்புதம் செய்தபோது பயன்படுத்திய கற்சாடியின் கொள்ளளவு எவ்வளவு? ஆபிரகாமின் மனைவியாகிய சாராள் தூதர்களுக்கு அப்பம் சுடுகையில் எடுத்த மூன்று படி மெல்லிய மாவின் அளவு தற்காலத்தில் உள்ள அளவைப் போன்றதா? வேதத்தை வாசிக்கும்போது இது போன்ற பல கேள்விகள் நம் உள்ளத்தில் எழுந்ததுண்டு. இப்படிப்பட்ட கேள்விகளுக்கு பதில் தேடுவது நமக்கு பல வேளைகளில் சிரமமாய் இருக்கும். சில நேரங்களில் இக்கேள்விகளுக்கு பதிலை வேதாகமத்தில் வெளிப்படையாய்க் காண முடியாது.

சுமார் **4,000** ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவத்தை இன்று நம்முடைய நாட்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது என்பது அத்தனை எளிதல்ல. ஆனால் நாம் அந்த நிகழ்ச்சிகளின் தொடர்புடைய வேர்களைத் தேடி செல்வது தவறல்ல. வேத ஆராய்ச்சி என்பது தளிரிலிருந்து வேரைத் தேடி செல்வதாகும். நாமோ நிகழ்காலத்திலிருந்து கடந்த காலத்தை நோக்கிப் பயணித்து அதிலிருக்கிற உண்மைகளைப் புரிந்து கொண்டு எதிர்காலத்திற்குப் பயன்படுத்த வேண்டியவர் களாய் இருக்கிறோம்.

இவ்வண்ணமாக வேதாகமகால வாழ்க்கை முறையானது நம்முடைய கால வாழ்க்கை முறைக்கு தொடர்புண்டாக்கி அதிலிருந்து வருகிற உண்மைகளை நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உறுதியான ஆதாரமாக்கிக் கொண்டால் ஆத்துமாவிற்கு ஆனந்தமும் அறிவுக்கு தெளிவும் உண்டாகும். எனவே இவைகளில் ஒரு சில காரியங்களைக் குறித்து நாம் அறிந்து கொள்ளும்படி கீழ்க்காணும் குறிப்புகள் நமக்கு பயனுள்ளதாய் இருக்கின்றன.

1

# காலங்கள்

## (TIMES)

நம்முடைய காலம் ஒரு நிமிடத்திற்கு 60 வினாடிகள் என்றும், 60 நிமிடங்கள் ஒரு மணி நேரம் என்றும், 24 மணி நேரம் ஒரு நாள் என்றும், ஏழு நாள் ஒரு வாரம் என்றும் முப்பது நாள் 1 மாதம் என்றும், 12 மாதம் ஒரு வருடம் என்றும், கணக்கிட்டுப் பயன்படுத்தி வருகிறோம். இதே காலஅளவுகள் வேதாகம கால அளவுகளோடு இணைந்த ஒன்றா? அல்லது அவர்கள் பயன்படுத்திய கால அளவுகள் வேறா? என்பதை நாம் அறிந்து கொள்ள பின்வரும் குறிப்புகள் நமக்கு அதிகம் துணைபுரியும்.

### 1. நேரம் (TIME)

நேரத்தைப் பற்றிய குறிப்புகளை அறிந்து கொள்வதற்கு முன் 'நேரம்' எனும் ஒன்று எப்பொழுது எங்கே உருவாக்கப்பட்டது என்பதைத் தெரிந்து கொண்டாக வேண்டும். அதற்கு ஆதியாகமத்தின் முதல் அதிகாரம் நமக்கு ஆதாரமாக இருக்கின்றது. "தேவன் பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார்" (ஆதி.1:14). "தேவன் பகலை ஆள பெரிய சுடரும், இரவை ஆள சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும் நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்" (ஆதி.1:16). இவ்வசனத்தின்படி சூரியனும் சந்திரனும் சுடர்களும் நேரங்களை அறிந்து கொள்வதற்காக சிருஷ்டிக்கப்பட்டன என்பது தெளிவாகிறது.

இதனடிப்படையில் ஆதிகாலத்தில் சூரியனும் சந்திரனும் நேரங்களையும்

காலங்களையும் குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டு வந்தன.காலங்களைக் குறிக்கும்படியே தேவனும் இவைகளைப் படைத்தார். பூமியானது தன் அச்சிலே சுழன்று வருகையில் சூரியன் கிழக்கே உதித்து மேற்கே மறைகின்றது. சூரியன் அஸ்தமிக்கையில் பகலானது முடிவடைகின்றது. ஆகவே முற்கால மனிதர்களும் தற்கால யூதர்களும் ஒரு சூரிய அஸ்தமனத்திலிருந்து மறு சூரிய அஸ்தமனம் வரை "ஒரு நாளாக" (One day) கணக்கிடுகின்றனர். அதாவது ஒரு மாலையிலிருந்து மறுநாள் மாலைவரை ஒரு நாளாகக் கணக்கிடப்படுகிறது (ஆதி.1:5). மட்டுமல்ல, ஒரு நாளில் சூரியன் காணப்படுகின்ற நேரமானது பகல் எனவும் சூரியன் மறைந்தபின் இருளாக இருக்கும் நேரமானது இரவு என்றும் கூறப்படுகின்றது.

வேதாகம காலத்தில் வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு குறிப்பிட்ட பெயர் இல்லாவிடினும் ஒவ்வொரு நாளும் முதலாம் நாள் (First day) இரண்டாம் நாள் (Second day) என அழைக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் ஓய்வுநாள் அல்லது ஏழாம் நாள் (Seventh day) என்பது சனிக்கிழமையாகும் (யாத்.20:10). அதாவது பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ***ஓய்வுநாள்*** (Sabbath day) என்பது சனிக்கிழமை ஆகும். ஓய்வு நாளுக்கு முந்தின நாள் "***ஆயத்த நாள்***" எனப்பட்டது (மத்.27:62; ). ஞாயிற்றுக்கிழமையானது "***வாரத்தின் முதலாம் நாள்***" (First day) என அழைக்கப்பட்டது(யோவா.20:1; அப்.20:7;1 கொரி.16:2).புதிய ஏற்பாட்டில் இயேசு உயிர்த்தெழுந்தப்பின் சனிக்கிழமை ஓய்வுநாளாக அனுசரிக்கப்படாமல், ஞாயிற்றுக் கிழமையை அப்போஸ்தலர்கள் ஓய்வு நாளாக அனுசரிக்க துவங்கினர்.

பகல் நேரமானது காலை, மதியம், மாலை என மூன்று பகுதிகளாக பிரிக்கப் பட்டிருந்தது. காலையானது 'சூரியன் உதயம்' அல்லது 'அருணோதயம்' என்றழைக் கப்பட்டது (ஆதி.19:23). மதியமானது பகலின் 'உஷ்ணவேளை' என்றழைக்கப்பட்டது (ஆதி.18:1). சூரியன் மறையும் வேளையானது 'சூரிய அஸ்தமனம்' என்றழைக்கப் பட்டது (ஆதி.15:12). மதியத்திற்கும், சூரிய அஸ்தமனத்திற்கும் இடைப்பட்ட மாலை நேர மானது (4 மணி) பகலின் குளிர்ச்சியான வேளை என்றழைக்கப்பட்டது (ஆதி.3:8).

இஸ்ரவேலர்கள் இரவு நேரத்தை மூன்று ஜாமங்களாகப் பிரித்திருந்தனர் (சங்.63:6). 1. முதல் ஜாமம் (புலம்.2:19), 2. இரண்டாம் ஜாமம் அல்லது நடு ஜாமம் (நியா.7:19), 3. மூன்றாம் ஜாமம் அல்லது கிழக்கு வெளுக்கும் ஜாமம் (யாத்.14:24). இந்த மூன்று ஜாமமும் சமமான அளவு நேரங்களை கொண்டிருந்தன. ஆனால் புதிய ஏற்பாட்டு காலத்திலோ யூதர்கள் ரோம முறைப்படி இரவை 1. சாயங்காலம், 2. நடுராத்திரி, 3. சேவல் கூவும் நேரம், 4. காலை (மாற்.13:35) என நான்கு ஜாமங்களாக பிரித்திருந்தனர்.

## 2. மணி (HOUR)

ஒரு நாளைக்கு அவர்கள் பயன்படுத்திய மணி அளவும் நாம் பயன்படுத்தும் மணி அளவும் ஒன்றா? என நினைக்கத் தோன்றும். உண்மை என்னவென்றால் பழைய ஏற்பாட்டு காலத்து மக்களும் புதிய ஏற்பாட்டு மக்களும் "மணி"கணக்கைப் பயன்படுத்தினர் என்பதே. ஆனால் தானியேல் புத்தகத்தில் மாத்திரமே இந்த 'மணி'

(Hour) என்ற பதம் தீர்க்கதரிசன காலஅளவை குறிக்கிறது. ஒரு ஜாமத்தில் ஒரு சிறிய பகுதியே மணியாகும். நேரங்களை குறிப்பதற்கு சுமேரியர்களும் பாபிலோனியர்களும் "இரண்டு மணி" (Double hour) என்ற அளவை பயன்படுத்தினர். "இரண்டு மணி" அளவு என்பது ஐந்து அல்லது ஆறு மைல் தூரம் நடப்பதற்கு சமமாகும். எனவே ஒருநாளின் 24 மணி நேரத்தை12"இரண்டுமணி"(12x2=24) நேரங்களாகக் குறிப்பிட்டனர்.

கிரேக்கரும், ரோமரும் ஒரு நாளின் ஒரு பகுதியை குறிப்பதற்கு மணி (hour) அளவையே பயன்படுத்தினர். ரோமர்கள் பகலை 12 மணி நேரமாகவும் இரவை 12 மணி நேரமாகவும் பிரித்திருந்தனர். புதிய ஏற்பாட்டுக் காலத்து மக்களோ ரோமர்களது நேரத்தின் அளவுகளையே பயன்படுத்தி வந்தனர். எனவே பகலுக்கு 12 மணி நேரங்களும் இரவுக்கு 4 ஜாமங்களும் (12 மணிநேரம்) அவர்களால் கணக்கிடப்பட்டது. அவர்களது கணக்கின்படி சூரியன் உதயமாகும் காலை நேரம் (காலை 6 மணி) முதலாம் மணியாகும். அவர்களது மூன்றாம் மணியானது நமது கணக்கின்படி காலை 9 மணியாகும் (மாற்.15:25). ஆறாம் மணியானது நமது கணக்கின்படி பகல் 12 மணியாகும் (யோவா.4:6). ஒன்பதாம் மணியானது மதியம் 3 மணியாகும். பதினோராம் மணி என்பது மாலை 5 மணியாகும் (மத்.20:1–8).

சூரிய சுழற்சிப்படி வருடத்தின் எல்லா நாட்களும் ஒரு மணி நேரத்திற்கு 60 நிமிடங்கள் என்று கணக்கிட முடியாமல் இருந்தது. ஏனெனில் சூரிய சுழற்சிப்படி சில மாதங்களில் பகல் வேளைகள் அதிகமாய் இருப்பதாலும் சில மாதங்களில் பகல் வேளைகள் குறுகியதாய் இருப்பதாலும் வருடத்தின் எல்லா நாட்களும் ஒரு மணி நேரத்திற்கு 60 நிமிடங்கள் என்று கணக்கிடுவது கடினமாய் இருந்தது. பகற்பொழுது அதிகமாயிருக்கும் நாட்களில் ஒரு மணி நேரத்திற்கு 70 நிமிடங்களும், பகற்பொழுது குறுகியதாய் இருக்கும் நாட்களில் 1 மணி நேரத்திற்கு 50 நிமிடங்கள் என்றும் கணக்கிடப்பட்டது.

அதாவது, சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம்வரை உள்ள பகற் பொழு தானது சரியாக 12 பங்குகளாக பிரிக்கப்பட்டு கணக்கிடப்பட்டது. உதாரணமாக ஆகாசின் சூரிய கடிகாரத்தைக் குறித்து வேதம் கூறுகின்றது (ஏசா 38:7). இந்த கடிகாரமானது நமது காலத்தில் பயன்படுத்தப்படும் கடிகாரத்தைப் போன்றதல்ல. அதாவது படிகட்டுகளின் அருகேயுள்ள மதிலில் ஒரு கற்தூண் பதிக்கப்பட்டி ருந்தது. சூரியனின் சுழற்சிக்கு தகுந்தவாறு அந்த கற்தூணின் நிழல் ஒவ்வொரு படிகட்டுகளிலும் விழும்போது அந்த நிழலைக் கொண்டு நேரமானது துல்லிய மாகக் கணக்கிடப்பட்டது. இவ்வகையாக மணியைப் பயன்படுத்துவதற்கு பல் வேறு யுக்திகளும் பொருட்களும் கையாளப்பட்டன.

### 3. மாதங்கள் (MONTHS)

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மனிதர்கள் மாதங்களைக் குறித்த கணக்குகளை அனுசரித்து வந்தனர். அக்கால மக்கள் சந்திரனையும் சூரியனையும் விண்வெளி நட்சத்திரங்களையும் இதற்கு உதவியாக பயன்படுத்தினர். சந்திரனில் முதலாம்

பிறை (New moon) என்பது சூரிய அஸ்தமனத்திற்கு பின்பாக வானத்தின் மேற்கு திசையில் தோன்றும் மிக மெல்லிய பிறையாகும். அது ஒவ்வொரு நாளும் வளர்ந்து (Waxes) இரண்டு வாரங்களில் முழு நிலவாகின்றது (Full moon). அதன் பின்பு அது ஒவ்வொரு நாளும் தேய்ந்து (Wanes) இரண்டு வாரங்களில் மிக மெல்லிய பிறையாகி சூரியோதயத்தின்போது கிழக்கு திசையில் தோன்றுகின்றது. இப்படி ஒரு முதல் பிறையிலிருந்து அடுத்த முதல் பிறை தோன்றுவதற்கு **291/2** நாட்கள் ஆகின்றது. இப்படியாக சந்திரனை வைத்து மாதங்களைக் கணிப்பது ஆதிகாலம் முதற்கொண்டே அனுசரிக்கப்பட்டு வந்தன.

உலகின் பல மொழிகளிலும் “சந்திரன்” என்ற வார்த்தையிலிருந்தே “மாதம்” என்ற வார்த்தை உருவாகி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. உதாரணமாக ஆங்கிலத்தில் சந்திரனைக் குறிக்கும் Moon என்ற வார்த்தையிலிருந்தே மாதத்தைக் குறிக்கும் Month என்ற வார்த்தை பிறந்தது. அந்நாட்களில் சந்திரனின் சுழற்சி ஒவ்வொரு காலத்திலும் வேறுபடுவதால் சில மாதங்கள் **29** நாட்களும் சில மாதங்கள் **30** நாட்களுமாய் கணக்கிடப்படுகிறது. **29** ஆம் நாளின் மாலையில் மேற்கு திசையிலே முதலாம் பிறை தோன்றவில்லை என்றால் அது என்றைக்கு தோன்றுகிறதோ அந்த நாளே அடுத்த மாதத்தின் முதல் நாளாகக் கணக்கிடப்பட்டது.

### 4. வருடங்கள் (YEARS)

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தபோதே ஒவ்வொரு “காலத்தையும்” (Age) அவர் சிருஷ்டித்தார். பூமியுள்ள நாளளவும் விதைப்பும் (Seed time) அறுப்பும் (Harvest time) சீதளமும் உஷ்ணமும் (Cold and Heat time) கோடை காலமும் மாரிகாலமும் (Summer and Winter time) பகலும் இரவும் (Day and Night) ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்திலே தேவன் சொன்னார் என்று வேதம் கூறுகிறது (**ஆதி.8:22**). இந்த வசனத்தின்படி அக்கால மக்கள் காலநிலை மாற்றங்களின் அடிப்படையில் தங்களது வருடங்களைக் கணக்கிட்டுக் கொண்டனர்.

ஆதிமனிதர்கள் பூமியிலே பயிரிடத் தொடங்கிய நாள் முதலே விதைப்பு காலம், அறுப்பின் காலம், கோடை காலம், குளிர் காலம் போன்றவை ஒரு சீரான சுழற்சியில் வருவதை அறிந்து அதைப்பொறுத்து வருடங்களை கணக்கிட ஆரம்பித்தார்கள். எபிரேய மொழியில் “வருடம்” என்ற வார்த்தைக்கு “மாறுதல்” (To change) என்பது பொருளாகும். வருடங்களை குறித்து கணக்கிடாதிருந்த நாடோடிகளின் காலத்தில் வருடக் கணக்கிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் சூரிய, சந்திர பூமியின் சுழற்சியை வைத்து காலங்களைக் கணக்கிட்டு வந்தனர். ஆனால் நாகரிக காலத்திலோ மக்கள் சூரியன், சந்திரன், விதைப்பு, அறுப்பு,கோடைகாலம், குளிர் காலம் போன்றவற்றை வைத்து வருடங்களை துல்லியமாக கணக்கிடத் துவங்கினர்.

வேதாகம சரித்திரத்தின் மையஇடமான மத்திய கிழக்கு தேசங்களில் இஸ்ரவேலரும் முகமதியரும் வாழ்ந்த ஆரம்பகாலந்தொட்டே வருடக் கணக்கு வைத்திருந்தனர். குறிப்பாக அரேபிய பாலைவனத்தில் நாடோடிகளாய் வாழ்ந்த

முகமதிய முன்னோர்கள் துவங்கி, தற்காலத்தில் வாழ்கின்ற நாகரிக முகமதியரும் வானத்தில் தோன்றும் பிறையைக் கொண்டே தங்கள் வருடத்தை கணக்கிடுகின்றனர். ஆகவே அவர்களுடைய புனித மாதமாகிய ரமலான், நமது காலண்டரின்படி ஒவ்வொரு ஆண்டும் **11** நாட்களுக்கு முன்பாகவே வந்து விடுகின்றது.

பயிரிடும் குடிகளாய் வாழ்ந்த ஆதிகால மக்கள் சூரியனின் சுழற்சி, நட்சத்திர விண்மீன் கூட்டங்களின் பெயர்ச்சி, சீதோஷ்ண சூழ்நிலைகளின் மாற்றங்கள் போன்றவற்றை கருத்தில் கொண்டு ஒரு புதிய ஆண்டு வசந்த காலத்தில் துவங்குகிறது என்று கணக்கிட்டனர். மெசபடோமியா சமவெளியிலே வாழ்ந்த மக்கள் சந்திரனைக் கொண்டு காலத்தை கணக்கிட்டபடியினால் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு மாதத்தை சேர்த்துக்கொண்டனர் (Extra intercalary month). அப்படி சேர்த்தபொழுது தான் சந்திர சுழற்சியின்படியான வருடக்கணக்கும் சூரிய சுழற்சியின்படியான வருடக்கணக்கும் ஒன்றோடொன்று சரிசமமாயிற்று.

யூதர்கள் அனுசரித்த மாதங்களும் நாம் அனுசரிக்கும் மாதங்களும் வெவ்வேறு காலத்தில் துவங்கி முடிகின்றன. அதாவது **1.** ஆபிப் (நிசான்) (மார்ச்–ஏப்ரல்) **2.** சீப் (ஏப்ரல்–மே) **3.** சீவான் (மே–ஜுன்) **4.** தம்மூஸ் (ஜுன்–ஜுலை), **5.** ஆப் (ஜுலை–ஆகஸ்டு), **6.** ஏலூல் (ஆகஸ்டு– செப்டம்பர்), **7.** ஏதானீயம் (திஸ்ரி) (செப்டம்பர்–அக்டோபர்), **8.** பூல் (அக்டோபர்–நவம்பர்), **9.** கிஸ்லே (நவம்பர்–டிசம்பர்), **10.** தேபேத் (டிசம்பர்–ஜனவரி), **11.** சேபத் (ஜனவரி–பிப்ரவரி), **12.** ஆதார் (பிப்ரவரி–மார்ச்) என்ற காலஅளவோடு துவங்கி முடிகிறது.

யூதர்களும் வானத்தில் தோன்றும் பிறையை வைத்தே வருட காலத்தை கணக்கிடுகிறபடியால் யூத காலண்டரில் தேவைக் கேற்றாற்போல் ஒரு மாதம் அதிகமாய் சேர்த்துக் கொள்ளப்படுகிறது (Extra intercalary month). அப்படி செய்வதால் யூதர்கள் கடைபிடிக்கும் மாதங்களில் முதல் மாதமாகிய நிசான் மாதம் எப்பொழுதுமே நமது வசந்த காலத்தில் துவங்குகிறது.

எகிப்தியரும் ஒரு வருடத்திற்கு **365** நாட்கள், 12 மாதங்கள், ஒரு மாதத்திற்கு **30** நாள்கள் அதோடு கூடுலாக **5** நாட்கள் என்ற கணக்கை வைத்திருக்கின்றனர். எகிப்தில் ஓடும் நைல் நதியின் தண்ணீர் அளவு ஒவ்வொரு சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்றாற்போல் மாறினபடியால் ஒரு சில எகிப்தியர் நைல் நதியின் தண்ணீர் அளவைக்கொண்டு வருடத்தைக் கணக்கிட்டனர். எகிப்திய காலண்டரின்படி ஒரு வருடத்திற்கு **365** நாட்கள். ஆனால் நமது காலண்டரின்படி ஒரு வருடத்திற்கு **365**1/4 நாட்கள். ஆகவே எகிப்தியரின் புதுவருடம் ஒவ்வொரு ஆண்டும் நம்முடைய புதுவருடத்திற்கு முன்பதாகவே வந்துவிடுகிறது. **120** ஆண்டுகளில் அவர்களது புதுவருடம் நம்முடைய புதுவருடத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பதாகவும், **1460** வருடங்களில் ஒரு வருடத்திற்கு முன்பதாகவும் வந்துவிடும். இப்படியாக வருகின்ற வருடத்தை (Sothic year) எகிப்தியர் தங்களுடைய குறிப்பேடுகளில் குறித்து வைத்திருக்கின்றனர்.

***வருடங்கள் துவங்கிய முறை :–*** இஸ்ரவேல் மக்கள் வரலாற்றின் ஆரம்ப நாட்களில் ஒரு வருடத்தின் மாதங்களை முதல் மாதம் இரண்டாம் மாதம் என்றே பெயரிட்டு அழைத்தனர் (வருஷத்தின் முதல் மாதம் – யாத்.12:2; ஏழாவது மாதம் – 1 நாளா.27:9; முதல் மாதம் – எஸ்த. 3:7). பின் நாட்களிலோ கானானிய தேசத்து மாதங்களின் பெயர்களை இவர்கள் பயன்படுத்த ஆரம்பித்தனர். யூத காலண்டரில் இந்த கானானிய மாதங்களின் பெயர்களே பயன்படுத்தப்படுகிறது. வசந்த காலத்தில் பிறக்கின்ற நிசான் (Nisan) மாதமானது அவர்கள் வருடத்தின் முதல் மாதமாகும் (நெகே.2:1; எஸ்த.3:7).

நவீன கால யூதர்கள் ஏழாம் மாதமாகிய திஷ்ரி (Tishri) மாதத்தின் துவக்கத்தை புதுவருடமாக ஆசரிக்கின்றனர் (லேவி.23:24; எண்.29:1). இப்படியாக யூதர்கள் இரண்டு வகையான புதுவருடத்தை கொண்டாடு கின்றனர். என்றாலும் வருட துவக்கமானது வசந்த காலத்திலும் வருடத்தின் முடிவானது பயிரிடும் காலத்தின் முடிவிலும் கணக்கிடப்படுகிறது. எப்படியோ ஆதிகாலம் துவங்கி நவீன காலம் வரை எல்லா மக்களுமே சீதோஷ்ணநிலை மாற்றத்தைக் கொண்டே வருடத்தைக் கணக்கிட்டனர் என்பது தெளிவு.

**5. வாரங்கள் (WEEKS) :**

ஒரு வாரத்திற்கு ஏழு நாட்கள் என்ற கணக்கினை அறிஞர்கள் பாபிலோனிய மாதத்திலிருந்து எடுத்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. 291/2 நாட்களடங்கிய சந்திர மாதமும், 365 நாட்கள் கொண்ட சூரிய ஆண்டும் சரிசமமாக ஏழு நாட்கள் அடங்கிய வாரங்களாக பிரிக்கப்படுகின்றன. ஏழு நாட்கள் அடங்கிய வார கணக்கை பல்வேறு பாரம்பரியங்கள் பின்பற்றினாலும், இந்த சத்தியத்தை மனிதனுக்கு வெளிப்படுத்தியவர் தேவனே. சிருஷ்டிப்பின் துவக்கத்தில் நாம் இதைக் காணமுடிகிறது (ஆதி. 2:3). ஆதிமுதல் வாரத்தின் நாட்களானது முதலாம் நாள், இரண்டாம் நாள் என்று எண்ணிக்கையிட்டே அழைக்கப்பட்டதேயன்றி திங்கள், செவ்வாய் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்படவில்லை.

ஒரு வாரத்திற்கு ஏழு நாட்கள் என்பது மனிதனால் உண்டாக்கப்பட்டதல்ல, அது சிருஷ்டி கர்த்தாவாகிய யெகோவா தேவனால் உருவாக்கப்பட்டதாகும். அதிலும் குறிப்பாக அவரே ஆறு நாட்கள் உலகை சிருஷ்டித்து ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார். அவர் ஏழு நாட்களையும் தமது பணிக்காகத் தெரிந்து கொண்டார். இவ்வுலகில் மனிதன் தனது அறிவின் வளர்ச்சியால் அறிவியல் பூர்வமாக எவ்வளவோ மாற்றங்களைக் கொண்டு வந்து தெரிவித்திருக்கிறான். உலகின் பல தேசங்களில் பல்வேறு மொழிகளும் கால மாற்றங்களும் இன்னும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் உலகத்தின் எந்த ஒரு பகுதியிலும் எந்த ஒரு மனிதனுக்கும் வாரத்திற்கு ஏழு நாட்கள் என்பதை கூட்டவோ, குறைக்கவோ அல்லது மாற்றவோ முடியவில்லை. ஏனென்றால் வாரத்திற்கு ஏழு நாட்கள் என்பது தேவனால் நியமிக்கப்பட்டவை. அந்த ஏழாம் நாள் தேவனுக்கு சொந்தமானவை. அதாவது

வாரத்தில் ஒரு முறை கட்டாயம் தேவனைத் தொழுது கொள்ள வேண்டும் என்பதற்கு இது ஆதாரமாய் இருக்கின்றது.

### 6. பருவங்கள் (SEASONS)

பாலஸ்தீனாவிலும் அதைச்சுற்றியுள்ள தேசத்திலும் வாழ்ந்த மக்கள் பருவங்களை இரண்டுவிதமாகப் பிரித்தனர் (ஆதி. 8:22; ஏசா. 18:6). மே மாதம் முதல் அக்டோபர் வரையான காலம் – வறட்சியான கோடைக்காலம் என்றும், நவம்பர் முதல் ஏப்ரல் வரையானக் காலம்– குளிர்ச்சியான மாரிக்காலம் என்று அழைக்கப்பட்டது. பூமியின்மேல் வீசுகின்ற பருவக்காற்றின் பாதிப்பினால் பூமியில் உண்டாகும் மாற்றங்களைப் பொறுத்தும், பூமியின் சுழற்சியைப் பொறுத்துமே இந்த கோடைக் காலமும் மாரிக்காலமும் கணிக்கப்படுகிறது.

மாரிக்காலமானது மூன்று விதமாய் பிரிக்கப்படுகின்றது. ***1. முன்மாரிக்காலம்*** (சங்.84:6; யோவே. 2:23) இது நவம்பர் மாதத்தின் முதல்இரு வாரங்களிலேயே ஆரம்பித்து விடுகிறது. இந்த முன்மாரியானது பயிரிடுவதற்கு நிலத்தைப் பக்குவப்படுத்துகின்றது. ***2. மாரிக்காலம்*** (உன். 2:11) மாரிக்காலமானது டிசம்பர் முதல் மார்ச் மாதம் வரை உள்ள மாதங்களைக்குறிக்கிறது. ***3. பின்மாரிக்காலம்*** (எரே. 3:3; ஓசி. 6:3). இது ஏப்ரல் முதல் மே மாதம் வரை உள்ள காலத்தில் பெய்யும் மழையாகும். இது விளைந்திருக்கும் பயிரை முதிர்ச்சியடையச் செய்வதற்கு பெரிதும் உதவுகின்ற மழையாகும். சில இடங்களில் காலங்களை முன்மாரி பின்மாரி என இருவிதமாக பிரிக்கின்றனர். இதில் ஏதேனும் ஒரு காலமழை தவறிவிடுமெனில் பயிரிடும் தொழில் பாதிக்கப்பட்டு ஆகாரக்குறைவு உண்டாவதால் இஸ்ரவேலர் அந் நாட்களில் தங்களை தாழ்த்தி தேவனிடத்தில் வேண்டுதல் செய்வர்.

எகிப்தியரோ ஒரு வருடத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் 120 நாட்கள் எனக் கணக்கிட்டு வைத்தனர். முதல் 120 நாட்களைக் கொண்ட பகுதி ''வெள்ளப்பெருக்கின் காலம்'' என அழைக்கப்பட்டது (எகிப்தில் உள்ள நைல் நதியானது பெருக்கெடுத்து ஓடும் காலம் இது. பொதுவாக இது நமது ஜூலை மாதத்திலிருக்கும்). இரண்டாம் 120 நாட்களைக் கொண்ட பகுதி ''விளைச்சலின் காலம்'' என அழைக்கப்பட்டது. மூன்றவாது 120 நாட்களைக் கொண்ட பகுதி ''அறுவடையின் காலம்'' என அழைக்கப்பட்டது. ஆக இம்மூன்று பிரிவுகளும் சேர்த்து 360 நாட்கள் ஆகின்றன. வருடத்தின் முடிவிலோ அல்லது வெள்ளப் பெருக்கின் காலத் துவக்கத்திலோ மேலும் ஐந்து நாட்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டு ஒரு வருடத்திற்கு 365 நாட்கள் என கணக்கிட்டுக் கொண்டனர்.

2

# அளவுகள்

# (MEASUREMENTS)

வேதாகம காலத்தில் எந்தவொரு செயலுக்கும் அளவுகள் கடை பிடிக்கப்பட்டு வந்தன. அது பழைய ஏற்பாட்டுக் காலமானாலும் புதிய ஏற்பாட்டுக் காலமானாலும் அம்மக்கள் அளவுகளைப் பயன்படுத்தினர். நம்முடைய நாட்களில் நீட்டல் அளவு, நிறுத்தல் அளவு, முகத்தல் அளவு என மூன்று அளவுகளின் முறைகளைக் கையாளுகிறோம். அக்காலத்து மக்களும் இதே வண்ணம் அளவுகளைக் கையாண்டு இருக்கின்றனர். பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு இரண்டிலும் காணப்படும் அளவு குறிப்புகளை மூன்று வகைகளாகப் பிரித்துக் கொள்ளலாம். ***1. நீளம் குறித்த அளவுகள், 2. நிறைகளைக் குறித்த அளவுகள், 3. கொள்ளளவுகளைக் குறித்த அளவுகள்*** என வகைப்படுத்தப்படுகின்றன.

### அ. நீளம் குறித்த அளவுகள் ( MEASUREMENTS OF LENGTH )

முன் நாட்களில் அனுதின தேவைகளுக்குரிய அளவுகளை பலவிதங்களாக பிரித் தனர். நிலங்கள், கட்டிடங்கள் மற்றும் பொருட்களின் நீளங்களை அளப்பதற்கு இந்த அளவுகள் பயன்பட்டன. அகலம் மற்றும் நீளங்களைக் குறிக்கும் இந்த அளவுகள் பொதுவாக மனிதனின் கை உறுப்புக்களின் நீளங்களைக் கொண்டே குறிக்கப்பட்டன.

***1. விரற்கடை( Finger) :*** விரற்கடை அளவு என்பது ஒரு அங்குலத்தில் நான்கில் மூன்று பங்கு அல்லது உள்ளங்கையில் நான்கில் ஒரு பங்கு அளவாகும் (எரே. 52:21).

***2. நாலுவிரற்கடை(உள்ளங்கை)(Hand Breadth):*** ஒரு உள்ளங்கை அல்லது நாலு விரற்கடை என்பது ஏறத்தாழ மூன்று அங்குல அளவாகும். உள்ளங்கையின்

பெருவிரலைத் தவிர மற்ற நான்கு விரல்களும் ஒன்றாக சேருமிடத்தின் அகலமே நாலு விரற்கடை அளவு அல்லது உள்ளங்கை அளவு எனப்படுகிறது (1இரா.7:26).

***3. ஜாண் (Span):*** விரித்து வைக்கப்பட்டிருக்கும் கரத்தில் பெருவிரலின் நுனியிலிருந்து கடைசி விரலின் நுனிவரை உள்ள அளவை ஒரு "ஜாண்" அளவு என்பர். இது ஏறத்தாழ ஒன்பது அங்குல அளவாகும் (1சாமு. 17:4).

***4. முழம் (Cubit):*** முழங்கை எலும்பின் நுனியிலிருந்து நடுவிரலின் நுனிவரை உள்ள அளவு ஒரு முழம் எனப்படும். இது பதினெட்டு அங்குல அளவாகும் (யாத். 25:10). இப்படியாக 1 முழம் என்பது 2 ஜாண். 2 ஜாண் என்பது 6 உள்ளங்கை. 6 உள்ளங்கை என்பது 24 விரற்கடை (1Cubit = 2 Spans = 6 Palms = 24 Fingers). மேலும் சிறிய முழம் (Short Cubit) என்பதை 5 உள்ளங்கை எனவும் பெரியமுழம் (Royal Cubit) என்பதை ஒரு முழம்+நாலு விரற்கடை அல்லது 21 அங்குலம் எனவும் குறிப்பிடுகின்றனர் (எசே. 40:5) இப்படியாக சிறிய முழ அளவானது துணிகளை அளப்பதற்கும் பெரிய முழ அளவானது உயரங்களையும் பள்ளங்களையும் அளப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது.

***5. அளவுகோல் (Rod):*** கட்டிடங்களையும் சுவர்களையும் அளப்பதற்கு இது பயன் படுத்தப்பட்டது. ஒரு அளவுகோல் என்பது 6 முழம் கொண்டதாகும் (எசே. 40:5).

***6. நூல் (Line) :*** தூரங்களை அளப்பதற்கும் வயல்களை அளப்பதற்கும் இது பயன்படுத்தப்பட்டது. தேவைக்கேற்ற விதத்தில் இதன் நீளம் அதிகரிக்கவோ குறையவோ கூடும் (2சாமு. 8:2; ஆமோ. 7:17; மீகா 2:5).

***7. மைல் (Mile) :*** லத்தீன் மொழியில் "ஆயிரம்" என்ற பதம் "மைல்" என்ற வார்த்தையிலிருந்து வந்தது. நெடுந்தூரங்களை குறிப்பதற்கு "ஆயிரம் அடிகள்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. அந்நாட்களில் 1 அடி என்பது மனிதகால் அளவின்படி 2/8 தூரமாகும். மைல் என்பது 5 அடி கெண்டதாகும். ரோமர்களின் மைல் என்ற அளவு 4,854 அடியாகும். ஒரு ஓய்வுநாள் தூரம் என்பது (அப். 1:12) யூத ரபிகளால் குறிக்கப்பட்ட அளவாகும் இது ஏறத்தாழ 2000 முழமுடையது.

மேலும் வேதத்திலே வேறு சில அளவுகளும் பொதுவாக பயன்படுத்தப்பட்டு வந்தது. ஒரு நிலத்தை 2 எருதுகள் ஒருநாளில் எவ்வளவு தூரம் உழ முடியுமோ அந்நிலப் பரப்பை வைத்து தூரத்தைக் கணக்கிட்டனர். மேலும் ஒரு நிலத்தில் விதைப்பதற்கு எவ்வளவு தானியம் தேவைப்படுகின்றதோ அதை வைத்து நிலத்தின் பரப்பளவைக் கணக்கிட்டனர். அம்பு பாயும் தூரம் (ஆதி. 21:16). அரை ஏர் நிலம் (1சாமு. 14:14) ஒரு நாள் பிரயாணத்தூரம் (எண். 11:31). மூன்றுநாள் பிரயாணத்தூரம் (ஆதி. 30:36) போன்ற பொதுவான அளவுகளும் வேதத்தில் பயன்படுத்தப்பட்டன.

புதிய ஏற்பாட்டில் ஒரு முழம் என்பது 21½ அங்குலமாகும். ஒரு பாகம் (Fathom) என்பது விரிக்கப்பட்ட இரண்டு கைகளின் ஒரு நுனியிலிருந்து அடுத்த நுனிவரை உள்ள அளவாகும் (6 அடி). இதுவே தண்ணீரின் ஆழங்களை குறிப்பதற்கு

பயன்படுத்தப்பட்டது (அப். 27:28). 'ஸ்டேடியன்' (Stadion) என்ற கிரேக்க வார்த்தையானது (வெளி. 21:16) மைல் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது (லூக். 24:13). இது ஏறத்தாழ 100 பாகம் அல்லது 606 அடி 9 அங்குலமாகும். ஒலிம்பியா பட்டணத்திலிருந்த விளையாட்டு பந்தய சாலையானது சரியாக ஒரு 'ஸ்டேடியன்' நீளம் இருந்ததாக கூறப்படுகிறது. இங்குதான் பந்தயங்கள் நடத்தப்பட்டன (1கொரி. 9:24) ஆகவே இந்த இடத்தை ஸ்டேடியம் என அழைத்தனர்.

**ஆ. நிறைகளின் அளவு ( MEASUREMENTS OF WEIGHT )**

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் நிறைகளை குறிப்பதற்கு பலவிதமான அளவுகள் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக நிறைகற்கள், சேக்கல், இராத்தல், தாலந்து, பெக்கா, கேரா, வெள்ளிக்காசு போன்ற அளவுகள் பொதுவாகப் பயன்படுத்தப் பட்ட அளவுகளாக இருந்தன.

***1. நிறைகற்கள் (Weight) :*** பொருட்களை நிறுப்பதற்கும் வியாபாரத் தொழில் செய்வதற்கும் இந்தக் கற்கள் பயன்படுத்தப்பட்டன. தட்டையான அடிப்பாகம் கொண்ட இவ்வித கற்களின் மேற்பகுதி சிங்கம் மற்றும் அன்னம் போன்ற உருவங் கள் செதுக்கப்பட்டு அதின்மேல் நிறைகளின் அளவு குறிக்கப்பட்டிருந்தது. இந் நிறைகற்களை பைகளில் (Pouch) எடுத்துக் கொண்டு செல்வது வழக்கம் (உபா. 25:13).

***2. சேக்கல் (Shekel) :*** எடைகளின் அடிப்படை அளவான 'சேக்கல்' என்ற மூல பதத்திலிருந்தே 'நிறுக்க' (To weigh) என்ற எபிரேய வார்த்தை வந்தது. பழைய ஏற்பாட்டு மக்கள் பயன்படுத்திய அளவுகளைக் குறிப்பதற்கு பலவிதமான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டாலும் சேக்கல் என்ற பதமே பொதுவாக பயன் படுத்தப்பட்டது. இஸ்ரவேல் தேசத்தில் சேக்கல் என்ற நிறையின் சராசரி அளவு 0.4 அவுன்ஸ் (Ounce) ஆகும்.

***3. இராத்தல் (Mina (or) Maneh) :*** அதிக நிறையுள்ள பொருட்களை நிறுப்பதற்கு இந்த அளவு பயன்படுத்தப்பட்டது. ஒரு இராத்தல் என்பது சில இடங்களில் 50 சேக்கலாகவும், சில இடங்களில் 60 சேக்கலாகவும் கணக்கிடப்பட்டது (1இரா.10:17; எஸ்றா 2:69). 50 சேக்கல்களின் மடங்குகள் 50, 100, 200, 300 போன்ற அளவுகளில் வேதாகம நாட்களில் பயன்படுத்தப்பட்டது (ஆதி. 23:15; யாத். 30:24; 1சாமு. 17:5). இப்படியாக பாலஸ்தீன மக்கள் 50 சேக்கல் அளவினை அன்றாட வாழ்வில் அதிகமாக பயன்படுத்தி வந்தனர்.

***4. தாலந்து (Talent (or) Kikkar):*** ஒரு தாலந்து என்பது 3000 சேக்கல் அல்லது 75 பவுண்ட் நிறையாகும் (யாத். 38:25–26) இது 50 சேக்கல் கொண்ட60 இராத் தலாகவோ, அல்லது 60 சேக்கல் கொண்ட 50 இராத்தலாகவோ கணக்கிடப்பட்டது. (50x60 or 60x50) மெசபத்தோமிய தேசத்திலே ஒரு இராத்தல் என்பது 60 சேக் கலாகும். ஒரு தாலந்து என்பது 60 சேக்கல் நிறைகொண்ட 60 இராத்தலாகும் (60x60) எனவே மெசபத்தோமியாவில் ஒரு தாலந்து என்பது 3600 சேக்கலாகும் (எசே. 46:12).

***5. பெக்கா (Beqa) :*** ஒரு சேக்கலைவிட குறைவான அளவுகள் பெக்கா என்ற அளவின்படி அளக்கப்பட்டன. ஒரு பெக்கா என்பது அரைசேக்கல் அல்லது 0.2 அவுன்ஸ் அளவாகும் (ஆதி. 24:22; யாத். 38:26) பிம் (Pim) என்ற அளவானது ஒரு சேக்கலில் 2/3 பகுதியாகும் (RSV 1சாமு. 13:21).

***6. கேரா (Gerah):*** கேரா என்பது ஒரு சேக்கலில் 1/20 பகுதியாகும் (யாத்.30:13; எசே. 45:12).அவர்களின் அன்றாட வாழ்வில் இது அதிகமாக பயன்படுத்தப்படாத ஓர் அளவாகும்.

***7. வெள்ளி காசுகள் (Pieces of Money) :*** நிலங்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் இந்த அளவுகள் பயன்படுத்தப்பட்டன (ஆதி. 33:19). இதில் புதிய ஏற்பாட்டிலோ இரண்டு வித அளவுகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டன. 1 இராத்தல் (Pound or Litra): இது ரோமர்கள் பயன்படுத்திய அளவாகும் இதின் நிறை 12 அவுன்ஸ்கள் (Avoirdupois) 2. தாலந்து (Talent) : இது 45 அல்லது 90 பவுண்ட்கள் நிறைகொண்ட அளவாகும் (வெளி. 16:21).

### இ. கொள்ளளவுகள் (MEASURES OF CAPACITY)

பொதுவாக பொருட்களை அளப்பதற்காக பயன்படுத்தப்படும் அளவாகும். அதாவது கோதுமை, தண்ணீர், எண்ணெய் போன்ற உணவுப் பொருட்களையும் திரவப்பொருட்களையும் அளந்து கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் அளவாகும். இதில் பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் சற்று வேறுபட்ட அளவுகள் இருந்ததாகத் தெரிகிறது.

## பழைய ஏற்பாட்டு கால அளவுகள்

***1. கலம் ( Homer) :*** கலம் என்பது ஒரு கழுதை சுமக்கும் பொதியின் அளவாகும். இது ஏறத்தாழ 210 லிட்டர் அளவுக்கொண்டது (லேவி. 27:16).

***2. மரக்கால் (Cor (or) Ephah) :*** இது தானியங்களையும், மாவையும் அளப்பதற்கும் திரவப் பொருட்களை அளப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது (1 இரா. 4:22; எசே. 45:11,14) ஒரு கலத்தின் அளவில் பத்தில் ஒரு பங்கு ஒரு மரக்காலாகும். இந்த மரக்காலானது ஒரு நபர் உள்ளே அமரக்கூடிய அளவு கொள்ளளவு கொண்டதாக இருந்தது (சக. 5:6,7).

***3. அரைக்கலம் (Letek) :*** ஒரு கலத்தின் அளவில் பாதியினை அரைக்கலம் என்பர் (ஓசியா 3:2).

***4. குடம் (Bath) :*** எண்ணெய், தண்ணீர், திராட்சரசம் போன்றவற்றை அளக்க பயன்பட்ட குடமானது 21 லிட்டர் கொள்ளளவுடையதாகும். குடமும் மரக்காலும் சம அளவுகொண்டது. ஒரு குடம் என்பது கலத்தின் அளவில் பத்தில் ஒரு பங்காகும்.

***5. படி (Seah (or) Measure) :*** இந்த அளவானது மரக்காலின் அளவில் மூன்றில் ஒரு பங்காகும். நிலத்தில் விளையும் தானியத்திற்கேற்றபடி இந்த அளவானது நிலத்தைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது (ஆதி. 18:6).

***6. ஹின் (Hin) :*** திரவ பொருட்களை அளப்பதற்கு இது பயன்பட்டது. பழைய ஏற்பாட்டு சரித்திர ஆராய்ச்சியாளரான ஜோஸிபஸ் என்பவரின் கருத்துப்படி இது குடத்தின் அளவில் ஆறில் ஒரு பங்காகும். திடப்பொருட்களை அளப்பதற்கும் இதே விதமான ஆறில் ஒரு பங்கு அளவு பயன்படுத்தப்பட்டது. இதற்கு எந்த சிறப்புப் பெயரும் வேதத்தில் குறிப்பிடப்படவில்லை (எசே. 45:13; 46:14).

***7. ஓமர் (Omer) :*** ஓமர் என்பது மரக்காலின் அளவில் பத்தில் ஒரு பங்காகும். இஸ்ரவேலர் வனாந்திரத்தில் மன்னாவை அளப்பதற்கு இந்த அளவையே பயன்படுத்தினர். (RSV யாத். 16:16; 29:40)

***8. கால்படி (Cab) :*** ஒரு மரக்காலின் அளவில் 18ல் ஒரு பங்கு அளவுடையது (ஏறத்தாழ 1.1 அளவு ) (2இரா. 6:25).

***9. ஆழாக்கு (Log) :*** எண்ணெய் அளப்பதற்கு இது பயன்படுத்தப்பட்டது. ஒரு குடத்தின் அளவில் 12ல் ஒரு பங்கே ஆழாக்காகும் (லேவி. 14:10).

## புதிய ஏற்பாட்டுக் கால அளவுகள்

புதிய ஏற்பாட்டின் காலத்தில் உள்ள அளவுகள் பழைய ஏற்பாட்டுக்கால அளவுகளைவிட சற்று வித்தியாசமான தாகவே இருந்தன.

***1. படி (Choinix (or) Quart) :*** தானியத்தை அளப்பதற்கு இந்த அளவு பயன்படுத்தப்பட்டது. ஆகாஸ்வேரு அரசனின் இராணுவ வீரர்களுக்குக் கொடுக்கப்பட்ட அன்றாட ஆகாரத்தின் அளவானது ஒரு படியைவிட சற்று அதிக மாயிருந்தது. யூதா சரித்திர ஆராய்ச்சியாளரான ஜோஸிபஸின் கூற்றுப் படி புதிய ஏற்பாட்டுக் காலத்தில் 'படி' (Saton, Measure) என்பது பழைய ஏற்பாட்டுக் காலத்திலுள்ள 'படி' க்கு (Seah) ஒப்பானதாகும் (மத். 13:33).

***2. மரக்கால் (Modios (or) Bushel) :*** புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஒரு மரக்கால் என்பது 8 படியாகும் (மத். 5:15).

***3. கலம் ( Koros, Measure of Wheat) :*** ஒரு கலம் என்பது 11 மரக்கால் அளவாகும் அல்லது 100 காலனைவிட (Gallon) சற்று அதிமானதாகும் (லூக். 16:7). ஒரு காலன் என்பது 4½ லிட்டர் அளவாகும்.

***4. கிண்ணம் (Xestes (or) Pot) :*** கிண்ணங்களை யூதர்கள் பரிமாறுவதற்கும் சிலவகையான ஆகாரங்களைப் புசிப்பதற்கும் பயன்படுத்தினர். ஓர் கிண்ணத்தின் கொள்ளளவு சுமார் ½ லிட்டராகும் (மாற். 7:4).

***5. குடம் (Batos (or) Measure) :*** யூதர்கள் தண்ணீர் எடுப்பதற்கு குடங்களை பயன்படுத்தினர் (ஆதி.24:15–20 ; 1இரா.7:26). ஒரு குடத்தின் அளவு 10 காலனாகும் (Gallon). பொதுவாக பழைய ஏற்பாட்டுப் பெண்களும் புதிய ஏற்பாட்டுப் பெண்களும் இத்தகைய குடங்களில் தண்ணீர் சுமந்து வருவதுண்டு (யோவான்

4:28). இந்தக் குடங்களில் எண்ணெயும் வைத்துப் பயன்படுத்தினர் (2இரா.4:2).

***6. கற்சாடி (Metretes (or) Fikrin) :*** கற்சாடியானது தண்ணீரைப் பிடித்து வைப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. விருந்து வீடுகளிலும் திருமண வைபவங்களிலும் கற்சாடிகளை யூதர்கள் பயன்படுத்தினர் (யோவா. 2:6) ஒர் கற்சாடியின் கொள்ளளவு 20–30 காலன் (Gallon) ஆகும்.

இப்படி நீட்டல் அளவுகளும், நிறுத்தல் அளவுகளும், முகத்தல் அளவுகளும் அக்கால மக்களின் புழக்கத்திலிருந்த அளவுகளாகும். ஆனால் நம்முடைய காலகட்டத்தில் இதே அளவு முறைகளைப் பயன்படுத்தினாலும் அதன் அளவுகள் சற்று வேறுபட்டு இருப்பதைக் காணமுடிகிறது.

◆❖◆❖◆❖◆

3

# வஸ்திரங்கள்

# (DRESSES)

ஆதாம் ஏவாளை தேவன் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றிய போது அவர்களுக்கு தோல் உடைகளை உண்டாக்கி உடுத்தி அவர்களை வெளி யேற்றினார் (ஆதி.3:21). இவ்விடத்திலிருந்தே மனிதன் ஆடையை அணிய வேண்டும் என்ற ஒரு கட்டாய விதியோடே தன் பூமிக்குரிய வாழ்க்கையைத் துவக் கினான். தோல் உடையில் துவங்கின ஆடையானது பின்னாட்களில் பல் வேறு வடிவங்களுக்கு உருமாறின.

பழைய ஏற்பாட்டு முற்பிதாக்களின் காலந்தொடங்கி புதிய ஏற்பாட்டின் காலம் வரை பலவிதமான வஸ்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தது. காலத்திற்கேற்ப, சீதோஷண சூழ்நிலைகளுக்கேற்ப, இடங்களுக்கேற்ப, மக்களது வசதிக்கேற்ப பலவகையான வஸ்திரங்களை மக்கள் பயன்படுத்தினர். மெசபத்தோமியா தேசத் திலிருந்து வந்த ஆபிரகாமும், எகிப்திலே வளர்க்கப்பட்ட மோசேயும், பெலிஸ்திய வனாந்தரத்திலே சுற்றித்திரிந்த தாவீதும், பாலஸ்தீன தேசத்திலே வாழ்ந்த இயேசு கிறிஸ்துவும் வெவ்வேறு விதமான உடைகளை உடுத்தி இருந்ததை வேதத்தில் காணமுடிகிறது.

வேதாகம காலங்களில் பயன்படுத்தப்பட்ட வஸ்திரங்களைக்குறித்து வேதத்தில் இருந்து நாம் அறிந்துக்கொள்ளுவதோடு மட்டுமின்றி, பண்டைய நாகரீக புதைப் பொருட்கள் மூலமாகவும் அறிந்துக்கொள்கிறோம். அவ்வண்ணமே புதை பொருள் ஆராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட சுவர் சித்திரங்கள், சிலைகள், பிரமி டுகள், கல்லறைகள் போன்றவற்றிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் நாம் பண்டைய கால வஸ்திரங்களைக் குறித்து அறிந்து கொள்கிறோம்.

அக்கால மக்கள், புருஷர்களும் ஸ்திரீகளும் வெவ்வேறுவிதமான உடைகளை தங்களுக்கென உருவாக்கி உடுத்திக்கொண்டனர். புருஷர்களின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது; ஸ்திரீகளின் உடைகளை புருஷர்கள் தரிக்கலாகாது என்று வேதம் கூறுயிருந்தாலும் (உபா.22:5) இருபாலரது உடைகளின் வேறுபாடானது பொதுவாக வஸ்திரத்தின் தரத்திலும் நிறத்திலும், நீளத்திலும் இருந்ததே ஒழிய மற்றபடி இருபாலரும் ஒரேவிதமான அங்கிகள், சால்வைகள் போன்ற பொதுவான வஸ்திரத்தையே அணிந்து வந்தனர். கால்சட்டைகள் போன்ற வஸ்திரங்கள் சில நூற்றாண்டுகளுக்குப் பின்பாகவே மத்திய கிழக்கு நாடுகளில் வசித்த மக்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

வேதகால மக்கள் தங்கள் உடுத்தின வஸ்திரங்களை பொதுவாக மூன்றுவிதமான வஸ்திரங்களாகப் பிரிக்கலாம்.

**1. அரைக்கச்சை ( LOINCLOTH *(or)* WASTE CLOTH ) :–** இவ்வாடை பொதுவாக ஆண்கள் பயன்படுத்தி வந்த உள்ளாடையாகும் (ஏசா. 11:5; எரே. 13:11). இடுப்பிலிருந்து முழங்கால் வரையிலோ அல்லது முழங்காலுக்கு சற்று மேலாகவோ இது அணியப்பட்டு வந்தது. முற்பிதாக்கள் காலம்முதல் மன்னர்கள் காலம் வரை (கி.மு. 2000–1000) இந்த வஸ்திரத்தை பயன்படுத்தி வந்ததற்கான சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன. பின்நாட்களில் இந்த அரைக்கச்சைகள் இராணு வத்தின ரால் மத்திரம் பயன்படுத்தப்பட்டது.

எகிப்திய மக்கள் சணல் உள்ளாடைகளைப் பயன்படுத்தினர். இது ஏறத்தாழ 6 அடிநீளமும் 1 அடி அகலமுமாயிருந்தது. இந்த வஸ்திரத்தை முன்புறத்தில் முடிச்சிட்டு இடுப்பைச்சுற்றிலும் கட்டினர். வஸ்திரத்தின் மீதியுள்ள பகுதியானது பக்கவாட்டில் தொங்கவிடப்பட்டது. வெள்ளாடு, செம்மறியாட்டு தோல்களால் செய்யப்பட்ட இதுபோன்ற வஸ்திரங்களை பாபிலோனியர்களும் பயன்படுத்தினர். இஸ்ரவேல் மக்களும் ஒட்டக, வெள்ளாட்டு மயிரால் செய்யப்பட்ட உள்ளாடைகளை பயன்படுத்தினர் (யாத். 28:42; லேவி.6:10; நியா.14:12; எரே.13:1; மாற்.14:51–52). தங்கள் உபவாச நாட்களில் சாம்பலில் விழுந்து தேவனை நோக்கி வேண்டுதல் செய்யும்போது இவ்விதமான வஸ்திரங்களையே உடுத்தி உபவாசித்தனர்.எலியா தீர்க்கதரிசியும் யோவான்ஸ்நானகனும் இவ்வித வஸ்திரங்களை உடுத்தியிருந்தனர் என்பதை வேதத்தில் காணலாம் (2இரா. 1:8; மத். 3:4).

தங்கள் வேளை நேரங்களிலும் ஒடும்போதும் இந்த ஆடைகளை இருகால்களுக்குமிடையே சேர்த்து எடுத்து இடுப்போடு சேர்த்து கட்டிக் கொள்வர். இதையே 'இடுப்பின் அரையைக் கட்டிக்கொள்ளுதல்' என்று வேதம் கூறுகின்றது. பொதுவாக இவ்வித ஆடைகளை மக்கள் எல்லா நேரங்களிலும் தங்கள் உடலில் தரித்த வண்ணமாயிருந்தனர். சிறைப்பிடிக்கப்பட்டு செல்லும் கைதிகள் மாத்திரமே இவ்வித ஆடைகளின்றி சிறுமைப்படுத்தப்பட்டு நிர்வாணமாக அழைத்துச்செல்லப்படுவர்.

**2. அங்கி (TUNIC *(or)* ROBE)** : –உள்கச்சைக்கு மேலாக அணியப்படும் வஸ்திரம் அங்கியாகும். தோல், ஆட்டுமயிர் மற்றும் சணலினால் நெய்யப்பட்ட இந்த வஸ்தி ரத்தை பெண்கள், ஆண்கள் இருவருமே அணிந்தனர். பொதுவாக இது நெய்யப் பட்ட 2 சதுரவடிவத் துணிகளை இணைத்து தைக்கப்படும் வஸ்திரமாகும். 2 தோள் களின் மேற்புறத்திலோ அல்லது ஒரு தோளின் மேற்புறத்திலோ (பொதுவாக இடது தோள்) கூட்டி தைக்கப்பட்டிருக்கும். இரு அக்குள்களுக்கும் அடியிலும் இது சேர்த்து தைக்கப்பட்டிருக்கும். சில வேளைகளில் தையல் இல்லாத ஒரு வஸ்திர மாக இது நெய்யப்படும். போர்சேவகர்களால் பங்கிடப்பட்ட இயேசு கிறிஸ்துவின் அங்கியா னது இவ்விதமாக தையல் இன்றி நெய்யப்பட்ட அங்கியாகும் (யோவா. 19:23–24).

ஆண்கள் அணியும் அங்கியானது முழங்கால் வரையிலும் பெண்கள் அணியும் அங்கியானது கணுக்கால் வரையிலும் தைக்கப்பட்டிருந்தது. கணுக்கால் வரையுள்ள அங்கிகளை புருஷர்களும் அணிந்தனர். இந்த அங்கிகளின் கைகள் (Sleeves) மணிக்கட்டுவரையிலோ, முழங்கை வரையிலோ தைக்கப்பட்டிருந்தது.

எளிய மக்கள் சாதாரண அங்கிகளையும் ராஜகுலத்தாரும் பிரபுக்களும் விசேஷ மாக நெய்யப்பட்ட பலவர்ண அங்கிகளையும் (Coat of many colours), இரத்தாம்பரத் தையும் (Scarlet) அணிந்துவந்தனர்.(ஆதி.33:3;2சாமு.1:24;யோசு.7:21,24; யோனா. 3:6; புல. 4:5). பட்டு வஸ்திரங்களும் (Silk) அந்நாட்களில் பயன்படுத்தப் பட்டு வந்தன. (எசே. 16:10; நீதி. 31:22). பிரதான ஆசாரியர்கள் விசேஷமான நீல, இளநீல, சிவப்பு நிற (Blue, Purple, Scarlet) நூல்களால் நெய்யப்பட்ட மார்க் கச்சைகளை (Sash) அணிந்துவந்தனர்.

**3. சால்வை (COAT*(or)* CLOAK) :–** பாலஸ்தீனா தேசம் மிகவும் குளிர் நிறைந்த தேசமானதால் இரவு வேளைகளில் அணிவதற்கு சால்வைகளை மக்கள் பயன் படுத்தினர். தங்கள் வேலை நேரங்களில் மாத்திரம் தங்கள் சால்வைகளை கழற்றி வைத்துவிடுவர் (மத். 24:18). மற்ற நேரங்களில் யூத வழக்கப்படி இந்த சால்வையை எப்பொழுதும் போர்த்துக்கொண்டிருப்பர். இதில் தானியம் போன்ற பொருட்களை எடுத்துச் செல்லக்கூடிய அளவிற்கு இது உறுதியாயிருந்தது (ரூத். 3:15).

இந்த சால்வைகள் பொதுவாக வெள்ளாடு, செம்மறி ஆட்டுத் தோல்களினால் செய்யப்பட்டிருக்கும். பின் நாட்களில் சணலில் நெய்யப்பட்ட சால்வைகளை மக்கள் பயன்படுத்தினர். 10 அடி நீளமும் 4½ அடி அகலமும் உள்ள இந்த சால்வை களில் இரு கைகளும் நுழையும் அளவிற்கு துவாரமிடப்பட்டிருக்கும். இந்த சால்வையை தோள்களின்மேல் போர்த்துக் கொள்வதோடு, இரவு நேரங்களில் மூடிப் படுத்துக்கொள்வதற்கும் இதை பயன்படுத்துவர். "வஸ்திரத்தை ஈடாக வாங்கினால் பொழுதுபோகும் முன்னமே அதை அவனுக்குத் திரும்பக் கொடுத்து விடுவாயாக அவன் போர்வை அதுதானே. அதுவே அவன் தன் உடம்பை மூடிக் கொள்கிற வஸ்திரம்" (யாத். 23:26,27). என்று தேவனும் இதினிமித்தமே நியாயப் பிரமாணங்களில் கூறியிருக்கிறார். பின்நாட்களில் அங்கிக்குள்ளாக ஒரு

உள்சட்டையை அணிவது மக்களின் வழக்கமாயிற்று. நியாயாதிபதிகள் 14:12; நீதிமொழிகள் 31:24 ஆகிய வசனங்கள் இவ்விதமான உள் சட்டைகளைக் குறிக்கிறது.

**4. முக்காடு (HEAD COVERINGS) :** யூத பாரம்பரியத்தில் பெண்களுக்கென சில சிறப்பு வஸ்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. அங்கிகள் உடுப்புகளோடு துப்பட்டா, முக்காடு (Shawl Scarf or Veil) போன்ற வேறுசில வஸ்திரங்களை அவர்கள் பயன்படுத்தியிருக்கின்றனர். ஸ்திரீகள் பயன்படுத்திய முக்காடு தலையை மூடுவதற்கு பயன்பட்டதோடல்லாமல் சில குறிப்பிட்ட நேரங்களில் முகத்தையும் முக்காட்டால் மூடுவது யூத வழக்கமாய் இருந்தது. பாலஸ்தீனா தேசத்தில் பகல்வேளைகளில் வெயிலின் உஷ்ணம் அதிகமாக இருந்ததால் தலையை மூடிக்கொள்ளாமல் எவரும் வெளியே செல்வதில்லை.

இரண்டுவிதமான முக்காடு அந்நாட்களில் பயன்படுத்தப்பட்டன. கொஃபியா (Kuffiyeh) இந்நாட்களிலும் அரபியர்கள் இவ்விதமான முக்காட்டை பயன்படுத்து கின்றனர். சதுரவடிவ துணியினை முக்கோணமாக மடித்து அதின் ஓரங்கள் பக்க வாட்டிலும் பின்புறமும் தொங்கும்படி, பாகையைப்போல தலைமேல் அணிந்து கொள்வர். "அயிகல்" என்னும் கயிற்றினால் இந்த முக்காட்டை தலையோடு சேர்த்து கட்டிக்கொள்வர்.

**5. தலைப்பாகை (TURBAN *(or)* HOOD) :** புருஷர்களால் அணியப்படும் இவ்வித வஸ்திரத்தை தலைப்பாகை அல்லது குல்லா என்றுக்கூறுவர் (ஏசா. 3:23). இது சாதாரண மக்களால் அணியப்படும்போது தலைப்பாகை என்று அழைக் கப்பட்டது. அரசர்களும் பிரதான ஆசாரியர்களும் அணிந்த விசேஷித்த தன்மை யுடைய தலைப்பாகைகள் ராஜமுடி என்றும் விசேஷித்த தலைப்பாகை என்றும் அழைக்கப்பட்டது (ஏசா. 63:3; சக. 3:5).

**6. வார்க்கச்சை (BELT *(or)* GIRDLE) :** அங்கியையும் வஸ்திரத்தையும் சரீரத் தோடு இறுக கட்டும்படி ஸ்திரீகளும் புருஷரும் அந்நாட்களில் வார்க்கச்சையை பயன்படுத்தினர். இது பொதுவாக தோலினால் செய்யப்பட்டிருந்தது. அவரவர் தேவைக்கேற்றாற்போல் இதன் நீளம் வேறுபட்டிருக்கும் இதன் அகலம் பொதுவாக 5–6 அங்குல அளவாயிருந்தது. வார்க்கச்சையிலேயே நீளமான ஒரு திறப்பை உண்டுபண்ணி அதை பொருட்களை பத்திரப்படுத்துவதற்கான சிறு பையாக (Packet) பயன்படுத்தினர். நீளமான வஸ்திரங்களை அணிபவர்கள், நெடுந்தூரப் பயணத்தின்போது தங்கள் வஸ்திரங்களின் வெளிப்பகுதி அழுக்குப் படாமல் இருக்கும்படி அதை மடித்து வார்க்கச்சைக்குள் கட்டிக் கொள்வார்கள்.

**7. பாதரட்சைகள் (SANDALS) :** மத்திய கிழக்கு நாடுகளில் வசித்த மக்கள் பலவிதமான பாதரட்சைகளை பயன்படுத்தினர். வெளியே செல்லும்போதும் பிறபட்டணங்களுக்குப் பயணப்படும்போதும் பாதரட்சைகளை பயன்படுத்தினர். யூதர்கள் பொதுவாக தங்கள் வீடுகளுக்குள் பிரவேசிக்கும்போது காலணிகளை

வெளியே கழற்றிவிட்டு செல்வது அவர்களது வழக்கம். அந்நாட்களில் தோலினாலோ, மரக்கட்டையினாலோ, பனைமரத்தின் பட்டையினாலோ செய்த பாதரட்சைகள் பொதுவாக பயன்படுத்தப்பட்டு வந்தன. காலின் பெருவிரலுக்கும் மற்ற விரல்களுக்குமிடையே தோலினால் செய்யப்பட்ட ஒரு சிறிய வார் (Thong) பொருத்தப்பட்டிருக்கும். இது கால்களை ஊன்றி நடப்பதற்கு உதவியாயிருக்கும் இந்த வாரோடு நீளமாக மற்றொரு வார் பொருத்தப்பட்டிருக்கும். இது மற்ற விரல்களைச் சுற்றியோ காணுக்காலை சுற்றியோ அவரவர் வசதிக்கேற்றபடி அணிந்துக்கொள்ளப்படும். யோவானஸ்நானகன் இவ்வித பாதரட்சையின் வாரையே (Latchet) சுவிசேஷங்களில் குறிப்பிட்டுள்ளான் (மாற். 1:7).

இராணுவ வீரர்கள் அந்நாட்களில் வித்தியாசமான பாதரட்சைகளை அணிந்து வந்தனர். சல்மனாசேர், பெகூ போன்றோரின் சேவகர்கள் அணிந்த பாதரட்சைகள் கணுக்கால் வரையும் வந்து, அதன்மேற்புறம் விரல்கள், குதிகாலை நோக்கி மடக்கிவிடப்பட்டதாயிருக்கும். கிரேக்கர்களின் தேசிய பாதரட்சையானது 'கிரிபஸ்' (Krepis) என்றும் ரோமர்களின் பாதரட்சை யானது 'கால்சியஸ்' (Calceus) என்றும் ரோம சேவர்கள் அணிந்த பாதரட்சையானது 'எம்பாஸ்' (Embas) மற்றும் 'என்றோமியாஸ்' (Endromias) என்றும் அழைக்கப்பட்டது. எம்பாஸானது சேர்த்துக் கட்டும் நாடா இல்லாத பாதரட்சையாகும். என்றேமியாஸானது இந்நாட்களில் அணியப்படும் பூட்ஸ்களைப்போல துவாரமிடப்பட்டு அதன் வழியே சேர்த்துக் கட்டப்படும் நாடாவோடு (Shoe Lace) உருவாக்கப்பட்ட பாதரட்சையாகும்.

பொதுவாக இஸ்ரவேலர் வீட்டிற்குள் பிரவேசிக்கையில் பாதரட்சைகளை வெளியே கழற்றிவிட்டு கால்களை கழுவிய பின்பே வீட்டிற்குள் செல்வர். வருகின்ற விருந்தினருக்கு வீட்டின் சொந்தக்காரர் கால்களைக் கழுவுவதற்கு தண்ணீர் கொடுக்கவேண்டும் (ஆதி. 18:4; நியா. 19:21; லூக். 7:44; யோவா. 13:5). அதுபோல பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்போது இஸ்ரவேலர்கள் தங்கள் பாதரட்சைகளைக் கழற்றி விடுவர் (யாத். 3:5; யோசு. 5:15; அப். 7:33). பிரதான ஆசாரியர்கள் பரிசுத்தஸ்தலத்தில் ஊழியம் செய்கையில் பாதரட்சைகள் அணி யாமல்தான் ஊழியம் செய்வர் (யாத். 30:19). சிறைக்கைதிகளாகச் செல்லும் அடிமைகள் பாதராட்சைகளின்றியே பிடித்து செல்லப்படுவர் (2நாளா. 28:15; ஏசா. 20:2). ஒருவன் தன் பாதரட்சைகளை நிலத்தின் மேல் எறிந்தால் அந்த நிலத்தை அவன் சொந்தமாக்கிக் கொள்வ தற்கு அடையாளமாகும் (சங். 60:8). நிலத்தை விற்கும்போதும் வாங்கும் போதும் விற்கின்றவர் வாங்குகின்றவரிடம் தன் பாதரட்சைகளைக் கழற்றிக் கொடுத்துவிடுவது அந்நாட்களின் வழக்கமாகும் (ரூத். 4:7; உபா. 25:9).

தங்களின் வஸ்திரங்களின் ஓரங்களில் தொங்கல்களை உருவாக்கி இளநீல நாடவினால் வெளிவஸ்திரத்தின் நான்கு முனைகளிலும் கட்டிக்கொள்வது இஸ்ரவேலரின் வழக்கம். இயேசுக்கிறிஸ்துவும் இந்தப்பாரம்பரியத்தைக்

கைக்கொண்டிருந்தார் (மத். 9:21). பரிசேயர்கள் நியாயப்பிரமாணத்தை தாங்கள் உறுதியாய் பின்பற்றுவதை மக்களுக்கு காண்பிக்கும்படி தங்கள் வஸ்திரத்தின் தொங்கல்களை மிக நீளமாக்கி, காப்புநாடாக்களை அகலமாக்கிக் கொண்டனர் (மத். 23:5). இவர்களைக் குறித்து எச்சரிக்கையா யிருக்கும்படி இயேசுவும் கூறியிருந்தார். அதாவது பரிசேயர்கள் தாங்கள் கொள்கையில் வேறுபட்டவர்கள் என்பதை தங்கள் ஆடைகளினாலும் வெளிப்படுத்தினர்.

◆❖◆❖◆❖◆

4

# அணிகலன்கள்
# (ORNAMENTS)

அணிகலன்கள் அலங்காரப் பொருட்களின் வரிசையில் வந்தாலும் அது கலாச்சாரத்தின் அடையாளமாகவும் இருக்கின்றன. ஆதி காலந்தொட்டே மக்கள் தங்களை அலங்கரிப்பதற்காகவும் தங்கள் தேசத்து வழக்கங்களை வெளிப் படுத்துவதற்காகவும் தாங்கள் விரும்பிய அணிகலன்களை அணிந்து வந்தனர். ஆண்களும் பெண்களும் பலவிதமான அணிகலன்களை அணியும் வழக்கமி ருந்தது.பெண்களுக்கென்று விசேஷித்த அணிகலன்கள் ஒவ்வொரு கலாச் சாரத்திற்கேற்றவாறு அந்தந்த நாடுகளில் செய்யப்பட்டு வந்தன.

வேதாகம காலத்தில் அன்றாட வாழ்வில் அணிவதற்கென்று தனிப்பட்ட அணி கலன்களையும், திருமணம்,பண்டிகைகள் மற்றும் யுத்த நேரங்களில்அணிவ தற்கு தனிப்பட்ட அணிகலன்களையும் மக்கள் அணிந்து வந்தனர்.துக்க நேரங்களிலும், உபவாசங்களிலும், சிறைக்கைதிகளாய் செல்லும் போதும் தங்கள் அலங்கார அணிகலன்களை கழற்றிப்போட்டு துக்கம் அனுசரிப்பது இஸ்ரவேலரின் வழக்கமாயிருந்தது.

**1. அஸ்தகடகங்கள்** (BRACELETS):- இந்நாட்களில் வளையல்கள் என்றுக் கூறப்படுவதை முன்நாட்களில் அஸ்தகடகங்கள் என்று அழைக்கப்பட்டன. பொன், வெள்ளி, வெண்கலம் மற்றும் இரும்பு போன்ற பலவித உலோகங்களால் அஸ்தகடகங்கள் செய்யப்பட்டன. மணிகட்டிலும் முழங்கையின் மேற்பகுதிக ளிலும் இவ்வித அஸ்தகடகங்களை மக்கள் அணிந்தனர். பொதுவாக ஆண்கள்

அஸ்தகடகங்களை முழங்கையின் மேற்புறத்திலேயே அணிவதுண்டு (2சாமு. 1:10).

ஸ்திரீகளும் தங்கள் கால்களிலும் அஸ்தகடகங்களை அணிந்து தங்களை அலங்கரித்தனர் (ஏசா. 3:16–20). அவைகள் சிலம்புகள் என அழைக்கப்பட்டன. சிறிய நடைகளை எடுத்துவைப்பது ஸ்திரீகளுக்கு அழகு என்ற வழக்கம் அந் நாட்களிலேயே இருந்தது.எனவே ஸ்திரீகள் தங்கள் இரண்டு கால்களிலும் உள்ள சிலம்புகளை மெல்லிய சங்கிலிகளால் இணைத்து தங்கள் நடைகளின் அளவை சிறிதாக்கிக்கொண்டனர்.

**2.மோதிரங்கள் (RINGS)** : ஸ்திரீகள் புருஷர் இருபாலருமே மோதிரங்களை அணிவது முந்நாட்களில் வழக்கம். பொன், வெள்ளி, செம்பு, பித்தளை போன்ற பலவிதமான உலோகங்கள் மோதிரங்கள் செய்வதற்கு பயன்பட்டன. ராஜாக்களும் அதிகாரத்தில் இருப்பவர்களும் விசேஷமான முத்திரை மோதிரங்களை தங்கள் அதிகாரங்களை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தினர் (ஆதி. 41:42; எஸ்தர் 3:10). இப்படிப்பட்ட முத்திரை மோதிரங்களை சங்கிலிகளில் கோர்த்து கழுத்தில் அணிந்துகொள்வதுண்டு. மோதிரங்களின் மேற்பகுதியில் பொறிக்கப்பட்ட உருவமோ அல்லது தனிப்பட்டமுத்திரையோ பதிக்கப்பட்டிருக்கும் (ஆதி. 38:18; உன். 8:6; எரே. 22:24; யாக். 2:22).

ஸ்திரீகள் தங்கள் கை விரல்களிலோ, கால் விரல்களிலோ அல்லது மூக்கிலோ மோதிரங்களை அணிந்து கொள்வதுண்டு (ஆதி.24:22,47;ஏசா.3:21). நாடோடி களாகத் திரிபவர்கள் தங்கள் மூக்கின் வலது மடலிலோ அல்லது இரண்டு துவா ரங்களுக்கும் நடுவிலுள்ள குருத்தெலும்பிலோ துளையிட்டு மோதிரங்களை அணிந்து கொள்வர். காதுகளிலும் மோதிரங்கள் போன்ற தங்க வளையல்களை ஸ்திரீகள் அணிவதுண்டு. இவ்வித மோதிரங்கள் மிக குறைந்த எடையுள்ளதாக இருந்தன (ஆதி.35:4; யாத். 32:2; நீதி. 25:12).

**3. சரப்பணிகள் (NECKLACES)**: கடற்பாசிகள், சிப்பிகள், பழங்களின் கொட்டை கள், சில விசேஷித்த மரங்களின் சிறியபட்டைகள், விலையேறப்பட்ட பொன், முத்துக்கள், பவளங்கள் மற்றும் வைரங்களை சங்கிலிகளில் கோர்த்து கழுத்திலே சரப்பணிகளாக மக்கள் அணிவதுண்டு. ஆண்கள் அணிகின்ற சரப்பணிகள் அவர்களது அதி காரத்தைக் குறிப்பதாக இருக்கும். மட்டுமல்லாது விசேஷித்த ஞானம், அறிவு, வரங்கள் ஆகியவற்றை பெருமைப்படுத்துவதற்கும் சரப்பணிகள் அணிவிக்கப்பட்டன (ஆதி.41:42; சங்.73:6; நீதி. 1:9; 3:3; எசே.16:11; தானி. 5:7).

ஆனால் தேவனுடைய மக்கள் இவ்வித அணிகலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்நிய தேவர்களைப் பின்பற்றி தேவனை மறந்துபோனபோதோ தீர்க்க தரிசிகள் மூலம் தேவன் தன்மக்களை கடிந்துக்கொண்டதை வேதத்தில் காண் கிறோம் (எசே.16:17; ஏசா. 3:16; ஓசி.2:13). சிலவேளைகளில் இவ்வித சங்கிலிகள் கைகளிலும், கால்களிலும் அணியப்படுவதோடு நெற்றியிலும், உடைகளிலும், கூட

அணியப்பட்டன (எண். 31:50; 1சாமு. 1:24; உன். 1:10,11; ஏசா. 3:19,20). மணவாட்டியை அலங்கரிப்பதற்கு இவ்விதமான சரப்பணிகளை நெற்றியிலும் நெற்றியின் பக்க வாட்டிலும், தலைமுடியின் பின்னல்களிலும், கைகள் மற்றும் கால்களிலும் அணிவித்தனர்.

**4. சித்திரத் தையலாடை (EMBROIDERY *(or)* NEEDLE WORK)** : பலவிதமான சித்திரத் தையலாடைகளை இஸ்ரவேலர் பயன்படுத்தி வந்தனர். பலவித வர்ணங்களோடுகூடிய சித்திரத் தையலாடைகளை ராஜ குமாரத்திகளும் மேன்மக்களும் அணிந்து வந்தனர். ஆசரிப்பு கூடாரத்தின் தொங்கு திரைகளும், ஆசாரியனாகிய ஆரோன்,அவனது குமாரரின் ஆசாரிய வஸ்திரங்களும்கூட இவ்விதமாய் விசேஷமான தையல் வேலையோடு உருவாக்கப்பட்டன. (யாத். 27:16; 28:2–8,39; அதிகாரம் 35,36:37,38:18; 39:29). தீர்க்கதரிசயாகிய தெபோராளின் பாடல்களிலும் மற்ற தீர்க்கதரிசன புத்தகங்களிலும் இதைக்குறித்து நாம் வாசிக்க இயலும் (நியா. 5:30; சங். 45:13; எசே. 16:10).

கற்காலம் துவங்கியே மக்கள் ஊசிகளை பயன்படுத்தி தையல் வேலைகளை செய்து வந்தனர். கற்கால மக்கள் எலும்பினாலான ஊசிகளையும், அதையடுத்து வந்த மக்கள் வெண்கலம், செம்பு, இரும்பு மற்றும் பித்தளை ஊசிகளையும் பயன்படுத்தி வந்தனர். 'தைத்தல்' (To sew) என்ற பதம் வேதத்தின் பல இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் 'ஊசி' என்ற பதம் மத்தேயு 19:24ல் மாத்திரமே இடம்பெற்றிருக்கிறது.

## அலங்காரமும் அழகுசாதனப் பொருட்களும்

அக்காலந்தொட்டே மக்கள் தங்களை அழகுசாதனப்பொருட்களைக் கொண்டு அலங்கரிக்கும் நாகரீகம் தெரிந்தவர்களாய் இருந்தனர். வேறு வார்த்தையின் கூறினால் அவர்கள் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரைக்கும் தங்களை அழகுபடுத்திக் கொள்வதில் கவனமாய் இருந்தனர். பெண்கள் தங்களின் தலைமயிரையும், ஆண்கள் தங்கள் தாடியையும் விரும்பி அலங்கரித்தனர். இவற்றோடு சீப்புகள், சவரன்கத்தி, எண்ணெய், சோப்பு, சுத்திகரிப்பின் சாதனங்கள், கண்மை மற்றும் பச்சை குத்துதல் போன்றவை அலங்காரத்திற்கு உகந்த உபகரணங் களாய் இருந்தன.

**1. தலைமயிர், தாடி (HAIR AND BEARD) :**

முன் நாட்களில் பலவிதமான சிகையலங்காரங்கள் மக்களால் பயன்படுத்தப் பட்டு வந்தது. ஒருசில கலாச்சாரத்தில் தலைமயிரை ஸ்திரீகள் புருஷர் இருபாலரும் நீளமாக வளர்த்து வந்தனர். சில கலாச்சாரத்திலோ புருஷர்கள் தலைமயிரை நீளமாக வளர்ப்பதை இழிவாகக் கருதினர். எகிப்திய, சீரிய நாட்டவரது நாளேடுகளிலிருந்து கானானியரின் சிகையலங்காரங்களைக் குறித்த சில முக்கிய குறிப்புகளை அறிந்துகொள்கிறோம். இஸ்ரவேலரும் கானானியரின் சிகையலங்காரத்தையே பின்பற்றி வந்ததாக குறிப்புகள் அறிவிக்கின்றன.

நாகரீகமும் கண்ணியமுமுள்ள இஸ்ரவேலர் பலர் தங்கள் தலைமுடியை தோள்பட்டைவரை வளரவிட்டிருந்தனர். அதிகமாக வளருகின்ற முடியை அவ்வப்

பொழுது வெட்டி சீர்செய்துகொண்டனர் (2சாமு. 14:26; உன். 5:11). சிம்சோன் தன் தலைமுடியை ஜடைகளாகப் பின்னியிருந்தான் (நியா. 16:13). வழுக்கைத் தலையானது அந்நாட்களில் இழிவாகக் கருதப்பட்டது (2இரா. 2:23). ஆசாரியர்கள் தங்கள் தலைமுடி முழுவதையும் சிரைத்து மொட்டையடித்துக் கொள்ளமாலும், தலைமுடியை நீளமாக வளரவிடாமலும் இருக்கவேண்டுமென்று பிரமாணம் கூறுகின்றது (லேவி. 21:5; எசே. 44:20). நசரேய விரதம் காப்பவர்கள் தங்கள் விரதத்துவ காலம் முடியும்வரை தலைமுடியை நீளமாக வளர்த்து,அந்நாட்கள் முடிந்தபின் தலைமுடியை சிரைத்து, பொருத்தனை செய்யப்பட்ட தலைமயிரை எரிகிற அக்கினியில் போட்டுவிடுவர் (எண். 6:18). புதிய ஏற்பாட்டுக்காலத்தில் தலைமுடியை நீளமாக வளர்த்துக் கொள்வது புருஷர்களுக்கு அவமானமாய் கருதப்பட்டது (1கொரி. 11:14)

பழைய ஏற்பாட்டு ஸ்திரீகள் பொதுவாக தங்கள் தலைமயிரை நீளமாக வளர்த்து பின்னலிட்டுக் கொள்ளுவதுண்டு. சில வேளைகளில் அந்தப்பின் னல்களில் செயற்கை வளைவுகளை வைத்தும் அலங்கரித்துக் கொள்வர் (2இரா. 9:20; உன். 4:1; 5:2; 7:5; ஏசா. 3:24; வெளி. 9:8). புதிய ஏற்பாட்டிலே பவுல் கொரிந்தியருக்கு நிருபத்தை எழுதும் போது ஸ்திரீகள் தங்கள் தலைமயிரை வெட்டிக்கொள்ளாமல், தலைக்கு முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார் (2கொரி. 6:11). இந்த வேதபகுதியைக் குறித்து பலவிதமான சர்ச்சைகள் எழும்பியுள்ளன,அந்நாட்களில் சபைகளிலுள்ள விசுவாச ஸ்திரீகள் கொரிந்துப் பட்டணத்தாரின் அஞ்ஞான மார்க்கத்தைப் பின்பற்றி தங்கள் தலைமுடியை வெட்டிக் கொண்டதாகவும், தேவையற்ற விதங்களில் பலவிதமான மணிகளினால் தலைமயிரை அலங்கரித்து பிறர்காண வேண்டுமென்று முக்காடிட்டுக் கொள்ளாமல் வந்ததாலுமே பவுல் இந்த வார்த்தைகளைக் கொரிந்து விசுவாசிகளுக்கு எழுதியதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

**2. சீப்புகள் (COMBS)** : ஆரம்ப முதல் நூற்றாண்டுகளிலிருந்தே சிகை அலங்காரத்திற்கென மக்கள் பலவிதமான சாதனங்களை பயன்படுத்தி வந்தனர். தந்தம் மற்றும் எலும்பினால் செய்யப்பட்டசீப்புகள் தலைமுடியை சீர்படுத்துவதற்கென பயன்பட்டன. மேலும் தலைமுடிக்கு எண்ணெய் மற்றும் வாசனைத் திரவியங்களைப் பூசும் பழக்கம் அந்நாட்கள் முதற்கொண்டே இருந்துவந்தது (ரூத் 3:3; 2சாமு.14:2). புதிய ஏற்பாட்டிலோ மக்களின் உடல் அலங்காரத்தைப் பற்றி பேசாமல் இருதயத்தின் அலங்கரிப்பையே தேவன் பிரதானமாய் எதிர்பார்க்கிறார். அதையே அப்போஸ்தலர்களான பவுலும் பேதுருவும் தங்கள் நிருபங்களில் வலியுறுத்திக் கூறியுள்ளனர். (தீத். 2:10; 1பேது.3:3). தலைமயிரானது ஸ்திரீகளுக்கு முக்காடாக கொடுக்கப்பட்டதே யொழிய, அலங்கரிப்பதற்கென கொடுக்கப்படவில்லையென்று பவுல் திட்டமாக எழுதியுள்ளது இக்கால ஸ்திரீகளுக்கும் பொருந்துவதாகும் (1கொரி. 11:15).

எகிப்தியரும் கானானியரும் தலைச்சாயம் (Hair Dye) மற்றும் போலி சிகை அலங்காரத்தை (Wig) பயன்படுத்தும் வழக்கமும் அந்நாட்களிலிருந்தது. ஆனால்

இஸ்ரவேலரோ அப்படிப்பட்ட அலங்காரங்களை பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் எதுவுமில்லை. துக்கநேரங்களிலும் மரண இழப்பின்போதும் அழுது புலம்பும் யூத புருஷர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு தங்கள் தலைமயிரை சிரைத்துக்கொள்ளுவது யூத வழக்கமாயிருந்தது (ஏசா. 3:24; 15:2; 22:12). ஸ்திரீகள் தங்களை சிறுமைப்படுத்தும்படி அல்லது ஸ்திரீகள் சிறுமைப்படுத்தப்படும்போது தங்கள் தலைமயிரைக் கட்டிக் கொள்ளாமல் விரித்துப் புலம்புவது அந்நாட்களில் வழக்கத்திலிருந்தது (2சாமு.13:19; எண்.5:18).புதிய ஏற்பாட்டில் தங்களைத் தாங்களே ஸ்திரீகள் சிறுமைப்படுத்திக்கொண்டதற்கு ஆதாரமுண்டு (லூக். 7:38).

**3.சவரகன் கத்தி (RAZOR)** : பண்டைக்காலத்திலிருந்தே உலோகத்தை தகடுகளாக அடித்து, பொருட்களை உருவாக்கும் காலத்திற்கு முன்னமே, சவரகன் கத்தி பயன்படுத்தப்பட்டுவந்தது. சிக்கிமுக்கி கற்களாலான சவரகன் கத்தியை (Flint Razor) கற்கால மனிதர்கள் பயன்படுத்தி வந்ததற்கான ஆதாரங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. தாடி மயிரை வளர்த்துக் கொள்ளுவது யூதர்களின் பாரம்பரியமாயும், புருஷர்களின் உள்ளுரத் தன்மையை வெளிப்படுத்தும் அடையாளமாகவும் இன்று வரை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது (சங்.133:2; 2சாமு.19:24). தாடி மயிரை முழு வதுமாகவோ அல்லது ஒரு பக்கத்து தாடியையோ சிரைத்துக் கொள்ளுவது ஆண்களுக்கு மிகுந்த அவமானத்திற் குரிய காரியமாக கருதப்பட்டது (2சாமு. 10:4; ஏசா. 50:6). துக்கித்துப் புலம்புகிற வேளையில் மாத்திரமே புருஷர்கள் தாடி மயிரை குறைத்துக் கொள்வர் அல்லது முழுவதுமாக எடுத்துவிடுவர் (ஏசா. 15:2; எரே. 41:5).

**4.அழகுசாதனப் பொருட்கள் (COSMETICS)**: மத்திய கிழக்கு நாடுகளில் உஷ்ணம் மிக அதிகமாக இருப்பதால் அந்நாட்டு மக்கள் வாசனைத் திரவியங் களையும் (Perfumes), வாசனைப் பொடிகளையும் (Powders) அதிகமாக பயன்படுத்தி வந்தனர். வாசனைத் திரவியங்களை உருவாக்கி விற்பனை செய்வது அந்நாடுகளில் முக்கியத் தொழிலாயிருந்தது (ஆதி. 37:25; வெளி. 18:13). எருசலேம் நகரத்தில் வாசனைத் திரவியங்களை உருவாக்கிவிற்கும் ஒரு கூட்டத்தினர் வசித்து வந்தனர். வாசனைத் திரவியங்களை தயாரிப்பதற்கென்று தனி இடங்களும் (Perfumery) இருந்தன.

எஸ்தர், ராஜாவிடம் அழைத்துச்செல்வதற்குமுன்பு வெள்ளைப்போள தைலத்தி னாலும் சுகந்த வர்க்கத்தினாலும் சுத்திகரிக்கப்பட்டாள் (எஸ்தர் 2:12).உன்னதப் பாட்டின்பல இடங்களிலும் வாசனைத் திரவியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு (உன். 1:3; 3:6; 4:10; 5:1). அந்நாட்களிலிருந்த விலைமாதர்கள் வாசனைத் திரவியங்களை அதிகமாக பயன்படுத்தினர் (நீதி. 7:17; ஏசா. 57:9; எசே. 23:41). இஸ்ரவேலர்கள் தேசத்தின் நலனை நாடாமல், ஆடம்பர வாழ்வில் திளைத்து வாசனைத் திரவியங்கள் பூசி வீணாக பண்டிகை கொண்டாடியதை ஆமோஸ் தீர்க்க தரிசி வன்மையாகக் கண்டிக்கின்றான் (ஆமோ. 6:6).

புதிய ஏற்பாட்டிலும் பரிமளத் தைலங்களும் வாசனைத் திரவியங்களும் மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தன (மத். 26:7; லூக். 7:37, யோவா.12:3). நளதம் என்ற விலை

யேறப்பெற்ற பரிமள தைலத்தை ஆண்டவர் இயேசுவுக்கு உடைத்து ஊற்றியதை காணமுடிகிறது (மாற்.14:3; யோவா.12:3).இது இந்தியாவின் இமயமலைகளி லிருந்து விசேஷித்த விதமாக தயாரிக்கப்பட்ட விலையேறப்பெற்ற வாசனைத் தைலமே என்று கருத்து உண்டு. வேறுசில வாசனைத் திரவியங்களும் சுகந்த வர்க்கங்களும் நளதமும் அரபு தேசத்திலிருந்தும் சோமாலிய தேசத்திலிருந்தும் வந்ததாகக் கூறுகின்றனர்.

**5.எண்ணெய் (OIL)** : இஸ்ரவேலர்கள் ஒலிவ எண்ணெயை அதிகமாக பயன்படுத்தி வந்தனர். வெயிலின் உஷ்ணத்தைக் குறைப்பதற்காக தலையிலும் சரீரத்திலும் எண்ணெய் பூசிக்கொள்வது அவர்களது வழக்கமாய் இருந்தது. மட்டுமல்ல யுத்த ஆயுதங்களுக்கும் எண்ணெய் பூசி பாதுகாப்பது இஸ்ரவேல் ராணுவத்தினரிடையே வழக்கமாய் இருந்தது (2நாளா. 28:15). 13ஆம் நூற்றாண்டில் எகிப்திய நகல்களின்படி அரசாங்கத்தில் வேலைசெய்கின்ற பணியாளர்கள் பயன்படுத்துவதற்கு எண்ணெய் வாங்கப்பட்டதாக ஆதாரங்கள் இருக்கின்றது.

**6.சோப்பு (SOAP)** : சோப்புகளைப் பயன்படுத்தும் வழக்கமும் அக்காலத்தில் இருந்தது.அது நாம் பயன்படுத்துகிற இக்காலத்துப் பொருட்களைப் போல இல்லாவிட்டாலும், மிருகத்தின் கொழுப்புகளோடு மரச்சாம்பல் மற்றும் பொட்டா சியத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டன. என்றாலும் பின் நாட்களில் நவீன முறைகளைப் பயன்படுத்தி மக்கள் வகை வகையான சோப்புகளை பயன்படுத்தத் துவங்கினர். தாவீது ஈசோப்பினால் என்னை சுத்திகரியும் என்று தன் ஜெபத்தில் சொன்னது சோப்பு அல்ல. அது ஒரு வகை எண்ணெயாகும் (சங்.51:7).

**7.சுத்திகரிப்பின் சாதனங்கள் (TOILET ARTICLES)** : புதைப் பொருள் ஆராய்ச்சியாளர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் ஆராய்ச்சி செய்த போது பல விதமான சுத்திகரிப்பின் சாதனங்களை கண்டெடுத்துள்ளனர். சிறிய குவளைகள், மண்பாத்திரங்கள், கண்ணாடி குழாய்கள் போன்றவற்றில் வாசனைத் திரவி யங்களை அடைத்து வைத்து பயன்படுத்தியது கண்டறியப்பட்டுள்ளது. கண்மைகள் தயாரிப்பதற்குரிய சிறிய கல்உரல்கள் (Stone mortars), தந்தம் மற்றும் மரத்தினாலான கரண்டிகள், எலும்பு மற்றும் உலோகத்தாலான திரவியங்களை எடுக்கும் உப கரணங்கள்(Spatulas), மெருகூட்டும் சாதனங்கள் (Polishers), சுரண்டும் உபகர ணங்கள்(Serapers) மற்றும் பல சாதனங்களும் குளியலறை மற்றும் கழிவறை யிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன.வேதத்தில் ஒருசில எடுத்துக்காட்டுகளே இதற்கு இருந்தாலும் (ஏசா. 3:20; லூக். 7:37) புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் நமக்கு மிகுதி யான ஆதாரங்களைக் கொடுக்கின்றனர்.

**8. கண் மை (EYE PAINT)**: மத்திய கிழக்கு நாடுகளில் வசித்த ஸ்திரீகள் முற்காலம் துவங்கியே சிலவகையான மைகளையும், சாயங்களையும், பயன்படுத்தி வந்தனர். கண்களுக்கும் புருவங்களுக்கும் மையிடுவது அந்நாட்களில் வழக்கமாயிருந்தது.

சூரிய ஒளியின் தாக்குதல்களிலிருந்து கண்களை பாதுகாப்பதற்காக ஆரம்பத்தில் இது பயன்படுத்தப்பட்டு வந்தாலும் பின் நாட்களில் மெசபத்தோமியா, இஸ்ரவேல், எகிப்து தேசங்களில் இது அழகிற்கான நாகரீகமாக மாறிவிட்டது. யேசபேல் தம் கண்களுக்கு மையிட்டு சிங்காரித்தாள் என்பதை வேதம் கூறுகிறது (2இரா. 9:30). எரேமியா, எசேக்கியேல் போன்ற தீர்க்கதரிசிகளும் இவ்வித வழக்கங் களைக் குறித்து எழுதியுள்ளனர் (எரே. 4:30; எசே. 23:40).

மண்ணிலிருந்து தோண்டப்பட்ட ஒருவித உலோகத்தை, கல்லான சிறிய உரலி லிட்டு தூளாக்கி அதை தண்ணீரோடோ, தாவர பசையோடோ கலந்து இவ்வித கண் மைகளை தயாரித்தனர். மையைப் பயன்படுத்துவோர் ஒரு குப்பியில் இந்தப் பசையை அடைத்துவைத்து கரண்டி போன்ற சிறிய உபகரணத்தால் அவ்வப் பொழுது அதை எடுத்து கண்களுக்கு பூசிக் கொள்வார். கண்மை தயாரிப்பதற்கு ரோமர்கள் அஞ்ஞனக்கல்லைப் (Antimony) பயன்படுத்தினர். எகிப்தியர்கள் நவீன காலத்தில் பயன் படுத்தப்படும் "கண்மை" (Khol) என்ற பதம் 'மைபூசுதல்' என்ற மூல (Semitic) வார்த்தையிலிருந்து வந்தது. எகிப்திய பெண்கள் கன்னங்களை சிவப்பாக்குவதற்கு சிவந்த மஞ்சள்களிமண்ணையும் (Red Ochre) பயன்படுத்தியதோடு முகத்தில் பூசுவதற்கு பவுடர்களையும் உதட்டுச் சாயங்களையும் பயன்படுத்தினர் (ஏசா. 3:18–26).

**9.பச்சைக் குத்துதல் (TATOOING)** : யேகோவா தேவனால் அருவருக்கப்பட்ட இந்த பழக்கத்தை (லேவி. 19:28) மத்திய கிழக்கு நாட்டு மக்கள் அதிமாக பயன் படுத்தி வந்தனர். தங்கள் தேவர்களின் பெயர்களையும் உருவங்களையும் அசுத்த ஆவிகளோடு உள்ள தொடர்பை வெளிப்படுத்தும் அடையாள எழுத்துகளையும் இவ்விதமாக குத்திக்கொள்வது அம்மக்களின் வழக்கமாய் இருந்தது. உள்ளங் கைகளிலோ, முகத்திலோ, முன்னங்கை மற்றும் புயங்களிலோ,உடல் முழுவ திலுமோ பச்சைக்குத்திக்கொள்ளும் பழக்கம் அந்நாட்களில் நாகரீகமாக கருதப் பட்டது. இஸ்ரவேலர் புத்திரர் தங்கள் கண்களின் நடுவேயும் கைகளின்மேலும் ஞாபகக்குறியாக அல்லது அடையாளமாக கர்த்தரின் வார்த்தைகளையே குறித்துக்கொள்ள வேண்டு மென்பது தேவனது கட்டளையாகும். (உபா. 6:8; யாத். 13:9,16). எனவேதான் அஞ்ஞான மார்க்கத்தார் பயன்படுத்தும் இவ்வித அடையாளங்களை இஸ்ரவேலர் பயன்படுத்தக் கூடாதென்று யேகோவா தேவன் அவர்களை எச்சரித்தார்.

◆❖◆❖◆❖◆

5

# வீடுகளும் வாசஸ்தலங்களும்

# (HOUSES AND DWELLINGS)

மனிதன் வாழ்வதற்கு தேவன் பூமியை சிருஷ்டித்தார். அதே மனிதன் தான் வசிப்பதற்கு உகந்த இடத்தை தானே தெரிந்தெடுக்கிறான். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக்கூடாது என மூதாதையர் பழமொழி உண்டு. கோயில் இருக்கிறதோ, இல்லையோ ஆனால் ஒவ்வொரு மனுஷனும் ஒவ்வொரு வீட்டில் குடியிருப்பது மனிதனின் அத்தியாவசியமாய் இருக்கிறது.வேதாகம காலநாட்களிலும் மனிதர்கள் அவரவர் தங்களால் இயன்ற வாசஸ்தலங்களில் வாசம்பண்ணினர். ஒவ்வொரு நூற்றாண்டிலும் மக்கள் ஒவ்வொரு வகையான வாசஸ்தலங்களில் வசித்து வந்தனர். தட்பவெப்ப சூழ்நிலைக் கேற்ப, பனி, காற்று, மழை போன்ற இயற்கையின் மாறுதல்களுக்கேற்ப மக்கள் தங்களுக்கு குடியிருக்கும் ஸ்தலங்களை அமைத்துக்கொண்டனர். குகைகள், கூடாரங்கள், வீடுகள், அரண்மனைகள் என மனிதனின் குடியிருப்பின் வளர்ச்சி ஒவ்வொரு காலத்திலும் மாறிக் கொண்டேயிருந்தன.

**1. குகைகள் (Cave) :–** நாகரீகம் அடையாத அந்த நாட்களில் குகைகளில் மாத்திரமே மக்கள் வசித்து வந்ததற்கு புதைபொருள் ஆராய்ச்சிகள் சான்று பகிர்கின்றன. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பாலஸ்தீன மக்கள் குகைகளிலேயே வசித்து வந்தனர். பெயர்செபாவின் தென் புறத்தில் உள்ள தெல்அபுமத்தாரில் (Tell Abu Matar) கி.மு.**34,35** நூற்றாண்டுகளில் மக்கள் குகைகளில் வாழ்ந்த தற்கான ஆதாரங்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.“கெபி”(Hor) என்ற பதம் குகையைக் குறிப் பதற்கு வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது **(யோபு 30:6)**.இந்த வார்த்தை

யிலிருந்தே கெபி வாழ் மக்களைக்குறிக்கும் (Cave dweller or Troglodyte) 'ஒரைட்' (Horite) என்ற வார்த்தையை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்தனர்.

பழைய ஏற்பாட்டில் குகை அல்லது கெபி (Cave) என்ற வார்த்தை 40 முறை பயன் படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரவேல் தேசத்தின் மலைகளில் சிறிதும் பெரிதுமான கெபிகள் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. இந்தக் கெபிகளை மக்கள் தங்கள் வசதிக்கேற்ப ஆயுதங்களைக் கொண்டு பெரிதாக்கி, சீர்படுத்தி அதில் வசித்து வந்தனர். கழிவுச் சாக்கடைகள், பண்டக அறைகள், அடுப்புகள், கல்லினால் செய்யப் பட்ட இருக்கைகள், விளக்குத்தூண்கள், சுவர் அலங்காரங்கள் போன்றவற்றை அதில் உருவாக்கிக் கொண்டனர். சில குகைகளில் ஒன்றுக்குமேற்பட்ட அறைகளும் அமைக்கப்பட்டிருந்தன (ஆதி. 19:30; நியா. 15:8; 1இரா.19:9, 13).

சோதோம் கொமாரா பட்டணங்கள் அழிக்கப்பட்டபின்பு, லோத்துவும் அவனது இரு குமாரத்திகளும் குகைகளிலே குடியிருந்தனர் (ஆதி. 19:30). தாவீதும் அவனோ டிருந்தவர்களும் "அதுல்லாம்" என்ற இடத்திலே கெபிகளில் குடியிருந்தனர் (1சாமு. 22:1) குகைகள் அடைக்கலத்திற்காகவும் பயன்பட்டன (யோசு.10:16; நியா. 6:2) மட்டுமல்லாது பண்டகங்களையும் ஆயுதங்களையும் சேர்த்துவைக்கும் இடமாகவும் பயன்பட்டன. தண்ணீர் சுனைகள் சில குகைகளில் இருந்ததால் அவைகளை தாங்கள் பயன்படுத்துவதற்கென பத்திரமாகப் பாதுகாத்துவந்தனர். சில குகைகள் கல்லறைகளாகவும் பயன்பட்டன. மக்பேலா நிலத்திலுள்ள குகையை ஆபிரகாம் விலைக்கிரயமாய் வாங்கி அதைக் கல்லறையாக பயன்படுத்தினான் (ஆதி. 23:19). நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து பிறந்த மாட்டுத் தொழுவத்தின் முன்னணையை யும் அவரது கல்லறையும், தோண்டி எடுக்கப்பட்ட ஒரு கெபியாக வேயிருந்தது (மத். 27:60) என்று சரித்திரம் கூறுகின்றது.

**2. கொட்டாரம்** **(HUT *(or)* BOOTH)**: – கொட்டாரங்கள் பொதுவாக வனாந்திரங்க ளிலும் மலைகளிலும் அங்கு தங்கும் மேய்ப்பர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தன. இரவு நேரங்களில் துஷ்டமிருகங்களிலிருந்து தங்கள் மந்தையைக் காப்பதற்கும், குட்டிகள் ஈன்ற மிருகங்களைப் பராமரிப்பதற்கும் இவ்விதக் கொட்டாரங்களை மேய்ப்பர்கள் உருவாக்கினர். மத்திய கிழக்கு நாடுகளில் வசித்த மேய்ப்பர்களும் பயிர்தொழில் செய்பவர்களும் இவ்விதக் கொட்டாரங் களை பொதுவாக நாணலினால் அமைத்துக் கொண்டனர் (ஆதி. 33:17).

**3.கூடாரம் (TENT)**:- நாடோடிகளாகத் திரிந்த மக்கள் கூடாரங்களில் தான் வசித்து வந்தனர். அவர்களுக்கு நிரந்தரமான இடம் இல்லாதபடியால் அவ்வப்போது இடம்பெயர்வதற்கு ஏற்றாற்போல் கூடாரங்களை அமைத்துக் கொண்டனர். நோவாவின் காலத்தில் உண்டான ஜலப்பிரளயத்திற்கு முன்பாக மக்கள் கூடாரங்களிலே வசித்தனர் (ஆதி. 4:20; 9:21) முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றோர் கூடாரங்களிலேயே குடியிருந் தனர் (ஆதி. 13:3,5; 18:9; 24:67; 26:25; 31:33).

இஸ்ரவேலர்கள் கானான் தேசத்தை சென்றடைந்ததும் கூடார வாழ்வை விட்டு விட்டு வீடுகளைக் கட்டி குடியிருக்க ஆரம்பித்தனர். ஆனால், மேய்ப்பர்கள் மாத்திரம் கூடாரத்திலே குடியிருந்தனர் (ஏசா. 38:12). ரேகாபியர்களும் கூடார வாழ்வை விட்டு விடாமல் தொடர்ந்து கூடாரத்தில் குடியிருப்பதையே தெரிந்து கொண்டனர் (எரே. 35:6–10). இஸ்ரவேலின் சேனைகளும் யுத்த நேரங்களில் கூடாரமிட்டு அதில் தங்கி வந்தனர்.

அந்நாட்களில் பயன்படுத்திய கூடாரமானது தற்கால நாடோடிகள் பயன்படுத்தும் கூடாரத்தைப் போன்றே இருந்தது. கூடாரத்தின் நடுப்பகுதியில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட செங்குத்தான கொம்புகள் ஊன்றப்பட்டி ருக்கும்.அதற்கு இடது வலது புறங்களில் சம எண்ணிக்கையுள்ள, சற்று குறைவான உயரம் உடைய, சிறிய கொம்புகள் சற்று வெளிபுறம் சாய்வாக ஊன்றப்பட்டிருக்கும். கூடாரத்தின் மேற் பகுதியானது ஒட்டகத் தோல், ஆட்டு ரோமத்தால் பின்னப்பட்ட கூடாரத் துணியால் மூடப்பட்டிருக்கும். கறுப்பு அல்லது பழுப்பு நிறமுள்ள இந்த கூடாரத் துணியானது நீளவாட்டில் தைக்கப்பட்டு கூடார முனையோடு சேர்த்து இறுக கட்டப்பட்டிருக்கும். இந்தக் கூடாரத் துணியானது சாய்வாக ஊன்றப்பட்டிருக்கும். கூடார முனை யோடு கட்டப்பட்டிருப்பதால் காற்று வேகமாக வீசும்போது கூடாரம் சாய்ந்து விடாமல் பாதுகாப்பாயிருக்கும்.

சிலிசியா (Cilicia) தேசத்திலுள்ள ஆட்டு ரோமத்தினாலான கூடாரத் துணியானது மிகவும் பிரசித்திப் பெற்றதாயிருந்தது. எனவே அந்தக் கூடாரத் துணியானது சிலிசிக்கம் (Cilicium) என அழைக்கப்பட்டது. சிலிசியா தேசத்திலுள்ள தர்சு பட்டணத்தனாகிய சவுல் கூடாரத் தொழில் செய்து வந்தாக வேதம் குறிப்பிடு கின்றது (அப்.18:3). இந்தக் கூடாரத்தை அமைப்பவர்கள் சதுர வடிவமான கூடாரத் துணியை தரைமேல் விரித்துக்கொள்வர்.நடுவாக இருக்கும் செங் குத்துக் கொம்புகளை கையில் எடுத்துக்கொண்டு ஒரு நபர் அந்தத் துணிக்கு அடியிலே ஊர்ந்து சென்று கொம்புகளை நாட்டி கூடாரத் துணியை உயர்த்துவர். அதன்பிறகு பக்கவாட்டில் உள்ள கூடாரத் துணிகளானது கயிறுகளில் இணைக் கப்பட்டு கூடாரம் முனையோடு சேர்த்துக் கட்டப்படும். நடுவில் உள்ள கொம்புகள் ஏறத்தாழ 5–7 அடி உயரமுள்ளதாய் இருக்கும். பக்கவாட்டுக் கொம்புகள் அதை விட உயரம் குறைந்ததாய் இருக்கும். கூடாரத்தின் கடைசிப் பகுதியானது கூடார முனையோடு சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும் (ஏசா. 54:2).

பொதுவாக கூடாரத்தின் உட்பகுதியானது ஒரு திரையின் மூலம் இருஅறைகளாக பிரிக்கப்பட்டிருக்கும். ஸ்திரீகளும் குழைந்தைகளும் உட்புற அறையில் தங்கியிருப் பார்கள். வெளிப்புற அறையானது பகல் வேளைகளில் வருகின்ற அந்நியர்களுக்கும் நெடுந்தூரம் பயணப்பட்டு வருகிறவர்களும் தங்கியிருப்பார்கள்.

'புறப்படு' (To depart) என்ற எபிரேயச் சொல்லின் சரியான பொருள் 'கூடார முளையைப் பெயர்த்திடு' (To pull up tent stakes) என்பதாகும். 'உன் கூடாரங்களுக்குப் போய்விடு'

(To your tents O Israel) (1இரா. 12:16) என்பதன் பொருள் 'வீட்டிற்கு திரும்புவோம்' (Let's go home) என்பதாகும். வேதத்தில் கூடாரம் என்ற வார்த்தை பல இடங்களில் வாசஸ்தலம் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (Tabernacle). அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய சரீரத்தை வாசஸ்தலம் என்று குறிப்பிடு கின்றார் (2கொரி. 5:1–5). ஆண்டவாராகிய இயேசுவும் நித்திய வீட்டைக் குறிப்பிடு கையில் கூடாரம் என்றே குறிப்பிடுகின்றார் (லூக். 16:9 ASV). வெளிப்படுத்தின விசேஷத்திலும் பரம வீடாகிய வாசஸ்தலத்தை கூடாரம் என்று வேதம் கூறுகிறது (வெளி. 21:3).

**4. வீடுகள் (HOUSES) :-** பழைய ஏற்பாட்டுக்கால மக்கள் நாகரீகமடைந்த காலத்தில் கூடார வாழ்வை விட்டுவிட்டு வீடுகளை கட்டி குடியிருக்க ஆரம்பித்தனர். தேன் கூட்டைப்போன்ற அமைப்பில் கட்டப்பட்ட அந்த வீடுகள் கூம்புவடிவ கூரைகளை உடையதாயிருந்தது. தென்சீரிய தேசத்தில் இது போன்ற வீடுகள் இன்னும் காணப்படுகின்றன. அந்நாட்களில் வீடுகளைக் கட்டுவதற்கு மரங்களை உத்திரங்களாக மக்கள் பயன்படுத்த அறியாதிருந்தபடியால் இதுபோன்ற கூம்புவடிவ வீடுகளைக் கட்டிக் குடியிருந்தனர்.

பின்நாட்களில் சதுர, செவ்வக வடிவங்களில் வீடுகளைக் கட்டதொடங்கினர். 4 சுவர்களுடைய வீட்டின் ஒரு சுவரில் வாசலும் நிலையும் வைக்கப்பட்டிருக்கும். முன்வாசலை அடுத்து ஒரு கூடமும் (Forecourt) அந்தக் கூடாரத்தை அடுத்து எல்லோரும் பயன்படுத்தும் விசாலமான ஒரு அறையும் (Livingroom) அதையடுத்து இரண்டு தனித்தனி படுக்கை அறைகளும் கட்டப்பட்டிருந்தன. குடும்பத்தின் நபர்களின் எண்ணிக்கை அதிகமாகும் போது தேவைக்கேற்ப அறைகளை அதிமாக்கிக் கொள்வர். இப்படியாக அறைகள் சுற்றிசுற்றி கட்டப்பட்டிருந்ததை புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடித்திருந்தனர்.

**5. அஸ்திபாரம் (FOUNDATION)** :- வீடுகளை கட்ட ஆரம்பித்த நாட்களிலிருந்தே மக்கள் உறுதியான அஸ்திபாரங்களோடு வீடுகளைக் கட்டினர். வழக்கமாக அஸ்திபாரமானது உறுதியான பாறைகளின் மேல் போடப்பட்டது. மூலைக்கல்லானது கவனமாக வைக்கப்பட்டு வேலை துவக்கப்படும் (ஏசா. 28:16; மத். 21:42; 1பேது. 2:6). பொதுவாக அந்நாட்களிலுள்ள புறஇனத்து மக்கள் தங்கள் மதச் சடங்கின்படி வீடுகளுக்கு அஸ்திபாரம் இடும்போது மிருகங்களை பலியிடுவது வழக்கம். சில வேளைகளில் பேய்வணக்கத்திற் கேற்றபடி புறவினத்து மக்கள் தங்கள் குழந்தைகளையும் பலியிட்டனர் (1இரா. 16:34).

**6.சுவர்கள் (WALLS)** :- வீடு கட்ட அஸ்திபாரம் இட்டபின் அதின்மேல் சுவர்களை எழுப்பி மேல்தளம் இட்டு வீடுகளைக் கட்டிமுடித்தனர். சில சுவர்கள் களிமண்ணால் கட்டப்பட்டன. சிலர் நாணல்களை நடுவே வைத்து, உட்புறமும் வெளிப்புறமும் களிமண்ணைப் பூசி சுவர்களை எழுப்பினர். இவ்வகையான சுவர்கள் உறுதியுள்ளதாக கருதப்பட்டன. இவைகள் "வேட்டல் அன் டாப்" ('Wattle-and-Daub') என

அழைக்கப்பட்டன. பின்நாட்களில் காய்ந்த வைக்கோலையும் களிமண்ணையும் சேர்த்து செங்கற்களாக்கி அவைகளை வைத்து சுவர்களைக் கட்டினர்.செங்கற் களின் இடையே களிமண்ணானது சாந்தாக பூசப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலம் முடிந்தபின்பு சுவரின் வெளிப்புறத்தை சீர்ப்படுத்துவர். சுவரின் உட் புறத்திலும் களிமண்சாந்தை பூசி,அதின்மேல் வர்ணமிட்டு. வீட்டை அலங்கரிப்பர் (லேவி. 14:43,48; எரே. 22:14).

இவ்விதமாக வீடுகளின் சுவர்கள் கட்டப்பட்டாலும் பலவேளைகளில் சுவர்களில் துவாரமிட்டு பொருட்களைத் திருடிச்சென்று விடுவதால் (யோபு 24:16; மத். 6:19) இன்னும் உறுதியான சுவர்களை மக்கள் கட்டத் துவங்கினர். எபிரேயர்கள் தங்கள் சுவர்களில் குறுக்கும் நெடுக்குமாக (Headers and Stretchers) செங்கற்களை வைத்து சுவர்களைக் கட்டி அதன் உறுதியை அதிகமாக்கினர். பெத்தேலிலே தோண்டிக் கண்டுபிடிக்கப்பட்ட பல சுவர்கள் இம்முறையிலேயே கட்டப்பட்டிருந்தன.

மெசபத்தோமியா தேசத்திலே சாந்துக்கு பதிலாக நிலக்கீலை (Pitch, Bitumen) பயன்படுத்திவந்தனர் (ஆதி. 11:3; 14:10). கி.மு. 1600 – 1200 நூற்றாண்டுகளில் கற்களை செவ்வக வடிவில் உளியினால் செதுக்கி சீராக்கப்பட்ட அந்தக் கற்களால் வீடுகளும் மதில் சுவர்களும் கட்டப்பட்டன. நகரம் மற்றும் அரண் மனைகளின் மதில் சுவர்களில் வீடுகளைக் கட்டுவது அந்நாட்களில் வழக்கமாய் இருந்தது. வெளிப்புற மதிலின்மேலோ அல்லது இரு மதில்களுக்கு இடையிலோ வீடுகளைக் கட்டி மக்கள் குடியிருந்தனர் (யோசு. 2:15; அப். 9:25).

**7. தரை (FLOOR) :-** ஆரம்பநாட்களில் வீடுகளின் தரைகள் சமப்படுத்தப்படாத கரடுமுரடான தரைகளாக இருந்தன. பின் நாட்களில் உறுதியாக அழுத்தப்பட்டு சமப்படுத்தப்பட்ட தரைகளை மக்கள் பயன்படுத்த ஆரம்பித்தனர். நாகரீகம் பெருகின போது கண்கவர் அலங்காரக் கற்களை மேன்மக்கள் பயன்படுத்த ஆரம்பித்தனர். ஐசுவரியவான்களின் வீடுகளிலும் அரண்மனைகளிலும் தரைகளுக்குப் பதிலாக மரத்தில் செய்யப்பட்ட வழவழப்பான அல்லது சிற்ப வேலையுடைய தரைகளை பயன்படுத்தினர் (1இரா. 6:15). குப்பைகளையும் தேவையற்ற பொருட்களையும் வீதிகளில் மக்கள் எறிந்துவிடுவதால் ஒவ்வொரு ஆண்டும் வீதிகளின் உயரம் அதிகமாகிக்கொண்டே சென்றது. எனவே மழைநாட்களில் வீதிகளில் உள்ள தண்ணீர் வீட்டிற்குள் வரமாலிருக்க வீட்டின் தளத்தையும் மக்கள் அவ்வப்போது உயர்த்திக் கொள்ளுவர்.

**8. ஜன்னல்கள் (WINDOWS) :-** ஆரம்ப நாட்களில் கட்டப்பட்ட வீடுகள் ஜன்னல்கள் ஏதும் இல்லாமல் கட்டப்பட்டன. பின் நாட்களில் ஒரிரு ஜன்னல்களை வீடுகளுக்கு வைத்து கட்ட ஆரம்பித்தனர். வீட்டிற்குள் இருக்கும் புகை வெளியே செல்வதற்கென அமைக்கப்பட்ட இந்த ஜன்னல்கள் சிறியதாயும் சுவரின் மேற்பகுதியிலும் அமைக்கப்பட்டிருந்தன. பின் நாட்களில் காற்றோட்டமான வீடுகளைக் கட்டவிரும்பின மக்கள் பெரிய அளவிலும் அதிகமான எண்ணிக்கையிலும்

ஜன்னல்களை வைத்து வீடுகளைக் கட்டினர் (யோசு. 2:15; அப். 9:25; 20:9). தேவனது காரியங்களை கவனிக்காமல், காற்றோட்டமான வீடுகளைக் கட்டி, வசதி வாழ்வை விரும்பிய மக்களை தீர்க்கதரிசி எரேமியா கடிந்துகொள்வதை வேதத்தில் காண்கிறோம் (எரே. 22:14).

**9. வாசல்கள் (DOORWAYS) :-** வீட்டின் முற்புறச் சுவரில் தாழ்வான வாசல்களைக் கட்டுவது அந்நாட்களில் வழக்கமாயிருந்தது. செவ்வக வடிவில் அமைக்கப்பட்ட இந்த வாசல்களில் பொதுவாக மக்கள் குனிந்து செல்வது வழக்கம். கல்லினாலான வாசற்படி ஒன்றை தரைமட்டத்தைவிட சற்று உயரமாகக் கட்டி, தண்ணீர் உள்ளே வராதபடி பாதுகாத்தனர். கல் அல்லது மரத்தினாலான நிலை ஒன்று வாசலின் மேற்பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் (யாத். 12:22,23; 1இரா. 6:31). வாசலின் இருபுறமும் சுவரோடு இணைந்ததாகவோ அல்லது மரத்தினால் செய்யப்பட்ட நிலைச்சட்டங்கள் பொருத்தப்பட்டதாகவோ இருக்கும் (எசே. 41:16). வீட்டிற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு இஸ்ரவேலர்கள் வாசலின் வெளியே வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரினால் கால்களைக் கழுவி சுத்தம் செய்தபின் வீட்டிற்குள் பிரவேசிப்பர். வெயிலினால் களைத்து வரும் விருந்தினருக்கு கால்களைக் கழுவதற்கு தண்ணீர் கொடுப்பது அந்நாட்களில் முக்கிய விருந்தோம்பலாய் இருந்தது (லூக். 7:44).

**10. கதவு (DOOR) :** –ஒவ்வொரு வீட்டின் வாசலுக்கும் கதவுகள் அவரவர் வசதிக் கேற்றாற்போல் அமைக்கப்பட்டிருந்தன. நாணல், மிலாறு போன்றவற்றால் ஆரம்ப நாட்களில் கதவுகளை அமைத்துக்கொண்டிருந்த மக்கள் பின் நாட்களில் மரக்கதவுகளை பயன்படுத்த ஆரம்பித்தனர். இந்தக் கதவுகள் நிலைச்சட்டத்தி லுள்ள பள்ளங்களில் பொருத்தப்பட்டு முன்னும் பின்னும் திறந்து மூடுவதற்கு வசதியாக அமைக்கப்பட்டிருந்தது. சில கதவுகள் நிலைகளோடோ அல்லது வாசற்படியோடோ பொருத்தப்பட்டிருந்தது. பஸ்கா பண்டிகையின் போது ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை வாசல்களிலும் நிலைக்கால்களிலும் பூசுவதை இஸ்ரவேலர் நியமமாகக் கைக்கொண்டனர் (யாத். 12:22). தோல் காகிதத்தில் எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தின் வசனங்களை வாசற்படியின் நிலைக்கால்களில் பொருத்தி நியாயப்பிரமாணத்தின் விதிகளைக் கைக்கொண்டனர் (உபா. 6:9). பாரம்பரிய இஸ்ரவேலர் அனைவரும் இன்று வரை இந்த விதிகளை மீறாமல் கடைப்பிடிக்கின்றனர்.

**11. பூட்டுகள் (LOCKS) :-** இந்நாட்களில் பயன்படுத்துவது போலவே முன்நாட் களிலும் பாதுகாப்பிற்கென கதவுகளில் பூட்டுகளை மக்கள் பயன்படுத்தினர். திருடர்கள் கன்னமிட்டுத் திருடுவதைத் தடுக்கும்படியும், பிரயாணங்களுக்கு செல்லுகையில் பாதுகாப்பிற்கெனவும் பூட்டுகளை கதவுகளில் பொருத்தினர் (நெகே. 3:3; நியா. 3:25; மத். 16:19). ஆரம்பத்தில் மரத்தினாலான உத்திரங்கள் மற்றும் நீண்ட கட்டைகளை பாதுகாப்பிற்காக பயன்படுத்தினர். இந்தக் கட்டைகளின் இரு

ஓரங்களும் நிலைச்சட்டம் அல்லது சுவரிலுள்ள துவாரம் அல்லது நீண்ட சந்துகளில் பொருத்தப்படும் (உபா. 3:5; 1சாமு. 3:15; எரே. 49:31).

பின்நாட்களில் பெரிய மரக்கட்டைகளுக்குப் பதிலாக சிறிய உலோகக் கம்பிகளை பயன்படுத்தினர். சில வேளைகளில் தட்டையான உலோகப்பட்டைகள் கதவிலுள்ள வளையங்களில் பொருத்தப்பட்டு மூடித் திறக்கும்படி அமைக்கப்பட்டிருந்தன. மேலும் கதவுகளில் துவாரங்கள், நீண்ட சந்துகளை உருவாக்கி அந்த சந்துகளின் வழியே சாவியை நுழைத்து கதவுகளைத் திறப்பர். இந்த சாவிகளில் வரிசையாக முளைகள் பொருத்தப்பட்டு துவாரங்கள் இடப்பட்டிருக்கும். உள்ளே நுழைக்கின்ற சாவியானது இந்த உலோகப் பட்டைகளை, முளைகள் மூலமும் துவாரங்கள் மூலமும் இடம்பெயரச் செய்வதால் கதவுகள் திறக்கப்படும். இவ்விதமான சாவிகள் உலோகப் பட்டைகளைத் தூக்கும் அளவிற்கு பெரிதாக இருப்பதால் இந்த சாவிகளைத் தோளில் சுமந்து செல்வர். இதைப் போன்ற சிறிய வடிவிலான சாவிகள் காசேரில் உள்ள கிரேக்க மொழி பேசுகின்ற யூதர்கள் வாழ்ந்த பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

**12. கூரை (ROOF) :** பொதுவாக சமதளமான கூரையை மக்கள் தங்கள் வீடுகளுக்கு பயன்படுத்தினர். சுவர்களின் மேற்பகுதியில் உத்திரங்கள் பொருத்தப்பட்டு அதின் மேல் சிறிய மரக்கட்டைகள், செங்கல்கள் பரப்பப்பட்டன. இதற்குமேல் வைக்கோல் மற்றும் களிமண்ணாலான ஒரு தளம் போடப்படும். ஒவ்வொரு வருடமும் மழைக் காலத்திற்கு முன்பு கல் உருளை வைத்து மேல் தளத்தை உறுதிப்படுத்துவர். இப் படிப்பட்ட கல்உருளைகள் எல்லா வீடுகளின் மேல் தளத்திலும் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்நாட்களிலும் அந்தக்கல் உருளைகளை மக்கள் தங்கள் வீடுகளின்மேல் வைத்திருப்பதை நாம் காணமுடியும். பின் நூற்றாண்டுகளில் மேற்கூரைக்கு தட்டையான ஓடுகளை மக்கள் பயன்படுத்த ஆரம்பித்தனர்.

பல வீடுகளின் உட்புறத்தில் போதுமான அளவு வெளிச்சமும் கற்றோட்டமும் இல்லாதபடியால் உட்புறச்சுவர்கள் புகைபடிந்ததாயும் கறுப்பு நிறத்திலும் இருக்கும். எனவே மக்கள் தொழுகைக்கெனவும் சில விசேஷித்த வைபவங்களுக்கெனவும் மேல்வீட்டை பயன்படுத்தினர். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளான எலிசா, தானியேல் போன்றோரும் புதிய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் ஜெபத்திற்கென மேல்வீட்டறையை பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் உண்டு (நியா.16:27; 2இரா. 23:12; எரே. 19:13; செப். 1:5; அப். 10:9).

நல்ல சீதோஷண சூழ்நிலைகளில் மேல்தளத்தில் இரவு நேரங்களில் மக்கள் நித்திரை செய்வதுண்டு. கோடைக்காலங்களில் சணல், அத்திப்பழம், உலர்ந்த திராட்சை மற்றும் சில தானியங்களை ஸ்திரீகள் மேல்தளத்தில் விரித்து காய வைப்பர்.மொட்டை மாடியிலிருந்து விழுந்துவிடுவதைத் தடுக்கும்படி ஒவ்வொரு வீட்டின் மேல்தளத்திலும் கைப்பிடிச்சுவர் வைத்து கட்டவேண்டும் என்பது நியாயப் பிரமாணமாகும் (உபா. 22:8). கூடாரப் பண்டிகையின்போது தங்கள் வீட்டின் மேல் தளத்தில் ஒலிவமரக்கிளைகளால் கூடாரமிட்டு பண்டிகை கொண்டாடுவர் (எஸ்றா

3:4; லேவி. 23:34). இஸ்ரவேல் மக்கள் கர்த்தரைவிட்டு வழுவிப்போனபோதோ தங்கள் வீட்டின் மேல்தளத்தை பாகாலுக்கு பலியிடும் ஸ்தலமாகவும் வான சேனையைப் பணிந்துக் கொள்ளும் இடமாகவும் மாற்றிவிட்டனர் (எரே. 19:13; 32:29).

சில வீடுகளில் மேல் மாடியில் கீழே உள்ள அறைகளைப்போலவே பல அறைகளை தங்கள் வசதிக்கேற்றாற்போல் கட்டிக்கொண்டனர். சில மாடிகளிலோ ஒரே ஒரு அறைமாத்திரம் கட்டப்பட்டிருந்தது (2 இரா. 1:2;9:33; அப். 20:9). சாரிபாத் விதவை யின் மேல்வீட்டிலுள்ள அறையானது தீர்க்கதரிசி எலியாவிற்கென்று ஒதுக்கப் பட்டிருந்தது (1இரா.17:19).இயேசு கிறிஸ்துவும் தனது இறுதி இராப்போஜன ஆசரிப்பை தம் சீடர்களோடு மேல்வீட்டறையிலே ஆசரித்தார் (மாற்.14:15). இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அப்போஸ்தலர்களும் சீடர்களும் இந்த மேல் வீட்டறையிலேதான் காத்திருந்து ஜெபித்தாகக் கூறப்படுகிறது (அப்.1:13; 12:12). மேல் வீட்டறைக்கோ மாடிக்கோ செல்வதற்குபடிகள் பயன்படுத்தப்பட்டன. சில வீடுகளில் கற்களால் செய்யப்பட்டபடிகளும் சில வீடுகளில் சாதரண மர ஏணி களும் பயன்படுத்தப்பட்டன.

கி.பி. 1000திற்குப் பிறகு பல அறைகளோடு கூடிய பெரிய வீடுகள் ஐசுவரியவான் களால் கட்டப்பட்டன. நடுவிலே முற்றமும் அதை சூழ அறைகளும் இருப்பதுபோல் கட்டப்பட்ட இந்த வீடுகளில் மேல் அறைகளும் கட்டப்பட்டிருந்தன. கீழ்த்தளத் திலுள்ள முற்றமானது சமையல், திரிகை திரித்தல், நூல் நூற்றல், இராட்டின வேலை, கூடாரம் நெய்தல் போன்ற வேலைகளுக்கென பயன்படுத்தப்பட்டது. வழக்கமாக அப்பம் சுடுகின்ற அடுப்பானது இந்த முற்றத்திலேதான் அமைக்கப்பட்டிருந்தது. சமையலறையிலிருந்து வெளியேறும் கழிவு நீருக்கென முற்றத்தின் அடியில் கழிவு நீர் தொட்டி கட்டப்பட்டு, மேல் மாடியிலிருந்து வருகின்ற மழை நீரானது குழாய்களின் வழியாய் இந்தத் தொட்டியில் சேர்க்கப்பட்டது.

**13. வீட்டு உபயோகப் பொருட்கள் (HOUSEHOLD GOODS) :** இஸ்ரவேலர் கூடார வாழ்வு வாழும்போதும் வீடுகளைக் கட்டிக்குடியிருக்கும்போதும் பலவிதமான அத்தியாவசியப் பொருட்களை பயன்படுத்தி வந்தனர். பாய்கள், கம்பளவிரிப்புகள், பஞ்சுமெத்தைகள், மண்ணாலான விளக்குகள், தண்ணீர் பாத்திரங்கள் போன்றவை அவர்களது அத்தியாவசியப் பொருட்களாய் இருந்தன. மேஜைக்கு பதிலாக வட்டவடிவமான மிருகத்தின் தோலும் பயன்படுத்தப்பட்டது. தண்ணீர் பாத்திரங்கள் மண் மற்றும் ஆட்டுத்தோலினால் செய்யப்பட்டதாயிருந்தது. மாவரைக்கும் இயந்திரம், கூடைகள், மரக்கரண்டிகள், உலோகப்பாத்திரங்கள், கூடாரம் இடுவதற்கு பயன்படுத்தும் மரசுத்தி மற்றும் கூடாரமுளைகள் எல்லா ராலும் பயன்படுத்தப்பட்டுவந்தன. ஆபத்தான நேரங்களில் மக்கள் கூடாரங்களை பெயர்த்துக்கொண்டு குதிரையின் குளம்பின் வடிவம் போன்று அமைந்திருக்கும் பாதுகாப்பான இடங்களுக்குக் (Camp) கடந்துசெல்வர் (சங். 69:25).

கூடாரமும் கூடாரத்திலுள்ள பொருட்களும் அவ்வப்பொழுது எடுத்துச் செல்லக்

கூடிய அளவிற்கு குறைந்த அளவிலே இருந்தது. நாடோடி மக்கள் அடிக்கடி இடம்பெயர்ந்து செல்லும்போது கூடாரத்தை பெயர்த்தெடுத்து தங்கள் மந்தை களையும் ஓட்டிக்கொண்டு செல்வர். கூடாரப் பொருட்களை சுமப்பதற்கு கழுதைகளை அந்நாட்களில் பயன்படுத்தினர்.

நாகரீகமடைந்து வீடுகளை கட்டிக் குடியேறின இஸ்ரவேலர் தங்கள் வீடுகளில் பலவிதமான பொருட்களை பயன்படுத்தினர். சமையலறையிலுள்ள அடுப்பானது மண்ணில் தோண்டப்பட்ட குழியாயிருந்தது. சில இடங்களில் இந்தக் குழிகளில் கற்களைப் பரப்பி அதிலே விறகுகளை அடுக்கி எரித்தனர். அப்பங்களை சுடுவதற்கு வட்டவடிவமான உலோகத் தகடு (Griddle) பயன்படுத்தப்பட்டது (லேவி. 2:5; 6:21; எசே.4:3; 1நாளா. 23:29). பொறிப்பதற்கென குழிவான சட்டிகளை (Pans) பயன் படுத்தினர் (லேவி. 2:7; 7:9; 2சாமு. 13:9).

**14. திரிகைக்கல் (MILLSTONE):-** தானியங்களை அரைப்பதற்கு சிறிய எந்திரக் கற்கள் பயன்படுத்தப்பட்டன. இலேசான குழியுடைய கல்லின்மேல் தானியம் வைக்கப்பட்டு, அதின்மேல் மற்றொருகல்லை முன்னும் பின்னுமாக உருட்டி தானியத்தை அரைப்பர் (Saddle quern) (எண். 11:8). திரிகையெனப்படும் மற்றொரு வகையான இயந்திரக் கல்லும் அந்நாட்களில் பயன்படுத்தப்பட்டது. மேலே உள்ள கல்லின் குழியில் தானியத்தைப் போட்டு மேற்கல்லை கைப்பிடியால் சுழற்றி அரைப்பர் (Rotary mill). இந்த இருவகையான இயந்திரக் கற்களும் இந்நாட்களில் கூட இஸ்ரவேலரால் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு நாளுக்கும் தேவையான அப்பம் சுடுவதற்கான மாவை அதிகாலையிலே ஸ்திரீகள் ஆயத்தப்படுத்திக் கொள்வர். எனவே தான் இயந்திரக்கல்லை அடமானமாக வாங்குதல் கூடாது என்று நியாப்பிரமாணம் போதிக்கிறது (உபா. 24:6).

**15. சமையல் பாத்திரங்கள் (COOKING UTENSILS) :-** சமைப்பதற்கென மக்கள் பயன்படுத்திய பாத்திரங்களுக்குரிய எபிரேய பதங்களுக்கு சரியான மொழிப் பெயர்ப்பின் வார்த்தைகள் இல்லாதபடியால் நாம் அவைகளைக் குறித்து அதிகம் அறிந்துகொள்ள முடிவதில்லை. கொப்பரைகள், சமைக்கும் பாத்திரம், வாணிலி, சட்டிகள், தட்டுகள், கிண்ணங்கள் போன்றவை சமையலறையில் அதிகமாக பயன் படுத்தப்பட்டன. மண்ணினால் செய்யப்பட்ட பாத்திரங்கள் சாதாரண மக்களாலும் உலோகப் பாத்திரங்கள் ஐசுவரியவான்களாலும் உபயோகிக்கப்பட்டன. தண்ணீர் குடமானது சிறிய அளவில் தூக்கி செல்வதற்கு ஏற்றாற்போல் உருவாக்கப்பட்டன. தோளிலோ, தலையிலோ சுமந்து செல்வதற்கு வசதியாக இரண்டு கைப்பிடிகள் எல்லாக் குடங்களிலும் இருந்தன. இரவு நேரங்களில் படுக்கைக்கு செல்லும்போது தண்ணீரைத் தலைமாட்டில் வைத்துக்கொள்வது அவர்களது வழக்கம் (1சாமு. 26:7–11).

**16. தோல்பைகள் (SKIN BAGS) :-** தோலினால் செய்யப்பட்ட பைகள் பால், திராட்சரசம், தண்ணீரைக் கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்டன. பன்றி, ஆடு, மாடு போன்றவற்றின் தோல்கள் இதற்கென உபயோகிக்கப்பட்டது.

சுத்தமிடப்பட்டு பதனிடப்பட்ட தோல்களையே இதற்கென பயன்படுத்தினர். வால் மற்றும் கால்கள் செல்லும் துவாரங்கள் இறுக்கமாக தைக்கப்பட்டு, கீல் பூசப்பட்ட பின்பே இவைகள் உபயோகிக்கப்படும். பாலிலிருந்து வெண்ணெயை எடுப்பதற்கும் இவ்வித தோல்பைகள் பயன்படுத்தப்பட்டன (ஆதி. 21:14;நியா.4:19;யோசு.9:4,13; 1 சாமு. 1:24; மாற். 2:22).

**17. கூடைகள் (BASKETS) :** –பலவிதமான கூடைகள் அன்றாட உபயோகத்திற்கென மக்களால் பயன்படுத்தப்பட்டது. சில கூடைகள் தலையிலோ, தோளிலோ தூக்கி சுமக்கும் அளவிற்கு சராசரி அளவாயிருந்தது (ஆதி. 40:16). சில கூடைகள் சிறிய அளவில் இருந்தன. (உபா. 28:5). வேறுசில கூடைகள் கூண்டுகளைப்போல் அமைக்கப்பட்டிருந்தன (ஆமோ. 8:1; எரே. 5:27). இயேசு கிறிஸ்து அப்பங்களைக் கொண்டு அற்புதம் செய்தபின் மீதியானதுணிக்கைகளை இவ்வித கூண்டு போன்ற கூடைகளில் சேர்த்தனர் (மத். 14:20; 15:37).

**18. மேசை (TABLE) :-** குடும்பமாக அமர்ந்து போஜனம் பண்ணுவதற்கு தரை விரிப்புகளையும் வட்டவடிவமாக பதனிடப்பட்ட தோலையும் அந்நாட்களில் பயன் படுத்தினர். இந்த தரைவிரிப்புகளைச் சுற்றிலும் அமர்ந்து போஜனம் பண்ணுவது அந்நாட்களில் வழக்கம் (யாத். 32:6). அதோனி பேசேக் (நியா. 1:7), சவுல் (1சாமு. 20:29), தாவீது (2சாமு. 9:7), சாலொமோன் (1இரா. 10:5) போன்றோர் மேசையைப் பயன்படுத்தியதாக வேதத்தில் காண்கின்றோம். பொதுவாக நான்கு பேர் ஒரு மேசையைச் சுற்றி அமர்வது வழக்கம். விருந்தினரின் எண்ணிக்கை அதிகமாகும் போது கூடுதலான மேசைகளை பயன்படுத்திக்கொள்ளுவர். புதிய ஏற்பாட்டுக் காலத்திலோ பாலஸ்தீன மக்கள் ரோம கலாச்சாரத்தின்படி குறைவான உயரமுள்ள மேசைகளை பயன்படுத்தினர். மேசையைச் சுற்றிலும் ஆசனங்கள் போடப்பட்டி ருக்கும். இடதுகையை ஊன்றிக்கொண்டு வலது கையால் சாப்பிடுவது அவர்களது வழக்கம் (யோவா.13:25–27). மேசை விரிப்புகளைப் பற்றி அதிகமாக நாம் எதுவும் அறிந்துக்கொள்ள முடிவதில்லை.

**19. நாற்காலிகள் (CHAIRS) :-** நாற்காலிகளும் முக்காலிகளும் அதிகமாக பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரங்கள் இல்லையெனினும் ஒருசில இடங்களில் நாற்காலிகளைக் குறித்து நாம் காண்கிறோம். அதோனிபேசேக்கின் மேசை யானது தரைமட்டத்தைவிட உயரமாக இருந்தது. கை கால்களின் பெரு விரல்கள் தறிக்கப்பட்ட எழுபது ராஜாக்கள் அவனது மேசையிலிருந்து விழும் துணிக்கை களை பொறுக்கி தின்றதாக வேதத்தில் காணலாம். ஆகவே, மேசையைச் சுற்றிலும் அமர்ந்து சாப்பிடுவதற்கு அதோனிபேசேக் நாற்காலிகளைப் பயன்படுத்தியிருக்கக் கூடும் (நியா. 1:7). ஆசாரியனாகிய ஏலி தேவாலயத்தின் வாசல் நிலையண்டை ஆச னத்தில் அமர்ந்திருந்தான். அவன் மரிக்கும்போது ஆசனத்திலிருந்து விழுந்து மரித்தான் (1சாமு. 1:9; 4:18). தீர்க்கதரிசி எலிசாவுக்கு மேல்வீட்டறையில் நாற்காலி இருந்தது (2இரா. 4:10). அரசன் சாலொமோனுக்கு அருகே அவனது

தாயாகிய பத்சேபாளுக்கு அரியணை ஒன்று போடப்பட்டது (1இரா. 2:19).

பழைய ஏற்பாட்டில் நாற்காலி (Chair),அரியணை (Throne), இருக்கைகள் (Sitting place) போன்ற வார்த்தைகள் நாற்காலிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற் பாட்டில் இயேசு கிறிஸ்து ஆசனங்கள் (Seats) என்ற வார்த்தையைக் குறிப் பிட்டுள்ளார் (மத். 21:12; 23:6). ஜெப ஆலயங்களில் மோசேயின் ஆசனம் என்ற விசேஷித்த விதமான ஆசனங்கள் அந்நாட்களில் பயன்படுத்தப்பட்டது. பரிசேயர்களும் வேதபாரகர்களும் அந்த ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். இந்த ஆசனங்களை அடைவதற்கு அவர் களிடையே போட்டி மனப்பான்மையும் இருந்தது (மத். 23:2).

**20. படுக்கைகள் (BEDS) :-** தரைவிரிப்புகள் மற்றும் கம்பளங்கள் பகலில் அமரு வதற்கும் இரவில் படுக்கையாகவும் மக்களால் பயன்படுத்தப்பட்டது (நியா. 4:18). எகிப்தியரின் கல்லறைகளிலும் பிரமிடுகளிலும் பெரிய படுக்கைகள் மற்றும் நாற் காலிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவைகள் கலைநயத்தோடும் நுணுக் கமான மரவேலைப்பாடுகளோடும் செய்யப்பட்டதாகும். இஸ்ரவேல் தேசத்தில் இப்படிப் பட்ட படுக்கைகள் மற்றும் ஆசனங்கள் பயன்படுத்தப்படவில்லை. இஸ்ரவேல் தேசத்தில் பயன்படுத்தப்பட்ட கட்டில் மற்றும் படுக்கைகளில் சில சற்று உயரமான தாக இருந்தன. சிறிய மரஸ்டூலை பயன்படுத்தி அதன் மூலம் ஏறி படுக்கைகளில் படுத்துக்கொள்வர்.

கட்டில்களின் கால்கள் மரத்தாலோ விலங்குகளின் பதப்படுத்தப்பட்ட கால்களாலோ செய்யப்பட்டிருந்தன. தந்தத்தி னாலான கட்டில்களை அரண்மனையில் வசித்த ராஜாக்கள் பயன்படுத்தினர் (2இரா.1:4).கட்டிலின் தலைமாட்டுப் பகுதி பிறை நிலவைப் போன்ற வடிவத்தில் செய்யப்பட்டிருந்தது. அதில் தலையை வைத்து படுப்பதற்கு வசதியாக தலையணைகளையும் பயன்படுத்தினர் (ஆதி.47:31). அசீரிய ராஜாவாகிய அஸ்னப்பார் தன்னுடைய படுக்கையில் சாய்ந்து கொண்டு தான் தன் உணவைப் புசித்ததாக கூறுகின்றனர். இஸ்ரவேலின் அதிபதிகளும் தன் செல்வ பெருக்கி னிமித்தம் தந்தக்கட்டிலில் சாய்ந்து இளைப்பாறியதாக தீர்க்கதரிசி ஆமோஸ் கூறுகின்றார் (ஆமோ. 6:4; எசே. 3:41).

புதிய ஏற்பாட்டிலும் மக்கள் பயன்படுத்திய படுக்கைகளைக் குறித்து கூறப்பட் டுள்ளது (மாற். 4: 21). சிலர் கட்டில்களில் விரிப்புகளை பயன்படுத்தினர். சாதாரண மக்களோ சுருட்டி எடுத்துச்செல்லக்கூடிய பாய்களையும் விரிப்புகளையும் பயன் படுத்தினர். ஆண்டவர் இயேசுவும் பெதஸ்தா குளத்தினருகேபடுத்திருந்த பிணி யாளியை நோக்கி உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றுகூறினார் (மத். 9:2; யோவா. 5:8,9,12).

**21. படுக்கை விரிப்புகள் (BED COVERINGS) :-** படுக்கை விரிப்புகளைக் குறித்து நாம் வேதத்திலிருந்து அதிகமாக அறிந்து கொள்ளமுடிவதில்லை. என்றாலும் மற்ற காரியங்களுக்காக பயன்படுத்தப்படும் பெரிய வடிவிலான துணிகள்

படுக்கையிலும் விரிக்கப்பட்டன (நியா. 4:18). ஏழை மக்கள் தங்கள் சால்வைகளையும் அங்கிகளையும் போர்த்துக்கொண்டுதான் இரவிலே நித்திரை செய்வர் (யோபு 24:7; 31:19). எனவேதான் அவற்றை அடமானமாக வாங்கக் கூடாது என்று பிரமாணம் போதிக்கின்றது.

ஐசுவரியவான்கள் வீட்டிலோ பலவிதமான மெத்தைகளும் விரிப்புகளும் கட்டிலின்மேல் போடப்பட்டிருக்கும். எகிப்திய நாட்டின் கம்பளங்களும் விரிப்புகளும் அந்நாட்களில் புகழ்பெற்றதாயிருந்தது. ஐசுவரியவான்கள் பலவிதமான வாசனைத் திரவியங்கள், வெள்ளைப்போளம், சந்தனம், லவங்கப்பட்டை போன்றவற்றை பயன் படுத்துவது அந்நாட்களில் வழக்கம் (நீதி. 7:16,17; 31:22). குளிர்நிறைந்த அந்த நாட்டிலே அனல்மூட்டுவதற்கென தனி அடுப்புகள் பயன்படுத்தப்படவில்லை. சமை யலுக்கு பயன்படுத்தும் அடுப்பை சுற்றிலும் குளிர் காய்வது அவர்களது வழக்கம். ஐசுவரியவான்களோ தங்கள் வீட்டில் குளிர்காய்வதற்கு கணப்புகளை பயன் படுத்தினர் (எரே. 36:22).

**22. விருந்தோம்பல் (HOSPITALITY) : –** பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு மக்கள் விருந்தோம்பலை கட்டாயமான ஒன்றாக எண்ணாமல் சிலாக்கியமாகக் கருதினர். வழிப்போக்கர்களை வரவேற்று உபசரிப்பது எபிரேயர்களுக்கு மகிழ்ச்சி யான ஒரு காரியமாகும். பொதுவாக விருந்தினர்களை ஏற்றுக்கொள்ளும்போது அவர்களை வாழ்த்தி முத்தமிட்டு வரவேற்பர். பாதங்களைக் கழுவிட தண்ணீரும் தலையில் பூசிட எண்ணெயும் அவர்களுக்கு கொடுக்கப்படும். அதன்பின்பு சிறப்பான உணவு பரிமாறப்படும் (லூக். 7:44). விருந்தினரை வரவேற்பவர்கள் அவர்களை மனிதர்களாக எண்ணாமல் தேவதூதர்களாகவே கருதினர் (எபி. 13:2). இந்நாட்களில் உள்ள வழக்கத்தைப் போலவே அந்நாட்களிலும் விருந்தினர்கள் மூன்று நாட்களும் 4 மணிநேரமும் விருந்தினராக கருதப்படுவர். அதற்குமேற்பட்ட நாட்களில் விருந்தினரை கவனிக்கவேண்டியது வீட்டாரின் பொறுப்பல்ல.

ஆபிரகாம் தன் வீட்டைத் தேடிவந்த விருந்தினரை ஓடிச் சென்று வரவேற்றதை வேதத்தில் காண்கிறோம். மட்டுமல்ல அவர்களைக் கட்டாயப்படுத்தி உணவு அருந்த வைத்து இளைப்பாறவும் பண்ணினான் (ஆதி. 18:1–2; 19:1). ரெகுவேலின் குமாரத்திகள் மோசேயை வீட்டிற்கு அழைத்துவராததைக் குறித்து அவர்களது தகப்பன் ஆச்சரியப்பட்டான் (யாத். 2:20). அம்மோனியரும் மோவாபியரும் இஸ்ர வேலருக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து அவர்களை வரவேற்காததால் கர்த்தர் அவர்களைக் கடிந்துகொண்டார் (உபா. 23:4). தன் வீட்டைத் தேடிவந்த விருந்தினரை பாதுகாக்கவேண்டியது வீட்டாரின் கடமையாகும். எனவேதான் லோத்து தன்னைத் தேடிவந்த விருந்தினரைக் காப்பதற்காக தன் குமாரத்திக ளையும் சோதோம் துன்மார்க்கரிடம் விட்டுக் கொடுக்க முன்வந்தான் (ஆதி. 19:8). பவுல் புதிய ஏற்பாட்டு ஊழியர்களுக்கு அறிவுரை எழுதும் பொழுது கண்காணி யானவன் (Bishop) விருந்தினரை உபசரிக்க வேண்டியது அவசியமென்று

வலியுறுத்தியுள்ளான். இது போன்ற நடைமுறைப் பழக்கங்களை பழைய ஏற்பாட்டு பக்தர்கள் கடைபிடித்ததால் அதை புதிய ஏற்பாட்டு பக்தர்களும் கடைபிடிக்க வேண்டுமென வேதத்தில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன.எனவே விசுவாசிகளும் விருந்தினரை முறுமுறுப்பில்லாமல் உபசரிக்கவேண்டும் (ஏசா. 58:7; யாக். 1:27; ரோம. 12:13; 1பேது.4:9). இது கிறிஸ்தவ அன்பிற்கு அடையாளமாகும். இதன் மூலம் அன்புள்ள ஒரு தேவன் இருக்கிறார் என்பதையும் அவர் அன்பாகவே இருக்கிறார் என்பதையும் பிறருக்கு தெரிவிக்கிறோம். இப்படி உபசரிப்பதின் மூலம் நம் வாழ்க்கையில் அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

# 6

# குடும்ப வாழ்வு
## (FAMILY LIFE)

ஆதாம் ஏவாளை தேவன் சிருஷ்டித்தபோது அவர்களை ஒரு குடும்பமாக சிருஷ்டித்தார்.அச்சிறிய குடும்பத்திலிருந்து பல பெரிய குடும்பங்களும், கோத்திரங்களும் உருவாயின.பொதுவாக குடும்பம் என்பது தகப்பன், தாய், பிள்ளைகள் என்ற ஒரு சிறிய அமைப்பு என்பது உலகத்தாரின் கருத்து. ஆனால் வேதத்தின் படியோ குடும்பம் என்ற வார்த்தைக்கு ஆழமான அர்த்தங்கள் உண்டு. இஸ்ரவேலர் கானானை சுதந்தரிக்க யுத்தம் செய்த காலத்தில் ஆயி பட்டணத்தை ஜெயிக்க முடியாமல் தோற்றுப்போயினர். தோல்வியின் காரணத்தை அறியும்படி யோசுவா தேவ சந்நிதியில் நின்றபோது கர்த்தர் தோல்விக்குக் காரணமான நபரை அடையாளம் காட்டும்படி ஒரு திட்டத்தை யோசுவாவுக்குக்கொடுத்தார் **(யோசு.7:14–16).**

இஸ்ரவேலர்கள் கோத்திரம் கோத்திரமாக (Tribe) வரவேண்டும். அப்பொழுது கர்த்தர் குறிக்கும் கோத்திரம் வம்சம் வம்சமாக (Family) வரவேண்டும். கர்த்தர் குறிக்கிற வம்சம் குடும்பம் குடும்பமாக (Household) வரவேண்டும். கர்த்தர் குறிக்கிற குடும்பம் பேர்பேராக (Individual) வரவேண்டும். தேவனது இந்த தெரிந்துகொள்ளுதலின்படி குடும்பம் என்பது தேவனைச் சார்ந்து நிற்கும் அவரது பிள்ளைகளின் கூட்டத்தைக் குறிக்கிறது. அக்கூட்டம் தங்கள் வசதிக்கேற்றபடி தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு சிறு குடும்பமாக வசிக்கிறது. வேதத்தின் துவக்கத்திலிருந்தே தந்தை, தாய், பிள்ளைகள் சேர்ந்தது ஒரு குடும்பமாக கருதப்பட்டது.

**1.கோத்திரம் (TRIBE) :–** யாக்கோபு தேவனோடு போராடி மேற்கொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றபோது இஸ்ரவேல் (Israel) என்ற புதிய நாமத்தையும்

பெற்றுக்கொண்டான். இந்த முற்பிதாவின் சந்ததியில் வந்தவர்களே இஸ்ரவேல் புத்திரர் (Sons of Israel) அல்லது இஸ்ரவேலர் (Israelites) என அழைக்கப்பட்டனர். பிற்காலத்தில் இஸ்ரவேல் ஒரு பெரிய தேசமாகியது. எனவே இஸ்ரவேல் மக்கள் தங்கள் கோத்திரத்தை அடையாளம் கண்டு கொள்ள தங்கள் முற்பிதாவின் வம்ச வழியைப் பின்பற்றினர். யூதாவின் வழியில் வந்தவர்கள் 'யூதா கோத்திரம்' என்றும், இசக்காரின் வழியில் வந்தவர்கள் 'இசக்கார் கோத்திரம்' என்றும் தங்களை அழைத்துக் கொண்டனர். யோசேப்பிற்கென்று தனிக்கோத்திரம் இல்லை. ஆனால், யோசேப்பின் புத்திரர்களாகிய மனாசே, எப்பிராயீம் என்ற இருவரின் பெயரிலும் தனித்தனி கோத்திரங்கள் இருந்தன.

ஒரு கோத்திரத்தின் வழி வந்தவர்கள் இரத்தசம்பந்தமான உறவினர்கள் என தங்களை அழைத்துக்கொள்வர். மட்டுமல்ல அந்தக் கோத்திரத்தில் வந்து இணைந்து கொள்கிற வேலைக்காரர்களும் யுத்தத்தில் பிடிக்கப்பட்ட அடிமைகளும் அடைக்கலம் தேடி ஓடி வந்தவர்களும் அந்த கோத்திரத்திற்குரியவர்களாகவே கருதப்பட்டனர். கேனேசியனான காலேப் யாக்கோபின் வழியில் வந்தவன் அல்ல. அவன் ஏசாவின் வழிவந்தவன் (ஆதி. 36:11; எண். 32:11). ஆனால், காலேபிற்கோ யூதா கோத்திரத்தோடு சுதந்திரம் கொடுக்கப்பட்டது (யோசு. 15:13).

இஸ்ரவேலர்கள் கானான் பயணம் புறப்படுவதற்கு முன்பதாகவே காலேபின் தகப்பனாகிய எப்புன்னே யூதா கோத்திரத்தோடு இணைக்கப்பட்டான் (1நாளா. 2:9,18). கேனியர் மீதியான் கோத்திரத்தை சேர்ந்தவர்கள். அவர்கள் அந்த கோத்திரத்தை விட்டுப்பிரிந்து யூதா கோத்திரத்தோடு கானானுக்குள் பிரவேசித்தார்கள் (நியா. 4:11). தாவீதின் காலத்திற்கு பின்பு இவர்களைக் குறித்து அதிகமாக அறிந்து கொள்ள முடிவதில்லை (1சாமு. 30:29). எரேமியாவின் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள ரேகாபியரும் கேனியரின் வம்சவழி வந்தவர்களே. இவர்களைக் குறித்து எரேமியா மற்றும் நெகேமியா காலம் வரைக்கும் நாம் காணமுடிகிறது (1நாளா. 2:55; நெகே. 3:14; எரே. 35:2).

**2. வம்சம் (FAMILY)** :- வம்சம் என்ற வார்த்தை குடும்பம் என்ற பொருளுக்கு இசைந்ததாய் வந்தாலும் அது பல குடும்பங்களை உள்ளடக்கிய ஒரு வார்த்தையாகும். அக்காலத்தில் ஒரு வம்சத்தை சேர்ந்தவர்கள் பல கிராமங்களிலும் பட்டணங்களிலும் குடியிருந்தனர் (நியா.18:11). எனவேதான், வம்சம் என்பது ஒரு தனிப்பட்ட குடும்பத்தைக் குறிக்கமால் ஒரு கோத்திரத்தின் முக்கிய பகுதியாக கருதப்படுகிறது (எண். 1:18; 4:18; 1இரா. 12:20; லூக். 2:4). வேறுவார்த்தையில் கூறினால் இதைத் தலைமுறை வரிசை எனவும் அழைக்கலாம்.

**3.குடும்பம் (HOUSEHOLD) :** வீடு என்ற பதம் குடியிருக்கும் இடத்தையும் குடும்பம் என்ற பதம் அந்த இடத்தில் குடியிருக்கும் மக்களையும் குறிக்கிறது. குடும்பத்தில் மூத்த ஒரு ஆண்மகனுடைய ஆளுகையின் கீழோ, அல்லது குடும்பத்தின் தலைவனாகிய தகப்பனுடைய ஆளுகையின் கீழோ ஒரு குடும்பம் செயல்பட்டது.

வீட்டார் என்ற வார்த்தையும் குடும்பம் என்ற வார்த்தைக்கு பதிலாக வேதத்தில் கூறப்பட்டுள்ளது (ஆதி. 7:1). வீட்டார் என்ற பதம் சிலவேளைகளில் இஸ்ரவேல் தேசம் முழுவதையும் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சில இடங்களில் பிதாக்களுடைய வீடு என்ற வார்த்தையும் குடும்பத்தை குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது (எண். 1:2).

**4. தகப்பன் & புருஷன் (FATHER & HUSBAND) :-** ஓர் குடும்பத்தில் தந்தையே முக்கிய நபராகவும் எஜமானராகவும் கருதப்பட்டார். தன் பிள்ளைகளை பக்தி மார்க்கத்தில் வளர்ப்பது, நியாயப்பிரமாணத்தை அவர்களுக்கு போதிப்பது ஒரு தகப்பனுடைய கடமையாயிருந்தது (ஆதி.6:9–10 ; உபா. 6:4–9 ; யோபு 1:4,5). கணவன் மரித்துப் போன குடும்பத்தில் தாய் அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும். தீமோத்தேயுவின் தந்தை ஒரு கிரேக்கன். அவனது தாய் ஒரு யூத ஸ்திரீ. ஆகவே, நியாயப்பிரமாணத்தை தீமோத்தேயுவிற்கு போதிக்கும் பொறுப்பை அவனது தாயும், பாட்டியும் எடுத்துக் கொண்டனர் (அப். 16:1; 2தீமோ. 1:15). மேலும், குடும்பத்தின் தலைவனாகிய புருஷன் தன் மனைவியை போஷித்துக் காப்பாற்ற கடமைப்பட்டவன். தன் மனைவிக்கு வேண்டிய வீடு, ஆகாரம், வஸ்திரம், திருமண கடமைகள் போன்றவற்றை புருஷனானவன் செய்து தன் மனைவியைக் காப்பாற்றவேண்டும்.

ஆதியாகமத்தில் ஆதாம் தன் மனைவியை போஷித்து காத்தது போல் (ஆதி. 3:19) புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து சபையை போஷித்துக் காக்கிறார் (எபே.5:29–32). மீட்கப்பட்ட மனுகுலம் கிறிஸ்துவின் மணவாட்டியாக மாறுவதை வெளிப்படுத்தின விசேஷம் கூறுகிறது (வெளி. 19:9). இப்படியாக வேதம் முழுவதும் குடும்பம் என்ற நியமமும் புருஷன் மனைவி என்ற பிணைப்பின் பிரமாணமும் தேவனால் மனுகுலத்திற்கு ஈவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், பெற்றோரைக் கனம் பண்ணுவதால் உண்டாகும் ஆசீர்வாதத்தை பத்துக் கட்டளைகளில் முக்கியமான ஒன்றாக தேவன் எழுதிவைத்துள்ளார் (யாத்.20:12). குடும்பம் என்ற இந்த பரிசுத்தப் பிரமாணத்தை பரிசுத்த குலைச் சலாக்குபவர்களை தேவன் தண்டிக்கிறார் என்பது நிச்சயமே (ஆதி.38:9,10;நீதி.5:18–20;6:29–35;ரோம.1:26–32;வெளி.21:8).

**5.தாய் & மனைவி (MOTHER & WIFE) :** பழைய ஏற்பாட்டுக்காலத்தில் குடும்பத்தின் தலைவனாக தகப்பன் இருந்தாலும் மனைவியானவள் கணவனுக்கு சமமாக மதிக்கப்படவில்லை. பெண்களுக்கு மிகத் தாழ்வான ஒரு இடத்தை அக்காலத்து மக்கள் கொடுத்து வைத்திருந்தனர்.மனைவியானவள் தன் புருஷனுக்குத் தேவையான திருமணக்கடமைகளை செய்வதோடு குடும்பத்திற்கும் பிள்ளைகளுக்கும் தேவையான சகல கடமைகளை செய்யவேண்டுவது அவளது பொறுப்பாகும். பிள்ளைகளைப் பெற்றெடுத்து, தன் புருஷனின் வம்சவழியைக் காப்பது மனைவியின் தலையாய கடமையாகவும், சிலாக்கியமாகவும் அந்நாட்களில் கருதப்பட்டது. மலட்டுத் தன்மையை அக்கால மக்கள் சாபமாக கருதினர் (ஆதி. 29:31; 30:2). மனைவியானவள் தன் புருஷனுக்கு பிள்ளைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்றும்,

அவளால் அந்தக் கடமையை நிறைவேற்றமுடியாதபோது அவளது அடிமைப் பெண் மூலம் தன் கணவனுக்கு சந்ததியை உருவாக்க வேண்டுமென்பதும் அக்காலத்திலுள்ள திருமண ஒப்பந்தமாகும். இந்த வழக்கத்தையே ஆபிரகாமின் மனைவியாகிய சாராளும் யாக்கோபின் மனைவிகளாகிய ராகேல் லேயாளும் பின்பற்றினர் (ஆதி. 16:2; 30:3–9).

**6.பெண்கள் (WOMEN) :** பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் பெண்களின் பங்கு குடும்பத்தில் பெரிதாகவே இருந்தது. சிறுமியாய் இருக்கும்போது தகப்பனுக்குக் கீழாகவும், திருமணமான பின்பு புருஷனுக்குக் கீழாகவும், புருஷன் மரித்துவிட்டாலோ தன் ஆண்மக்களுக்கு கீழாகவும் அவள் தன் வாழ்வை செலவிடவேண்டியதாயிருந்தது. புருஷனே மனைவிக்கு ஆண்டவனாகவும் எஜமானாகவும் கருதப்பட்டான். புருஷன் என்ற எபிரேய பதத்திற்கு எஜமான் என்பதே பொருள். மனைவியானவள் புருஷனுடைய சம்பத்தாக கருதப்பட்டாள். எனவேதான் இச்சியாதிருப்பாயாக என்ற கட்டளையை தேவன் கொடுத்த போது மனைவி என்ற வார்த்தையையும் அதில் இணைத்திருக்கிறார் (ஆதி. 12:18; யாத். 1:3; 20:17).

அக்காலத்துப் பெண்கள் புருஷர்களுக்கு இணையாக கருதப்படவில்லை. சமுதாயத்தில் அவர்கள் பெண்களோடுதான் எப்பொழுதும் இணைந்து ஐக்கியமாயிருக்க கற்பிக்கப்பட்டனர். போஜனம் பண்ணும்போதுகூட ஸ்திரீகள் புருஷர்களோடு அமர்ந்து புசித்ததில்லை. அவர்கள் மற்ற ஸ்திரீகளோடே அமர்ந்து போஜனம் பண்ணுவர் (ஆதி. 18:9; ரூத். 2:14). பொது இடங்களில் புருஷர்கள் பெண்களோடும் மனைவியோடும்கூட பேசுவது அந்நாட்களில் விலக்கப்பட்டிருந்தது. யூதர்களின் தல்மாத் (Talmud) அதை உறுதியாக வலியுறுத்தியது. எனவேதான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சமாரிய ஸ்திரீயோடுகூட பேசுவதைக் கண்டு சீஷர்கள் ஆச்சரியப்பட்டனர் (யோவா. 4:27). தேவாலயங்களிலும் பெண்களுக்கு தனி இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தைக் கடந்து அடுத்த இடங்களுக்கு செல்வது பெண்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. பொதுவாக தேவாலயங்களிலும் ஜெப ஆலயங்களிலும் ஸ்திரீகள் அமருவதற்கு மேல் மாடியில் இடம் ஒதுக்கப்பட்டு திரைகளால் மறைவு கட்டப்பட்டிருந்தது.

பெண்கள் மதசம்பந்தமான பண்டிகைகளில் பங்குபெற அனுமதிக்கப்பட்டனர் (லூக்.2:41,48). நல்லொழுக்கமுள்ள கனம்பொருந்திய ஸ்திரீகள் சமுதாயத்தினரால் மதிக்கப்பட்டனர் (யாத். 15:20; 1சாமு. 18:6; நெகே. 8:3). குடும்பத்தின் பெரும்பாலான வேலைகளை பெண்களே செய்துவந்தனர். சூரியன் உதிக்கும் முன்பே எழுந்து அப்பத்திற்கு மாவை ஆயத்தம் செய்தல், அப்பம் சுடுதல், கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்தல், விறகு பொறுக்குதல், வீட்டை சுத்திகரித்தல், பிள்ளைகளைப் பராமரித்தல் போன்ற வேலைகளை பெண்களே செய்தனர். மட்டுமல்லாது நூல் நூற்றல், வஸ்திரங்கள் தாயரித்தல், தையல் வேலை, கூடாரம் செய்தல், வயல்களில் அறுவடை செய்தல், கதிர் பொறுக்குதல் போன்ற பல்வேறு வேலைகளையும்

பெண்கள் செய்து வந்தனர். இப்படி கடினமான வேலைகளை செய்வதோடு பிள்ளை களைப் பெற்றெடுத்து பராமரிக்கும் பொறுப்பும் அவர்களுக்கிருந்ததால் பெண்கள் சீக்கிரத்தில் வயதான தோற்றத்தை அடைந்தனர்.

**7. திருமணம் (MARRIAGE) :** பழைய ஏற்பாட்டுக்காலக் குடும்பங்களில் திருமண மானது முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது. பிள்ளைகள் குழந்தைப் பருவத்தில் இருக்கும் போதே பல பெற்றோர் அவர்களது திருமணக் காரியத்தை திட்டம் செய்து விடுவர். விவாகத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்பாகவே தங்கள் பிள்ளைகளுக்கு நிச்சயம் செய்து விடுவர். திருமணத்திற்கு முன்பாகவே மணமகன் தெரிந்து கொள்ளப்பட்ட பெண்ணுக்கு பரிசளித்து வரதட்சணை கொடுப்பது யூதரின் வழக்கம். சில வேளைகளில் நிச்சயித்த பின்பு தவிர்க்க முடியாத காரணங்களால் திருமணம் நிறுத்தப்படும் எனில் மணமகள் மீண்டும் திருமணம் செய்து கொள்ள இயலாது. யூத ரபிமார்களின் கைகளிலிருந்து ஒரு தள்ளுபடி சீட்டைப் பெற்றுக் கொண்ட பின்பே அவள் வேறு திருமணம் செய்ய முடியும்.

பொதுவாக யூதத்திருமணங்கள் மிக விசேஷமாக மக்களால் கொண்டாடப் படும். சில குடும்பங்களில் இந்த திருமண வைபவங்கள் பலநாட்கள் கொண்டாடப்படும். முக்கியமானவர்களுக்கு திருமண அழைப்பு கொடாமல் இருப்பது மிகப்பெரிய குற்றமாக கருதப்பட்டது. தன்னைத் திருமணத்திற்கு அழைக்காதவர்கள் மரித்த பின்பு அவர்களின் அடக்க ஆராதனைக்குக் கூட பலர் பொதுவாக சென்றதில்லை. ஏனெனில் திருமணத்திற்கு அழைக்காமலிருப்பது அத்தனை பெரிய அவமானச் சின்னமாய் கருதப்பட்டது.

இன்றைய நாட்களின் திருமணத்தைப் போலவே அந்நாட்களின் திருமணங் களில் பலவிதமான பாரம்பரிய பழக்கவழக்கங்கள் கைக்கொள்ளப்பட்டன. இந்நாட்களில் இஸ்லாமியத்திருமணங்கள் நடைபெறுவது போலவே அந்நாட்களில் யூதத் திருமணங்கள் நடைபெற்றன. திருமண வைபவத்திற் கென மணமகன், மணமகள் இருவீட்டாரும் பல ஆயத்தங்களைச் செய்வர். வீட்டை அலங்கரித்து, தோரணங் களைக் கட்டி, உறவினர்களை அழைத்துவிருந்து வைப்பதும், கொண் டாடுவதும் அவர்களது வழக்கமாகும். திருமணத்திற்கென அமைக்கப்படும் மணவறை விசேஷமானது. இது யூதர்கள் சிதறுண்டிருக்கும் எல்லா தேசங்களிலும் ஹப்பா (Huppah) என்ற பதத்தால் அழைக்கப்படுகிறது. மிகப்பெரிய ஒரு அறை யானது திருமணத்திற்கென தெரிந்து கொள்ளப்படும். அங்கு பனை மரத்தின் கிளைகள் சித்திரத்தையலாடைகள் போன்றவற்றால் அலங்கரிக்கப்பட்ட மணவறை அமைக்கப்படும்.

திருமண வைபவத்தின் போது மணமகனை ஒரு அரசனுக்கு ஒப்பாக அலங்கரிப்பர். உறவினர்கள் எல்லாரும் சூழ்ந்திருக்க மணமகனும், மணமகளும் அங்கு அழைத்து வரப்படுவர். மணமகனின் தோழர்கள் வாழ்த்துப்பாடலையும் மணமகனைப் புகழ்ந்து கூறும் வார்த்தைகளையும் கூறி மணமகனை மகிழ்ச்சி

யாக்குவர். அவ்வேளையில் மகிழ்ச்சியால் நிரம்பிய மணமகனது முகப்பிரகாசம் சூரியப்பிரகாசத்தைப் போல இருக்கும் என வேதம் கூறுகின்றது (சங்.19:5). இத்தனை மகிழ்ச்சியின் நடுவிலும் யூதர்கள் தேவனையும் தங்கள் தேசத்தையும் நினைவுகூறும்படி ஒரு காரியத்தைச் செய்ய மறப்பதில்லை. ஒரு கண்ணாடிக் குவளையில் திருமணத்திற்கென ஆயத்தமாக்கப்பட்ட திராட்ச ரசத்தை ஊற்றி அதை, தரையிலே போட்டு சுக்குநூறாகும்படி உடைப்பர். தனது வாழ்வில் மிக மகிழ்ச்சியான நேரமான திருமண நேரத்தின் போது கூட இடிக்கப்பட்ட தேவனின் ஆலயத்தையும் அதினிமித்தம் தேசத்தில் உண்டான சோகத்தையும் மணமகன் நினைவுகூற வேண்டும் என்று இப்படி செய்வர் (சங்.137:6). யூதத்திருமண வைபவங்கள் பொதுவாக மணமகளின் பெற்றோர் வீட்டிலே நடைபெறும். மணமகள் தன் தோழிகளோடு தன் பெற்றோர் வீட்டிலே அமர்ந்திருக்க மணமகன் தன் வீட்டி லிருந்து தோழர்கள் சூழ திருமண வீட்டிற்கு அழைத்து வரப்படுவது வழக்கம்.

யூதத்திருமணங்கள் பொதுவாக மாலை நேரங்களில் நடைபெறும். பகல் வேளை யில் மணமகள் தன் வருங்கால கணவன் வீட்டிற்கு அழைத்து வரப்படுவாள். அங்கு அவளோடு அவளது தோழிகள் உடனிருப்பர். திருமண வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் அவளுக்கு அணிவித்து அவளை அலங்கரிப்பர். மணமகளின் தோழிகள் அவளை சூழ்ந்திருக்க மகிழ்ச்சியோடு திருமண காரியத்தையும் குடும்பத்தின் காரியங்களையும் குறித்து அவர்கள் பேசி மகிழ்வர். மட்டுமல்ல, மணமகளைப் புகழ்ந்து பாராட்டி பாடல்களையும் பாடுவர். மாலை வேளை வரும் பொழுது மணமகனின் வருகைக்காக எல்லோரும் காத்திருப்பர். சில நேரம் மணமகன் வர தாமதிக்கும் என்றால் களைத்திருக்கும் பெண்கள் பலர் நித்திரை செய்து விடுவதுண்டு.

திருமண தினத்தன்று மணமகன் தன்னுடைய நெருங்கிய உறவினர் வீட்டுக்கு அழைத்துச்செல்லப்படுவது வழக்கம். சூரிய அஸ்தமனத்துக்குப் பின்பு இரவு ஏறத்தாழ 7 – 8 மணியளவில் மணமகனின் தோழர்கள் அவனை சந்திக்க வருவர். தங்களது பகல் வேலைகளை முடித்து இரவு உணவிற்குப் பின்பு திருமண வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு திருமண வைபவத்திற்கு வருவர். உறவினர்கள் அனைவரும் கூடியிருக்க பலவிதமான காரியங்களைக் குறித்து மகிழ்ச்சியோடு சம்பாஷித்து பாடல்களைப் பாடி மணமகனை வாழ்த்துவர். குறிப்பாக மணமகனின் குடும்பத்தைக் குறித்து புகழ்ந்து பாடுவர். இந்த மகிழ்ச்சியான வாழ்த்துதல் நேரம் முடிந்த பின்பு இரவு 11 மணியளவில் மணமகனை அழைத்துக்கொண்டு அவனது தோழர்கள் திருமணம் நடக்கவிருக்கும் மணமகளது வீட்டிற்கு வருவர்.

ஒளி வீசும் தீபங்களை ஏந்தி மணமகனின் தோழர்கள் சூழ்ந்திருக்க உறவினர்களும் நண்பர்களும் ஊர்வலமாக புறப்படுவர். மணமகனை வீட்டிலிருந்து அழைத்து வரும் போது பாடல்களைப்பாடி, தாரைகளை ஊதுவித்து மகிழ்ச்சியோடு நடனமாடி வருவர். இந்த வைபவத்தை வேடிக்கை பார்க்கும்படி ஒவ்வொரு

வீட்டிலுள்ள பெண்களும் குழந்தைகளும் வீதியின் இருபுறமும் வந்து நிற்பர். மட்டுமல்லாது பலகணிகள், மொட்டை மாடிகளிலிருந்தும் இந்த காட்சியைப் பார்த்து ரசிப்பர். மணமகனை அழைத்து வரும்போது "இதோ, மணவாளன் வருகிறார் ; இதோ, மணவாளன் வருகிறார்" என்ற கோஷத்தை எழுப்பியபடி தாரையும் ஊதுவார்கள். மணமகள் இருக்கும் வீட்டிற்கு அருகிலே வரும் பொழுது இந்த சத்தம் அதிகமாக ஒலிக்கப்படும். ஏறத்தாழ அரைமணி நேர தூரத்தில் இருக்கும் போதே மணமகள் வீட்டிற்கு செய்தி அறிவிக்கப்படும்.

இந்த ஊர்வலத்தின் போது ஒருவேளை மணமகன் வர தாமதிப்பார் என்றால் மணமகளின் தோழிகள் விளக்குகளை அணைத்து விட்டு நித்திரை செய்து விடுவார். இந்த உவமையை ஆண்டவர் இயேசுவும் குறிப்பிட்டுள்ளார் (மத்.25:1–13). மணமகன் வருகிறார் என்ற சத்தத்தை செவிகளில் கேட்டதும் இவர்கள் வேகமாக எழுந்து தங்கள் தீவட்டிகளை ஆயத்தம் செய்வதோடு வீட்டை அலங் கரித்திருக்கும் விளக்குகளையும் திரும்ப ஏற்றுவர். மணமகன் வாசலருகே வந்ததும் அனைவரும் எழுந்து சென்று மணமகனையும் அவன் குடும்பத்தாரையும் நெருங்கிய உறவினரையும் வரவேற்று உள்ளே அழைப்பர். அவர்கள் உள்ளே வந்ததும் வாசற்கதவு மூடப்படும். அதன் பின்பு திருமண வைபவமும், திருமண விருந்தும் ஆரம்பமாகும்.

இயேசு தன் வருகையைக் குறித்து உரைக்கையில், இதையே உவமையாகவும் கூறியிருக்கிறார். மூன்று முக்கியமான காரியங்களை இந்த திருமண ஊர்வலத் தின் மூலம் நாம் அறிந்து கொள்ள முடியும். 1. மணமகள் தன்னை விசேஷமாக அலங்கரித்திருக்கும் அந்த அலங்கரிப்பானது மணவாளனாம் இயேசுவை சந்திக்க திருச்சபைக்கு வேண்டிய ஆயத்தத்தைக் குறிப்பிடு கிறது. 2. பிரகாசமான விளக்குகளை ஏந்திக்கொண்டு மணமகனை அழைத்து வரும் ஊழியர்கள், இயேசுவின் வருகையை முன்னறிவிக்கும் சுவிசேஷ ஊழியர்களுக்கு ஒப்பாயிருக் கின்றனர். மணவாளனாம் இயேசுவின் வருகையை கூவி உரைப்பதற்கு அவரது ஊழியர்கள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்க வேண்டும். 3. மணமகன் அழைத்து வரப்பட்ட பின் எல்லாக் கண்களும் அவர் மேலேயே நோக்கமாய் இருப்பது போல திருச்சபையானது கிறிஸ்துவின் மேல் நோக்கமாய் இருப்பதோடு, கிறிஸ்துவை அறியாதவர்களுக்கும், கிறிஸ்துவையே முக்கியத்து வப்படுத்தி சுவிசேஷம் உரைத்திட வேண்டும்.

ஒரு புருஷன் ஒரு ஸ்திரீயை தன் மனைவியாக ஏற்றுக் கொள்வதற்கு அடையா ளமாக தனது மேல் வஸ்திரத்தின் ஒரு பகுதியை அவள் மேல் விரிப்பது பண்டைய வழக்கம். "நீர் உம்முடைய அடியாள் மேல் உம்முடைய போர்வையை விரியும் ; நீர் சுதந்தரவாளி" (ரூத். 3:9) என்று ரூத் இதினிமித்தமே போவாசைப் பார்த்துக் கூறினாள். என் வஸ்திரத்தை உன் மேல் விரித்து ... உனக்கு ஆணையிட்டுக் கொடுத்து உன்னோடு உடன்படிக்கை பண்ணினேன் என்று கர்த்தராகிய

ஆண்டவர் சொல்லுகிறார் ; இவ்விதமாய் நீ என்னுடையவளானாய் (எசே.16:8).

மணமகளின் அலங்காரம் :– திருமண வைபவத்தின் போது மணமகளின் தோழிகள் அவளை விசேஷித்த விதமாய் அலங்கரிப்பது வழக்கம். மணமகனை சந்திக்கும் போது மிகவும் அழகுள்ள பெண்ணாக அவளை நிறுத்துவதில் அவள் குடும்பத்தாரும் தோழிகளும் கருத்தாய் இருப்பர். மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னை சிங்காரித்துக் கொள்ளுகிறதற்கும் ஒப்பாக அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார் என்று வேதம் கூறுகிறது (ஏசா.61:10). இப்படி மணவாட்டி தன்னை அலங்கரிப்பது இரட்சிப்பின் மகிழ்ச்சிக்கும் பண்டிகைக்கால மகிழ்ச்சிக்கும் அடையாளமாகக் கூறப்பட்டுள்ளது.

மணமகள், மணமகனை சந்திக்கும் வரைக்கும் முக்காட்டினால் தன் முகத்தை மூடியிருப்பாள். மணமகனை முதல் முறை சந்திக்கும் பொழுது அவளது முக்காடு நீக்கப்பட்டு அவளது முகத்தின் ரூபம் மணமகனுக்குக் காண்பிக்கப்படும். "கிருபையின் இரக்கமுள்ள தேவனால் நீ ஆசீர்வதிக்கப்படுவாயாக" என்ற வார்த்தைகளைக் கூறி மணமகன் அவளுடைய முக்காட்டை எடுத்து விடுவான். அப்படி மணமகளின் முகரூபத்தை அவன் காணும் போது மகிழ்ச்சியினால் உரத்த சத்தமிடுவான். அறையின் வெளியே காத்திருக்கும் மணமகன், மணமகள் இருவரது தோழர்களும் இந்த சத்தத்தைக் கேட்டு மகிழ்ச்சியடைவர். "மணவாளனுடைய தோழனோ அருகே நின்று அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் அவருடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான் ; இந்த சந்தோஷம் இப்பொழுது எனக்கு சம்பூரணமாயிற்று" (யோவா. 3:29) என்று யோவான் கூறின வார்த்தைகள் இதற்கு ஒப்பாய் இருக்கின்றது.

**8.லேவிரேட் திருமணம்** ( **LEVIRATE MARRIAGE** ) : – லேவிர் (Levir) என்ற ஆங்கிலப் பதத்திற்கு "கணவனின் சகோதரர்" என்பது பொருளாகும்.ஒரு குடும்பத்தில் பிள்ளைகளைப் பெற்றெடுத்து வம்சத்தைக் காப்பது ஸ்திரீகளின் முக்கிய கடமையாக இருந்தது. புருஷனுக்கு சந்ததி இல்லாது அவன் மரிக்க நேரிட்டால், அவன் மனைவியை தன் புருஷனின் சகோதரனுக்கு திருமணம் செய்துவைப்பது அந்நாட்களில் வழக்கமாக இருந்தது (ஆதி. 38:8). ஒரு ஆண் பிள்ளையில்லாமல் புருஷன் இறக்க நேரிட்டால் இவ்வித வழக்கம் கைக் கொள்ளப்பட்டு வந்தது. இதற்கு லேவிரேட் திருமணம் (Levirate marriage) என்று பெயர். மரித்த வனின் மனைவி தன் கணவனின் சகோதரனை திருமணம் செய்து அவர்களுக்குப் பிறக்கும் முதல்ஆண் பிள்ளைக்கு மரித்துப்போன புருஷனின் பெயரும் சுதந்திரமும் கடந்து வரும் (உபா. 25:6; ரூத் 4:10).

ஒரு வேளை அந்த விதவையைத் திருமணம் செய்த முதல் மைத்துனரும் மரித்துவிட்டால் அவள் அடுத்த மைத்துனரை திருமணம் செய்யவேண்டும். ஒரு வேளை அவளது கணவனின் சகோதரன் அந்தத் திருமணக்கடமையை

நிறைவேற்ற மறுத்துவிட்டால் அல்லது அவளது கணவனுக்கு உடன் பிறந்த சகோதரர்கள் இல்லாவிட்டால் நெருங்கிய உறவினரில் உள்ள ஒரு ஆண்மகன் அவளைத் திருமணம் செய்துகொள்ளவேண்டும் (ஆதி. 38:26; ரூத் 4:4). இந்தத் திருமண முறைக்கு ஆக்னெட் திருமணம் (Agnate marriage) என்பது பெயராகும். விதவையான பெண் தன் புருஷனின் வம்ச வழியைவிட்டு எக்காரணத்தைக் கொண்டும் அடுத்த வம்சத்தில் திருமணம் செய்து கொள்ளக்கூடாது (உபா. 25:5). இதனடிப்படையிலேயே சதுசேயர்கள் ஆண்டவர் இயேசுவினிடத்தில் இந்த திருமண முறையைக்குறித்து கேள்விகள் கேட்டனர் (மத். 22:24).

**9.விபச்சாரம்** (ADULTERY) : –எபிரேய திருமண முறைப்படி ஒரு மனைவியானவள் தன் கணவனுக்குத் தன் மரண நாள்வரை உண்மையாய் இருக்கவேண்டியது அவசியம். திருமண உறவில் உண்மையற்றுக் காணப்படும் மனைவியானவளுக்கு எபிரேய சட்டத்தின்படி தண்டனை அளிக்கப்பட்டது. ஆனால், கணவனுக்கோ அவ்விதமான தண்டனைகள் அளிக்கப்படவில்லை. விபச்சாரம் செய்யதிருப்பாயாக (யாத். 20:14–17) என்று நியாயப்பிரமாணம் கூறுகின்றது. ஆனால், திருமணமான அல்லது திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்ட ஒரு பெண்ணோடு விபச்சாரம் பண்ணுகிற ஒரு புருஷனை தண்டிப்பதற்கு எபிரேய சட்டத்தில் நியமங்கள் இல்லை.

விபச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும் இருவர் கண்டுபிடிக்கப்படுவார்களானால் அவர்கள் இருவருக்கும் அந்நாட்களில் மரண தண்டனை அளிக்கப்பட்டது (உபா. 22:22; லேவி. 20:21; யோவா. 8:5). ஆனால், ஒரு அடிமைப்பெண்ணோடு விபச்சாரம் செய்யும் அந்த புருஷன் தண்டிக்கப்படுவதில்லை. மாறாக அந்த அடிமைப் பெண்ணுக்குரிய விலையை அவளுடைய எஜமானுக்குக் கொடுத்து விடவேண்டும் (லேவி. 19:20–22). இதனால், இயேசு கிறிஸ்து தன்னுடைய மலைப்பிரசங்கத்தில் கூறும்போது இவ்விதமான பாவம் பெண்களை மாத்திரம் சார்ந்தது அல்ல அது ஆண்களையும் சார்ந்ததாகும் எனக்கூறினார். மட்டுமல்ல சிந்தையில் ஒரு ஸ்திரீயைக்குறித்து எழும்பும் இச்சையான எண்ணங்களையும் விபச்சாரம் என்று சொல்லி மக்களுக்குப் போதித்தார் (மத். 5:28). அத்தோடு விவாகம் ஆகாத புருஷனும் ஸ்திரீயும் செய்யும் இவ்வித பாவத்தை வேசித்தனம் என்று வேதம் கூறுகிறது (1கொரி. 6:12–20; வெளி. 21:8).

**10.விவாகரத்து** (DIVORCE) :- பழைய ஏற்பாட்டுக்காலத்தில் விவாகரத்தானது நியாயப்பிரமாணத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஒரு புருஷன் தன் மனைவியிடம் இலச்சையான காரியங்களைக் கண்டுபிடித்தால் அவளுக்கு தள்ளுதற் சீட்டை எழுதிக்கொடுத்து அவளை தன் வீட்டிலிருந்து அனுப்பி விடலாம் (உபா.24:1–4). இந்த தள்ளுதற் சீட்டின் காரியமானது விவாதத்திற் குரிய ஒன்றாகவே இருந்து வந்தது. இயேசு கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பிருந்த 'ஷம்மாய்' (Shammai) பள்ளியைச் சார்ந்தவர்கள் தன் புருஷனுக்கு உண்மையற்று இருக்கும் மனைவியை இவ்வித முறைப்படி விவாகரத்து செய்யலாம் எனக்கூறினர். ஆனால்

'ஹில்லெல்' (Hillel) பள்ளியைச் சார்ந்தவர்களோ புருஷனுக்கு தன் மனைவியின் மேல் எவ்வித மனவருத்தம் வந்தாலும் அவளை விவாகரத்து செய்துவிடலாம் எனக் கூறினர்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் சாட்சிகள் முன்னிலையில் இவள் என் மனைவியல்ல நான் அவளுக்குப்புருஷனல்ல எனக்கூறி விவாகரத்து செய்து விடலாம் (ஓசி.2:2). அதன்பிறகு சம்பிரதாயத்தோடுக்கூடிய தள்ளுதற் சீட்டு கொடுக்கப்படும். ஆனால் புதிய ஏற்பாட்டிலோ இயேசு கிறிஸ்து தன் உபதேசங்களில் மனைவியை விவாகரத்து செய்வதைக்குறித்து கண்டித்து போதித்திருக்கிறார் (மாற். 10:2–12; லூக். 16:18). விவாகரத்தானது தேவனது சிருஷ்டிப்பின் நோக்கத்திற்கும் குடும்பம் என்ற நியமனத்திற்கும் விரோதமானது எனக்கூறினார். வேசித்தன முகாந்திரத்தி னாலொழிய வேறு எந்தக்காரணம் கொண்டும் விவாகரத்து செய்யக்கூடாதென்பது புதிய ஏற்பாட்டின் சட்டமாகும் (மத். 19:9). விசுவாசியான வாழ்க்கைத் துணையோடு வாழ விரும்பாத அவிசுவாசியான வாழ்க்கைத் துணை விவாகரத்தை தேடினால் அல்லது பிரிந்துபோக விரும்பினால் பிரிந்துபோகட்டும் என்று பவுல் கூறினார். ஆனால் விசுவாசியான வாழ்க்கை துணை தானாகப் பிரிந்து போவதற்கு பவுல் தன் நிருபங்களில் அனுமதி அளிக்கவில்லை (1கொரி.7:2–17).

**11.பிரம்மச்சாரியம் (CELIBACY) :** திருமணம் என்பது ஒரு மாபெரும் சிலாக்கியமாகவும், தேவனின் கற்பனையாகவும் தேவனது வாக்குதத்தம் நிறைவேறும்படி வம்ச விருத்திக்கென கொடுக்கப்பட்ட கடமையாகவும் இஸ்ரவேலரால் கருதப்பட்டது. பிரம்மச்சாரியம் என்பது ஒரு இழிவான நிலையாக அந்நாட்களில் கருதப்பட்டதால் பொதுவாக அண்ணகராக வாழும் வாழ்வானது மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பிட்சுக்கள்(Monks), கன்னியா ஸ்திரீகள்(Nuns) என்ற தனிப்பட்ட ஒரு நியமத்தை அல்லது நிலையை வேதம் கட்டாயப்படுத்த வில்லை. நசரேய விரதம் இருந்தவர்கள்கூட நசரேய காலம் முடிந்தபின் திருமணம் செய்துகொண்டதாகவும் திருமணக் கடமையை நிறைவேற்றியதாகவும் வேதம் கூறுகின்றது (நியா.14,15 அதி). கிறிஸ்துவின் காலத்திற்கு முன்புவரை சில யூதர்கள் திருமணம் தீமையானது என போதித்து வந்தனர். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் "வரம்பெற்றவர்களே" தவிர மற்றவர்கள் அண்ணகர்களாக வாழ்வது கூடாதகாரியம் எனக்கூறியுள்ளார் (மத். 19:10–12). அப்போஸ்தலனாகிய பவுலும் தன் நிருபங்களில் சுயகட்டுப்பாடு உள்ளவர்கள் தவிர மற்றவர்கள் திருமணம் செய்துகொள்ளுதல் அவசியம் என்றுக்கூறியிருக்கிறார் (1கொரி. 7:1–9).

**12. பிள்ளைகள் (CHILDREN) :** பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் என்பதும் மிகப்பெரிய குடும்பம் தேவனது ஈவு என்றும் மலட்டு தன்மையானது தேவனுடைய சிட்சை, சாபம், அவமான சின்னம் அல்லது தேவகோபம் என்றும் இஸ்ரவேலர் கருதினர். (ஆதி.16:2;20:18; 30:3;1சாமு.1:5). குழந்தை பிறப்பைத் தடுப்பது அந்நாட்களில் முற்றிலுமாய் விலக்கப்பட்டிருந்தது (ஆதி. 38:9,10). ஆண்பிள்

ளைகள் பெண்பிள்ளைகளைவிட முக்கியமானவர்களாகக் கருதப்பட்டனர். எனவேதான், விசுவாச ஸ்திரீகள் பலரும் கர்த்தரிடத்தில் வேண்டுதல் செய்த போது ஆண்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொண்டனர். பெண் பிள்ளை அடுத்த குடும்பத்திற்கு செல்லக்கூடியவள் என்றும் ஆண் பிள்ளைகளோ வம்சத்தையும் தலைமுறையையும் காப்பவர் என கருதப்பட்டனர்.

குடும்பத்தில் பிறக்கும் முதலாவது ஆண்பிள்ளை விசேஷமானதாக கருதப்பட்டது. குடும்பத்தின் சகல சுதந்திரத்திலும் சொத்துக்களிலும் முதல் ஆண்பிள்ளைக்கு இரண்டு பங்கு கொடுக்கப்பட்டது (2இரா. 2:9) இப்படியாக சேஷ்டபுத்திர பாகமானது முதல் ஆண்மகனையே சேரும். மட்டுமல்லாது முதல் பிறந்த ஆண்மகனே தகப்பனின் பொறுப்புகளையும் அதிகாரங்களையும் பெற்றுக் கொள்ளுவான் (2நாளா. 21:1–3). ஒரு தகப்பனுக்கு இரண்டு மனைவிகள் இருந்து ஒருவள் விரும்பப்பட்டவளும் மற்றவள் விரும்பப்படாத வளாய் இருக்கையில் இருவருக்கும் ஆண்பிள்ளைகள் பிறந்தாலும் விரும்பப்படாதவளிடத்தில் பிறந்த மகன் முதல் குமாரனாய் இருந்தால் அவனுக்கே சேஷ்டபுத்திர பாகம் கொடுக்கப்படும் (ஆதி. 49:3–34; உபா. 22:15–17). சேஷ்டபுத்திர பாகத்தை ஒருவர் மற்றொருவருக்கு விற்றுவிட அந்நாட்களில் உரிமையிருந்தது. ஏசா அதற்கு ஓர் உதாரணம் (ஆதி. 25:31–33).

பெண் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து கொடுக்கையில் முதலாவது பிறந்த குமாரத்தியே முதலாவதாக திருமணம் செய்து கொடுக்கப்படவேண்டும் என்பது அந்நாட்களில் வழக்கமாயிருந்தது. சில வேளைகளில் இளையமகள் முதலாவதாகத் திருமணம் செய்துகொடுக்கப்பட்டது. ஆனால் தகப்பன் அதில் உறுதியாய் இருந்தால் மூத்த மகளுக்கே முதலில் திருமணம் முடிப்பர். லாபான் அதற்கொரு முன்னுதாரணம் (ஆதி. 29:26). ஆண் வாரிசுகள் இல்லாத குடும்பத்தில் பெண் பிள்ளைகள் குடும்பத்தின் சுதந்திரத்தை பெற்றுக்கொண்டனர் (எண். 27:8). ஆனால் அந்தப்பெண் பிள்ளைகள் தங்கள் தகப்பனுடைய கோத்திர வம்சத்தாரில் மாத்திரமே திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது (எண். 36:6).

**13. அடிமைகள் (SLAVES) :** அடிமைகளை கொள்ளும் வழக்கம் மத்திய கிழக்கு நாடுகளில் பொதுவாக வழக்கத்திலிருந்தது. இஸ்ரவேலர்களும் தங்களுக்கு அடிமைகளைக்கொண்டு அவர்களை வேலைக்காரராய் பயன்படுத்தி வந்தனர். ஆனாலும் மோசேயின் பிரமாணத்தில் அடிமைகளை நடத்துவதற்கு மனிதாபிமான அடிப்படையில் சட்டங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. இரண்டு வகையான அடிமை கள் இஸ்ரவேல் தேசத்திலிருந்தனர். ஒன்று புறவினத்து அடிமைகள் மற்றொன்று இஸ்ரவேலரான அடிமைகள். இவ்விரு விதமான அடிமைகளும் குடும்பத்தின் நபர்களாகவே கருதப்பட்டனர். தங்கள் எஜமானின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இவ்வித வேலைக்காரர்களை நம்பி சில வேளைகளில் குடும்பத்தில் முழு

பொறுப்புகளும் கொடுக்கப்பட்டிருந்தது (ஆதி. 24:2; 39:6; மத். 24:45,46).

அடிமையான ஒரு வேலைக்காரன் தன் எஜமானின் குமாரத்தியையும் அடிமையான ஒரு வேலைக்காரப்பெண் தன் எஜமானின் குமாரனையும் மணந்துகொள்வது அந்நாட்களில் அனுமதிக்கப்பட்டிருந்தது (1நாளா.2:35;யாத்.21:9). சில நேரங்களில் தங்களுக்கு ஆண் பிள்ளைகள் இல்லாத எஜமான்கள் தங்கள் அடிமைகளிலிருந்து ஒரு ஆண் மகனை வாரிசாக எடுத்துக்கொள்ளுவர் (ஆதி. 15:2). அடிமையான வேலைக்காரர்களும் ஓய்வு நாட்களில் ஓய்ந்திருந்தல் அவசியம் (யாத்.20:10; 23:12). அடிமையான ஆண்மக்கள் விருத்தசேதனம் பண்ணப்பட்டப்பின் இஸ்ரவேலர் களின் ஆராதனையிலும் பண்டிகைகளிலும் பங்குபெற உரிமையளிக்கப்பட்டது (யாத். 12:44; உபா. 12:12).

நியாயப்பிரமாணத்தின்படி ஒரு எஜமான் தன் அடிமையை தண்டிக்கும்படி அடிக்கலாம் ஆனால், அவன் மரித்துப்போகும் அளவிற்கு அடித்தல்கூடாது. அப்படி அடிக்கின்ற எஜமான் தண்டனைக்கு உள்ளாவான். ஒரு வேளை அடிமையின் சரீர உறுப்புகள் சேதமடையும்படி அவன் அடிக்கப்பட்டிருந்தால் அதற்கு ஈடாக அந்த அடிமை விடுதலை செய்யப்படவேண்டும் (யாத். 21:20,21,26). ஒரு எஜமா னிடத்திலிருந்து தப்பி ஓடி வேறொரு எஜமானிடத்தில் அடைக்கலம் புகுந்து கொண்ட அடிமை மீண்டும் தன் முதலாவது எஜமானிடத்தில் ஒப்படைக்கப்படக் கூடாது. மாறாக இரண்டாவது எஜமான் அவனை தன்னோடு வைத்துக் கொள்ள வேண்டும் (உபா. 23:15,16).

அந்நிய தேசத்திலிருந்து பிடிக்கப்பட்ட அடிமைகள் முப்பது சேக்கல் வெள்ளிக் காசுகளுக்கு விற்கப்பட்டனர் (யாத்.21:32)(இக்கால மதிப்பின்படி 15 டாலர் அல்லது 675 ரூபாய் ஆகும்). யுத்தத்தில் பிடிக்கப்பட்ட அடிமைகள் முற்றிலும் தங்கள் எஜமா னருக்கே சொந்தம். அவர்களை விற்கவும் விட்டுவிடவும் அல்லது தன்னுடைய குடும்பத்தில் அங்கத்தினராக்கவும் அந்த எஜமானுக்கு முழு உரிமையும் உண்டு (ஆதி. 14:14; 17:12; பிர. 2:7). அந்நிய தேசத்து அடிமைகளை விட இஸ்ரவேல் தேசத்து அடிமைகள் சற்று கண்ணியமாக நடத்தப்பட்டனர்.இஸ்ரவேலரான அடிமைகள் அவர்களுடைய விருப்பங்களுக்கு மாறாக பிறரிடம் விற்கப்படக்கூடாது (யாத். 21:16; உபா. 24:7).

பிறரிடம் கடனை வாங்கி செலுத்தத் திராணியில்லாதவர்கள் தாங்கள் கடன்பட்ட எஜமானரிடம் தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் அடிமைகளாக அர்ப் பணித்துக்கொண்டனர் (யாத். 21:2; உபா. 15:12). ஆறு ஆண்டுகளுக்குப் பின்பு இந்த அடிமைகள் விடுதலைசெய்யப்படவேண்டும் (யாத். 21:1–4).அடிமைப் பட்டவன் ஒருவனாய் வந்திருந்தால் விடுதலையாகி செல்லும்போது ஒருவனா கவும் குடும்பமாய் வந்திருந்தால் குடும்பமாகவும் விடுதலையாகிச் செல்ல வேண்டும். ஒரு வேளை தனிமனிதனாய் வந்திருந்து எஜமான் அவனுக்கு விவாகம்பண்ணி வைத்திருந்து அவனுக்குப் பிள்ளைகள் பிறந்திருந்தால்

விடுதலையாகிச் செல்லும்போது தன் மனைவி பிள்ளைகளை விட்டுவிட்டு அவன் மாத்திரம் விடுதலையாகிச் செல்ல வேண்டும். தன் மனைவி பிள்ளைகளை விட்டுச்செல்ல மனம் இல்லாதவன் தன் எஜமானுக்கு தன்னையும் தன் குடும்பத்தை அர்ப்பணித்து என்றென்றும் அவனுக்கு அடிமையாக அவனை சேவிக்க வேண்டும் (யாத். 21:1–6) எல்லா அடிமைகளும் யூபிலி ஆண்டிலே விடுதலை செய்யப்பட வேண்டும்.

**14. பெண் அடிமைகள் (FEMALE SLAVES) :** பொதுவாக ஒரு இஸ்ரவேல் பெண் திருமணம் செய்துகொடுக்கப்படும்போது அவளது தகப்பன் ஒரு அடிமைப்பெண்ணை அவளோடு கூட அனுப்புவது வழக்கம். அப்படிப்பட்ட அடிமைப்பெண்கள் சில வேளைகளில் தங்கள் எஜமானுக்கோ அல்லது அவரது குமாரருக்கோ, தங்கள் எஜமாட்டியின் சம்மதத்தின்பேரில் மறுமனையாட்டிகளாகக் கொடுக்கப்படுவர் (ஆதி.16:1–2;30:3–9). அப்படிப்பட்ட அடிமைபெண்கள் இஸ்ரவேலராயிருந்தாலும் ஆறாவது ஆண்டின் முடிவிலே விடுதலை பெற்றுச்செல்ல இயலாது (யாத். 21:7). ஒரு அடிமைப்பெண் தன் எஜமானனின் பிரியத்திற்கு அபாத்திரமாகும்போது அவளை அவள் எஜமான் அனுப்பிவிடவோ விற்றுவிடவோ முடியாது. மாறாக அவளது உறவினரில் ஒருவர் அவளை மீட்டுக்கொள்ளமுடியும் (யாத். 21:8). அடிமை வியாபாரம் இஸ்ரவேல் தேசத்தில் வழக்கத்தில் இல்லாதிருந்தாலும் அண்டை தேசங்களில் அது வழக்கத்தில் இருந்தது (எசே. 27:13).

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அடிமைகள் என்ற பதம் சில இடங்களில் கூறப்பட்டிருந்தாலும் அது வேலைக்காரர், வேலைக்காரிகள் என்ற பதத்திலேயே அதிகமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. குமாரனாகிய இயேசு கிறிஸ்து அடிமையின் ரூபம் எடுத்து பூமிக்கு வந்தார் (பிலி. 2:7). பவுலும் தன்னை தேவனுக்கு அடிமை என்று கூறுகின்றார். ஆதித் திருச்சபைகளில் அடிமைகள், எஜமானர்கள் என்ற இருதரப்பினருமே இரட்சிக்கப்பட்டு தேவனை தொழுதுகொண்டனர். என்றாலும் இவர்களுக்கு என்று தனிப்பட்ட சட்டங்கள் எழுதப்படவில்லை. ஆனால், கிறிஸ்துவுக்குள் அடிமையென்றும் சுயாதீனரென்றும் எவ்வித வேறுபாடும் இல்லை (1 கொரி. 7:22; கலா. 3:28).

# 7

# கருவிலிருந்து கல்லறை வரை

## (FROM CRADLE TO THE GRAVE)

மனிதனின் வாழ்வுகாலம் துவக்கத்தில் மிக நீண்ட காலமாய் இருந்தது. ஆதாம், மெத்தூசலா போன்றோர் **900** வருடங்களுக்கு மேல் வாழ்ந்தார்கள் **(ஆதி.5:5,27).** அதற்குபின் தேவன் மனிதனின் வாழ்வுகாலத்தை **120** வருஷமாக்கினார்**(ஆதி6:3)** அதற்குபின் அவனது ஜீவிய காலத்தை **80** வருஷமாக்கினார் **(சங் 90:10).** இவ்விதமாக வாழ்வின் சகல நிகழ்வுகளும் ஒவ்வொரு கூட்ட மக்களுக்கும் அது அவர்கள் கலாச்சாரத்தின் அடிப்படையில் வேறுபட்டு காணப்பட்டது. என்றாலும் எல்லா மனிதர்க்கும் பிறப்பு இறப்பு என்பது ஒன்று போலவே இருந்தாலும் அவர்கள் பிறப்புக்கும் மரணத்துக்கும் இடையே மனிதன் வாழ்கின்ற வாழ்க்கை முறை பூமியில் வேறுபட்டிருக்கிறது. இஸ்ரவேலர் வாழ்க்கை முறையை **1.** பிறப்பும் குழந்தைப் பருவமும், **2.** வாலிபமும் கல்வியும், **3.** திருமணமும் பிள்ளைப் பேறும், **4.** முதுமையும் மரணமும் என நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம்.

### A. பிறப்பும் குழந்தைப் பருவமும்
### (BIRTH & CHILDHOOD)

**1. பிறப்பு (BIRTH) :-** பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் என்ற வசனத்தின்படி இஸ்ரவேலர் பல பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வது மாபெரும் ஆசீர்வாதத்தின் அடையாளமாக நம்பினர். தந்தையும் தாயும் ஒரு பிள்ளையின் பிறப்பிற்கு காரணமாயிருந்தாலும் தேவனே அதற்கு மூலக்காரணமாய் இருக்கிறார் என்பதை அவர்கள் ஆணித்தரமாய் நம்பினர். உதாரணமாக யாக்கோபு அவன் மனைவிகளிடையே நடந்த உரையாடலில் அது நன்கு தெரிகிறது **(ஆதி.29:31–33,35 ; 30:24).**

எனக்கு பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என ராகேல் யாக்கோபைக் கேட்ட போது, யாக்கோபு கூறின பதில் இதை நன்கு விளக்குகிறது (ஆதி.30:1–2).

கணவன் மனைவி உறவுகளை தேவன் மிகவும் கனப்படுத்துகிறார். அவர்கள் குடும்ப வாழ்க்கையில் இணைந்தபின் அவர்களது பிள்ளைப்பேற்றின் உறவுகளை மிகவும் நாகரீகமான முறையில் வேதம் விவரிக்கிறது. தகப்பனின் வித்து (ஆதி. 38:9), தாயின் வித்து (ஆதி.3:15), தாயின் கரு (எரே.1:5), தகப்பனின் அறை (எபி.7:9) போன்ற பதங்களின் மூலம் அந்தரங்க விஷயங்களை கௌரவமான முறையில் வேதம் எடுத்துரைக்கிறது. இவையனைத்தும் தேவனது பரிசுத்த நியமமாய் இருந்தபடியால் ஒரு பிள்ளையின் பிறப்பை இஸ்ரவேலர்கள் பரிசுத்தமானது எனக் கருதினர். எனவே தான் பரிசுத்த சந்ததியைக் காக்கும்படி விபச்சாரத்திற்கு விலகியிருக்கவேண்டுமென நியாயப்பிரமாணம் போதிக்கிறது.

**2. பிரசவம் (DELIVERY) :-** இஸ்ரவேல் ஸ்திரீகள் நல்ல பெலமுள்ளவர்களும் தேவனை விசுவாசிக்கிறவர்களுமாய் இருந்தபடியால் அநேக பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். பிரசவ நேரத்தின்போது முதிர்வயதுள்ள ஸ்திரீகளோ தாதிமாரோ, மருத்துவச்சிகளோ, பிரவசத்திற்கு உதவிசெய்தனர் (யாத். 1:19; 1சாமு.4:20). பொதுவாக பிரசவத்தின்போது கர்ப்பிணிகள் மணைகளில் அமர்ந்து பிரசவிப்பது இஸ்ரவேல் ஸ்திரீகளின் வழக்கம் (யாத்.1:16). ஆனால் தேவனது பெலன் இப்பெண்களோடு இருந்த நாட்களில் மருத்துவச்சிகள் உதவியின்றி பிள்ளையைப் பெற்றெடுத்த ஸ்திரீகளும் இருந்தனர்.

எபிரேய ஸ்திரீகள் தாங்கள் பெற்ற பிள்ளைகள் மட்டுமின்றி, தங்கள் தாதிமார் தங்கள் கணவருக்குப் பெற்றெடுத்த பிள்ளைகளையும் தங்கள் பிள்ளைகளாகவே கருதினர். உதாரணமாக பில்காளுக்குப் பிறந்த பிள்ளைகளை ராகேல் தன் பிள்ளைகளாகவே கருதினாள் (ஆதி. 30:3). சில்பாளுக்கு பிறந்த பிள்ளைகளை லேயாள் தன் பிள்ளைகளாவே கருதினாள் (ஆதி. 30:9,10). யாக்கோபு யோசேப்பின் குமாரர்களைத் தன் குமாரர்களாய் ஏற்றுக் கொண்டான் (ஆதி. 45:5,14–20) யோசேப்பும் தன் பேரக்குழந்தைகளை தன் குழந்தைகளாக ஏற்றுக்கொண்டு தன் மடிமீது அவர்களை வளர்த்தான் (ஆதி. 50:23).

பொதுவாக ஒரு ஸ்திரீயின் பிரசவ நேரத்தில் அவளது கணவன் உடன் இருப்பதில்லை (எரே. 20:15). மருத்துவச்சிகள் பிரசவம் பார்த்து முடித்தபின் தகப்பனுக்கு செய்தியனுப்புவர். ஒரு குழந்தையின் பிறப்பு குடும்பத்தினர் அனைவருக்கும் மாத்திரமல்ல உறவினருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும் (ரூத் 4:14; லூக். 1:58). மேலும், ராஜாக்களின் வேதனைகளைக் குறித்தும் கர்த்தருடைய நாளைக் குறித்தும் வேதம் கூறும்போது அதை பிரசவ வேதனைக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றது (சங். 48:6; ஏசா. 13:6–8; எரே.6:24).

ஒரு பிள்ளை பிறந்தவுடன் அதன் தொப்புள் கொடியானது அறுக்கப்பட்டு,

தண்ணீரினால் கழுவப்பட்டு உப்பினால் சுத்திகரிக்கப்பட்டு துணிகளில் சுற்றப் படும் (எசே. 16:4). பொதுவாக 40 நாள் வரையும் பிள்ளைகளை தண்ணீரினால் கழுவாமல் துணிகளில் சுற்றி பத்திரமாய் பாதுகாப்பர். பின்பு கண்களில் மையிட்டு பிள்ளையை அலங்கரித்து துணிகளில் சுற்றி உறவினர்களுக்கு குழந்தையைக் காண்பிப்பர். இது இஸ்ரவேலரின் வழக்கமாயிருந்தது. பொதுவாக பிள்ளை பிரசவித்த வீட்டிற்கு வெளியே 2 அல்லது 3 வாத்தியக் கருவிகளை வாசிப்பவர்கள் காத்திருப்பர். பிறந்தது ஆண்பிள்ளையாய் இருக்குமெனில் மிக வேகமாகவும் சத்தமாகவும் வாத்தியங்களை வாசித்து பிறந்தது ஆண் பிள்ளையென்று பிறர் அறியும்படி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிப்பர்.

மட்டுமல்ல, அந்த வீட்டாரைக் குறித்து புகழ்ந்துபாடி பிள்ளையைக் குறித்து தீர்க்க தரிசனமான வார்த்தைகளை யும் உரைப்பர்.ஆனால் பிறந்தது பெண் பிள்ளையாய் இருக்குமெனில் வீட்டார் அனைவரும் சோக முகத்தோடு இருப்பதைக் கண்டு வாத்தியக்காரர்கள் தங்கள் வாத்தியக் கருவிகளை தோள் மேல் தூக்கி வைத்துக் கொண்டு மௌனமாக சென்று விடுவர். சில வீடுகளில் பிறந்த பெண் பிள்ளையை, பிள்ளையின் பாட்டி பல மாதங் களாகியும் பார்க்க வரமாட்டார்கள்.

ஆண் பிள்ளையை பிரசவித்த ஸ்திரீ 40 நாள் வரையும், பெண் பிள்ளையை பிரச வித்த ஸ்திரீ 80 நாள் மட்டும் விலக்கமாய் இருக்கவேண்டும் (லேவி. 12:2–5). இந்த சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறின பின் தேவாலயத்தில் வந்து பலி செலுத்த வேண்டும் (லேவி.12:6–8;லூக்.2:22–24). பெண் பிள்ளைகளைவிட ஆண்பிள்ளை களின் பிறப்பை இஸ்ரவேலர் அதிக சந்தோஷமாய் கருதுவர். பிறந்த ஆண் பிள்ளை எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டுமென பிரமாணம் கூறிய படியே அவர்கள் செய்தனர் (லேவி. 12:3).

**3.பெயரிடுதல்(NAMING) :-** எபிரேயக் குடும்பத்தில் பிறந்த குழந்தைக்கு பெற்றோர் பெயரிடுவது மிக முக்கியத்துவம் வாய்ந்த வழக்கமாக இருந்தது. சில வேளைகளில் உறவினர்களும் கூடி விருந்து செய்து குழந்தைக்கு பெயரிடுவர் (ஆதி. 4:1; 21:3; ரூத் 4:17; லூக். 1:59–63). ஒரு குழந்தைக்குப் பெயரிடுவது அந் நாட்களில் முக்கியமானதாய் கருதப்பட்டது. எனவே, ஒவ்வொரு குழந்தைக்கும் உரிய பெயரை பெற்றோர் கருத்தாய் தெரிந்தெடுத்தனர். குழந்தையின் தந்தை வழியான தாத்தாவின் பெயரையோ அல்லது நெருங்கின உறவின் முறையாரது பெயரையோ குழந்தைக்கு சூட்டுவது அவர்கள் வழக்கமாயிருந்தது.

பழைய ஏற்பாட்டில் குழந்தை பிறந்தவுடனே அதற்குப் பெயர் சூட்டினர் (ஆதி.25: 26; 35:18). ஆனால் புதிய ஏற்பாட்டிலோ ஆண் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணப்படும் எட்டாம் நாளில் பெயர் சூட்டினர் (லூக். 1:59; 2:21). தேவபக்தியுள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு யேகோவா தேவனைப் பற்றிய அர்த்தத்தில் அமைந்த பெயர்களை சூட்ட முன்வந்தனர். குழந்தைக்கு பெயரிடும்போது அக் குழந்தை பிறந்த சமயத்தில் நடந்த சம்பவங்களுக்கு ஏற்றதாகவும் பெயர்

சூட்டப்பட்டது. மிருகங்கள் பறவைகள் போன்றவற்றின் பெயரும் சில பிள்ளை களுக்குக் கொடுக்கப்பட்டது.உதாரணமாக, காலேப் என்பதற்கு நாய், யோனா என்பதற்கு புறா, தொற்காள் என்பதற்கு கலைமான், ராகேல் என்பதற்கு பெண் ஆடு, தாமார் என்பதற்கு பனைமரம், ஏலோன் என்பதற்கு சிந்தூரமரம், ரூபன் என்பதற்கு இதோ ஒரு குமாரன், காத் என்பதற்கு நல்ல ஈவு, பெஞ்சமின் என்பதற்கு என் வலது புயத்தின் குமாரன் என்று பொருள் அமைந்த பெயர்களும் இருந்தன.

இன்னும் பல பெயர்கள் தேவனுடைய நாமத்தோடு இணைத்து சூட்டப்பட்டன. குறிப்பாக 'யே' (Je) என்றும் 'ஏல்' (El) என்றும் துவங்கி, 'யா' (Jah) என்றும் 'ஏல்' (El) என்று முடியும் தேவனைக் குறிக்கும் நாமங்கள் குழந்தைகளுக்கு சூட்டப்பட்டது. இஸ்மவேல் (Ishmael), நத்தானியேல் (Nathaniel), ஒபதியா (Obadiah), எலியா (Elijah) போன்ற பெயர்களை உதாரணமாகக் கூறலாம். சில வேளைகளில் தீர்க்கதரிசிகள் பிள்ளைகளுக்குப் பெயரிடும்போது சில சம்பவங்களை நினைவு கூறும் வகையில் பெயரிடுவது வழக்கம்.

ஓசியா தீர்க்கதரிசி தன் பிள்ளைகளுக்குப் பெயரிடும்போது யெஸ்ரயேல் **(ஓசி.1:4).**லோருகாமா **(ஓசி. 1:6)** லோகம்மீ **(ஓசி.1:9)** என்று பெயரிட்டான். இந்த பெயர்கள் அனைத்தும் இஸ்ரவேலின் உண்மையற்ற தன்மையையும் யெகோவா தேவனின் உண்மைகளை வெளிப்படுத்துகிறவைகளாயிருந்தன. புதிய ஏற்பாட்டிலும் அநேக யூதர்கள் கிரேக்க, லத்தீன் பெயர்களைத் தனியாகவோ அல்லது எபிரேய பெயரோடு இணைத்தோ தங்கள் பிள்ளைகளுக்கு சூட்டினர். ஸ்தேவான், பவுல், சில்வானு ஆகிய பெயர்கள் இதற்கு உதாரணங்கள்.

**4. விருத்தசேதனம் (CIRCUMCISION) :-** ஆபிரகாமோடு தேவன் செய்த உடன் படிக்கையின் அடிப்படையில் நியாயப்பிரமாணத்தின்படி ஒவ்வொரு ஆண் பிள்ளையும் பிறந்த எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் **(ஆதி. 17:12; லேவி. 12:3).** துவக்கத்தில் கருக்கான கற்களை பயன்படுத்தி விருத்த சேதனம் செய்தனர் (யாத்.4:25; யோசு.5:2,3). இதற்குப் பின் விருத்தசேதனத்திற்கு கூர்மையான கத்திகளைப் பயன்படுத்தினர். மக்கள் விருத்தசேதனத்தை கர்த்த ரால் கொடுக்கப்பட்ட ஒரு பிரமாணமாகவே கைக்கொண்டு வந்தனர். எபிரேய வம்சத்தை சேராத மக்களுக்கு விருத்தசேதனம் மிக வேதனையான ஒன்றாய் மாறியது. எபிரேய மக்கள் விருத்தசேதனமில்லாத மக்களுக்கு தங்கள் பெண் பிள்ளைகளைக் கொடுக்கத் தயங்கினர் **(ஆதி.34:13–25)**

**5. பாலூட்டுதல் (NURSING) :-** பிறந்த குழந்தைகளுக்கு பாலூட்டி வளர்ப்பதை இஸ்ரவேலின் தாய்மார்கள் பாக்கியமாக கருதினர் **(ஆதி. 21:7; 1சாமு.1:22).** சில வேளைகளில் தாதிமார்கள் பிற பிள்ளைகளுக்கு பாலூட்டி வளர்ப்பது வழக்கமாயி ருந்தது **(ஆதி. 24:59; 2இரா. 11:2).** பொதுவாக இரண்டு அல்லது மூன்று ஆண்டு களுக்கு குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்த்தப்பின் அந்த ஆண்டுகளின் முடிவில் குழந்தையை பால்மறக்கப்பண்ணும் நாளில் பலியிட்டு விருந்துசெய்வது

அவர்கள் வழக்கமாய் இருந்தது. அந்த விருந்தில் அக்குடும்பத்து உறவினர்கள் யாவரும் மகிழ்வோடு கலந்து கொள்வர்.

## B. வாலிபமும் கல்வியும்
### (YOUTHHOOD AND EDUCATION)

மனித சமுதாய மேம்பாட்டிற்கு கல்வியானது அத்தியாவசியமானதென்பதால் அந்நாட்கள் முதல் இந்நாட்கள் வரை குழந்தைப் பருவத்திலேயே கல்வியானது பிள்ளைகளுக்கு போதிக்கப்பட்டுவருகின்றது. ஒரு குழந்தையின் முதல் ஆசான்தாய் என்றால் மிகையாகாது. இஸ்ரவேல் தேசத்திலும் குழந்தைகள் பேச ஆரம்பித்த உடனேயே தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பக்தி மார்க்கத்திற்குரிய போத னைகளையும் நல்லொழுக்கத்திற்குரிய உபதேசங்களையும் கற்பிக்கத் துவங்கிடுவர் (நீதி. 1:8; 6:20).

பெண் பிள்ளைகள் திருமணமாகி தன் கணவன் வீட்டிற்கு செல்லும் வரைக்கும் வீட்டிலே தன் தாய்க்கு உதவியாக இருந்து எல்லா வேலைகளையும் கற்றுக் கொள்ள வேண்டும். நூல் நூற்றல், நெய்தல் (யாத். 35:25), தண்ணீர் எடுத்தல் (ஆதி. 24:11; 1 சாமு.9:11), மந்தை மேய்த்தல் (ஆதி. 29:6; யாத். 2:16), தானியம் பொறுக்குதல் (ரூத். 2:21–23)போன்ற வேலைகள் பெண் பிள்ளைகளுக்கு கற்பிக்கப்பட்டன. ஆண் பிள்ளை களோ வளர்ந்து பெரியவர்களானதும் தங்கள் தகப்பனோடு இனைந்து தகப்பனின் வேலைகளைச் செய்ய பழக்குவிக்கப்பட்டனர் (1 சாமு.16:11; மத். 21:28; லூக். 15:29).

ஆண்பிள்ளைகளுக்கு மார்க்க நெறிமுறைகளையும் பொதுவான கல்வி யையும் கற்றுக்கொடுக்கும் பொறுப்பு தகப்பனைச் சார்ந்ததாகவே இருந்தது (யாத்.10:2; 12:26; உபா. 4:9; 6:7; நீதி.1:8).செல்வந்தர்களும் அரசபரம்பரையைச் சார்ந்த வர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு கல்வியைக் கற்பிக்க அதற்கென்று ஆசான்களை நியமித் திருந்தனர் (2இரா.10:1;எசா.9:23; 1நாளா.27:32). பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கும் பொறுப்பில் பிரம்பைக் கையாளுவதும் பெற்றோர், உபாத்தியாயர்களின் கடமையாயிருந்தது (நீதி. 13:24; 22:15).

வாய் வழி கல்வியே அந்நாட்களில் வழக்கத்திலிருந்தது. புத்தகமில்லா காலகட்டத்தில் வாய்வழிக் கல்வியின் மூலம் கற்றுக் கொடுக்கப்படும் கல்வியை பிள்ளைகள் மனதிலே பதித்துக்கொள்ளும் நிலை இருந்தது. கி.மு. 3000–க்கு முன்பதாகவே எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அது கல்விமான்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்பட்டு வந்தது. என்றாலும் வாசித்து எழுதும் கல்வி முறையை கானானியரின் நாகரீகத்தில் தான் காண முடிகிறது. சீனாய் மலையில் தேவனாகிய கர்த்தர் 10 கட்டளைகளை இரு கற்பலகைகளில் எழுதி மோசேக்குக் கொடுத்த போது எபிரேய மக்களும் அந்நாட்களிலே எழுதிப்படிக்கும் கல்வியைக் கற்றறிந்திருந்தனர் என்பது தெளிவாய் தெரிகிறது. வீட்டிற்கு வெளியேயும் பாடசாலைகளிலும் குழந்தைகளுக்கு கல்வி போதிக்கப்பட்டது.

சிறு பிள்ளைகள் வீதிகளிலும் மைதானங்களிலும் பொதுவாக விளையாடினர் (எரே.6:11;9:21; சகரி.8:5; மத்.11:16). ஆடிப்பாடி நடனமாடுவது அவர்களின் பொழுது போக்காயிருந்தது. மண்ணாலான பொம்மைகளையும் மற்ற விளையாட்டுப் பொருட்களையும் சிறுவர்கள் பயன்படுத்தியதை புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். கிணற்றடியிலோ, பட்டண வாசலிலோ அமர்ந்து பலவித மான கதைகளை பெற்றோர் சிறுபிள்ளைகளுக்கு கூறுவதுண்டு. சிறுவர்கள் தங்கள் பெற்றோருடன் தேவாலயத்திற்கு செல்லுவது வழக்கம். மார்க்க சம்பந்த மான விழாக்களிலும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அழைத்துச் சென்று மத உபதேசங்களை கேட்கச் செய்வர். அப்படிப்பட்ட விருந்துகளில் பங்கேற்கும் பிற நாட்டவரிடமிருந்து அந்நாட்டைக் குறித்து கேட்டு அறிந்து கொள்ளுவர். குறிப்பாக மத்தியகிழக்கு நாடுகளில் நெடுந்தூரம் பயணம் செய்யும் வழக்கம் மக்களுக்கு இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தந்தை செய்யும் தொழிலை மகனும் கற்றறிந்து தேர்ச்சியடைய வேண்டு மென்பது அன்றைய வழக்கம். ஆசிரியர்களை 'தகப்பன்' என்றழைக்க மாணாக்கர்கள் போதிக் கப்பட்டனர். ஆசிரியர்களும் மாணவர்களை 'மகனே' என்றழைத் தனர் (நியா.17:10; 18:19; 1இரா. 2:3,12;நீதி.2:1; 3:1;5:1; 6:1; 7:1). எழுத்தாளர்களும் ரபிக்களும் பின்நாட் களில் தங்கள் சீஷர்களைப் பழக்குவிப்பதற்காக பாடசாலை களை நிறுவினர். சில மாணவர்களுக்கு தனிப்பட்டவிதத்தில் கல்வி கற்பிக்கப்பட்டது. அப்போஸ்தலனா கிய பவுலும் கமாலியேலின் பாதபடியில் இவ்வாறாகவே கற்பிக்கப்பட்டான் (அப். 22:3).

யூதர்களில் 6 முதல் 16 வயதுக்குட்பட்ட ஆண்பிள்ளைகள் அனைவரும் கட்டாய மாக யூதமார்க்கத்தில் போதிக்கப்பட்டனர். கிரேக்க ரோம வழக்கத்தின்படி ஆண் பிள்ளைகளுக்கு 7 வயது வரையும் கல்வி கற்பிக்கும் பொறுப்பு அந்தப் பிள்ளை யின் தாயின் பொறுப்பாயிருந்தது. 7 வயதுக்குப் பின்பு 15 வயதாகும் வரை அந்த வீட்டிற்குட்பட்ட ஒரு அடிமையின் வசத்தில் அந்தப் பிள்ளை ஒப்புவிக்கப்படுவான். அந்த அடிமையானவன் அந்தப் பிள்ளையின் எல்லாவிதப் பழக்க வழக்கங் களையும் பள்ளிக்கு அழைத்துச்செல்லும் வேலையையும் பொறுப்பெடுத்துக் கொள்ளுவான். வசதி நிறைந்த பெற்றோர்கள் அதன்பிறகு மூன்று ஆண்டுகளுக்கு தங்கள் பிள்ளைகளுக்கு உடற்பயிற்சி, இசை, பல விதமான கலைகள், இலக்கியம், விஞ்ஞானம், வான சாஸ்திரம், தத்துவம் போன்ற வற்றை கற்பித்துக் கொடுப்பர். உடற்பயிற்சி நிலையங்களும் யூதரால் நிறுவப்பட்டிருந்தன (1 மக்கபேயர் 1:14,15; 2 மக்கபேயர் 4:9–15).

மட்டுமல்லாது அத்தேனே, அலெக்சாந்திரியா, தர்சு போன்ற பட்டணங்களில் கல்லூரிகளும் இருந்தன. இந்நாட்களில் உள்ள கல்லூரிகளைப்போலல்லாது அந்தக் கல்லூரிகள் சில வசதிவாய்ந்த இளைஞர்களுக்கு பொழுது போக்கிற் காகவும் சில குறிப்பிட்ட துறையில் அவர்களை தேர்ச்சியடையச் செய்வதற்கா கவும் இயங்கி வந்தன. பொதுவாக சந்தைவெளிகளில் மாணாக்கர்களை சேர்த்து

அவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் கல்வி முறையே அதிக பயனுள்ளதாயிருந்தது.

## B. திருமணமும் கலாச்சாரமும்
### (MARRIAGE AND CULTURE)

திருமணம் என்பது எல்லா கலாச்சார மக்களுக்கும் விசேஷித்த நிகழ்ச்சியாகவே இருக்கிறது. இஸ்ரவேல் தேசத்திலும் திருமணத்தை மக்கள் விசேஷப்படுத்தி அதை மகிழ்ச்சியின் நாட்களாகக் கொண்டாடினர். திருமணத்தின் போது திருமண வீட்டார் உறவினர்களை அழைத்து விருந்து கொடுப்பது வழக்கம். பழைய ஏற்பாட்டில் மட்டுமின்றி புதிய ஏற்பாட்டிலும் அவ்வழக்கம் தொடர்ந்தது. உதாரணமாக கானாவூரில் நடந்த திருமண வைபவத்தைக் கூறலாம்.

**1. திருமண வயது (MARRIAGE AGE) :-** திருமணம் செய்ய ஏற்ற வயதை வேதம் குறிப்பிட்டுக் கூறவில்லையென்றாலும் சில சம்பவங்களிலிருந்து திருமணத்திற்கான வயதினை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. யூதரபீமார்களின் கூற்றுப்படி வாலிபர்கள் மிக இளவயதிலேயே திருமணம் செய்துகொள்ள அந்நாட்டின் கலாச்சாரம் வலியுறுத்தியது. பெண்கள் 12 வயதிற்குட்பட்ட சிறுமியராய் இருக்கும் பொழுதே அவர்களது பெற்றோர் அவர்களுக்கு மணமகனைத் தேர்வுசெய்து நிச்சயம் செய்துவிடுவர். நிச்சயம் முடிந்து சில காலம் காத்திருந்து அந்த மணப்பெண் ஏற்ற வயதை அடைந்தவுடன் திருமணம் செய்து வைப்பர்.

ஆண்களின் திருமண வயதை குறிப்பாக வேதத்தில் சொல்லப்படவில்லை என்றாலும் ஈசாக்கு, யாக்கோபு போன்ற ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் இளவயதில் திருமணம் செய்து கொண்டதற்கு வேதத்தில் ஆதாரங்கள் உண்டு. யோயாக்கீம் தனது 16–வது வயதிலும் (2இரா. 23:26; 24:8) ஆமோன், யோசியா போன்றோர் தங்களது 14–வது வயதிலும் திருமணம் செய்துள்ளனர் (2 இரா. 21:19; 22:1; 23:31).

சமுதாய ஒழுக்க சம்பந்தமான காரியங்கள் நிமித்தம் ரபீமார்கள் ஆண்களின் திருமண வயதை 13 என நியமித்திருந்தனர். என்றாலும் அந்த வாலிபன் தன் குடும்பத்தை எடுத்து நடத்தி தன் மனைவியை போஷிக்கும் திராணியுள்ளவனாகும் வரை வேலை செய்து சம்பாதிக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவின் தாயாகிய மரியாள் யோசேப்புக்கு மனைவியாகும்போது ஏறத்தாழ பன்னிரெண்டு அல்லது பதினான்கு வயதுள்ளவளாய் இருந்திருக்கவேண்டும் என்று தள்ளுபடி ஆகமத்தின் அடிப்படையில் சிலர் கூறுகின்றனர்.

வம்ச வழியைக் காப்பதற்காகவே திருமணம் என்ற நியமனம் முன்னோர்களால் அனுசரிக்கப்பட்டது (ஆதி. 21:21; 24:3,4; 34:1–23; 38:6). மணப்பெண்ணின் தந்தையும் மணமகனின் தந்தையும் தங்கள் பிள்ளைகளுக்கு திருமணத்தை நடத்தி வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தனர். சில வேளைகளில் பெண்ணின்

சகோதரர்களும் தங்கள் சகோதரியின் திருமணத்தைக் குறித்து சம்மதம் தெரிவிக்கவேண்டியதாய் இருந்தது (ஆதி. 34:6,7, 13–17). பெண்ணின் வாய்பிறப்பும் கேட்டு அறிந்துகொள்ளப்பட்டது (ஆதி. 24:58). ஒரு சில வாலிபர்கள் பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக தங்கள் சுய விருப்பத்தின்படி திருமணம் செய்து கொண்டனர் (ஆதி. 26:35).

இளம் வாலிபர்களும் இளம் பெண்களும் ஒருவரையொருவர் விரும்பியும் திருமணம் செய்துகொள்ளும் முறையும் நிலவி வந்தது. மந்தை மேய்க்கும் தொழிலை வாலிபர் கன்னியர் இருபாலரும் செய்துவந்தனர். எனவே மந்தை மேய்க்கும் இடங்களிலும் மந்தைகளுக்கு தண்ணீர் காட்டும் கிணற்று அருகேயும் அவர்கள் ஒருவரையொருவர் சந்திப்பதற்கு வாய்ப்புகள் உண்டானது (ஆதி. 24:13; 29:6).

இளம் பெண்கள் வயலில் கதிர்களைப் பொறுக்குவதற்கும் தண்ணீர் எடுப்பதற்கும் உறவினர்கள் வீட்டிற்கு செல்வதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தனர் (ரூத் 2:2; ஆதி. 34:1,2; லூக். 1:39). தங்கள் வீட்டைவிட்டு இவ்விதமாய் வெளியே செல்லும் பெண்கள் எதிர்பாலரோடு பழகும் சுயாதீனமும் அவர்களுக்கு இருந்தன. இந்த சுயாதீனம் சில பெண்களின் வாழ்விற்கு தீங்காகவும் மாறியிருக்கிறது (ஆதி. 34:1,2).என்றாலும் நியாயப்பிரமாணத்தின் சட்டமானது அப்படிப்பட்ட பெண்களுக்குரிய திருமண முறைகளைக்குறித்து கூறியிருக்கிறது (யாத். 22:16; உபா. 22:28,29).

**2. நிச்சயம் (BETROTHAL) :-** ஒரு பெண்ணை ஒரு வாலிபனுக்கு திருமணத்திற்கென நிச்சயம் செய்யும் வழக்கம் விசேஷமாய் அந்நாட்களில் நிலவிவந்தது. நிச்சயம் என்பது திருமணத்தைப் போன்றே மக்களால் கனத்திற்குரியதாய் அங்கீகரிக்கப்பட்டு வந்தது. நிச்சயம் முடிக்கப்பட்ட பெண்,மனைவியெனஅழைக்கப்பட்டாள் (ஆதி. 29:20,21; உபா. 22:23,24; மத். 1:18–20). அவ்வண்ணமே நிச்சயிக்கப்பட்ட ஆண்,புருஷன் என்று அழைக்கப்பட்டான் (யோவே.1:8).நிச்சயிக்கப்பட்ட பெண்ணைத் தள்ளிவிடுபவன் தள்ளுதற் சீட்டைக் கொடுத்து அதின்பின்பே அவளை விவாகரத்து செய்ய இயலும். அந்தளவுக்கு நிச்சயம் என்பது திருமணத்தைப் போலவே உறுதியுடைதாயிருந்தது.

**3.பரிசம் (DOWRY) :–**திருமணம் நிச்சயித்தபின் மணமகனோ மணமகனின் பெற்றோரோ மணமகளுக்கு கொடுக்கும் வெகுமானமே பரிசம் அல்லது வெகுமதி என அழைக்கப்பட்டது (ஆதி. 34:12; யாத். 22:17; 1சாமு.18:25). மணமகளை தங்கள் வீட்டிற்கு அழைத்துக்கொள்வதால் அதற்கு ஈடுகட்டுவது போல் இந்த 'பரிசம்' (Mohar or Bride-price) கருதப்பட்டது. 50 சேக்கல் வெள்ளியானது மிகவும் குறைந்த அளவு பரிசமாகும். ஒரு அடிமையை வாங்குவதற்கு கொடுக்கப்படும் பணத்தைவிட இரண்டு மடங்கு அதிகமாக இந்த பணம் கொடுக்கப்படவேண்டும்.பணமாகவோ அல்லது வேறு விதத்திலோ இந்தத் தொகை செலுத்தப்படவேண்டும்.

யாக்கோபு ராகேலுக்கு கொடுக்கவேண்டிய பரிசத்திற்காக ஏழு ஆண்டுகள் தன் மாமனுக்கு வேலை செய்தான் (ஆதி. 29:18). ஒத்னியேல் ஒரு பட்டணத்தை ஜெயித்தான் (யோசு. 15:16–17). தாவீது மீகாளுக்காக பெலிஸ்தரின் நூறு நுனித் தோல்களை எண்ணிக்கொடுத்தான் (1சாமு. 18:25). மத்தியக்கிழக்கு நாடுகளில் பெண்ணின் தகப்பன் மணமகளுக்கு பரிசம் கொடுப்பது வழக்கம். அவளது சுதந்திரத்தின் பங்கையோ அல்லது நிலத்தையோ பரிசமாகக் கொடுப்பர். அந்தப் பணம், நிலம் மணமகனுக்கு உரியதாகாமல் மணமகளுக்கு மாத்திரமே உரியது. புருஷன் மரித்துவிட்டாலோ அல்லது அந்தப் பெண்ணை விவாகரத்து செய்து விட்டாலோ இந்தப் பரிசமானது அந்த பெண்ணையே சாரும். ஒரு வேளை அவள் மரித்துவிட்டால் அவளது பிள்ளைகள் அதனை அனுபவிக்க உரிமை உண்டு. ஆனால் இஸ்ரவேல் தேசத்தில் இப்படிப்பட்ட வழக்கங்கள் நிலவியதற்கான அதிகமான சான்றுகள் கிடைக்கவில்லை.

திருமண பரிசாக தகப்பன் தன் மகளுக்கு பொருளுதவிகள் செய்வது வழக்கமாக இருந்தது. அக்சாளின் தகப்பன் அவளுக்கு நீரூற்றுக்களை பரிசமாகக் கொடுத் தான் (யோசு.15:19; 1:15). பார்வோன் தன் குமாரத்திக்கு கேசேர் பட்டணத்தை பரிசமாகக் கொடுத்தான் (1இரா. 9:16). இன்னும் பல இடங்களில் பரிசம் கொடுக் கப்பட்டதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம் (மீகா 1:16; எசே. 16:33) மட்டுமல்லாது பரிசுத் தொகையைத் தவிர மணமகன் ஆபரணங்கள், வஸ்திரங்கள் போன்ற வற்றை மணமகளுக்கு வெகுமானமாகவும் கொடுப்பதுண்டு. மணமகளுக்கு பரிசுத் தொகையோடுகூட வேலைக்காரிகளும் அன்பளிப்பாக கொடுக்கப் பட்டனர் (ஆதி. 16:1; 24:61; 29:24).

**4.திருமண வைபவம் (WEDDING CEREMONY) :-** யூத முறைப்படி திருமண வைபவமானது மிக முக்கியமான நிகழ்ச்சியாக கருதப்பட்டது. நிச்சயத்திற்கும் திருமணத்திற்கும் இடையே குறைந்த பட்சம் 12 மாதங்கள் இடைவெளி இருக்க வேண்டுமென ரபிமார்கள் நியமித்திருந்தனர். திருமண தினத்தன்று மணமகன் மணமகளின் இல்லத்திற்கு சென்று மணமகளை அழைத்துக்கொண்டு தன் பெற்றோருடைய இல்லத்திற்கு வருவது வழக்கம். அன்று மாலை மணமகனும் அவனது தோழர்களும் ஊர்வலமாக மணமகளின் வீட்டிற்கோ திருமணம் நியமிக் கப்பட்ட இடத்திற்கோ செல்வர். மணமகனோடு செல்பவர்கள் மணவாளனின் தோழர்கள் என அழைக்கப்பட்டனர் (நியா. 14:11; மத். 9:15; யோவா. 3:29). மணமக ளோடு வரும் பெண்கள் மணமகளின் தோழிகள் என அழைக்கப்பட்டனர் (சங். 45:14).

விசேஷித்த சித்திரத் தையலாடை (சங். 45:13), ஆபரணங்கள் (ஏசா. 61:10), முக்காடு(ஆதி.24:65)போன்றவற்றை அணிந்தவளாய் மணமகள் அழைத்துக் கொண்டுவரப்படுவாள். மணமகன் திருமணத்திற்கென சிறந்த உடைகளைத் தரிப்பது வழக்கம். மணமகனும் ஆபரணங்களை அணிவதுண்டு. திருமண விருந்தானது மணப்பெண்ணின் வீட்டில் நடைபெறும் (ஆதி. 29:22). ஆனால்

பொதுவாக மணமகன் தன் தகப்பன் வீட்டிற்கு மணமகளை அழைத்துச்சென்று அங்கு விருந்து கொடுப்பது வழக்கம் (சங். 45:14; மத். 22:1–14). இதற்கு ஒப்பாகவே உலகத்தின் முடிவில் கிறிஸ்துவும் பரிசுத்தவான்களும் பரலோகத்தில் சந்தித்துக்கொள்ளும் நிகழ்ச்சியை "ஆட்டுக்குட்டியானவருடைய கல்யாண விருந்து" என வேதம் கூறுகிறது (வெளி.19:9).

திருமண ஊர்வலமானது ஆடல்பாடல் இசையோடு விமரிசையாக நடைபெறும் (எரே.7:34). திருமண ஊர்வலம் பொதுவாக இரவுவேளைகளில் நடைபெறுவதால் ஊர்வலத்தில் செல்பவர்கள் கைகளில் விளக்குகளை ஏந்திச்செல்வர் (மத்.22:1–13; 25:6,7). திருமண அழைப்பு உறவினர்களுக்கும் முக்கியமான நண்பர்களுக்கும் கொடுக்கப்படும். ஒருவரின் திருமண அழைப்பை ஏற்றுக்கொள்ளாமல் போனால் அது திருமண வீட்டாருக்கு அவமானமாகக் கருதப்பட்டது (மத். 22:7). ஊர்வலத்தின் முடிவில் தம்பதிகள் மணமகன் வீட்டை சென்றடைந்தப்பின்பு நண்பர்களும் பெற்றோர்களும் மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிப்பர் (ஆதி. 24:6; ரூத் 4:11).

மணமக்களுக்கான விசேஷித்த மணவறையானது ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் (சங். 19:5; யோவே. 2:16). யூத திருமணங்களில் பாரம்பரியத்தைக் காக்கும்படி ஒரு சிறிய கூடாரம் போன்ற ஒரு அமைப்பினை உருவாக்கி (Wedding Tent) திருமணம் நடைபெறும்பொழுது மணமக்களை அதிலே அமரவைப்பர். மணமகனின் பெற்றோரோ அல்லது மணவாளனின் தோழர்களோ மணமக்களை மணவறைக்கு அழைத்துக் கொண்டு செல்வர் (மத். 9:15). பக்தியுள்ள தம்பதியர் தங்கள் குடும்பத்தை ஆசீர்வதிக்கும்படி யெகோவா தேவனிடம் விண்ணப்பம் செய்து தங்கள் குடும்ப வாழ்க்கையைத் துவங்குவர்.

மணமகள் மணமகனிடம் அழைத்துவரப்படும் வரை முக்காடிட்டுக் கொள்ளுவது வழக்கம். இந்த வழக்கம் புழக்கத்திலிருந்தபடியால் யாக்கோபு தன் திருமண நாளில் தான் மணக்க விரும்பிய ராகேலை மணக்கமுடியாமல் போனது. காரணம் அவள் தகப்பன் லேயாளை முக்காடிட்டு கொண்டு வந்து யாக்கோபினிடத்தில் விட்டான் (ஆதி. 29:25). யூத பாரம்பரியத்தின்படி லேயாளுக்கு செய்யவேண்டிய கடமையை ஏழுநாட்கள் செய்துமுடித்தபின்பே ராகேலை அவனுக்கு மனைவியாகக் கொடுக்க அவள் தகப்பன் சம்மதித்தான் (ஆதி. 29:27). திருமண கொண்டாட்ட மானது ஏழு நாட்களுக்கு நடைபெறும். சில இடங்களில் பதினான்கு நாட்கள் வரையும் திருமண விழாவைக் கொண்டாடுவர். மணமகனும் மணமகளும் அந்நாட்களில் ராஜாவைப்போலும் ராஜாத்தியைப் போலும் கருதப்படுவர்.

திருமண வீடுகளில் கீதவாத்தியங்கள் பிரதானமாக பயன்படுத்தப்பட்டன (சங். 45:15; 78:63). நேரப்போக்கிற்காக விடுகதைகளைக் கூறி போட்டிகள் நடத்தி பரிசளிக்கும் சம்பவங்களும் வழக்கத்தில் இருந்தன. பின் நாட்களில் பெண்ணின் தந்தை ஒரு திருமண ஒப்பந்தத்தை மணமகனுடைய வீட்டாரோடு எழுத்துவடிவில் எழுதி வாங்கிக்கொள்ளும் வழக்கம் உண்டாயிற்று. மணமகளிடத்தில் கன்னிமை

காணப்படவில்லையெனில் அவளை விவாகரத்து செய்து தள்ளிவிடுவதற்கு நியாயப்பிரமாணத்தில் சட்டங்கள் இருந்தன (உபா. 22:13–21).

மணமகனின் வம்சவழியைக் காப்பதே திருமணத்தின் பிரதான நோக்கமாகும். என்றாலும் மனைவியின் உண்மையற்ற தன்மை, மலட்டுத்தன்மை, புருஷனின் சடுதியான மரணம் போன்ற சில காரணங்களால் வம்சவழியைக் காப்பதில் குழப்பங்கள் உண்டானாலும் அதை தீர்வு செய்வதற்கு பிரமாணத்தில் கட்டளைகள் கொடுக்கப்பட்டிருந்தது. மணமகளிடம் கன்னிமை காணப்படவில்லையென்று நிரூபிக்கப்பட்டால் மணமகன் அவளை விவாகரத்து செய்துவிடவேண்டும் (உபா. 22:13–21). மனைவியானவள் மலட்டுத் தன்மையுடையவளாயிருந்தால் அவளும் அவள் கணவனும் கர்த்தரை நோக்கி ஊக்கமான ஜெபத்தை ஏறெடுப்பர் (1சாமு. 1:11; லூக். 1:7,13). பல ஆண்டுகளாய் குழந்தையற்ற ஒரு மனைவி தன் அடிமைப்பெண்ணை தன் புருஷனுக்கு மனைவியாக கொடுத்து அவள் மூலமாய் தன் புருஷனின் வம்சவழியைக் காக்கவேண்டும்.

இளவயதில் ஒரு புருஷன் சந்ததியற்றவனாய் இறந்துவிடக்கூடாது என்பதற்காக அவன் திருமணம் முடித்து ஒரு ஆண்டு வரை யுத்தத்திற்கு செல்லக்கூடாது என்பது பிரமாணத்தின் சட்டமாகும் (உபா. 24:5). வேறுகாரணங்களால் இள வயதில் ஒரு புருஷன் மரித்துப்போனால் அவனது சகோதரர் அந்த இளம் விதவையை திருமணம் செய்து தங்கள் சகோதரனுக்கு வம்சவழியை உண்டாக்க வேண்டும். ஒரு வேளை மரித்த அந்த புருஷனுக்கு சகோதரர்கள் இல்லாதிருப்பின் அவனது நெருங்கிய உறவினர்களில் ஒருவர் அந்தப் பெண்ணை திருமணம் செய்து மரித்த சகோதரனுடைய பெயர் அற்றுப்போகாதபடி அவனுக்கு வம்ச வழியை உண்டாக்க வேண்டும் (உபா.25:6;ரூத்4:4,10). ஒரு மனிதனின் சந்ததியைக் காப்பது எத்தனை முக்கியமான காரியமாய் கருதப்பட்டது என்பதை இதின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அந்நாட்களில் ஒருவர் பல திருமணங்கள் செய்துகொள்வது மத்தியகிழக்கு நாடுகளில் வழக்கத்தில் இருந்தது. பழைய ஏற்பாட்டு மக்களும் பல திரு மணங் களை செய்திருந்ததாக வேதத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் புதிய ஏற்பாட்டிலோ இம்முறை தடை செய்யப்பட்டு ஒருவனுக்கு ஒருத்தி என்ற புதிய அமைப்பை இயேசு கிறிஸ்து தம்மை பின்பற்றிய மக்களுக்கு வலியுறுத்திக் கூறினார். இதை இயேசுவின் சீடர்களும் அவர்களுக்குப் பின்வந்தவர்களும் கடைபிடித்தனர்.

## D. முதுமையும் மரணமும்
## (OLD AGE AND DEATH)

முதுமை ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். இளவயதில் மரித்தவர்களைத் தவிர மற்ற அனைவருமே முதுமைக்குள் கடந்துச் செல்லவேண்டுமென்பது தேவனுடைய திட்டம். அந்நாட்களில் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு அருகிலேயே வீடுகளைக் கட்டி அவர்களை தங்கள்

பொறுப்பில் வைத்து கவனித்துக்கொள்வது வழக்கமாகும். பிள்ளைகள் இல்லாத பெற்றோர்கள் தங்களுக்கென பிள்ளைகளை தத்தெடுத்துக்கொள்ளுவர். பெற்றோருக்கு செய்யவேண்டிய சகல கடமைகளையும் அந்தப் பிள்ளைகள் வளர்ப்பு பெற்றோருக்கு செய்யவேண்டும். ஆனால் பிள்ளைகளை எடுத்து வளர்க்கும் முறையைக்குறித்து வேதத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

விதவைகளும் தகப்பனற்ற பிள்ளைகளும் சமுதாயத்தால் புறக்கணிக்கப் பட்டவர்களாகவே கருதப்பட்டனர். எனவே தான் ஆண்டவரும் திக்கற்ற பிள்ளை களும், விதவைகளும் படும் உபத்திரவத்தில் அவர்களை விசாரிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார் (யாக். 1:27). மட்டுமல்ல நியாயவிசாரணையில் அவர்களுக்கு நீதி வழங்கவேண்டுமென்றும் உதாரத்துவமாய் உதவிசெய்ய வேண்டுமென்றும் மூன்றாம் ஆண்டு விளைச்சலில் அவர்களுக்கு ஒரு சிறிய பங்கை அளிக்கவேண்டு மென்றும் சிந்திய தானியங்களை பொறுக்கிக்கொள்ள வயல்களில் அனுமதி கொடுக்க வேண்டுமென்றும் பிரமாணத்தில் கூறியுள்ளார் (உபா. 24:19; 26:12).

**1.மரணம் (DEATH) :-** பண்டைய நாட்களில் ஒரு குடும்பத்தில் மரணம் சம்பவித் ததும் யூதர்கள் தங்கள் வழக்கத்தின்படி சத்தத்தை உயர்த்தி ஓலமிட்டு புலம்பி அழுவர். இந்த புலம்பலின் சத்தத்தைக் கேட்கும் அயலகத்தார் அவ்வீட்டில் மரணம் சம்பவித்திருக்கிறது என்பதை அறிந்து கொள்வர். அத்தோடு அக்குடும்பத்தைச் சார்ந்தவர்களும் உறவினர்களும் தங்கள் வஸ்திரத்தைக் கிழித்து தலைமயிரைப் பிய்த்துக் கொள்வது வழக்கம். மேலும் மரித்தோரின்உறவினர்கள் மார்பில் அடித்து உரத்த சத்தத்தோடு புலம்பி அழுது கொண்டே அவ்வீட்டிற்கு வருவர்.நித்தி யத்தைக் குறித்து நம்பிக்கையுடையவர்களாய் இருந்தாலும் மரணத்தினிமித்தம் உண்டான பிரிவையும் துயரத்தையும் வெளிப்படுத்தவே இப்படிப் புலம்புவர்.

இஸ்ரவேலர்கள் புலம்பி அழுததற்கு வேதத்திலும் ஆதாரங்கள் உண்டு (ஆதி.1 2:30 ; மாற்.5:38 ; யோவா. 11:31 ; அப். 9:39). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் லாசரு மரித்த பிறகு அவனது கல்லறையின் அருகே நின்று கொண்டு கண்ணீர் விட்டதாக வேதம் கூறுகிறது. புலம்பல் பாடுபவர்கள் பொது வாக பயன்படுத்தும் வார்த்தைகளை வேதத்தில் நாம் காண இயலும் (எரே.22:18). மரித்தவரின் கணவர், மனைவி அல்லது பிள்ளைகள் அந்த சரீரத்தின் மேல் விழுந்து புலம்பி அழுவர். மட்டுமல்ல, கடைசியாக தங்களோடு ஏதாவது பேசும்படி மரித்தோரைப் பார்த்து அவர்கள் கேட்டு அழும் காட்சி உள்ளத்தை உருக்குவதாக இருக்கும். புலம்பல் பாடுவதற்கென்றே பழக்கப்பட்ட பெண்கள் துக்க வீட்டிற்கு அழைக்கப்படுவர். அவர்கள் மரித்தவரைக் குறித்தும் அவரது நற்கிரியைகளைக் குறித்தும் குடும்ப உறவுகளைக் குறித்தும் கேட்போரின் கண்களின் நீர் சொரியும்படி பாடுவர். அண்டை கிராமங்களிலிருந்து புலம்பல் பாடுபவர்கள் வரும் போது "நம்பிக்கை அற்றுப் போயிற்று" என்ற ஏகோபித்த சத்தத்தோடு அழுது கொண்டே வருவர் (யோபு 8:13 ; எசே. 37:11).

விவாகமாகாத வாலிபர் மரிக்கும் போது அந்த வீட்டில் புலம்பலும் துக்கமும் மிக அதிகமாய் இருக்கும். மட்டுமல்ல, அடக்க ஆராதனைக்கு முன்பாக திருமண சடங்குகள் போல சில சடங்குகளைச் செய்து அதன்பிறகே அடக்கம் செய்வர். யெப்தாவின் மகள் தன் கன்னிமையைக் குறித்து இதினிமித்தமே மலைகளின் மேல் துக்கம் கொண்டாடினாள் (நியா.11:37). உஷ்ணம் நிறைந்த பாலஸ்தீன தேசத்தில் மரித்தோரை நெடுநேரம் வைத்திராமல் உடனடியாக அல்லது தாமதித்தால் மறுநாளில் அடக்கம் செய்து விடுவர். மரண ஊர்வலத்தின் போது மிகுந்த மரியாதையோடு அந்த சரீரத்தை எடுத்துச் சென்று அடக்கம் செய்வர். பகையி னிமித்தம் அல்லது அடிமைத்தனத்தினிமித்தம் எவரேனும் கொல்லப்படு வாரெனில் மரித்தோரின் பிள்ளைகள் அந்தப் பகையை மனதில் வைத்து கொலை செய்தவனின் சந்ததியை வேரறுத்துப் போட சபதம் கொள்வர்.

யூதர்களின் கல்லறை பூமியானது நித்திய வீடு என்றும் ஜீவனுள்ளோரின் வீடு என்றும் அழைக்கப்பட்டது (பிர.12:5). குடும்பத்தின் ஒரு நபர் மரிக்கும்போது அந்த அடக்க ஆராதனை புனிதமாகக் கருதப்பட்டது. கோரமான முறையிலும் தண்டனைப் பெற்று மரிக்கும் எந்த மனிதனின் சடலத்தையும் அதற்குரிய முறையோடுகூட அடக்கம்பண்ணவேண்டும் என்பது இஸ்ரவேலரின் வழக்கமாகும். அடக்கம் பண்ணப்படாமல் எந்த மனித சரீரத்தையும் அவர்கள் விட்டுவிடுவதில்லை (உபா. 21:23; எசே. 39:14; 1 இரா. 14:11; 2இரா. 9:10; எரே. 16:4). குற்றவாளிகளின் சரீரமும் அடையாளம் காணப்படாதவர்களின் சரீரமும் அடக்கம்பண்ணாமல் சுட்டெரிக்கப்பட்டது (லேவி. 20:16; யோசு. 7:25; ஆமோ. 6:10; 1 சாமு. 31:12).

**2.அடக்க ஆயத்தம் (PREPRATION OF BODY)** :- ஒரு மனிதன் மரித்தவுடன் அவனது பிள்ளைகளும் குடும்பத்தாரும் மரித்த மனிதனை முத்தம் செய்து அவனது கண்களை மூடிவிடுவர் (ஆதி. 46:4; 50:1). அதன்பிறகு அந்த மனிதன் வழக்கமாக அணியும் வஸ்திரத்தைஅவனுக்கு உடுத்துவிப்பர். மறுமையின் வாழ்வில் அந்த மனிதனை அதே வஸ்திரத்தில் அடையாளம் கண்டுகொள்ளும் படியாக இந்த வழக்கத்தை பின்பற்றினர் (1சாமு. 28:14). புதிய ஏற்பாட்டு காலத் தில் மரித்த சரீரத்தை குளிப்பாட்டி (அப்.9:37) வாசனை திரவியங்கள் பூசி (மாற். 16:1; லூக். 24:1; யோவா. 12:7; 19:39) விலையேறப்பெற்ற பரிமள தைலம் பூசப்பட்ட மெல்லிய வஸ்திரத்தில் சுற்றி (மத். 27:59; யோவா. 19:39,40) தலைமாட்டில் ஒரு வஸ்திரத்தை சுற்றி வைப்பர் (யோவா. 11:44; 20:7) கைகளும் கால்களும் சிறிய துணியினால் சேர்த்து கட்டப்பட்டிருக்கும் (யோவா. 11:44).

**3.சடலத்தை பதப்படுத்துதல் (EMBALMING)** :- சரீரத்தை பதப்படுத்தும் வழக்கம் இஸ்ரவேல் தேசத்தில் பயன்படுத்தப்படவில்லை ஆனால் எகிப்திலே மரித்துப் போன யாக்கோபு, யோசேப்பு இவர்களின் சரீரமானது எகிப்திய வழக்கத்தின்படி பதப்படுத்தப்பட்டது (ஆதி. 50:1–3,26). சரீரத்தை பதப்படுத்தும் முன்பதாக சரீரத் தின் உள்ளே இருக்கும் முக்கியமான உறுப்புக்களை அகற்றிவிட்டு,சரீரத்தை

மூன்று வாரங்கள் உப்பில் புதைத்துவைப்பர். அதன்பின்பு வாசனை திரவியங்கள், நளத தைலம் போன்றவற்றால் தோய்க்கப் பட்ட வஸ்திரத்தில் சரீரத்தை சுற்றி வைப்பர். இவ்வாறாக பதப்படுத்தப்பட்ட சரீரத்திற்காக பெரும் புலம்பலாக மக்கள் புலம்பி அழுவர். பதப்படுத்தும் பணியும் புலம்பலும், துக்கம்கொண்டாடுதலும் எழுபது நாட்கள் வரையும் நடக்கும்.

**4.அடக்கம் (BURIAL) :** மரித்த சரீரத்தை பாடையிலோ அல்லது சவப்பெட்டியிலோ வைத்து படுக்கையறை அல்லது மேல்வீட்டறையில் கிடத்திவைப்பர் (அப். 9:37). பொதுவாக மரித்த அன்றே அடக்கமும் நடைபெறும். பாடையை அல்லது சவப்பெட்டியை மரித்தவரின் சிநேகிதர்கள் சுமந்து செல்லுவர். உறவினர்களும் குடும்பத்தாரும் புலம்பி அழுதபடி சவப்பெட்டியின் பின்னாகச் செல்லுவர் (2சாமு. 3:31; லூக். 7:12). சத்தமாகப் புலம்பி அழும்படி புலம்பற்காரர்களும் குழல் ஊதுபவர்களும் அழைக்கப்படுவர்.

அடக்கம் பண்ணுவதற்கென்று விசேஷித்த ஆசரிப்புகள் எதுவும் கைக்கொள்ளப் படவில்லை. துக்கத்தில் இருக்கும் குடும்பத்தார் மாலை வரை புசியாமல் இருந்து புலம்பி அழுவர். சூரியன் அஸ்தமித்தபின் உறவினர்கள் ஆகாரத்தை சமைத்து அவர்களுக்கென கொண்டுவருவர். ஏனெனில் மரித்த வீட்டில் உள்ள ஆகாரம் தீட்டுப்பட்டதென கருதப்பட்டது. (எண். 19:14; ஓசி. 9:4). உறவினர்கள் துக்கவீட் டாரை கட்டாயப்படுத்தி போஜனம் பண்ண வைப்பர். தற்கால இஸ்ரவேலர் மரித்த நாளை ஆண்டுதோறும் நினைவுக்கூறும்படி விசேஷ கூடுகையை வைப்பர்.

**5.கல்லறை (TOMB) :** மரித்தவர்களைப் பொதுவாக மலைகளிலும் குன்றுகளிலும் வெட்டப்பட்ட கல்லறைகளிலும் வைப்பது வழக்கம். பாலஸ்தீன தேசத்திலும் மத்தியகிழக்கு நாடுகளிலும் மலைகளில் தோண்டப்பட்ட ஏராளமான கல்லறைகள் இன்றுவரை இருக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்திற்கென்று தனிப்பட்ட கல்லறையும் கல்லறைத் தோட்டமும் இருந்தது. "பிதாக்களண்டை சேர்க்கப் படுதல்" என்ற வார்த்தை குடும்ப கல்லறைத்தோட்டத்தில் முற்பிதாக்களோடு அடக்கம் பண்ணப்படுவதையே குறிக்கிறது (ஆதி. 49:29; உபா. 31:16; நியா. 2:10; 1இரா. 11:21). சில வேளைகளில் குடும்பக்கல்லறை நிறைந்துவிடுமெனில் அங்கிருக்கும் எலும்புகளை எடுத்து தனியே பெட்டிகளில் போட்டுவைத்து கல்லறையை காலியாக்கி அதன்பிறகு அந்தக் கல்லறை பயன்படுத்தப்பட்டது. திருடர்களும் மிருகங்களும் கல்லறையினுள் நுழைந்து விடாதிருக்க கல்லறையின் வாசலை பெரிய கல்லை வைத்து மூடுவது வழக்கம்.

**6.துக்கம் (GRIEF) :** மரித்தவர்களைக் குறித்து தங்கள் துக்கத்தை மக்கள் பல விதங்களில் வெளிப்படுத்தினர். தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டும் (ஆதி. 37:29; 2சாமு. 1:11), துக்க வஸ்திரங்களை உடுத்தியும் தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தினர் (ஆதி. 38:14; 2சாமு. 14:2). இடுப்பிலே சணல் வஸ்திரம் தரித்து தலையை மூடிக்கொண்டு துக்கத்தோடு நடந்து செல்வதன் மூலம் தங்கள்

துக்க நாட்களை அனுசரித்தனர் (2சாமு. 15:30; ஏசா. 20:2; எசே. 24:17; மீகா 1:8). சில வேளைகளில் துக்கம் அனுசரிப்பவர் தங்கள் தலைமயிரை பாதியாகவோ அல்லது முழுவதுமாகவோ சிரைத்துக் கொள்ளுவர் (யோபு 1:20; ஏசா. 22:12; ஆமோ. 8:10; மீகா 1:16).

ஆண்கள் தங்களது தாடி மயிரை பிடுங்கியோ, சிரைத்துக்கொண்டோ, முகத்தை மூடியபடியோ, துக்கத்தை வெளிப்படுத்துவதுண்டு (2சாமு. 13:19; யோபு 2:12; ஏசா. 61;3; எரே. 6:23; எசே. 27:30). துக்க வஸ்திரம் தரித்து சாம்பலை மேலே வாரிப்போட்டுக்கொள்வது பொதுவாக பழக்கத்திலிருந்தது. அஞ்ஞான மார்க்கத்தாரைப் போல இரத்தம் வடியும்படி உடலைக் கீறிக்கொள்ளும் துக்க அனுசரிப்பு இஸ்ரவேலில் தடைசெய்யப்பட்ட ஒன்றாகும் (லேவி. 19:28).

துக்கத்தை வெளிப்படுத்த உபவாசித்துப் புலம்புவதையும் இஸ்ரவேலர் கடைப் பிடித்தனர். தகப்பன் தாய் இவர்களில் ஒருவர் மரித்துவிட்டால் ஒரு மாதம் வரையும் பிள்ளைகள் உபவாசமிருப்பர் (உபா. 21:13). அதைவிட அதிகமாகவோ குறைவாகவோ உபவாசமிருப்பவர்களும் உண்டு. யாக்கோபுக்காக எழுபது நாட்கள் உபவாசம் இருந்து துக்கம்கொண்டாடினர் (ஆதி. 50:3). மோசேக்காக முப்பது நாட்கள் அழுது துக்கம்கொண்டாடினர் (உபா.34:8). சவுலுக்காக ஏழு நாட்கள் அழுது புலம்பினர் (1சாமு.31:13; எண்.31:19). புதிய ஏற்பாட்டில் துக்கம் கொண்டாடுகையில் தாரை ஊதி மிகுந்த சத்தமிடுதல்கூடாதென இயேசு கிறிஸ்து தன்னுடைய போதனைகளில் குறிப்பிட்டுள்ளார் (மத். 6:16; 9:23; மாற். 5:38). உயிர்த்தெழுதலில் நம்பிக்கையுடைய கிறிஸ்தவ விசுவாசிகள் மற்ற அஞ்ஞானிகளைப்போல புலம்பி துக்கிக்கக்கூடாதென பவுலும் தன்னுடைய நிருபங்களில் குறிப்பிட்டுள்ளார் (1தெச. 4:13).

◆❖◆❖◆❖◆

8

# சமய வாழ்வு
# (RELIGIOUS LIFE)

பூர்வ காலந்தொட்டே மக்கள் தெய்வ நம்பிக்கையுடையவர்களாய் வாழ்ந்து வந்தனர். ஆதாமின் சந்ததியார் பெருகத் துவங்கினபின் பல்வேறு பிரிவுகளாய் அவர்கள் பிரிந்து தங்களுக்கென பல்வேறு மார்க்கங்களை உருவாக்கிக் கொண்டனர். ஆனாலும் ஆபிரகாமின் வழி வந்த மக்களில் ஒரு கூட்டத்தார், ஒன்றான மெய்தேவனாகிய யெகோவாவை விசுவாசித்து அவரது பாதையில் அவரது கற்பனைகளின்படி வாழ்ந்து வந்தனர். தன் மகனை பலியிடுவதற்கு ஆபிரகாம் ஆயத்தம் செய்த பலிபீடமும், வனாந்திரத்தில் இஸ்ரவேலர் உருவாக்கிய ஆசரிப்புக் கூடாரமும், சாலொமோன் கட்டிமுடித்த பிரமாண்டமான தேவாலயமும் பழைய ஏற்பாட்டுக் கால இஸ்ரவேலரின் சமய வாழ்வின் ஒரு பகுதியாகும்.

பழைய ஏற்பாட்டுக்கால பலிபீடத் தொழுகையிலிருந்து தேவாலயம் வரையும் மக்களின் தொழுகை முறைகள் மாறினதேயொழிய மக்கள் ஆராதித்த ஜீவனுள்ள தேவனும் ஆராதனையின் நோக்கமும் மாறவில்லை. கால காலமாக தேவன் தன்னைப் படிப்படியாக மக்களுக்கு வெளிப்படுத்தி வந்ததால் அந்த வெளிப் பாட்டிற்கு ஏற்றபடி மக்களின் சமய வாழ்விலும் மாற்றங்கள் வந்தன. ஆனால் தேவனும் அவரது சத்தியமும் என்றென்றும் மாறாததாகவே இருக்கின்றது. பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் வகை வகையாகவும் தன்னை மக்களுக்கு வெளிப்படுத்திய தேவன் இன்று இயேசு கிறிஸ்துவின் மூலம் நமக்கு வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கிறார் (எபி. 1:1). சமய நம்பிக்கை என்பது ஒவ்வொரு கிறிஸ்தவக் கூட்டத்திற்கும் வேறுபட்டதாகவே இருக்கின்றது. தேவன்மேல் கொண்டிருக்கும்

தாகத்தையும் விசுவாசத்தையும் பக்தியென்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலரோ தேவன்மேல் கொண்டுள்ள பயத்தினிமித்தம் செய்கின்ற கிரியைகளை பக்தியென்கின்றனர். சேவித்தல் (Service) என்ற எபிரேய பதத்திற்கு மத சம்பந்த மான ஒரு செய்கையை செய்தல் என்பதே சரியான மொழிபெயர்ப்பாகும் (யாத். 3:12; யாக். 1:27). சமய அனுசரணை அல்லது வழிபாட்டு மரபு என்பது மத சம்பந்த மாக ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் குறிப்பிட்ட பகுதியில் வாழும் மனிதர்கள் அனைவரும் செய்கின்ற சமய சேவையாகும். சமயச்சடங்கு (Rites) என்பது ஒரு தனிப்பட்ட மனிதன் செய்கின்ற மத வழிபாடாகும். வேதாகம கால சமய வாழ்வை. **1.**சீனாய் மலைக்கு முற்பட்ட காலம் **2.** ஆசரிப்பு கூடார முறைகளைக் கையாண்ட காலம் **3.** தேவாலய தொழுகையின் காலம் **4.** புதிய ஏற்பாட்டு ஆராதனைக் காலம் என நான்கு பிரிவுகளாக நாம் பிரிக்கலாம்

## 1. சீனாய் மலைக்கு முற்பட்ட காலம்

இஸ்ரவேலருக்கு தேவன் தம்மை சீனாய் மலையில் வெளிப்படுத்துவதற்கு முன்பாகவே இஸ்ரவேலர் தேவனை தொழுது வந்தனர். ஒரு குறிப்பிட்ட ஆராதனை ஸ்தலமும் ஒரு வழிபாட்டு மரபும் இல்லாதிருந்தபோதும் நாடோடிகளைப் போல முற்பிதாக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் தங்கள் வாழ்வில் தேவனை மறவாமல் தொழுது பணிந்து வந்தனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் அந்தக் குடும்பத்தின் தலைவனே ஆசாரியனைப் போல் பொறுப்பெடுத்து, பலிபீடம் கட்டி, பலி செலுத்தி அவனும் அவன் குடும்பத்தாரும் தேவனை பணிந்து கொள்வார்கள். குடும்பத்தின் தலைவர் தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் பாவ நிவர்த்திக்கென பலி செலுத்து வான் (யோபு 1:5). உதாரணமாக நோவா (ஆதி. 8:20), ஆபிரகாம் (ஆதி.12:6–8), ஈசாக்கு (ஆதி. 26:25), யாக்கோபு (ஆதி. 33:20), மோசே (யாத். 17:15) போன்ற பரிசுத்தவான்கள் அனைவருமே பலிபீடம் கட்டி தேவனைப் பணிந்து கொண்டனர்.

பலிபீடம் கட்டும்படி அவர்கள் தெரிந்துகொண்ட இடங்கள் முக்கியமானவைகளாகும். தேவனது வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் அல்லது தங்களுடைய வாழ்வில் தேவன் இடைபட்ட முக்கியமான நிகழ்வின் அடிப்படையில் பலிபீடம் கட்டும் ஸ்தலங்களை தெரிந்துகொள்வார்கள். சீனாய் மலைக்கு முற்பட்ட காலத்தில் மட்டுமல்லாது கானானில் சென்று இளைப்பாறும் வரை குடும்பமாய் தேவனைத் தொழுதுகொள்ளும் ஆராதனை முறை தொடர்ந்தது. முற்பிதாக்களின் அனுப வங்களின் அடிப்படையிலே தேவன் அவர்களோடு இடைபட்டார். பலி பீடங்களும் பலிசெலுத்தும் முறைகளும் முற்பிதாக்களின் காலத்தில் இருந்ததற்கு ஆதாரமாக பல புதைபொருள் கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. யெகோவா தேவனை ஆராதிக்கும் மக்கள் மட்டுமல்லாது பிற இனத்து மக்களும் பலிபீடம் கட்டி தொழுது கொள்ளும் முறையை கடைப்பிடித்து வந்தனர். என்றாலும் ஒன்றான மெய் தேவனை விசுவாசத்தோடு கூடிய உறவிலே தொழுதுகொள்ளும் தொழுகையே தேவனுக்கு உகந்த ஆராதனையாகும்.

**1. புனிதமும் புனிதமற்றதும் (SACRED AND PROFANE) :-** இஸ்ரவேலின் தேவன் பரிசுத்தராய் இருக்கிறது போல இஸ்ரவேலரையும் பரிசுத்தமாக இருக்க கட்டளையிட்டிருந்தார். அவர்கள் பரிசுத்தத்தை அதிகரிக்க சமயரீதியான பிரமாணங்களையும் செயல்களையும் கையாண்டனர். மனிதர்களும் பொருட்களும் இடங்களும் பரிசுத்தமாக்கப்பட்டு தொழுகைக்கென வேறுபிரிக்கப்பட்டன.சில இடங்களில் பரிசுத்தமாக்கப்பட்ட நபர்கள், பொருட்கள், இடங்கள், பரிசுத்த குலைச்சலாக்கப்படும்போது அவைகள் தீட்டுப்பட்டவைகள் என கருதப்பட்டன. அவர்களது மத சம்பந்தமான செயலுக்கென வேறுபிரிக்கப்பட்டவைகள் புனிதமானவை என அழைக்கப்பட்டன. "வேறு பிரித்தல்" (To set apart) என்ற எபிரேய பதத்திற்கு பரிசுத்தமாக்குதல் என்பது பொருளாகும். வேறுபிரிக்கப்பட்ட அனைத்துமே பரிசுத்தமானவைகள் என்ற வரிசையில் இருந்தன.

தேவன் பரிசுத்தர், அவரது வழிகள் அனைத்தும் பரிசுத்தமானவைகள். அவர் நினைவுகள் நம் நினைவுகள் அல்ல; அவரது வழிகளும் நம் வழிகள் அல்ல. நம் நினைவுகளையும் வழிகளையும்விட அவரது நினைவுகளும் வழிகளும் மிகவும் உயர்ந்தவைகள். ஏனெனில் தேவன் பரலோகத்திலிருக்கிறார். நாம் பூமியிலிருக்கிறோம். அவர் நித்தியவாசி. மனிதனோ அழிவுக்குரியவன். பரிசுத்தராகிய தேவன் பூரண நீதியுள்ளவர். எனவே பரிசுத்தம் என்ற பதம் சொல்லப்படும் இடங்களிலெல்லாம் அவரது நீதியும் செயல்படவேண்டும். தேவனுக்காக தன்னை வேறுபிரித்து பரிசுத்தமாய் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் நீதியுள்ளவர்களாய் இருத்தல் அவசியம் என்பதால் தேவனை பயத்தோடு தொழுதுகொண்ட முற்பிதாக்கள் அப்படிப்பட்ட நீதியுள்ளவர்களாய் இருந்தார்கள்.

தேவனைத் தொழுது கொள்ள பரிசுத்தத்திற்கென வேறுபிரிக்கப்பட்ட ஸ்தலங்களும் பொருட்களும் ஆராதனைக்கென்று இருந்தன. அவைகள் "பரிசுத்த வஸ்துக்கள்" என்றும் "பரிசுத்த ஸ்தலங்கள்" என்றும் அழைக்கப்பட்டன (எசே. 42:20). அவ்வண்ணமே புறவினத்து மக்களிடையேயும் ஸ்தலங்கள், பொருட்கள், மனிதர்கள், அவர்களது தெய்வ வழிப்பாட்டிற்கென வேறுபிரிக்கப்பட்டிருந்தன. அவைகளை பரிசுத்தமானவைகள் என அவர்கள் அழைத்தாலும் அவைகள் அனைத்தும் நீதியோடுகூடிய பரிசுத்தமானவைகள் அல்ல. கானானியர்களின் கோவில்களிலும் தெய்வ வழிபாட்டு ஸ்தலங்களிலும் தொழுகைக்கென வேறுபிரிக்கப்பட்ட வேசிகள் இருந்தனர். எனவே அந்தத் தொழுகை முறைகளை மோசேயின் மூலம் தேவன் எச்சரித்தார் (உபா. 23:17). புறவினத்தவர் தங்கள் மதங்களில் "புனித தொழுகைக்கென வேறுபிரிக்கப்பட்டவர்களென" அழைக்கப்பட்டாலும் அவர்களது செயல்கள் அனைத்தும் பாவம் நிறைந்தவைகளேயன்றி நீதியுள்ளவைகளாய் இருந்ததில்லை. மட்டுமல்ல புறவினத்தார் பலியிடும் பொருட்களும் ஆராதனை முறைகளும் வேறுபிரிக்கப்பட்டவைகள் என்று கூறப்பட்டாலும் அவைகளும் நீதியோடு கூடிய செயல்கள் அல்ல. ஆனால் இஸ்ரவேலிலோ தேவனுக்காக வேறுபிரிக்கப்பட்டவர்களும் வேறுபிரிக்கப்பட்ட பொருட்களும் பரிசுத்தமுள்ளவைகளாய் இருப்பது அவசியமாய் இருந்தது.

**2.புனித ஸ்தலங்கள் (SACRED PLACES) :** ஆதிக்காலத்தில் சேமியர் (Semites) என்ற கூட்டம் இருந்தது. அவர்கள் காலம் துவங்கி மக்கள் புனித ஸ்தலங்களையும் இடங்களையும் உருவாக்கும் வழக்கமுடையவர்களாய் இருந்தார்கள். அவர்களைப் போலவே எபிரேய மக்களும் புனித ஸ்தலங்களை உருவாக்கியிருந்தனர். குறிப்பாக நிறுத்திவைக்கப்பட்ட கற்களையும் கல்தூண்களையும் நினைவுச் சின்னமாக பயன்படுத்தினர் (ஆதி. 35:20; 2சாமு. 18:18). ஆனால் கானானிய மக்களோ நினைவுச் சின்னங்களையே தெய்வங்களாக வழிபட்டுவந்தனர். எனவேதான் இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசிக்கும் முன்பதாக அப்படிப்பட்ட நினைவுச் சின்னங்களையும் தூண்களையும் அழித்துவிடும்படி தேவன் கூறினார் (யாத்.23:26;உபா.16:22).மேலும் இஸ்ரவேலர்கள் கானானிய முறைப்படி தூண்களை தொழுதுகொள்ளும்போது அவ்வித செயல்கள் வேசித்தனமான செயல்கள் என்று தீர்க்கதரிசிகள் எச்சரித்தனர் (எரே. 2:27; ஓசி. 3:4).

**3.கானானியரின் தெய்வங்கள் (ASHERAH):** கானானியரின் தெய்வங்கள் மரத்தூண்களினால் செய்யப்பட்டிருந்தன(1இரா.15:13;18:19) சாதாரண மரக் கட்டைகளையும் மரங்களையும் நிறுத்தி அவைகளையும் தெய்வங்களாக வழிபட்டனர். எனவே இதுபோன்ற மரங்களையும் தோப்புகளையும் மரக்கட்டை களையும் உருவாக்கக்கூடாதென கானானுக்குள் பிரவேசிக்கும் முன்பே இஸ்ர வேலரை தேவன் எச்சரித்தார் (உபா. 16:21). இப்படிப்பட்ட கானானிய தெய்வங் களைத் தொழுது மனந்திரும்பி, தேவனிடம் வந்த போது தேவன் அந்த தோப்பு விக்கிரகங்களையும் தோப்புகளையும் அழித்து விடும்படி தேவன் கண்டித்து உணர்த் தினார் (நியா.6:25;2இரா.13:6). பொதுவாக விக்கிரக ஆராதனைக்காரர்கள் தங்கள் தோப்பு விக்கிரங்களை மலைகளின் உச்சிகளில் ஸ்தாபித்தனர். பின் நாட்களில் நகரங்களுக்குள்ளும் பட்டணங் களுக் குள்ளும் ஸ்தாபித்தனர் (2இரா.23:8).

யெகோவா தேவனை வணங்கிய மக்களும் அந்நாட்களில் மலைகளின் உச்சிகள், மேடைகளில் தேவனைத் தொழுதுகொள்வதை வழக்கமாகக் கொண்டி ருந்தனர். உதாரணமாக சாமுவேல் மேடையில் பலியிட்டு கர்த்தரை தொழுது கொண்டார் (1சாமு.9:12). சாலொமோனும் கிபியோனிலே ஓர் உயர் ஸ்தலத்தில் தேவனைத் தொழுது கொண்டான். தேவாலயம் கட்டப்படும் முன்பு வரை மக்கள் தொழுது கொள்வதற்கு கர்த்தரின் ஸ்தலம் இல்லாதபடியால் இப்படிப்பட்ட மேடைகளில் பலிசெலுத்தி மக்கள் ஆராதித்தனர். ஆனால் விக்கிரக ஆராதனை பெருகிவிட்ட காலங்களில் அந்த மக்களும் மேடுகளில் மலைகளில் விக்கிர கங்களைத் தொழ ஆரம்பித்தபடியால் மேடான இடங்கள் அனைத்தும் விக்கிர ஆராதனை ஸ்தலமாக மாறிவிட்டது(1 இரா.14:23).மேடான ஸ்தலங்களையும் விக்கிரகத் தோப்புகளையும் அழித்துப்போட்ட அரசர்கள் தேவனால் புகழப்பட்டனர். அவைகளை அழித்துப் போடாதவர்களோ கர்த்தருடைய கோபத்துக்கு ஆளாயினர் (1இரா.15:11–16; 2இரா.18:4).

கானானியர் விக்கிரக வழிபாட்டில் மூழ்கிக்கிடந்தார்கள். இஸ்ரவேலர் கானானுக்குள் சென்றால் அவர்களது விக்கிரக வழிபாட்டைக் கற்றுக் கொள்வார்கள் என்பதால் தேவன் கானானியரைத் துரத்தி விட்ட பின்பே இஸ்ரவேலரை கானானுக்குள் குடியமர்த்தினார். விக்கிரக ஆராதனையை தேவன் அருவருத்தபடியால் எந்த ஒரு சுரூபத்தையும், தன் சாயலுக்கு ஒப்பான சுரூபத்தையும் உருவாக்க வேண்டாமென தேவன் இஸ்ரவேலரையும் எச்சரித்தார். கானானியர் பலவிதமான ஆண் பெண் சுரூபங்களை உருவாக்கி அவைகளை வழிபட்டு வந்ததைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். விக்கிரங்கள் பொதுவாக கல்லினாலோ அல்லது மரங்களினாலோ செய்யப்பட்டிருந்தன (Pesel, Idol, Image) (ஏசா. 40:20; 44:13–17). மேலும் வெள்ளி தங்கம் வெண்கலம் போன்றவற்றாலும் விக்கிரங்களை மக்கள் வார்ப்பித்தனர் (Massekah, Molten image) (ஏசா. 30:22; ஓசி. 13:2). மேலும் சித்திரங்களையும் மக்கள் வணங்கி வந்தனர் (எசே. 23:14). இவையனைத்தும் தேவனால் அருவருக்கப்பட்டது (யாத். 20:4; 34:17; எண். 32:52).

தேவன் விக்கிரகங்களை அருவருக்கிறார் என இஸ்ரவேலர் அறிந்தும் அவர்கள் புறவினத்து மக்களோடு கலந்து அவர்களது விக்கிரக ஆராதனையின் பழக்கத்தைக் கற்றுக் கொண்டு சோரம் போனார்கள். அந்நாட்களில் தேராப்பீம் (Teraphim - Household gods) என்ற சிறிய விக்கிரங்களை செய்து அவைகளை வீடுகளில் வைத்தும் மக்கள் வணங்கி வந்தனர். அவைகளுக்கென்று வீடுகளில் தனியான இடங்கள் அமைக்கப்பட்டிருந்தது (ஆதி. 31:19,34; 1சாமு. 19:13,16; நியா. 17:5). யாக்கோபு கர்த்தருடைய கட்டளைகளின்படி அவைகளை சுட்டெரித்தான் (ஆதி. 35:2,4). இந்த விக்கிரக வழிபாட்டைக் குறித்தே சாமுவேல் தீர்க்கதரிசி கண்டித்தான். அரசனான யோசியாவும் அவைகளை நிக்கிரகமாக்கினான் (2இரா. 23:24).

புனித ஸ்தலங்களாக கருதப்பட்ட இடங்கள் பெரும்பாலும் மக்களால் மதிக்கப்பட்ட இடமாக இருந்தன. இந்த புனித ஸ்தலங்கள் பலவிதமான மரங்கள் நிறைந்த இடமாக இருந்தன (ஆதி. 12:6; 13:18; நியா. 9:37). சில இடங்களில் மரங்களையே மக்கள் தெய்வமாக தொழுதனர். இப்படிப்பட்ட ஸ்தலங்களில் ஊற்றுகளும் நீரூற்றுகளும் பெரும்பாலும் இருந்தன. அவைகளின் பெயர்களைக்கொண்டே அவைகளை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.உதாரணமாக "என் மிஸ்பாத்"– ஆதி. 14:7;"என் சேமேஸ்"– யோசு. 15:7; "லகாய்ரோயீ"– ஆதி. 16:13–14; "பெயர்செபா"– ஆதி. 21:31, ஆதி. 26:23–25) போன்றவைகளைக் கூறலாம். இதில் 'என்' (en) என்ற பதம் நீரூற்றையும் 'பெயர்' (beer) என்ற வார்த்தை தோண்டப்பட்ட கிணற்றையும் குறிக்கும்.

புனித ஸ்தலங்கள் முற்பிதாக்களின் மூலமே அறிமுகப்படுத்தப்பட்டன. அவர்கள் தங்கள் வாழ்வில் சில இடங்களில் நடந்த சம்பவங்களைக் குறிக்கும் விதமாய் தேவனுக்கு சிறப்பு பெயரிட்டு அவ்விடத்தை அழைத்தனர். உதாரணமாக பெத்தேலில் "ஏல்பெத்தேல்" (ஆதி. 31:13) என்றும், பெயர்செபாவில் "ஏல் ஓலம்"

(ஆதி. 21:33) என்றும் தேவனை அழைத்தனர். இதைப் போலவே கானானியர்களும் தங்கள் தெய்வமாகிய பாகாலுக்கு ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு பெயரிட்டு அழைத்தனர். உதாரணமாக பாகால், பேயோர்(எண்.25:3) என்பவைகளைக் கூற லாம். இஸ்ரவேல் மக்கள் மாத்திரமல்ல, புறவினத்து மக்களும் தங்கள் தெய்வங் களுக்கு ஆராதனை செலுத்துவதற்கு தங்கள் ஆசாரியர்களை பணியில் அமர்த்தியிருந்தனர்.

## 2. ஆசரிப்புக்கூடார முறைகளைக் கையாண்ட காலம்

இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்டு கானானுக்குள் பிரவேசிக்க பிரயாணப் படுகையில் தேவன் மோசேக்கு ஆசரிப்புக் கூடாரத்தின் மாதிரியைக் காண்பித்து ஆராதனை முறைமைகளைக் குறித்த பிரமாணங்களையும் கொடுத்தார். உடன் படிக்கைப்பெட்டியும் அதனுள்வைக்கப்பட்டிருந்த கற்பலகைகளும் இஸ்ர வேலரின் ஆராதனையில் மையப்பொருளாய் இருந்தது. உடன்படிக்கைப் பெட்டியின்மேல் புறத்தை மூடி ஆசாரியர்கள் தங்கள் தோளில் அதை சுமந்து செல்வது வழக்கமாயிருந்தது.

**1. ஆசரிப்புக் கூடாரம் (TABERNACLE) :-** இஸ்ரவேலர் வனாந்திரத்தில் தேவனைத் தொழுது கொள்ளும் ஸ்தலமாக ஆசரிப்புக்கூடாரம் நிறுவப் பட்டது. இது வாசஸ்தலம் (Dwelling-*mishkan*), கூடாரம் (Tent-*ohel*)என்று அழைக்கப்பட்டாலும், சாட்சியின் கூடாரம் என்றும் (Tent of testimony) (எண். 9:15) தேவன் சந்திக்கும் கூடாரம் என்றும் (Tent of meeting) (யாத். 39:32–ASV ) அழைக்கப்பட்டது. இஸ்ர வேலர் வனாந்திரத்தில் இருந்த நாட்களில் தேவனை ஆராதிப்பதற்கு இந்தக் கூடாரத்தையே பயன்படுத்தினர். அவர்கள் பயணப்படும் போது இதைத் தோள்களில் சுமந்து கொண்டு செல்லுவர். பாளயமிறங்கும்போது இதை ஒரு இடத்தில் கூடாரமிட்டு ஸ்தாபிப்பர். பொதுவாக ஆசாரியர்கள் மட்டுமே இதை கையாண்டு வந்தனர். தேவன் தம்மக்கள் மத்தியில் இருக்கிறார் என்பதற்கு அடை யாளமாக இந்த கூடாரம் இருந்தது.

ஆசரிப்புக் கூடாரம் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. 1. பிரகாரம், 2.பரிசுத்த ஸ்தலம், 3. மகா பரிசுத்த ஸ்தலம் என்று பிரிக்கப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலம் தேவன் வசிக்கும் ஸ்தலமாக பிரத்தியேகப் படுத்தப்பட்டிருந்தது. இந்த மகாபரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கைப் பெட்டியில் மோசேக்கு கர்த்தர் கொடுத்த பிரமாணங்கள் எழுதப்பட்ட கற்பலகைகள் இரண்டு இருந்தன (யாத். 25:10–22). பெட்டியின் மேற்புறம் பொன்னால் செய்யப்பட்ட தகட்டினால் மூடப்பட் டிருந்தது. பெட்டியின் இருபக்கமும் செட்டைகளோடுகூடிய கேருபீன்கள் இருந்தன.

உடன்படிக்கைப் பெட்டியின் மேற்புறம் கிருபாசனம் (Mercy seat-*kapporeth*) என அழைக்கப்பட்டது (யாத். 25:17). கிருபாசனம் என்ற வார்த்தையின் மூலப் பதமும், பாவ நிவர்த்தி செய்யும் நாள் (Day atonement-*yom-hakkippurim*) (லேவி. 23:27)

என்ற வார்த்தையின் மூலப் பதமும் ஒரே பொருளுடையதாகும். எனவே கிருபையினால் பாவ நிவர்த்தி உண்டு என்ற சத்தியத்தை உணர்த்துவதற்கே கிருபாசனம் ஸ்தாபிக்கப்பட்டது.

அந்நாட்களிலிருந்த எல்லா புறவினத்து மதங்களிலும் ஆசாரிய முறைமைகள் இருந்தன. ஏனெனில் கடவுள் மனிதர்களால் நெருங்கமுடியாத தன்மையுடையவர், சாதாரண மக்கள் அவரை நெருங்குவதற்கு மத்தியஸ்தராய் ஒரு மனிதன் வேண்டுமென்பது அவர்களின் கோட்பாடாக இருந்தது. எனவே இந்த மத்தியஸ்த பணிக்கு ஆசாரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் மக்களும் பரிசுத்தமான தேவனை நெருங்குவதற்கு பாவமுள்ள மனிதனால் இயலாது என்பதை அறிந்து பரிசுத்தப்படுத்தப்பட்ட ஆசாரியர்களை மத்தியஸ்த பணிக்கென நியமித்தனர். அன்றாட வாழ்வில் ஏற்படும் பலவித பாவசூழ்நிலைகளால் மனிதர்கள் கறைபட்டுப் போகக்கூடியவர்கள் என அறிந்தே, தேவனும் இந்த மத்தியஸ்த பணிக்கு ஆசாரியர்களை பரிசுத்தப்படுத்தி நியமிக்கும்படி மோசேக்கு கட்டளையிட்டார்.

முற்பிதாக்களின் காலத்தில் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் அந்தக் குடும்பத்தின் ஆசாரியனாக செயல்பட்டான். சீனாய் மலையில் பிரமாணங்களைக் கொடுக்கும்போது ஒவ்வொரு குடும்பத்தின் முதற்பேறான மகனும் ஆசாரியனாய் செயல்படவேண்டியவன் என்று தேவன் கூறினார். பிற்பாடு எல்லா முதற்பேறான ஆண்பிள்ளைகளுக்குப் பதிலாக லேவியர்கள் கர்த்தருக்கு சொந்தமானவர்களாகி ஆசாரியப் பணியை செய்ய வேண்டுமென தேவன் நியமனம்செய்தார்(எண். 8:16–18).

லேவியின் கோத்திரத்தில் ஆரோனின் சந்ததியார் மாத்திரமே ஆசாரியப் பணியை செய்ய அழைக்கப்பட்டனர். எனவே இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திலும் பிறந்த முதற்பேறான ஆண்பிள்ளைகளை லேவியர்கள் மீட்டுக்கொள்ள வேண்டும். இந்த லேவியர்களே மற்ற கோத்திரத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தின் பிரதி நிதியாய் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க முடியும். அப்படியே பிரதான ஆசாரியர்கள் மாத்திரமே மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து மக்களின் பாவங் களுக்காக தேவனிடம் வேண்டிக்கொள்ள முடியும்.

**2. காணிக்கைகளும் பலிகளும் (OFFERINGS AND SACRIFICES) :-** தேவனைத் தொழுது கொள்ளுகிற மக்கள் தங்கள் பாவமன்னிப்பிற்காக, தங்கள் தேவைகள் பூர்த்தியாக, தாங்கள் பெற்ற நன்மைக்கு நன்றி செலுத்த அவரைத் தொழுது கொள்ள வந்தனர். இந்த மூன்றில் ஏதாவது ஒரு காரணத்திற்காகவே பலிகளை யும் காணிக்கைகளையும் மக்கள் தேவனுக்கு செலுத்துவதுண்டு. உயிருள்ள மிருகத்தை பலியிட்டோ, தூபங்களை தேவ சந்நிதியில் படைத்தோ காணிக்கை யாக செலுத்துவர்.பலியிடும்படி பலிபீடத்திற்கு வந்து செலுத்தப்படும் பலிகளில் சில பலிகள் முற்றிலும் தேவனுக்கு காணிக்கையாக்கப்படும். சில பலிகளோ ஒரு பங்கு தேவனுக்குக் காணிக்கையாக்கப்பட்டு அதன் மற்ற பங்கு ஆசாரியனுக்குக் கொடுக்கப்படும். வேறு சில பலிகளோ தேவனுக்கு படைத்த பகுதியைத் தவிர

மற்ற பகுதி ஆசாரியனாலும் பலி செலுத்துபவராலும் பகிர்ந்து கொள்ளப்படும். இந்த பலிமுறைமைகள் அனைத்தையும் குறித்து லேவியராகமம் புத்தகத்தில் நாம் தெளிவாகக் காணலாம்.

**3.சர்வாங்க தகனபலி (WHOLE BURNT OFFERING):-** பொதுவாக காலையிலும் மாலையிலும் செலுத்தப்படும் இந்த சர்வாங்க தகன பலி தேசத்திற்காக செலுத்தப்படும் பலியாகும். மட்டுமல்ல விசேஷித்த பண்டிகை நாட்களிலும் இது செலுத்தப்படும். பிள்ளைப்பேற்றின் பின்பாக அந்த ஸ்திரீயின் சுத்திகரிப்பிற் கெனவும் (லேவி. 12:6) நசரேய விரதம் இருந்தவர்கள் தங்கள் பொருத்தனையை நிறைவேற்றும்போதும் இந்த பலிகள் செலுத்தப்படும் (எண். 6:14). இஸ்ரவேல ரல்லாத புறவினத்து மக்கள் தேவனைப் பணிந்துக்கொள்ள வேண்டுமென்றால் செலுத்தக்கூடிய ஒரே பலி இதுவாகும் (லேவி. 17:8; 22:18,25). பறவைகளைத் தவிர்த்து, சர்வாங்க தகனபலிகள் முழுவதும் அக்கினியில் சுட்டெரிக்கப்படும் (லேவி. 1:9,16).

**4. பாவநிவாரண பலி (SIN OFFERING):-** ஆசாரியர்கள், அதிபதிகள், சாதாரண மக்கள் தங்கள் சொந்த பாவத்துக்கென்று செலுத்துகின்ற பலியே பாவநிவாரண பலியும், குற்ற நிவாரண பலியுமாகும் (லேவி.அதி. 4–7). சில வேளைகளில் முழுக் கூட்டமும் செய்த பாவத்துக்கு தனிமனிதனுக்கு நிவர்த்தி செய்வதுபோல பாவ நிவர்த்தி செய்யப்படும் (லேவி.4:13). பிள்ளைபேற்றின் பின்பு ஸ்திரீயின் சுத்தி கரிப்பிற்கெனவும் இந்த பலி செலுத்தப்படும் (லேவி.12:6). பொதுவாக பாவ நிவாரண பலியானது சாட்சிகளின்றி செய்யப்பட்ட பாவங்களை நிவர்த்தி செய்யும்படி செலுத்தப்படுவதாகும் (லேவி.4:12,13,22,27). குற்ற நிவாரண பலி யானது தன் அயலானுக்கு விரோதமாக செய்த பாவங்களுக்காக தேவனுக்கு செலுத்தப்படும் பலியாகும் (லேவி. 6:1–5). எனவே குற்ற நிவாரண பலியானது தேவ னிடம் மன்னிப்பைக்கேட்டும் தங்கள் அயலாரோடு ஒப்புரவாகுவதற்காகவும் செலுத்தப்பட்டு வந்தது.

பலி செலுத்தப்படும் மிருகத்தின் கொழுப்பு பலிபீடத்தில் தகனிக்கப்படும் (லேவி. 4:8–10). மிருகத்தின் இரத்தமானது பலிபீடத்தின் கொம்புகளில் தடவப்பட்டு மீதியான இரத்தமானது பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிடப்படும் (லேவி.4:8–10, 18,25,30). ஆசாரியர்களுக்கென்றும் மக்களுக்கென்றும் செலுத்தப்படும் பலியின் இரத்தத்தில் ஒருபகுதியானது மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்பாக தெளிக்கப் படும் (லேவி. 4:6,17). மீதியான பலியை ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்க வேண்டும் (லேவி. 6:26;7:6,7).அதிலும் மீதியானதை சாம்பல் கொட்டும் இடத்தில் சுட்டெரிக்கவேண்டும்.

**5.சமாதான பலி (PEACE OFFERING):-** சமாதான பலி மூன்றுவித காரணங்களுக் காக செலுத்தப்படும். தேவனிடம் ஒரு ஆசீர்வாதத்தைக் கேட்டு அதைப் பெற்றுக் கொண்டவுடன் அதற்கு நன்றி செலுத்தும்விதமாய் சமாதான பலிகள் செலுத்தப்படும். வேறுசிலர் தேவனிடமிருந்து பெற்ற ஏராளமான நன்மைகளுக்காக தேவனுக்கு

நன்றிசெலுத்தும்படி மனமுவந்து தாங்களாகவே சமாதான பலியை செலுத்துவர் (லேவி. 11:16). சிலர் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்படி சமாதான பலிகளைச் செலுத்துவர். இந்த சமாதான பலிகளில், கொழுப்பு பலிபீடத்தில் தகனிக்கப்படும். பலிகளின் உச்சிதமானவைகளும் தொடைப்பகுதியும் ஆசாரியனுக்கு கொடுக்கப் படும். மீதியானவைகளை பலி செலுத்துபவரும் அவரது உறவினர்களும் கர்த்தருடைய சந்நிதியில் புசிப்பர். ஸ்தோத்திரக் காணிக்கையின் பலியை மறுநாள் வரை வைத்திருந்து புசிக்கலாம். மூன்றாம் நாளிலே அது அக்கினியால் சுட்டெரிக்கப்பட வேண்டும். பலி மிருகத்தோடுகூட அப்பங்களும் காணிக்கையாக செலுத்தப்படும்.

இவ்விதமாக இரத்தம் சிந்தி செலுத்தப்படும் பலிகள் அனைத்துமே கீழ்க்காணும் முறைகளின்படியே செலுத்தப்படும். 1. பலி மிருகம் ஆசாரியனிடம் கொண்டு வரப்படவேண்டும் (லேவி. 1:3). 2. ஆசாரியன் தன் கைகளை மிருகத்தின் தலையில் வைக்கவேண்டும் (லேவி. 1:4). 3. மிருகமானது கொல்லப்படவேண்டும் (லேவி.1:5). 4.பலியின் இரத்தம் தெளிக்கப்பட வேண்டும் (லேவி. 1:5).5. பலி பொருளிலுள்ள அசுத்தமான பகுதியை பரிசுத்தமான பகுதியிலிருந்து பிரித்தெடுக்க வேண்டும் (லேவி. 1:6,7). 6. ஆசாரியனோ அல்லது ஆசாரியனும் பலிசெலுத்து பவருமோ செலுத்தப்படும் பலிக்கேற்ப பலிபொருளை புசிக்க வேண்டும் (லேவி. 7:6,7,19).

**6.போஜன பலி (MEAL OFFERING-MINHAH):-** இரத்தம் சிந்தாமல் செலுத்தப்படும் பலிகள் போஜன பலி என அழைக்கப்படும். போஜன பலியானது இடித்த தானி யத்தினால் செய்யப்பட்ட அப்பங்களாகவோ (லேவி.2:4), மெல்லிய மாவாகவோ (லேவி. 2:1) அல்லது நெருப்பிலே வாட்டி உதிர்த்த கதிர்களாகவோ (லேவி. 2:14) செலுத்தப்படும். ஒவ்வொரு பலியும் மாவிலோ, எண்ணெய் வார்த்தோ அல்லது மா வோடு கூட எண்ணெயும் தூபவர்க்கமும் சேர்த்தோ செலுத்தப்படும் (லேவி. 2:2). இதின் ஒரு பகுதி பலிபீடத்தில் ஞாபகக்குறியாக *(as a memorial - azkarah)* தகனிக் கப்படும். அதன் பொருள் என்னவென்று நாம் அறியாவிடினும் பலி செலுத்துப வர்களை தேவன் நினைக்கும்படியாக அது செலுத்தப்படுகிறதென நாம் யூகிக்கலாம்.

## 3. தேவாலய தொழுகையின் காலம்

இஸ்ரவேலர் கானான் தேசத்தை சென்றடைந்தபின்பு அவர்களது ஆராதனை முறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. சாலொமோன் காலத்தில் தேவாலயம் கட்டப்பட்டு தொழுகை முறைகள் சீரமைக்கப்பட்டன. ஆலயம் கட்டப்பட்டபின்பு மக்கள் தேவனை முக்கியப்படுத்துவதை விட்டுவிட்டு ஆராதனை முறைகளையும் சமயசடங்குகளையும் கடமைக்கென செய்ய ஆரம்பித்து விட்டனர். ஆசரிப்புக் கூடாரத்தை சுமந்து வந்த லேவியர்களுக்கு சுமக்கும் தொழில் இல்லாதபடியால் மற்ற சமய கடமைகளை தங்களுக்கு அதிகப்படுத்திக்கொண்டனர். தேவாலயத்தில் தேவன் வசிக்கிறார் என்று மக்கள் நம்பி தேவனை முக்கியப் படுத்துவதை விட்டுவிட்டு தேவாலயத்தை முக்கியப்படுத்த ஆரம்பித்தனர். தாவீது, சாலொமோனின் காலத்திற்கு பின்பாக மக்களின் ஆவிக்குரிய வாழ்வு சீர்கெட ஆரம்பித்தது.

தேவனின் தயவையும் இரக்கத்தையும் எண்ணி தேவனுக்கு பலிசெலுத்தவேண்டிய இஸ்ரவேலர், கானானியரின் வழிபாட்டு முறைகளில் சோரம் போய் அவர்களது பலி முறைகளயும் தொழுகையையும் பின்பற்ற ஆரம்பித்தனர்.

மட்டுமல்லாது தேவாலயத்தில் செல்வமும் காணிக்கைகளும் குவிய ஆரம்பித்த படியால் மற்ற அரசர்கள் தேவாலயத்தை சூறையாடும் எண்ணத்தோடு எருச லேமின்மேல் படையெடுக்க ஆரம்பித்தனர். மேலும் யூத அரசர்கள்மேல் அதிகமான வரிகளையும் செலுத்த ஆரம்பித்தனர் (1இரா.14:26; 2இரா. 16:8). மக்களின் சமய வாழ்வு எந்த அளவு சீர்கெட்டுப்போயிற்று என்பதை யோசியா மன்னனின் ஆட்சி யிலிருந்து அறிந்து கொள்ளமுடியும். தேவாலயம் பராமரிக்கப்படாமலும், பலிகள் சரியானபடி செலுத்தப்படாமலும் ஆலயத்தின் அழகும் ஒழுங்கு முறைகளும் சீர்கெட்டுபோயிருந்தது. நியாயப்பிரமாண புத்தகம் தேவாலயத்திலிருந்து காணப்படாமல் போனதோடு பஸ்கா பண்டிகையும் கொண்டாடப்படாமல் மக்களால் மறக்கப்பட்டிருந்தது (2இரா. 22:3–8; 23:21–23).

இவ்வித சூழலில் ஏசாயா, எரேமியா, மீகா போன்ற தீர்க்கதரிசிகள் இவ்வித நிலைமையிலிருந்த மக்களை எச்சரித்து தேவனுடைய மார்க்கத்திற்கு மனந் திரும்பும்படி அழைப்பு விடுத்தனர் (மீகா 6:6–8; ஏசாயா 1:11–17; எரேமி. 7:1–34). இஸ்ர வேலில் விக்கிரக ஆராதனையும், விசுவாச துரோகமும் அதிகமான நாட்களில் தீர்க்கதரிசிகள் எழும்பி, இஸ்ரவேலர் புறவினத்து மார்க்கங்களைப் பின்பற்றாதபடி எச்சரித்தனர். இதினிமித்தம் மெய்தீர்க்கதரிசிகள் மக்களோடும், புறவினத்து தீர்க்கதரிசிகளோடும் போராடவேண்டியதாயிருந்தது (1 இரா.18:20–40). இஸ்ர வேல் மக்களின் விசுவாச துரோகத்தினிமித்தம் கி.மு. 722ல் வடக்கு ராஜ்ஜியம் அழிக் கப்பட்டது (எரே.3:6–10). தீர்க்கதரிசிகள் மூலமாய் தேவன் கொடுத்த எச்சரிப்பை இஸ்ரவேலர் அசட்டை செய்ததினிமித்தமே கி.மு. 597லும் 586லும் எருசலேம் அழிக்கப்பட்டது.

எருசலேம் தேவாலயம் முதல் முறையாக சாலொமோனால் கட்டப்பட்டது. சாலொமோனின் தேவாலயம் 400 ஆண்டுகள் வரை நிலைத்திருந்தது. கி.மு. 597ல் அது அழிக்கப்பட்டது. இஸ்ரவேலர் பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போன பின்பு கி.மு. 516ல் செருபாபேலின் தலைமையில் தேவாலயம் கட்டப்பட்டு கி.பி. 70 வரை அது நிலைத்திருந்தது. ஏரோது கி.மு. 19ல் எருசலேம் தேவாலயத்தை சீரமைத்து அதைத் திரும்பவும் கட்ட ஆரம்பித்தான். இந்த தேவாலயப் பணி கி.பி. 64 வரை தொடர்ந்தது. பகுதி பகுதியாக அதன் சீரமைப்பு பணிகள் நடந்தபடியால் கி.பி. 64ல் அது முற்றிலும் புதுப்பிக்கப்பட்ட ஆலயமாகவே காட்சியளித்தது.

## 4. புதிய ஏற்பாட்டு ஆராதனைக் காலம்

இயேசு கிறிஸ்துவின் நாட்களில் இஸ்ரவேல் மக்களின் ஆவிக்குரிய வாழ்வின் தரம் மிகவும் குறைந்திருந்தது. எனவேதான் ஆண்டவர் இயேசு தன் பிரசங்கங்க

ளில் பக்தியின் வேஷத்தைத் தரித்து தங்கள் வாழ்க்கையில் தேவன்மேல் பற்றுதலற்ற மக்களை வன்மையாக கண்டித்தார். தேவாலயத்தைக் கள்ளர், குகை போலாக்கின மதத் தலைவர்களை குற்றம் சாட்டினார் (மாற். 7:1; மத். 21:13) என்றாலும் ஒரு கூட்ட இஸ்ரவேலர் மேசியாவின் வருகைக்காகவும் தீர்க்க தரிசனம் நிறைவேறுதலுக்காகவும் அந்நாட்களில் காத்திருந்தனர் (லூக். 2:25, 36–38). மக்கபேயரின் நாட்களில் அரசர்கள் ஆசாரியனின் கடமையையும் சேர்த்து செய்து வந்தனர். பிரதான ஆசாரியர்கள் பெரும்பாலும் அரசாளும் பணியையும் மேற் கொண்டனர். ஏரோதின் நாட்களில் ஆசாரியர்களை நியமிப்பது அரசனின் பொறுப் பாய் மாறியது. மகா ஏரோதின் ஆட்சி துவக்கத்திலிருந்து எருசலேமின் வீழ்ச்சி வரைக்கும் ஏறத்தாழ 100 ஆண்டுகளில் 28 பிரதான ஆசாரியர்கள் மாற்றப்பட்டனர்.

ஆனால் இயேசு கிறிஸ்துவோ தேவாலயத்திற்குக் கொடுக்கவேண்டிய கனத்தையும் மதிப்பையும் அதற்கு கொடுத்து தேவையான தேவாலயப் பண்டிகைகளில் எல்லாம் பங்குப்பெற்றார். என்றாலும் "தேவனை எங்கும் தொழுதுகொள்ளும் காலம் வந்திருக்கிறது" என்ற சத்தியத்தையே மக்களுக்கு போதித்து வலியுறுத்தினார் (யோவா.21:23). மேலும் எருசலேம் தேவாலயம் அழிக்கப்படும் காலத்தைக் கூறி (மத். 24:2) தான் தேவாலயத்திலும் பெரியவர் என்று மக்களுக்கு எடுத்துரைத்தார் (மத். 12:6).

தேவன் கைகளினால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிருப்பதில்லை என்று ஸ்தேவான் கூறினான் (அப்.7:44–53).திருச்சபையை வளருகின்ற பரிசுத்த ஆலய மென்று பவுல் தன் நிருபங்களில் எழுதியுள்ளார் (எபே. 2:21). தேவாலயமும் அதின் பலிமுறைகளும் நன்மையான மேன்மையான பலியான இயேசுவுக்கு நிழலாட்டமாய் இருந்தது என்று எபிரேய ஆக்கியோன் எழுதியுள்ளான் (எபி. 8). இயேசு கிறிஸ்து பிரதான ஆசாரியன் என்றும் (எபி. 10:21) தேவாலயம் என்பது பரலோக வாசஸ்தலம் என்றும் (எபி. 9:23), இயேசு கிறிஸ்துவின் இரத்தமே சுத்திகரிப்பை உண்டுபண்ணும் ஜீவனுள்ள பரிகாரம் என்றும் எபிரேய ஆக்கியோன் விளக்கமாக எழுதியுள்ளான். மட்டுமல்ல புதிய எருசலேமிலும் பரலோகிலும் உள்ள தேவாலயத்தைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷம் சாட்சியிடுகிறது.

# 9

# பண்டிகைகள்

## (FEASTS)

அந்நாள் முதற்கொண்டு இந்நாள் வரை இஸ்ரவேலர் பலவிதமான பண்டிகைகளைக் கொண்டாடி வருகின்றனர். தம் மக்கள் மனமகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்பதற்காக யெகோவா தேவனே சில முக்கிய பண்டிகைகளை ஆசரிக்கும்படி மக்களுக்கு கற்பித்திருந்தார். விருத்தசேதனம், குழந்தைகளை பால் மறக்கப்பண்ணுதல்(ஆதி. 21:8), வீட்டிற்கு திரும்பி வந்த உறவினர்களின் வருகை (லூக். 15:23–24),ஆடுகளுக்கு மயிர் கத்தரித்தல் (1சாமு. 25:11), ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை பண்ணுதல் (ஆதி. 31:46), மரணம் போன்ற பலவித மான நிகழ்வுகளில் விருந்து செய்தல் இஸ்ரவேலரின் வழக்கம். குடும்பமாகவும் கோத்தி ரங்களாகவும் சில சிறப்பான விருந்துகளை இஸ்ரவேலர் கொண்டாடினர்.

அரசனின் பிறந்த நாள், திருமண நாள், போன்றவற்றிற்கு அரண்மனைகளில் ராஜகுடும்பத்தார் விருந்து செய்வது வழக்கமாய் இருந்தது. உதாரணமாக அகாஸ்வேரு ராஜா ஆறு மாதங்கள் வரை மிக சிறப்பான விருந்து ஒன்றை தன் நாட்டின் மக்களுக்கு கொடுத்தான். மட்டுமல்ல அரசனின் மனைவியாகிய வஸ்தியும் ஸ்திரீகளுக்கு விருந்தொன்றை அரண்மனையில் செய்வித்தாள் (எஸ்தர் 1:4,5,9). ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் எருசலேமிலுள்ள "தேவாலயப் பண்டிகைக்கு" சென்றார் (யோவா.7:2). இயேசு கிறிஸ்துவும் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக சீஷர்களோடு பஸ்காவை புசித்தார் (மத்.26:18). பரிசுத்த ஆவியானவர் பெந்தெகொஸ்தே பண்டிகை நாளன்று சீஷர்கள் மேல் இறங்கி வந்தார் (அப். 2:1).

பஸ்கா பண்டிகை, கூடாரப் பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை ஆகிய மூன்று முக்கியமான பண்டிகைகள் இஸ்ரவேலரால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. ஓய்வு நாளும் அமாவாசையும் மக்களால் விசேஷித்த நாட்களாய் கருதப்பட்டது. இந்தப் பண்டிகைகள் மனமகிழ்ச்சியின் நாட்களாகவும் தேவனில் களிகூரும் நாட்களாகவும் இருக்கும்படி தேவன் அவைகளை நியமித்தார். ஆனால் மக்களோ தேவனை மறந்து பண்டிகையை முக்கியப்படுத்தியபோது தேவன் அவர்களைக் கடிந்து கொண்டார் (ஆமோ. 5:21).

**1.ஓய்வுநாள் (SABBATH):**–வாரத்தின் ஏழாம் நாளை ஓய்வுநாளாக இஸ்ரவேலரும் யூதரும் கடைபிடிக்கின்றனர். சாலொமோனின் உன்னதபாட்டை ஒவ்வொரு ஓய்வு நாளிலும் வாசித்து தேவனில் மனமகிழ்ச்சியாய் இருப்பதை தங்கள் வழக்கமாக வைத்திருந்தனர். யூதர்கள் வெள்ளிக்கிழமையின் மாலை சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தை புதிய நாளின் துவக்கமாக கருதுவர். ஓய்வு நாள் அன்று மாலையில் ஆரம்பிப்பதால் மறுநாள் மாலை வரை எந்த வேலையும் செய்யாமல் இளைப்பாறுவர். ரபிக்களின் எழுத்தின்படியும் இயேசு கிறிஸ்துவின் போதனை யின்படியும் ஓய்வு நாள் மனிதனின் இளைப்பாறுதலுக்காக உருவாக்கப்பட்டது.

புதிய ஏற்பாட்டு காலத்திற்கு முன்பு நெகேமியா காலத்தில் யூத மத மரபுகளில் சில சீர்திருத்தங்கள் அமைக்கப்பட்டன. எனவே ரபிமார்கள் யூத பாரம்பரியத்தைக் காக்கும்படி ஓய்வு நாளில் செய்யக் கூடாத காரியங்கள் இன்னஇன்னவென்று பட்டியலிட்டு மக்களுக்கு கொடுத்தனர். அவர்களது பட்டியலின்படி 39 வகையான வேலைகள் ஓய்வு நாளில் தடைசெய்யப் பட்டிருந்தன. அந்த 39 வகையான வேலைகள் ஒவ்வொன்றிலும் 39 பிரிவுகள் உள்ளடங்கியிருந்தன.ஆக மொத் தத்தில் ஓய்வு நாளில் செய்யப்படக்கூடாத 1521 வகையான வேலைகளை நியமித்து அவைகளை பிரமாணங்களாக மக்கள்மேல் சுமத்தினர். எனவேதான் இயேசு கிறிஸ்துவும் தன் உபதேசத்தில் இவ்விதமான காரியங்களை கண்டித்து போதித்தார் (மாற். 2:23–28; யோவா. 1:5–18).

கர்ப்பந்திறந்து பிறக்கும் முதற்பேறு அனைத்தையும் தனக்கென பரிசுத்தம் பண்ண சொன்ன தேவன், வாரத்தின் முதல் நாளையும் வருமானத்தின் முதற் பங்கையும் தமக்காக பரிசுத்தம் செய்யும்படி கூறினார். எனவே ஓய்வு நாளை தேவனுக்காக ஒதுக்குவது, மற்ற எல்லா நாட்களும் அவருக்குரியது என்பதை அறிவிப்பதற்காகவே. ஆனால் எல்லா நாட்களும் கர்த்தருக்குப் பரிசுத்தமான நாட்கள் என விசுவாசிகள் கருதவேண்டும் என்பதே புதிய ஏற்பாட்டின் பிரமாண மாக இருக்கிறது (ரோம. 14:5,6; கொலோ. 2:16–17).

**2. அமாவாசை (NEW MOON) :-** முன்நாட்களில் சந்திரனைக் கொண்டே ஒரு மாதத்தின் துவக்கத்தைக் கணக்கிட்டனர். வாரத்தில் சந்திரன் தோன்றாத நாளான அமாவாசை மாதத்தின் முதல் நாளாகக் கருதப்பட்டது. முழு நிலவு தோன்றும் நாளான பௌர்ணமியை மாதத்தின் நடுநாளாக இருந்தது. அமாவாசையும் மாதப்

பிறப்பும் பழைய ஏற்பாட்டு நாட்களில் விசேஷித்த நாட்களாய் கருதப்பட்டது (ஏசா. 1:13; 2இரா. 4:23). அமாவாசை மற்றும் ஒய்வு நாட்களில் விசேஷித்த காணிக்கைகள் தேவனுக்கு படைக்கப்பட்டன (எண். 28:11–15). புதிய வருடத்தின் மாதப் பிறப்பான முதல் அமாவாசையை மக்கள் விசேஷமாக கொண்டாடினர்.

மத்திய கிழக்கு நாடுகளில் வசித்த மக்கள் சந்திரனுக்கு யேரா(Yerah), ஏரா(Erah), சாகர் (Sahar), சின்(Sin), குஷ்ஷு(Kusuh) என பல பெயர்களிட்டு அதை வணங்கியும் வந்தனர். அப்படிப்பட்ட சந்திர வணக்கம் கூடாதென தேவன் இஸ்ரவேலருக்கு கட்டளையிட்டிருந்தார் (உபா. 4:19; 17:3). ஆனால் மக்களோ தேவனைவிட்டுப் பின்வாங்கிப்போன காலங்களில் சந்திரனை வணங்க ஆரம்பித்தனர் (2இரா. 21:3–5; எரே. 8:2). மாதப் பிறப்பை பழைய ஏற்பாட்டுக்கால மக்கள் மிக முக்கியமாய் கருதியப்படியால் ஒய்வு நாளைவிட மாதப் பிறப்பை விசேஷமாய் ஆசரித்தனர் (ஒசி. 2:11; ஏசா. 1:13; எண். 28:11–15; எசே. 47:4–7). ஆனால் யூதர்களோ மாதப் பிறப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. புதிய ஏற்பாட்டுக் காலத்திலோ நாட்களையும் மாதங்களின் விசேஷத்தன்மைகள் வருங்காரியங் களின் நிழலாய் இருக்கிறதென்று வேதம் கூறுகிறது (கொலோ. 2:18–19).

இஸ்ரவேலர் கொண்டாடிய 1. பஸ்கா பண்டிகை (Passover *or* the feast of unleavened) 2. பெந்தெகொஸ்தே பண்டிகை (Weeks *or* Pentecost) 3.கூடாரப் பண்டிகை (Tabernacles *or* Booths - *sukkoth*) போன்றவற்றை இன்னும் விளக்கமாக ஆராயலாம். இஸ்ரவேலர் பல்வேறு இடங்களில் வசித்தாலும் இப்பண்டிகை நாட்களில் எருசலேமுக்கு வந்து பண்டிகையைக் கொண்டாடுவது வழக்கமாயி ருந்தது. என்றாலும் பின்நாட்களில் இஸ்ரவேலர் பல்வேறு நாடுகளில் குடியேறிய படியால் வருடத்தில் மூன்று முறை எருசலேமுக்கு வருவது கூடாமற்போயிற்று.

**3. பஸ்கா பண்டிகை (PASSOVER *(or)* THE FEAST OF UNLEAVENED):-** எபிரேயர் எகிப்திலிருந்து மீட்கப்பட்டு கானானுக்கு புறப்படும் முதல் நாளில் அவர்கள் ஆசரித்த பண்டிகையே பஸ்கா பண்டிகையாகும். எகிப்தியர் மேல் வாதையை அனுப்பும்படி தேவன் அவர்களது முதற்பேறான பிள்ளைகள் அனைத்தையும் சங்கரித்தார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரின் முதற்பேறு அனைத்தையும் காக்கும் படி இஸ்ரவேல் புத்திரரை பஸ்கா பலியை செலுத்தும்படி கட்டளையிட்டார். எந்தெந்த வீட்டின் வாசல்களிலும் நிலைக்கால்களிலும் பஸ்கா ஆட்டுக் குட்டியின் இரத்தம் பூசப்பட்டிருந்ததோ அந்தந்த வீடுகளில் உள்ள முதற்பிள்ளைகள் சங்கரிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டனர். எனவே எகிப்திலிருந்து பெற்ற விடுதலையும் பஸ்கா பண்டிகையும் ஒன்றாகவே கொண்டாடப்பட்டது.

வேத ஆராய்ச்சியாளர்களின் கணக்கின்படி முன்நாட்களில் இஸ்ரவேலர் மேய்ப்பர்களின் பண்டிகை (Shepherd's Feast), தலையீற்றை மீட்டுக் கொள்ளும் பண்டிகை (Firstlings of the Flock - யாத். 13:12; 34:19) என்ற இரண்டு விதமான பண்டிகைகளை ஆசரித்தனர். மேய்ப்பர்களின் பண்டிகை என்பது புளிப்பில்லாத

அப்பத்தைப் புசிக்கும் பண்டிகையாகும். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்படுவதற்கு முன்பாகவே இந்த பண்டிகையை ஆசரித்து வந்தனர் என்று கூறப்படுகின்றது. தலையீற்றை மீட்டுக்கொள்ளும் பண்டிகையின்போது ஒரு ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு பலிசெலுத்தப்படும். எனவே தான் மோசே பார்வோனிடத்தில் தேவனை ஆராதிக்க அனுமதி கேட்கும்போது தேவனுக்கு பலியிடும்படி நாங்கள் செல்லவேண்டுமென்று அனுமதி கேட்டான் (யாத். 5:1–3). புளிப்பில்லாத அப்பம் புசிக்கும் பண்டிகையைக் குறித்து யாத்திராகமத்திற்கு முன்பு வேதத்தில் ஆதாரங்கள் இல்லையென்றாலும் பின் நாட்களில் இந்த இரண்டு பண்டிகைகளுமே ஒன்றாக்கப்பட்டு பஸ்கா பண்டிகையாக கி.மு. 7 ஆம் நூற்றாண்டு வரை கொண்டாடப்பட்டது.

பஸ்காவானது யூதர்களின் நிசான் மாதத்தின் 14 ஆம் நாளான முழு நிலவு தினத்தன்று கொண்டாடப்படும். பஸ்காவின்போது அதை ஆசரிக்க தங்களை சுத்திகரித்துக் கொள்ளாதவர்களுக்காகவும், சமய ஒழுங்கின்படி அன்றைய தினம் ஆசரிக்க தகுதியற்றவர்களுக்காகவும் ஒரு மாதத்திற்கு பின்பு இரண்டாம் பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்டது (எண். 9:1–14). நிசான் மாதத்தின் 10 ஆம் நாள் பஸ்காவிற்கென ஒரு ஆட்டுக்குட்டி தெரிந்தெடுக்கப்படும் (யாத். 12:3–6). பஸ்கா தினம்வரை இந்த ஆட்டுக்குட்டி கண்காணிக்கப்பட்டு பஸ்காவன்று அது அடிக்கப்படும். ஆட்டுக் குட்டியின் இரத்தம் ஈசோப்பின் கொழுந்தில் தோய்க்கப்பட்டு ஒவ்வொரு வீட்டின் வாசல்களிலும் நிலைக்கால்களிலும் பூசப்படும் (யாத். 12:21–22). அதன்பின்பு அந்த ஆட்டுக்குட்டி நெருப்பில் சுடப்பட்டதாய் புளிப்பில்லாத அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் புசிக்கப்படும். பஸ்காவைப் புசிப்போர் தங்கள் அரைகள் கட்டப்பட்டதாய், பாதரட்சைகளைக் கால்களில் தொடுத்து, கைகளில் தடியைப் பிடித்துக்கொண்டு புறப்படுவதற்கான ஆயத்தத்தோடு வேகவேகமாய் புசித்தனர் (யாத். 12:8,11).

நிசான் மாதத்தின் 14 ஆம் நாள் முதல் 21 ஆம் நாள் வரை புளிப்பில்லாத அப்பம் புசிக்கப்படும். புளிப்புள்ள அப்பத்தை அந்நாட்களில் வீடுகளின் எல்லைகளிலிருந்து விலக்கிவிடுவர் (யாத். 12:14–20). இந்த பஸ்கா பண்டிகையானது தலைமுறைதோறும் வருகின்ற சந்ததிக்கு நினைவுகூறும்படியாகவும் சமயம் சார்ந்த கல்வியை போதிக்கும்படியாகவும் ஆசரிக்கப்பட்டது (யாத். 12:14,27).

கானானுக்குள் பிரவேசித்த பின்பு மக்கள் தொழுதுகொள்ளும் ஆராதனை ஸ்தலத்தைக் குறித்த காரியங்களையும் தேவன் அவர்களுக்கு வெளிபடுத்தியிருந்தார் (உபா. 16:2,5–6, 16–19). என்றாலும் கானானுக்குள் பிரவேசித்தபின் மக்கள் எசேக்கியாவின் காலம்வரை நெடுநாட்களாக பஸ்கா பண்டிகையை ஆசரிக்காமல் அதை மறந்துபோயினர். அரசன் எசேக்கியாவும் (2நாளா. 30:1–27) யோசியாவும் (2நாளா. 35:1–19) தங்கள் காலத்திலே பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும்படி மறுபடியும் மக்களை ஆயத்தப்படுத்தி பஸ்காவை கொண்டாடினர். முதல்

பஸ்காவை ஆசரிக்க ஆயத்தமற்ற மக்களை இரண்டாம் மாதத்தில் இரண்டாம் பஸ்காவை ஆசரிக்கும்படி எசேக்கியா கூறினான் (2நாளா. 30:2–3).

**4.வாரங்களின் பண்டிகை (THE FEAST OF WEEKS):-** பஸ்கா பண்டிகையின் ஏழு வாரங்களுக்குப் பின்பதாக வாரங்களின் பண்டிகை கொண்டாடப்படுவதால் அதற்கு இப்பெயர் வழங்கப்பட்டது. பஸ்கா பண்டிகையின் ஏழு வாரங்களுக்குப் பின்பு கோதுமையின் அறுவடை முடிவுறும் (உபா.13:9). எனவே இந்த அறுவடை யின் பின்பு இந்த பண்டிகை கொண்டாடப்படுவதால் அதற்கு அறுப்பின் பண்டிகை (Feast of harvest-யாத். 23:16) என்றும் முதற்கனிகளை செலுத்தும் பண்டிகை (Feast of the first fruits-எண். 28:26) என்றும் மற்றொரு பெயருண்டு.

கிரேக்க மொழி வழக்கில் வந்த காலத்திற்குப்பின்பே இது பெந்தெகொஸ்தே (Pentecost) பண்டிகை என்று அழைக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே என்ற வார்த்தைக்கு 50 என்பது கிரேக்க பொருளாகும். பஸ்கா பண்டிகையின் 50வது நாள் பெந்தெகொஸ்தே பண்டிகையாக அனுசரிக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டின் காலத்திலோ இந்த 50 ஆம் நாளை கணக்கிடுவதில் சில கருத்துவேறுபாடுகள் நிலவியது. பஸ்காவை அடுத்து வருகின்ற முதல் ஓய்வு நாளிலிருந்து 50வது நாளை பெந்தெகொஸ்தே பண்டிகையாக சதுசேயர்கள் கணக்கிட்டனர். இந்த கணக்கின்படி வாரங்களின் பண்டிகையானது எப்பொழுதுமே வாரத்தின் முதல் நாளில் வந்துவிடும்.

பஸ்கா பண்டிகையின் 50வது நாளை பெந்தெகொஸ்தே நாளாக பரிசேயர்கள் கணக்கிட்டனர். இவர்களது கணக்கின்படி வாரங்களின் பண்டிகையானது ஒரு வாரத்தின் ஏதாவது ஒரு நாளில் வரும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சதுசேயர் கூட்டத்தின் ஆதிக்கம் அதிகமாய் இருந்தபடியால் கிறிஸ்தவ பெந்தெகொஸ்தே நாளானது ஞாயிற்றுக்கிழமையன்றே கொண்டாடப்பட்டது. ஆனால் நவீன காலத்திலோ பரிசேய மார்க்கத்தை சார்ந்த யூத முறைபடி பெந்தெகொஸ்தே பண்டிகையானது (Jewish *shavuoth* - weeks or pentecost) எந்த நாளிலும் கொண்டாடப் படுகிறது.

பெந்தெகொஸ்தே பண்டிகையானது ஒரே ஒரு நாள் மாத்திரம் அனுசரிக்கப்படும். அந்த நாள் சபை கூடும் பரிசுத்த நாளாகவும் சாதாரணமான எந்த வேலையையும் செய்யலாகாத ஓய்வு நாளாகவும் அனுசரிக்கப்பட்டது (லேவி. 23:21). புளிப்புள்ள மாவினால் செய்யப்பட்ட இரண்டு அப்பங்கள் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட் டப்படும். சர்வாங்க தகனபலி அல்லது பாவ நிவாரணபலி அல்லது சமாதானபலியோடு சேர்த்து இந்த பலி செலுத்தப்படும் (லேவி. 23:17–19). எனவே வாரங்களின் பண்டிகையானது கர்த்தருக்கு நன்றிசெலுத்தும் பண்டிகையாகவே அனுசரிக்கப் பட்டது. புளிப்புள்ள அப்பத்தை கர்த்தருக்கு செலுத்தும் ஒரே பண்டிகை இது என வேதம் கூறுகிறது. அசைவாட்டும் இந்த பலியின் ஒரு பகுதி ஆசாரியர்களுக்கு செலுத்தப்படும் என்று ஒரு சிலரும், புளிப்புள்ள அப்பம் சுட்டெரிக்கப்படும் என்று

வேறு சிலரும் கூறுகின்றனர் (யாத். 29:24; லேவி. 2:11–12; 7:34). வாரங்களின் பண்டிகையானது கர்த்தர் சீனாய் மலையில் மோசேயிடம் பிரமாணங்களை கொடுத்த நாளோடு சேர்த்து நினைவுகூறப்படுகிறது (யாத். 19:1). பின் நாட்களில் மற்றெந்த பண்டிகைகளுக்கும் இல்லாத விதத்தில் இந்த பண்டிகைக்கு இஸ்ரவேலர் எருசலேமுக்கு பிரயாணப்பட்டு செல்லும் வழக்கத்தை கடைப்பிடித்தனர்.

**5. கூடார பண்டிகை (THE FEAST OF TABERNACLES):-** இலையுதிர் காலத்தி லுள்ள அறுப்பின் பண்டிகையை கூடார பண்டிகை என்று கூறுவர். எபிரேயர்கள் பரிசுத்தமாகவும் மிக சிறப்பாகவும் கொண்டாடும் பண்டிகை இது என யூத சரித்திர ஆராய்ச்சியாளரான ஜோஸிபஸ் கூறுகின்றார் (The holiest and greatest of Hebrew feast - *Antiquities* VIII. iv.1). ஏழு நாட்கள் கொண்டாடப்படும் இந்தப் பண்டிகை யூதர்களின் ஏழாம் மாதமான திஸ்ரி மாதத்தின் 15ஆம் நாள் துவங்கும். முதலாம் நாளும் எட்டாம் நாளும் விசேஷித்த சபை கூடுகைநாளாகும் (லேவி. 23:33–36). பின் நாட்களில் எட்டாம் நாள் பிரமாணத்தின் மகிழ்ச்சியின் நாளாக கொண்டாடப்பட்டது (The joy of law-*Simhat Torah*). இப்பண்டிகையின் முதல் நாளிலே 13 காளைகளும் அதையடுத்து ஒவ்வொரு நாளும் 12,11,10,9,8,7 என ஒவ்வொரு நாளும் காளைகள் பலியிடப்படும் ஆக ஏழு நாட்களும் மொத்தமாக 70 காளைகள் பலியிடப்படும்.

இஸ்ரவேலர்கள் இந்தப் பண்டிகையின்போது ஏழு நாட்கள் கூடாரங்களில் (Booths-*sukkoth*) (லேவி. 23:41) குடியிருப்பர். வயல்வெளிகளில் விளைச்சலை காவல் செய்யும் காவற்காரர்கள் இப்படிப்பட்ட கூடாரங்களில் குடியிருப்பது இஸ்ர வேலில் வழக்கம். வனாந்திரத்தில் இஸ்ரவேலர் 40 ஆண்டுகள் அலைந்து திரிந்து கூடாரங்களில் குடியிருந்ததை நினைவுகூறும்படி இப்படிப்பட்ட கூடாரப் பண்டிகை இஸ்ரவேலரால் ஆசரிக்கப்பட்டது. இன்றைய நாட்களிலும் நவீனகால இஸ்ர வேலர் தங்கள் வீடுகளில் ஒரு பகுதியில் இதுபோன்ற கூடாரத்தை உண்டு பண்ணி கூடாரப் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

கூடாரப்பண்டிகை மற்ற பண்டிகைகளைவிட மகிழ்ச்சியோடு கொண்டாடப்படும் பண்டிகையாகும். திராட்சைப் பழ அறுப்பின்போது இந்த பண்டிகை கொண்டாடப் படுவதால் அனைவரும் திராட்சை ரசம் அருந்தி மனமகிழ்ச்சியோடு இருப்பர். கூடாரப் பண்டிகையின்போது தேவாலயத்தில் வந்து ஜெபித்த அன்னாள், மிகுதியான திராட்சை ரசத்தை அருந்தியதால் வெறித்தவளாய் தேவாலயத்தில் புலம்புகிறாள் என்று ஆசாரியனாகிய ஏலி நினைத்தான் (1சாமு. 1:14–15). புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் கூடாரப் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. தேவாலயமும் அதை சுற்றியுள்ள பகுதியும் பண்டிகையின் முதல் நாளன்று அலங்கார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.கீத வாத்தியங்களும் இசைகளும் முழங்க நடனமாடி மக்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர். இந்த நடன நிகழ்ச்சி ஸ்திரீகளின் கூடாரம் வழியாய் கடந்துவரும்.

நவீன கால யூதர்கள் பண்டிகை கொண்டாட்டத்தின்போது தேவாலயத்தைச் சுற்றி தினமும் ஒரு முறையும் கடைசி நாளில் ஏழுமுறையும் வலம் வந்து கொண்டாடுவர் (Simhat Torah). பண்டிகையின் இறுதிநாள் மிகவும் மகிழ்ச்சிகரமான நாளாய் கொண்டாடப்படும். மக்கள் ஊர்வலமாய் கடந்து வரும்போது ஐந்து ஆகமங்கள் கொண்ட சுருளானது அதற்குரிய பெட்டியிலிருந்து எடுக்கப்பட்டு ஊர்வலத்தில் சுமந்து செல்லப்படும். இது வருடத்தின் முடிவை கர்த்தரின் வார்த்தையோடு முடித்து வருட துவக்கத்தை கர்த்தரின் வார்த்தையால் துவங்குவதற்கு அடையாளமாக செய்யப்பட்டது.மற்ற பண்டிகைகளும் ஏழாம் மாதத்தில் கொண்டாடப்படும். அவை புத்தாண்டு நாள் (திஸ்ரி மாதத்தின் முதல் நாள்) (New year's day - Rosh ha-Shanah) பாவநிவர்த்தி செய்யும்நாள் (திஸ்ரி மாதத்தின் பத்தாம் நாள்) ( Day of atonement - *Yom ha-Kippurim* ).

**6. பாவ நிவிர்த்தி செய்யும் நாள் (DAY OF ATONEMENT):-** பாவ நிவிர்த்தி செய்யும் பண்டிகை மற்ற பண்டிகைகளைவிட சற்று வேறுபட்ட விதத்தில் ஆசரிக்கப் படும். வருடத்தின் புனித நாளாக அது கருதப்படும். அந்நாளில் எல்லா மக்களும் உபவாசம் இருந்து தேவனுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, சிறுமைப்படுத்தி பாவ மன்னிப்பிற்காக தேவனது முகத்தை தேடுவர் (லேவி. 16:29–34). மாதத்தின் ஒன்பதாம் நாள் மாலை சூரிய அஸ்தமனத்திலிருந்து மறுநாள் மாலை சூரிய அஸ்தமனம் வரை உபவாசம் அனுசரிக்கப்படும். அந்நாளில் புசியாமலும் குடியாமலும் பாதரட்சைகளை அணியாமலும் ஒரு வேலையும் செய்யாதபடி தங்கள் ஆத்துமாக்களை தேவனுக்கு முன்பாக மக்கள் தாழ்த்துவர்.

அந்நாள் தேசத்தின் பாவத்திற்கென்றும், தேவாலயம் மற்றும் ஆசாரியர்களின் சுத்திகரிப்பிற்கு என்றும் விசேஷமாக திருத்திவிக்கப்பட்ட நாளாக கருதப்பட்டது. பிரதான ஆசாரியனே அந்நாளில் முக்கியமான நபராக கருதப்படுவார். பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் களைத்துவிட்டு சுத்தமாக குளித்து, பரிசுத்தமான சணல் நூல் வஸ்திரத்தை தரித்துக்கொள்ளவேண்டும். ஆசாரியன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவாரணபலியாக ஒரு காளையை பலி செலுத்த வேண்டும். மகா பரிசுத்த ஸ்தலம் நிரம்பும்படியாக தூபவர்க்கத்தால் அந்த இடத்தை நிரப்பி (தேவனுடைய முகத்தை காணாதிருக்கும்படி) காளையின் இரத்தத்தை எடுத்து கிருபாசனத்தின்மேலும் அதற்கு முன்பாகவும் தெளிக்க வேண்டும் (லேவி. 16:14). இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களைத் தெரிந்துகொண்டு அதைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் ஆசரிப்புக் கூடார வாசலில் கொண்டு வந்து நிறுத்தவேண்டும். இரண்டு வெள்ளாட்டுக் கடாக்கள்மேலும் சீட்டுப்போட்டு ஒன்றைக் கர்த்தருக்கென்று தெரிந்துகொண்டு மற்றொன்றை போக்காடாக வனாந்திரத்தில் விட்டுவிட வேண்டும்.

பிரதான ஆசாரியன் தனக்கும் தன் வீட்டாருக்கும் பாவநிவர்த்தி செய்யும் காளையின் இரத்தத்தைக் தெளித்த பின்பு, மக்களின் பாவத்திற்காக வெள்

ளாட்டுக் கடாவைக்கொன்று அதன் இரத்தத்தையும் காளையின் இரத்தத்தைப் போலவே கிருபாசனத்தின்மேலும் அதற்கு முன்பாகவும் தெளிக்க வேண்டும். இவ் வாறாக மக்களுக்காகவும் மக்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்புக் கூடாரத்திற் காகவும் பாவநிவர்த்தி செய்யப்படும். பாவ நிவர்த்தி செய்யும்படி ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து வெளியே வருமளவும் ஆசரிப்பின் கூடாரத்தில் ஒருவரும் இருக்கலாகாது. இதையடுத்து பலிபீடத்திற்கு பிராயசித்தம் செய்யும்படி காளை, வெள்ளாட்டுக் கடாவின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து பலிபீடத்தின் கொம்புகளில் பூசி தன் விரலினால் அதின்மேல் ஏழு தரம் இரத்தத்தை தெளித்து பரிசுத்தப்படுத்தவேண்டும் (லேவி. 16:14–17).

அதன்பின்பு போக்காடாக நியமிக்கப்பட்ட வெள்ளாட்டுக்கடாவின்மேல் ஆசாரியன் தன் இரண்டு கரங்களையும் வைத்து இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களையும் மீறுதல்களையும் அறிக்கையிட்டு அவைகளை அந்த வெள்ளாட்டுக்கடாவின் தலையின் மேல் சுமத்தி, வெள்ளாட்டுக்கடாவை அதற்கான ஆள்வசமாய் வனாந் திரத்திற்கு அனுப்பிவிடவேண்டும். இஸ்ரவேலரின் அக்கிரமங்களை எல்லாம் தன்மேல் சுமந்துகொண்ட அந்த வெள்ளாட்டுக்கடா குடியில்லா தேசத்திற்கு அனுப்பிவிடப்படும் (லேவி. 16:21–22). பின் நாட்களில் இந்த வெள்ளாட்டுக் கடாவை எருசலேமின் கிழக்குப் பகுதியிலுள்ள மலையின் உச்சிக்கு அழைத்துச் சென்று அதைப் பின்புறமாக தள்ளிவிடுவர். இப்படியாக இஸ்ரவேலரின் பாவங்கள் அவர்களிடமிருந்து தள்ளப்பட்டது என்று மக்கள் விசுவாசித்தனர்.

பின்பு ஆசாரியன் தான் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்போது உடுத்திருந்த வஸ்திரத்தைக் கழற்றிவிட்டு, பரிசுத்த இடத்திலே ஜலத்தினால் ஸ்நானம்பண்ணி தன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு வெளியே வந்து தனக்காகவும் மக்களுக்காகவும் சர்வாங்க தகன பலியைச் செலுத்தி பாவ நிவர்த்தி செய்யவேண்டும். பாவ நிவாரண பலியின் கொழுப்பை பலிபீடத்தின் மேல் தகனித்து விட்டு, பாவ நிவாரண பலியாகிய வெள்ளாட்டுக் கடாவையும், காளையையும் பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோய் அவைகளின் தோல், மாமிசம் மற்றும் சாணியையும் அக்கினியிலே சுட்டெரிக்கவேண்டும் (லேவி. 16:25–28). அவைகளை சுட்டெரித் தவன் தன் வஸ்திரங்களைத் தொய்த்து ஜலத்திலே ஸ்நானம்பண்ணி பின்பு பாளயத்திற்குள் வரவேண்டும். இப்படியாக வருடத்தில் ஒரு முறை பரிசுத்த ஸ்தலத்திற்கும் ஆசரிப்பு கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் ஆசாரியருக்கும் ஜனங்களுக்கும் பாவ நிவர்த்தி செய்வது இஸ்ரவேல் புத்திரருக்கு நித்திய கட்டளையாகக் கொடுக்கப்பட்டது.

**7. தேவாலய பிரதிஷ்டைப் பண்டிகை (FEAST OF DEDICATION-*HANUKKAH*):** தேவாலய பிரதிஷ்டை பண்டிகையானது பொதுவாக குளிர்காலத்தில் கொண்டா டப்படும் பண்டிகையாகும். இதைக் குறித்து பழைய ஏற்பாட்டில் நாம் காணமுடிய வில்லையென்றாலும் தள்ளுபடியாகமங்களிலே இதைக்குறித்து கூறப்பட்டுள்ளது

(1மக்கபேயர் 4:54–59). தேவாலயம் அந்தியோகஸ் எபிபனே என்பவனால் தீட்டுப் படுத்தப்பட்ட பின்பு அதன் சுத்திகரிப்பிற்கென்றும் மறு பிரதிஷ்டைக் கென்றும் இப்பண்டிகை கொண்டாடப்பட்டது.கி.மு.165ல் யூதர்களின் சிஸ்லே மாதத்தின் (டிசம்பர்) 25 வது நாள் தேவாலயம் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. இந்த பண்டி கையானது மகிழ்ச்சி நிறைந்ததாயும் ஒவ்வொரு நாள் மாலையும் விளக்குகளை ஏற்றி ஒருவருக்கொருவர் பரிசுகளை அனுப்பி எட்டு நாட்கள் கொண்டாடப்பட்டது.

**8. பூரிம் (PURIM) :-** யூதர்களின் வருடத்தின் பணிரெண்டாம் மாதமாகிய ஆதார் மாதத்தின் 14, 15ஆம் நாட்களில் பூரிம் பண்டிகை கொண்டாடப்படும். இந்த பண்டிகையைக் குறித்து எஸ்தர் புத்தகத்திலே நாம் காணமுடியும் (எஸ்தர் 9:17; 23:23). இது சமய சம்பந்தமான பண்டிகையாகக் கொண்டாடப்படுவதை விட கேளிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்த பண்டிகையாகவே கொண்டாடப்பட்டது. இந்நாட்களில் மக்கள் விதவிதமான வஸ்திரங்களை உடுத்தி, விருந்துண்டு, திராட்ச ரசம் அருந்தி மகிழ்ச்சியடைவர். 'மொர்தெகாய் வாழ்க' என்றும் 'ஆமான் ஒழிக' என்றும் கோஷமிடுவர். இப்பண்டிகையின்போது மிகுதியான திராட்ச ரசம் அருந்தும் மக்கள் மேற்கூறிய இரண்டு கோஷங்களுக்கும் வேறுபாடு தெரியாத அளவிற்கு திராட்சரசம் அருந்தி கொண்டாடுவதால் பண்டிகையை கேளிக்கை யின் பண்டிகை (Adloyada) என்றே கூறுவர்.

## புதிய ஏற்பாட்டு பஸ்கா பண்டிகை
### (PASSOVER IN THE NEW TESTAMENT)

பழைய ஏற்பாட்டு நாட்களைப் போலவே புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் பஸ்கா பண்டிகை விசேஷித்த விதமாய் கொண்டாடப்பட்டு வந்தது. பஸ்கா பண்டிகை யானது குடும்பத்திற்கென கொண்டாடப்படும் பண்டிகையாக இருந்தது. நிஸான் மாதத்தின் 14 ஆம் நாள் மதிய வேளையிலே பஸ்கா ஆட்டுக்குட்டியானது தேவா லயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே பலிசெலுத்தப்படும்.பேதுருவும் யோவானும் பஸ்கா பண்டிகைக்கென ஆயத்தம் செய்ததை நாம் வேதத்தில் காண் கிறோம் (லூக். 22:13).

ஆட்டுக்குட்டியை பலிசெலுத்தி அதன் இரத்தத்தை சிந்திய பின்பு அதன் கொழுப்பானது பலிபீடத்திலே தகனிக்கப்படும். அதன்பின்பு பலி மிருகத்தின் உடலானது வீட்டுக்கு எடுத்துச்செல்லப்படும். குடும்ப சுத்திகரிப்பிற்கென்று இது கொண்டாடப்படுவதால் குடும்பத்தினர் அனைவரும் அந்த பண்டிகையில் பங்கு பெறவேண்டும். குறைந்த பட்சம் குடும்பத்தில் 10 நபர்களாவது இணைந்து பண்டி கையைக் கொண்டாடவேண்டும்.

குடும்பத்தினர் அனைவரும் கைகளைக் கழுவியபின், விரிப்புகள் விரிக்கப்பட்ட தரையில் அமர்ந்துகொள்வர். குடும்பத்தின் தலைவர் திராட்சை ரசம் நிறைந்த பாத்திரத்தை எடுத்து அதை ஆசீர்வதித்து அதில் முதலாவதாக ஒரு வாய்

அருந்திவிட்டு அதை மற்ற அனைவரும் ஒவ்வொருவராக அருந்தும்படி எல்லோருக்கும் கொடுப்பர். கசப்பான கீரையில் ஒவ்வொருவரும் சிறிது புசித்தபின் வாசிக்கவேண்டிய வேத பகுதியையும் மார்க்க சம்பந்தமான புத்தகங்களையும் வாசிப்பர். வாசித்து அல்லது ஒப்பிப்பர். அதன்பின் குடும்பத்தில் எல்லாருக்கும் இளைய நபர், 'பஸ்கா ராத்திரி மற்ற ராத்திரிகளைவிட எந்த விதத்தில் வேறுபட்டது?' என்ற கேள்வியை குடும்பத் தலைவரிடம் கேட்கவேண்டும். குடும்பத் தலைவர் அந்தக் கேள்விக்குரிய பதிலை இவ்விதமாய் விளக்கிக் கூறவேண்டும்.

'ஒவ்வொரு காலக்கட்டத்திலும் உள்ள ஒவ்வொரு தனிமனிதனும் எகிப்தில் தான் அடிமையாய் இருந்ததாகவும் தேவன் தன்னை அங்கிருந்து ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் விடுதலை செய்து கொண்டுவந்ததாகவும் கருதவேண்டும். தேவனுடைய இரக்கத்தாலும் வல்லமையுள்ள புயத்தால் மாத்திரமே நான் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டேன்' என்ற வாக்குமூலத்தை குடும்பத் தலைவன் கூறவேண்டும். அதன்பிறகு இரண்டாவது முறையாக பாத்திரத்தில் உள்ள திராட்ச ரசத்தை குடும்பத்தார் அனைவரும் ஒவ்வொருவராய் பருகுவர். சங்கீதம் **113,114** அதிகாரங்களை குடும்பமாக பாடிய பின்பு நெருப்பில் சுடப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியை எல்லோரும் சேர்ந்து புசிப்பர்.

யூத பாரம்பரியத்தின்படி பஸ்கா கொண்டாட்டத்தின் போது புளிப்பில்லாத மூன்று அப்பங்களையும் மூன்று பாத்திரங்களில் திராட்சைரசங்களையும் மேசையின் மேல் வைப்பர். இரண்டு அப்பங்களைப் புசித்துவிட்டு இரண்டு பாத்திரத்திலுள்ள திராட்சை ரசத்தையும் குடும்பமாய் பருகிவிடுவர். மூன்றாவது அப்பத்தையும், திராட்சை ரசமுள்ள பாத்திரத்தையும் கிறிஸ்துவுக்கு முன்னோடியாக வரவிருக்கும் எலியாவுக்கென எடுத்துவைப்பர். அதன்பின்னர் ஆசிர்வதிக்கப்பட்ட மூன்றாவது திராட்சைரச பாத்திரத்தை (Cup of blessing) **(1 கொரி. 10:16 ; 11:25)** ஒருவர்பின் ஒருவராக எல்லோரும் பருகுவர். அதன்பின் சங்கீதம் **115–118** வரை பாடலாக பாடி தேவனை ஸ்தோத்தரிப்பர். கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்ததிரிக்கப்பட்டவர் **(சங். 118:26)** என்ற வரிகளைப் பாடிய பின் நான்காவது திராட்சைரச பாத்திரத்தை ஒருவர் பின் ஒருவராய் பருகுவர். இந்தப் பாத்திரம் எலியாவின் பாத்திரம் (Elijahs's cup) என அழைக்கப்படும்.

சில இடங்களில் குடும்பத்தாரில் ஒருவர் வாசல்வரை சென்று எலியா வருகிறாரா என்று பார்த்துவிட்டு வருவர். எலியா வரவில்லையெனில் எலியா அடுத்த ஆண்டு எருசலேமுக்கு வருவார் (Next year in Jerusalem) என்ற விசுவாச வார்த்தைகளை அறிக்கையிட்டு திரும்பிவருவர். இப்படியாக வரப்போகும் மேசியாவிற்கு முன்னோடியான எலியாவை எதிர்பார்த்து பஸ்காவை ஒவ்வொரு ஆண்டும் ஆசரிப்பர். எனவே பஸ்காவின் கொண்டாட்டம் எகிப்திலிருந்து விடுதலையானதைக் குறிப்பதற்கு மாத்திரமல்ல, மேசியாவான கிறிஸ்துவின் வருகையை எதிர்ப்பார்த்தும் யூதர்களால் இப்படிக் கொண்டாடப்படுகிறது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் விசுவாசத்தினால் உருவாக்கப்படும் புதிய குடும்பத்திற்கு அடையாளமாக ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு பஸ்காவை ஆசரித்தார். "அவர் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து இது உங்களுக்காக கொடுக் கப்படுகிற என் சரீரமாக இருக்கிறது" என்று கூறினார் (லூக். 22:19).

இயேசு சீஷர்களுக்கு பிட்டுகொடுத்த இந்த அப்பம் மூன்றாவதான அப்பம் என்று கருதப்படுகிறது. மட்டுமல்ல "அவர் பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்" (லூக். 22:17) என்று கூறியபோது தன் கையில் எடுத்து ஸ்தோத்திரம்பண்ணியது மூன்றாவதான திராட்சைரச பாத்திரம் என்றும், "போஜனம்பண்ணின பின்பு அவர் பாத்திரத்தை எடுத்து இந்தப் பாத்திரம் உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" (லூக்.22:20) என்று கூறியது நான்காவதான திராட்சைரசப்பாத்திரம் என்றும் கூறப்படுகின்றது. பஸ்கா அப்பத்தைப் புசித்தபின் சங்கீதத்தைப் பாடும்பொழுதே யூதாஸ் காரியோத் மேஜையை விட்டு எழுந்து சென்றிருக்கவேண்டும். அதாவது மூன்றாவது அப்பத்தைப் புசிக்கும் முன்பும், நான்காவது பாத்திர திராட்சைரசத்தையும் பருகும் முன்பும் அவன் எழுந்து சென்றிருக்கவேண்டும் (மத்.26:23–25;யோவா.13:21–30).

◆❖◆❖◆❖◆

10

# பண்ணை வேலைகள்

## (FARM WORKS)

மத்திய கிழக்கு நாடுகளிலும், பாலஸ்தீன தேசத்திலும் பயிரிடுதலும், ஆடு மாடுகள், ஒட்டகம், கழுதைகள் போன்ற மிருகங்களை வளர்த்தலும் முக்கிய தொழிலாக இருந்து வந்தன. கற்காலம் துவங்கி தற்காலம் வரையிலும் பயிரிடும் தொழிலில் பல மாறுதல்களும் முன்னேற்றங்களும் படிப்படியாய் இந்நாடுகளில் வளர்ந்துவந்துள்ளது. மட்டுமல்ல இத்தொழில்களில் புரட்சிகரமான மாற்றங்களும் வளர்ச்சிகளும் உருவாகி இருக்கின்றது.

மனிதன் பயிரிடுதலைக் குறித்த எந்த அறிவும் இல்லாத காலத்தில் மிருகங்களை வேட்டையாடியும், மீன்களைப் பிடித்து புசித்தும் நாட்களைக் கழித்து வந்தான். மனிதன் பயிரிடுதலைக் குறித்த எந்த அறிவும் இல்லாதபடியால் வேட்டையாடிப் புசிப்பதை மாத்திரமே வாழ்வின் பிரதான நோக்கமாய் கொண்டிருந்தான். தங்கு வதற்கென வீடுகளைக்கட்ட அறியாதவனாய் குகைகளிலும், மலைகளிலும் வசித்து வந்தான்.இப்படிப்பட்ட மனிதன் வசித்தகாலம் பழைய கற்காலம் (Old Stone Age or Paleolithic Era) என அழைக்கப்பட்டது. கற்கால மனிதன் கற்களினால் இருக் கைகளையும், கூரிய ஆயுதங்களையும் செய்வதற்கு மாத்திரமே அறிந்திருந்தான்.

இடைப்பட்ட கற்காலத்தில் (Midle Stone Age or Mesolithic Era) இன்னும் சில மாற்றங்களைப் பெற்று, அறிவடைந்து அதன்பின் புதிய கற்காலத்திற்குள் (New Stone Age or Neolithic Era) மனிதன் புகுந்தான். இந்தக் காலத்தில்தான் மனிதன் பயிரிடுவதற்கும், பிராணிகளை வளர்ப்பதற்கும் புது யுத்திகளைக் கண்டு பிடித்தான். மத்திய கிழக்கு நாடுகளில் கி.மு.900–ல் தான் பயிரிடும் தொழில்

பழக்கத்தில் வந்தது. ஆனால் பாலஸ்தீனா தேசத்திலும், எரிகோவிலும் கி.மு. 700– லேயே இந்தத்தொழில் பழக்கத்தில் இருந்து. உதாரணமாக நாபோத்துக்கு ஒரு திராட்சைத் தோட்டம் இருந்ததாகவும் ஆகாப் இராஜா அதைத் தனக்கு கீரைக் கொல்லையாக்கிக் கொள்ள விரும்பியதாகவும் வேதம் கூறுகிறது (1 இரா. 21:1–2). ரூத்தின் காலத்தில் கோதுமை, வாற்கோதுமை பயிரிட்டு அறுவடை செய்யும் தொழில் மக்களின் முக்கிய தொழிலாய் இருந்தது (ரூத். 2). இப்படியாக வேதத்தில் பயிரிடும் தொழிலும், பண்ணை வேலையும் மக்களின் வாழ்வை விட்டு பிரிக்கமுடியாத ஒன்றாக இருந்ததை நாம் காணலாம். இவை தவிர சீதோஷ்ண நிலைகள், மண்ணின் தன்மைகள், பயிரிடும் முறைகள், பண்ணை விலங்குகளை வளர்க்கும் தொழில்கள் போன்றவற்றை குறித்தும் வேதத்தில் காணக்கூடும்.

## 1. சீதோஷ்ண காலமும், பருவமும் (CLIMATE AND SEASONS)

மத்திய தரைக்கடல் நாடுகளில் சீதோஷ்ண சூழ்நிலைகள் அங்கு வீசும் பருவக் காற்று களின் சுழற்சியைப்பொறுத்தே அமைகின்றன.அதிலும் கிழக்குப் பகுதி யிலுள்ள நாடுகளின் தட்ப வெப்பநிலைகளை இந்தப் பருவக்காற்றுகளே நிர்ண யிக்கின்றன. பூமியின் சுழற்சியினாலும் இன்னும் சில இயற்கை நியதிகளாலும் இந்த காற்றுகள் பொதுவாக மேற்கிலிருந்து கிழக்காக வீசுகின்றன. பூமி தன் அச்சில் சுழலும் வேகத்தைப் பொறுத்தும்,சுழற்சியைப் பொறுத்தும் இந்தக் காற் றுகள் குளிர் காலத் தில் வடமேற்காகவும், கோடைக்காலத்தில் தென் மேற்காக வும் வீசுகின்றன. எனவே தான் குளிர்காலத்தில் மழையும், கோடைக் காலத்தில் உஷ்ணமும் அந்நாடுகளில் அதிகமாக இருக்கின்றன.

கோடைக்காலத்தில் சில வேளைகளில் இந்தக் காற்று வடக்கு அல்லது வட கிழக்கிலிருந்து வீசும். அப்பொழுது பாலைவனத்திலுள்ள உஷ்ணத்தின் நிமித்தம் இந்தக் காற்றின் வெப்பம் அதிகமாக இருக்கும். ஆகவே பயிர்களும், பழங்க ளும் இந்தக்காலத்தில் மிகவும் காய்ந்துவிடும் (ஆதி. 41:6 ; எசே. 19:12). இந்தக் கீழ்காற்றுக்கு காம்சின் (Khamsin) என்று பெயர். இந்த வார்த்தை 'ஐம்பது' என்று பொருள்படும். அரேபிய வார்த்தையான ஹாம்சின் (Hamsin) என்ற பதத்திலிருந்து வந்தது. ஏனெனில் இந்தக் காற்றானது மார்ச் மாதத்திலிருந்து மே மாதம் வரை ஐம்பது நாட்களுக்குக் கடுமையாக வீசும். என்றாலும் சில வேளைகளில் வறட்சி யான காலத்தில் எந்த நேரத்திலும் இது வீசக்கூடும். பாலைவனத்தின் வழியே இந்தக் காற்று வீசுவதால் பொதுவாக சிறு மணல் துகள்கள் இந்தக் காற்றிலே ஏராளமாக கலந்து வரும். இக்காற்றினால் மூச்சு திணறல்கூட ஏற்படுவதுண்டு. இப்படி எப்போதாகிலும் மிகுந்த உஷ்ணத்தோடு வீசும் இக்காற்றினால் பயிர் வகை களுக்கு பெரும் பாதிப்பு உண்டாகிவிடும்.

மேற்கிலிருந்து வீசும் காற்றானது பொதுவாக மலைச்சரிவுகள் வழியே வீசுவதால் அது அப்பகுதிகளுக்கு மழையைக் கொண்டுவரும் காற்றாக இருக்கிறது. எனவே மேற்குப் புறத்தின் மலைச்சரிவும் அதை சார்ந்த நிலமும் செழிப்புள்ளதாயும்,

கிழக்குப்பகுதி நிலமோ வறட்சியானதாயும் காணப்படுகின்றது. இந்தக் காற்று களின் பாதிப்பினால் அந்நாடுகளில் திடீரென சில ஊற்றுகளும், ஆறுகளும் உருவாகும். அவைகள் மழையோடுகூடிய புயல்காற்று வீசும்போது பெருக்கெடுத்து ஓடும். ஆனால் கோடைக்காலத்திலோ அவைகள் வற்றிவிடும். இந்த நதிகளும், ஊற்றுகளும் அரேபிய மொழியில் 'வாடி' (Wadi) என்று அழைக்கப்படுகிறது. வேதம் இந்த ஆறுகளை ஜலப்பிரவாகம் (Torrent - *Nahal*) என்று அழைக்கிறது.

இப்படி சீதோஷ்ண நிலைகள் மாறிமாறி வரும் இந்நாடுகளில் தண்ணீர் மிகவும் அரிதாகக் கருதப்பட்டது. எருசலேம், தமஸ்கு நகர வீதிகளில் தண்ணீர் விற்கப் பட்டது (ஏசா. **55:1**). நடைப்பாதையில் இருக்கும் குடிநீர் துரவுகளில் தண்ணீர் பருகுவதற்கு பணங்கள் கொடுக்கப்பட்டது (எண். **20:19**). இதினிமித்தம் சுரக்கும் நீரூற்றுகளினிமித்தம் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டும் மேய்ப்பர்களுக்கிடையே வாக்குவாதமும் ஏற்படுவதுண்டு (ஆதி. **26:20**).

விளைந்திருக்கும் பயிர்களை உஷ்ணக்காற்றுத்தாக்குவதோடு, வெட்டுக்கிளிகள், பச்சைக்கிளிகள் போன்ற பறவை இனங்களும், பூச்சிகளும் தாக்கி சேதப்படுத்து வதுண்டு. வானத்தையே மூடுமளவு கூட்டங்கூட்டமாய் திடீரென பறந்துவரும் வெட்டுக்கிளிகள் தேசத்தில் வந்து பெருத்த சேதத்தை ஏற்படுத்தும். சில மணி நேரங்களுக்குள் அவைகள் பயிர்களின் இலைகளை தின்று, விளைச்சலை சேதப்படுத்திவிடும் (யோவே. **1:4–7**). பயிர்களை தின்று அவைகள் பறந்துசென்ற பின் விளைநிலங்களைப் பார்த்தால் மகாப்பெரிய ராணுவம் நடந்துவந்து சேதப்படுத்தியதுபோல அந்த நிலங்கள் பாழாக்கப்பட்டுகிடக்கும். இப்படிப்பட்ட சம்பவங்களை தேவனிடத்திலிருந்து வரும் சிட்சையாகவே பரிசுத்தவான்கள் கருதினர். அதிகமான மழை, மோசமான பஞ்சம், கீழ்காற்று, வெட்டுகிளிகளால் வரும் பாதிப்பு போன்றவற்றை தேவனின் தண்டனையாகவே இஸ்ரவேலர்கள் கருதினர். ஆனால் புறவினத்து மக்களோ இந்த ஒவ்வொரு பாதிப்பின்போதும் மழை, வறட்சி, பஞ்சம், செழிப்பு போன்றவற்றிற்கென நியமிக்கப்பட்டிருந்த தனித்தனி கடவுள்களிடம் பிரார்த்தனை செய்து ஷேமத்திற்காக மன்றாடினர்.

சீரியாவின் சமவெளிகள் லீபனோன், ஆரான், கலிலேயாவின் கிழக்குப் பகுதிகள், சாரோன் மற்றும் எருசலேம், பெத்லகேம், எபிரோனை சுற்றியுள்ள பகுதிகளும் விளைச் சலுக்காக பெரிதும் பயன்பட்டன. சமவெளிகளில் நிலத்தை பயிரிடும் பொழுது அங்கு தடுப்புச் சுவர்கள், வேலிகள் எதுவும் இல்லாத காரணத்தால் எல்லா நிலங் களுமே பார்ப்பதற்கு பச்சை போர்வையைப் போல காட்சியளிக்கும். ஆனால் மேடு கள் மற்றும் தண்ணீர் நிறைந்த பள்ளத்தாக்குகள் போன்ற இடங்களிலோ கீழ் இருந்து மேல்வரை படிக்கட்டுகள் போல நிலத்தை பண்படுத்தி அமைத்து அதில் பயிரிடுவர். இந்த நிலங்கள் பக்கவாட்டில் ஒன்றோடு ஒன்று இணைக்கப் பட்டிருக்கும்.

மேட்டு நிலங்கள் பொதுவாக முதல் முதல் பண்படுத்தப்படும்போது அங்கிருக்கும் பாறை போன்றவைகள் நிலத்திலிருந்து அகற்றப்பட்டு நிலத்தைச் சுற்றிலும்

பாதுகாப்பான வேலி போல அடுக்கப்படும். சில வேளைகளில் இந்தக் கற்களைக் கொண்டு சிறிய கைப்பிடிச் சுவர்களை எழுப்புவர். குளிர்கால மழையின்போது மண் அரிப்பையும், மண் சரிவையும் இந்த சுவர்கள் தடுத்துவிடும். இப்படி கைப்பிடி சுவர்கள் கட்டப்பட்ட மேட்டு விளை நிலங்கள் சிலவற்றை இந்நாட்களிலும் இஸ்ரவேல் தேசத்தில் நாம் காணமுடியும்.

கோதுமை, வாற்கோதுமை, பெரும்பயறு, சிறு பயறு, கம்பு, தினை, பருப்பு, உளுந்து, சீரகம், கேழ்வரகு போன்ற முக்கியமான பயிர்கள் இஸ்ரவேல் தேசத்தில் அதிகமாக பயிரிடப்பட்டன (யாத். 9:32;ஏசா.38:25; எசே. 4:9 ; தானி. 1:12). என்றாலும் கோதுமை வாற்கோதுமை போன்றவையே அதிகமாக விளைந்தன.

## 2 . நிலத்தைப் பண்படுத்துதல்

ஒவ்வொரு பயிரும் விளைவதற்கு நிலங்கள் வித்தியாசமாய் பண்படுத்தப்படும். அக்டோபர் மாதத்தில் முதற்பருவ மழை பெய்த உடனேயே பயிரிடுபவர்கள் நிலத்தை பண்படுத்த ஆரம்பிப்பர். கடினமான நிலமானது இரு முறை பண்படுத்தப்படும். பொதுவாக விதை விதைப்பவன் விதையைத் தூவிக் கொண்டே செல்லும் போது பின்னால் ஒருவர் நிலத்தை உழுதுகொண்டே வருவர். இதினிமித்தம் விதையானது மண்ணோடு நன்றாக கலக்கப்பட்டு விளைச்சலுக்கு ஆயத்தமாக்கப்படும்.

கலப்பை, சிறு மண்வெட்டி போன்றவைகள் நிலத்தைப் பண்படுத்த பயன்படும் உபகரணங்களாகும். கலப்பையானது பொதுவாக விரிந்து நிற்கும் கொப்புகளுடைய மரத்திலிருந்து வெட்டப்பட்டு தயாரிக்கப்படும். அதன் நுனியில் ஒரு கூரிய உலோகம் பொருத்தப்பட்டிருக்கும். நுகத்தடியில் மாட்டப்பட்டகாளைகள்,எருதுகள், கழுதைகள் இந்தக் கலப்பையை இழுத்துச்செல்லும்.மாட்டையும், கழுதையையும் ஒரே நுகத் தடியில் இணைக்கக்கூடாது என்பது நியாயப்பிரமா ணத்தின் சட்டமாகும் (உபா. 22:10).

மேட்டு நிலங்களில் உள்ள தரைகள் பொதுவாக அதிகமான பாறையும் அதன் மேல்பகுதியில் குறைந்தளவு மண் உடையதாயிருக்கும். மிகுதியாக விளைந்து நிற்கும் முட்செடிகள் வெட்டப்பட்டு நிலம் ஆயத்தமாக்கப்படும். இந்த முட்செடி களை விறகுகளாகவோ விலங்குகளுக்குத் தீவனமாகவோ பயன்படுத்துவர். அதிகமாக முற்கள் உள்ள செடிகள் கட்டாக சேர்க்கப்பட்டு சுட்டெரிக்கப்படும்.

நிலத்தை உழும் மனிதன் ஒரு கையில் கலப்பையைப் பிடித்துக்கொண்டு, மறு கையில் ஒரு கொம்பை வைத்து உழுகின்ற மிருகத்தை ஓட்டுவதோடு அதே கொம்பை பயன்படுத்தி நிலத்திலுள்ள மண்கட்டிகளை உடைத்து கொண்டே செல்வான். இப்படியாக நிலமுழுவதும் பண்படுத்தப்பட்ட பின்பு சமமாக்கப்படும். விதைக்க வேண்டிய தானியத்தை விதைப்பவன் ஒரு கூடையில் எடுத்துக் கொண்டு கைகளால் தானியத்தை அள்ளித் தூவி விதைப்பான். சில வேலைகளில் கலப்பையோடு இணைக்கப்பட்ட ஒரு விதைப்பான் மூலம் விதையானது விதைக்கப்படும்.

விதைக்கப்பட்ட விதைகள் மழைக்காலத்தில் வேகமாக வளர்ந்து, பின்மாரியின் போது கதிர்விடத் துவங்கும். வாற்கோதுமை அறுவடை சீக்கிரமாய் துவங்கி விடும். கோதுமை அறுவடையானது வாற்கோதுமையை விட மூன்று அல்லது நான்கு வாரங்கள் கழித்து துவங்கும். வாற்கோதுமை அறுப்பு யோர்தான் பள்ளத்தாக்குக ளில் ஏப்ரல் முதல் வாரத்திலும், மத்திய தரைக்கடல் பகுதிகளில் ஓரிரு வாரங்கள் கழித்தும், உயரமான மலைப்பகுதிகளில் இன்னும் சில நாட்கள் கழித்தும் நடக்கும். விளைந்த பயிரில் மேற்பகுதியை இடது கையால் பிடித்து கூர்மையான அரிவாள் போன்ற ஆயுதங்களை வலது கையில் ஏந்தி அறுவடை செய்வர்.

அக்டோபர் மாதத்தின் துவக்கத்தில் முதல் பருவ மழை பெய்து நிலமானது உழுது ஆயத்தமாக்கப்பட்டபின் கோதுமை விதைப்பு துவக்கப்படும். தினை கம்பு போன் றவைகள் கோடைக்காலத்தில் விதைக்கப்படும். வாற்கோதுமை போன்றவை பிப்ரவரி மாதத்தின் துவக்கத்தில் விதைக்கப்படும். வாற்கோதுமை அறுப்பு ஏப்ரல் மே மாதத்திலும், கோதுமையானது மே, ஜூன் மாதத்திலும் அறுப்புக்கு ஆயத்தமாகும். மார்ச் மாதத்தில் பெய்யும் பின்மாரியானது விளைந்த பயிரை செழிப்பாக்கி கதிர் கோர்த்திருக்கச் செய்யும். அறுவடைக்கு முன்பு மூன்று மாதங்கள் மழையின்றி இருப்பதால் கதிர்கள் எல்லாம் காய்ந்து அறுப்புக்கு ஆயத்தமாகும்.

யோர்தான் பள்ளத்தாக்குகளில் வாற்கோதுமை அறுப்பானது ஏப்ரல் மாதம் முதல் மாதத்தில் துவங்கும். மற்ற மத்தியதரை நாடுகளில் ஏழு அல்லது பத்து நாட்க ளுக்குப் பின் இந்த அறுவடை துவங்கும். மேற்புறத்திலுள்ள நாடுகளில் இன்னும் சற்று தாமதமாகத் துவங்கும். வாற்கோதுமை அறுப்பிற்கு இரண்டு அல்லது மூன்று வாரங்கள் கழித்து கோதுமையை அறுவடை செய்வர்.

**1. அறுவடை(HARVEST):-** ஒவ்வொரு வகையான தானியமும் விளைவதற் குரிய காலம் முடிந்தபின் அறுவடைக்கு ஆயத்தமாகும் காலத்தில் அறுப்பிற்கு ஆட்களை அனுப்பி அறுவடை செய்யத் துவங்குவர். அறுவடை என்பது இஸ்ர வேல் தேசத்தில் மகிழ்ச்சியோடு செய்யப்படும் ஒரு வேலையாக கருதப்பட்டது. விளைந்து நிற்கும் கதிரின் மேற்பகுதியை இடதுகையால் கையளவு பிடித்து கொண்டு வலது கையில் அறுப்பிற்குரிய அரிவாளை வைத்து அறுப்பது வழக்கம். உலோகங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு கூர்மையான கற்களால் மக்கள் அறுவடை செய்து வந்தனர். வளைந்திருக்கும் ஒரு மரக்கட்டையில்தார் அல்லது நிலக் கீலை கொண்டு, கூர்மையான சிக்கிமுக்கி கற்களை பதித்து, அவைகளைக் கொண்டு அறுவடை செய்வர். உலோகத்தை பயன்படுத்திய காலங்களிலும் இந்தக் கற்கள் அறுவடைக்கு பயன்பட்டன. ஆனால் பிற்காலத்திலோ கி.மு.1200 துவங்கி அறுப்பிற்கென வெண்கலத்திலும் இரும்பிலும் அரிவாள்களை செய்து மக்கள் அவைகளை பயன்படுத்த ஆரம்பித்தனர்.

பொதுவாக பயிர்களோடு வளர்ந்திருக்கும் களைகளானது பயிர்களை விட சற்றுக் குறைவான உயரத்திற்கே வளரும்.எனவே முதிர்ந்த கதிர்களின்

மேற்பகுதியைப் பிடித்து அறுவடை செய்வதால் களைகளையும் சேர்த்து அறுவடை செய்வது தகர்க்கப்படும். அறுக்கிறவன் இப்படியாக கதிர்களை அறுத்து போட்டுக் கொண்டே முன்செல்ல,அறுவடை செய்யப்பட்ட அந்தக் கதிர்களை மற்றொருவர் சேர்த்துக்கட்டி கூடைகளில் அள்ளிக்கொண்டு வண்டிகளிலோ, கழுதைகளின்மேலோ அவற்றை ஏற்றி தூற்றுக்களத்திற்கு கொண்டுசெல்வர் (ஆதி. 37:7 ; ஆமோ. 2:13)

அறுப்பின்போது ஒரு சிறு பகுதியை ஏழைகளுக்கென்றும், ஆதரவற்றவர்களுக்கென்றும் விட்டுவிடுவது இஸ்ரவேல் தேசத்தில் வழக்கமாய் இருந்தது (உபா. 24:19 ; லேவி. 19:9). இப்படியாக விழுந்த பயிர்களை பொறுக்கிறவர்கள், அறுக்கிறவர்கள் பின்னாகச் சென்று விழுந்ததைப் பொறுக்கிக்கொள்வர் (ரூத். 2:3). மட்டுமல்ல பயிர் நிலங்களின் வழியாய் பயணப்பட்டு செல்கின்ற வழிப்போக்கர்களும் தாங்கள் புசிக்குமளவு தானியத்தை பறித்துக்கொள்ள அந்நாட்களில் அனுமதியளிக்கப்பட்டிருந்தது (உபா. 23:25 ; மத். 11:1).

**2. தூற்றுக்களம் (THRESHING FLOOR)** :– அறுவடை செய்யப்பட்ட பயிர்கள் தூற்றுக்களத்திற்கு கொண்டு வரப்படும். ஒவ்வொரு தூற்றுக்களமும் வட்ட வடிவில் ஏறத்தாழ 20–30 அடி விட்ட முடையதாயிருக்கும். ஒவ்வொரு கிராமத்தின் அருகேயும் பரந்த காற்றோட்ட முள்ள ஒரு இடம் களத்திற்கென தேர்வு செய்யப்படும். சிறு குன்றுகளில் உள்ள பாறைகளோ அல்லது வயல்வெளியில் ஒரு சிறு பகுதியோ பொதுவாக தூற்றுக்களமாக பயன்படுத்தப்படும். பொதுவாகக் காற்று அடிக்கும் பகுதிகளிலுள்ள குன்றுகளும், களங்களும் இதற்கென பயன் படுத்தப்பட்டன. நிலமானது சுத்தப் படுத்தப்பட்டு, பண்படுத்தப்பட்டு சமமாக்கப்படும். தூற்றப்படுகிற பதறானது மற்ற இடங்களுக்கு பறந்து செல்லாதபடி கற்களை அடுக்கியோ, தடுப்புச்சுவர் கட்டியோ பாதுகாப்பை ஏற்படுத்துவர்.

கட்டுகளாகக் கட்டப்பட்ட பயிரானது தூற்றுக்களத்திற்குக் கொண்டுவரப்பட்டு அங்கே வெயிலில் காயவைக்கப்படும். தூற்றுக்களத்தில் சேர்க்கப்பட்டபயிர்களைக் காவல்செய்வதற்கென அந்தந்த நிலத்தின் சொந்தக்காரர் இரவு நேரங்களில் வயல்வெளிகளில் தங்கிவிடுவர் (ரூத். 3:2). தூற்றுக்களத்தில் ஏறத்தாழ ஒரு அடி உயரத்திற்கு கதிர்களைப் பரப்பி வைத்து அதன் மேல் மாடு, கழுதை போன்றவற்றைக் கொண்டு போரடிக்கத் துவங்குவர். பயிர்களைத் தூற்றுவதற்கு முன்பு தானியத்தை போரடிக்க தடிகளோ அல்லது இரும்புக் கருவிகளோ பயன் படுத்தப்பட்டன. சிறிய அளவு தானியங்களையும் மிளகு, லவங்கம் போன்ற வாசனைப் பொருட்களையும் போரடிப்பதற்கு மரத்தாலான தடிகள் பயன் படுத்தப்பட்டன. ஆனால் பெரிய அளவிலான தானியங்களை போரடிப்பதற்கோ இரும்புக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. சில வேளைகளில் மாடுகள், கழுதைகள் போன்ற மிருகங்களை அந்த பயிர்களின்மேல் முன்னும் பின்னும் சுற்றி சுற்றி நடக்க வைத்து தானியத்தைப் போரடிப்பர்.

நான்கு அல்லது ஐந்து அடி நீளமுள்ள நுனியில் வளைந்த பலகைகள் தேர்ந் தெடுக்கப்பட்டு ஆணிகளால் ஒன்றோடு ஒன்று பொருத்தப்படும். பலகையின் அடிப்பகுதியில் கற்கள் மற்றும் இரும்புத் துண்டுகள் பொருத்தப்பட்டிருக்கும். அந்தப் பலகையின் மேலுள்ள இருக்கையில் ஒரு மனிதன் அமர்ந்திருக்க அந்தப் பலகையை மாடு மற்றும் கழுதைப்போன்ற விலங்குகள் இழுத்துச் செல்லும். இப்படியாக தானியம் முற்றிலுமாய் கதிரிலிருந்து விழும்வரை காலை முதல் மாலை வரை போரடிக்கப்படும் (ஆமோ.1:3). போரடிக்கிற மாட்டை ஒருவரும் வாய் கட்டுவது இல்லை (உபா. 25:4 ; 1 கொரி. 9:9 ; 1 தீமோ. 5:18).

போரடிக்கப்பட்ட தானியங்கள் காற்று வீசும்போது முறத்தாலோ, தூற்றுக் கூடையாலோ தூற்றப்படும் (ஏசா. 30:24). போதுமான அளவு காற்று வீசும்போதே தானியங்களைத் தூற்றத்துவங்குவர். மதியவேளையின் பின்பகுதியில் காற்று சற்றுவேகமாக வீசுவதால் அந்நேரங்களில் இந்த வேலையைத் துரிதமாகச் செய்வர். லேசான பதரானது காற்றினால் அடித்துசெல்லப்பட்டு, தானியங்கள் நிலத்திலே விழும் (சங். 1:4).

எல்லா தானியத்தையும் தூற்றிமுடித்தபின்பு மீதியிருக் கின்ற பதர்கள் சுத்தம் செய்யப்பட்டு சல்லடையினால் சலிக்கப்பட்டு முறத்தினால் புடைத்து எடுக்கப் படும் (ஏசா. 30:28 ; ஆமோ. 9:9 ; லூக். 22:31). எல்லா தானியமும் போரடித்து தீரும்வரை ஏற்கெனவே போரடிக்கப்பட்டதை களத்தின் நடுவிலே குவியலாக சேர்த்து வைக்கப்படும். அறுவடை துவங்கி திராட்சைப் பழம் அறுப்புக்கு ஆயத்த மாகும்வரைக்கும் (ஆகஸ்ட்) போரடிக்கிற வேலை நடைபெறும். பெரிதளவு விளைச்சல் உண்டாகும் இடங்களிலோ இவைகள் செப்டம்பர் வரை தொடரும்.

சுத்தம்செய்யப்பட்ட தானியங்கள் கூம்பு வடிவிலே களத்தின் மத்தியில் சேர்த்துவைக்கப்படும். அதை மரப்பலகைகளினால் பக்கவாட்டிலும் மேற்புறத்திலும் சமப்படுத்துவர். இதற்கு முத்திரையிடுதல் என்று பெயர். அரசாங்க அலுவலர்கள் வந்து வரித்தானியத்தை வாங்கும்வரை இந்த முத்திரை உடைக்கப்படாதிருக்கும். அதன்பின்னர் இவைகளை நிறுத்து அளவிடுவர். சுத்தம்செய்யப்பட்ட தானியங்கள் புதைக்கப்பட்ட மண்பாண்டங்களிலோ அல்லது வீடுகளிலுள்ள உயரமான தாழிக ளிலோ, தானிய களஞ்சியங்களிலோ சேர்த்துவைக்கப்படும். அரண்மனைபோன்ற இடங்களில் தானியங்களை சேர்த்துவைப்பதற்கு மிக உயரமான தானிய களஞ்சியங்கள் கட்டப்பட்டிருந்ததாக தொல்பொருள் ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

பயணம் செய்யும்போதும் யுத்த நேரங்களிலும், அறுப்பின்போதும் வறுத்த அல்லது சுடப்பட்ட தானியத்தை மக்கள் உணவாக உட்கொள்ளுவர் (லேவி. 23:14 ; ரூத். 2:14). மற்றவேளைகளிலோ தானியத்தை இடித்து மாவாக்கி அப்பங்களாக சுட்டு சாப்பிடுவர். வாற்கோதுமையானது மற்ற கோதுமைகளைவிட குறைவான விலையுள்ளதால் அது ஏழைகளின் உணவாக இருந்தது (2 இரா. 7:1). பொதுவாக கோதுமையானது வாற்கோதுமையைவிட இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிக

விலைக்கே விற்கப்பட்டது (2 இரா. 7:1,16,18). ஓட்ஸ் போன்ற தானியங்கள் பாலஸ்தீன தேசங்களில் விளையாதபடியால் குதிரைகளுக்கும் வாற்கோதுமையே உணவாகக் கொடுக்கப்பட்டது.

## 3. திராட்சைத்தோட்டத் தொழில்

திராட்சைத் தோட்டத் தொழிலானது பாலஸ்தீன தேசத்தில் பிரதானமாக செய்யப்பட்ட ஒரு தொழிலாகும். திராட்சைத் தோட்டத்தை பண்படுத்தி திராட்சையைப் பயிரிடும் வேலையைக்குறித்து ஏசாயா 5:1–6–ல் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக திராட்சைச் செடிகள் மலைகளிலேயே பயிரிடப்பட்டன. நிலமானது சுத்திகரிக்கப்பட்டு உழப்பட்டு அதின்பின்பே அங்கு திராட்சைச்செடி பயிரிடப்படும். ஓநாய்கள், சிறுநரி, குழிநரி போன்ற துஷ்ட மிருகங்களிடமிருந்து தோட்டத்தைப் பாதுகாக்கும்படி சுற்றிலும் வேலியடைத்து பாதுகாத்தனர் (உன். 2:15).

எல்லாத் தோட்டங்களிலும் காவற்கோபுரங்களும், திராட்சை ஆலையும் தோட்டத்திற்குள் கட்டப்பட்டிருக்கும். பாலஸ்தீன தேசத்தில் வீசும் கீழ்க்காற்றானது மிகவும் உஷ்ணமுடையதாய் இருப்பதால் திராட்சை அதிகமாக உதிர்த்துவிடும். வடமேற்கு பகுதியிலிருந்து வரும் கடல் காற்றோ குளிர்ச்சிவுடையதாயும் மென்மையாயும் இருப்பதால் அது திராட்சைச் செடிகளை பக்குவப்படுத்தும். நரிகள், ஓநாய்கள், கரடிகள், வெட்டுக்கிளிகள் போன்றவற் றிலிருந்தும் திருடர்கள் வழிப்போக்கர்கள் போன்றவர்களிடமிருந்தும் திராட்சைத் தோட்டத்தைக் காப்பதற்காக காவலாளிகள் நியமிக்கப்பட்டிருப்பர்.

ஒரு காவற்காரர் ஒரு தோட்டத்தையோ பல தோட்டங் களையோ ஒரே வேளையில் காவல் செய்வார். காவற்காரர்கள் இரவு பகல் எல்லா நேரங்களிலும் விழித்திருக்க வேண்டியது அவசியம். இரவு வேளைகளில் தோட்டத்தை சுற்றிவந்து எதிரிகளை கண்காணிக்க வேண்டியது அவசியமாய் இருந்தது. பகல் வேளைகளிலோ தோட்டத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருக்கும் காவற்கோபுரத்தில் அமர்ந்து தோட்டத்தைக் காண்காணிப்பர்.தோட்டத்தின் நடுவில் ஓர் உயரமான இடத்தில் காவற் கோபுரம் அமைக்கப்படும் (ஏசா.1:8).நான்கு உறுதியான கொம்புகள் தரையிலே நாட்டப்பட்டு அதன் நடுப்பகுதியில் உட்கார்வதற்கான பலகை அமைக்கப் பட்டிருக்கும். அதன் மேற்பகுதி முழுவதிலும் கர்வாலி மரக்கிளைகளால் கூரை வேயப்பட்டிருக்கும். இந்தக் காவற் கோபுரத்தில் அமர்ந்து காவற்காரர்கள் பகலில் தோட்டத்தை காவல் செய்வர்.

திராட்சைப்பழ காலம் முடிந்தவுடன் தோட்டம் வறண்ட நிலம்போல இருக்கும். காவற்காரர் ஒருவரும் இல்லாதபடியால் காவற்கோபுரங்கள் எல்லாம் காற்றினாலும் மழையினாலும் தாக்கப்பட்டு கூரைகள் எல்லாம் காற்றில் அடிக்கப்பட்டு போனதால் கோபுரம் சாய்ந்துபோய் குச்சுகள் மாத்திரம் அந்த இடத்தில் அடையாளமாக நிற்கும். கவனிப்பாரற்ற திராட்சைத் தோட்டத்தின் நிலை இப்படித்தான் இருக்கு

மென்று வேதமும் கூறுகின்றது (ஏசா.1:8). சில இடங்களில் சில திராட்சைத் தோட்டங்களில் நிரந்தரமான காவற்கோபுரங்கள் கற்களினால் கட்டுப்படுவதுண்டு. அது காவற்கோபுரமாக பயன்படுவதோடல்லாமல் இளைப்பாறும் இடமாகவும் பயன்படுத்தப்படும். மழைக்காலத்திலும் குளிர்நேரங்களிலும் திராட்சைப் பழங்கள் மிகுதியாக விளைந்திருக்குமெனில் ரசத்தைக் காய்ச்சி தேன் தயாரிப்பதற்கும் இந்த இடத்தை பயன்படுத்துவர்.

திராட்சைத் தோட்டங்களைப் பொதுவாக மலைகளிலும், மலைச்சரிவுகளிலும், மலை அடிவாரத்திலும் பயிரிடுவர். மிருதுவான மண்பாங்குள்ள இடங்களில்தான் திராட்சைச் செடி தாராளமாக வேர் பற்றி நிற்கும். எனவே திராட்சைச் செடி பயிரிடுவதற்கு நிலத்தைப் பண்படுத்துவது மிக முக்கியமான வேலையாகும். நல்ல காற்றோட்டமும் சூரிய வெளிச்சமும் இரவில் பனியும் பெய்யும் இடத்தில் விளையும் திராட்சை தரமுள்ள திராட்சையாக இருக்கும். மலைப்பாங்கான பகுதிகள் திராட்சை பயிரிடுவதற்கு முன்பு அங்குள்ள பாறைகளை உடைத்து மண்ணை சமப்படுத்துவர். படிப்படியாக மேடுகளை அமைத்து ஒவ்வொரு மேட்டைச் சுற்றிலும் கற்களாலான சுவர் எழுப்புவர். சுவர்கள் 2 முதல் 6 அடிவரை உயரமுள்ளதாயிருக்கும். முட்கள், சிறு கற்கள் மற்றுமுள்ள பிசிறுகளை அகற்றிய பின்பே இளம் தண்டுகளைக் கொண்டுவந்து நடுவர்.

பொதுவாக திராட்சைச் செடியை வளர்ப்பதற்கு அவ்வப்பொழுது நிலத்தையும் செடியையும் கவனிக்கவேண்டியது அவசியம். கவனிக்கப்படாத நிலங்களில் முட்கள், களைகள் போன்றவை சீக்கிரத்தில் வளர்ந்துவிடும். மட்டுமல்லாது அதிகமான மழையும் விளைச்சலைப் பாதித்துவிடும் (2 இரா. 25:12 ; நீதி. 24:30–31 ; ஏசா. 5:4). வேகமாக வளரும் கிளைகளுக்கு இடம் உண்டாகும்படி, கிளைகளை நடும்பொழுதே ஒவ்வொன்றுக்கும் இடையே 12 அடி இடைவெளி இருக்கும் படியாக நடுவர். இளம் திராட்சைச் செடியானது சீக்கிரத்தில் கனிக்கொடுத்து விடாதபடி மூன்று வருடம்வரையும் அதன் கிளைகளை நறுக்கிவிடுவர். மூன்றாம் வருடத்தின் முடிவிலே ஏப்ரல் மே மாதங்களில் அதன் கிளைகளில் இன்பமான வாசனையுடைய திராட்சை பூக்கள் பூக்கதோன்றும் (உன். 2:13).

திராட்சைக் கொடியானது வேகமாக வளர்ந்து கொப்புகளை வீசுவதால் அதன் நுனிக் கிளைகள் பிரகாசமுள்ள இளம் பச்சை நிறத்தில் துளிர்த்து நிற்கும். சில கிளைகள் கொப்பு வீசி வேகமாக வளர்வதால் அதிலுள்ள அடர்த்தியான இலைகள் தொங்கி தரையிலே படர்வதோடு தோட்டத்தைச் சுற்றிநிற்கும் சுவர்களிலும் பாறைகளிலும் மரங்களிலும் படரத்துவங்கும். தூரத்திலிருந்து பார்க்கும் பொழுது உயர வளரும் கொப்புகள் ஆரோக்கியமாகவும், பிரகாசமுள்ள தாகவும் காட்சியளிக்கும்.

திராட்சைப் பழங்கள் பழுக்கத் துவங்கும் காலத்தில் காவற்காரர்கள் தோட்டத்தைக் காவல் செய்வர். பலவிதமான வகையை சார்ந்த திராட்சைச் செடிகளை இஸ்ரவேலர் தங்கள் தோட்டத்தில் வளர்த்துவந்தனர். சில குறிப்பிட்ட கிராமங்கள், சில

குறிப்பிட்ட வகையான பழங்களுக்கு பெயர் பெற்றதாக இருக்கும். சிலர் ஒரே தோட்டத்தில் 12 முதல் 20 வகையான திராட்சைகளையும் பயிரிடுவர். வேறு சிலரோ ஒரே ஒரு வகை திராட்சைப் பழத்தை மிக நேர்த்தியான தரமுடையதாக உற்பத்தி செய்து கொடுப்பதில் பெயர் பெற்றிருப்பர். நிறத்திலும், அளவிலும், ருசியிலும் வேறுப் பட்டிருக்கும் திராட்சைப் பழங்களுக்கு பெயர்களும் வெவ்வேறாக இடப்பட்டிருந்தன.

லீபனோனில் வளரும் திராட்சைகளுக்கு **1.** மணப்பெண்ணின் விரல்கள் (Bride's fingers) – மென்மையான நீளவடிவ திராட்சை. **2.** கன்னிகையின் கன்னங்கள் (Maiden's cheeks)- இருபுறமும் சிவந்த நிறமுடைய திராட்சை, **3.** கோவேறு கழுதை யின் தலை (Mule's head) – கொத்துகளோடு கூடிய பெரிய வடிவிலான நீல நிறத்திராட்சை. **4.** கோழியும் குஞ்சுகளும் (Hen & Chickens)– பச்சைவடிவிலான பெரிய திராட்சை களும் அவற்றை சுற்றி அடர்த்தியாக இருக்கும் விதையில்லாத சிறிய திராட்சைகளையும் குறிக்கும்.

திராட்சைப் பழம் விளைந்து நிற்கும் காலம் துவங்கி அறுப்புவரையும் தோட்டத்தைக் காவல் செய்கின்ற காவற்காரர் காவல் கோபுரத்திலேயே அமர்ந்து தோட்டத்தைப் பாதுகாப்பர். சில தோட்டங்களில் திராட்சை ஆலையானது காவல் கோபுரத்தின் அடித்தளத்திலேயே கட்டப்பட்டிருக்கும். திராட்சைச் செடியானது வளர்ந்து வரும் போது நிலத்தின்மேலேயோ அல்லது, அதின் அருகே நாட்டப்பட்ட கனி மரத்தின் மேலேயோ படரும்படி விட்டுவிடுவர் (எசே.19:11; லூக்.13:6). கனி காலம் சமீபித்து கொடிகளில் கனி தோன்றி பழுக்க ஆரம்பித்தவுடன் கனிக் கொடாத கொடிகள் வெட்டிப்போடப்படும் (ஏசா. 18:5 ; யோவா. 15:2).

டிசம்பர், ஜனவரி மாதங்களில் கிளைகளை நறுக்கி சுத்தப்படுத்தும் வேலைகளை செய்வர். கிளைகளில் பூப்பூத்து தழைகள் செழித்திருக்கும்போது இந்த சுத்திகரிப் பின்வேலையை செய்வதில்லை. ஏனெனில் இந்நேரத்தில் சுத்திகரித்தால் கிளை களிலிருந்து ஏராளமான சாறுகள் வெளியேறி அது திராட்சைச்செடியைப் பாதித்து விடும். பொதுவாக தோட்டத்திற்கு சொந்தகாரர்கள் அல்லது குத்தகைக் காரர்கள் தோட்டத்தை பராமரிக்கும்வேலையை செய்வர். குத்தகைக்காரருக்கு தோட்டத்தின் விளைச்சலில் சரிப்பாதியை கொடுத்து விடவேண்டுமென்பது அந் நாட்களின் வழக்கம் (மத். 21:33–41). இஸ்ரவேலருக்கு தேவன் தந்த ஆசீர் வாதத்தின் ஒரு பகுதி, திராட்சைப்பழம் பறிக்கும் காலம்வரைக்கும் போரடிக்கும் காலம் (ஜுலை, ஆகஸ்ட்) இருக்கும். விதைப்பு காலம்வரைக்கும் திராட்சைப்பழம் பறிக்கும் காலம் (செப்டம்பர், அக்டோபர்) இருக்கும் என்பதாகும் (லேவி. 26:5). இப்படியாக தேவனது ஆசீர்வாதம் இஸ்ரவேல் தேசத்தில் ஆண்டுமுழுவதும் இருக்கவேண்டுமென்பதே தேவனின் சித்தமாகும்.

வழக்கமாக ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களே திராட்சைப்பழ அறுப்பின் மாதங்க ளாகும். இந்த அறுவடைக்காலம் இஸ்ரவேலருக்கு மிகுந்த மனமகிழ்ச்சியின் காலமாகும். சிறிய அரிவாளால் திராட்சைப்பழ குலைகளை அறுத்துக் கூடைகளில்

சேர்ப்பர் (வெளி. 14:18). அறுக்கப்பட்ட பழங்களின் பெரும்பகுதி திராட்சை ரசம் செய்வதற்காகவே பயன்படுத்தப்படும். அதன் ஒரு பகுதி வத்தலாக்கப்பட்டு பக்குவப்படுத்தப்பட்டபின் அடுத்த அறுப்பு வரை புசிப்பதற்கென சேர்த்துவைக்கப்படும்.

**திராட்சை ஆலை (WINE MILL):–** ஒவ்வொரு பெரிய திராட்சைத் தோட்டத்திலும் திராட்சை ஆலைகள் கட்டப்பட்டிருக்கும். பாறைகளில் மேலொன்றும் கீலொன்று மாக இரண்டு தொட்டிகள் வெட்டப்படும். இவ்விரண்டிற்கும் இடையே 3 அங்குல இடை வெளி இருக்கும். மேல் தொட்டியானது சற்று பெரிதாகவும், தட்டையாகவும் 1 முதல் 1 1/2 அடி ஆழமுடையதாகவும் இருக்கும். அறுக்கப்பட்ட திராட்சைக் குலைகளை வெயிலில் சற்றுநேரம் காயவைத்து அதன்பிறகு மேல் தொட்டியில் அதை மொத்தமாகக் கொட்டுவர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கள் காலணிகளைக் கழற்றிவிட்டு அந்த ஆலைக்குள் இறங்கி திராட்சைப் பழங்களை கால்களால் மிதிப்பர். அவ்வேளையில் மிகுந்த மகிழ்ச்சியோடு சத்தமிட்டு பாடல்களைப் பாடி மகிழ்வர் (ஏசா. 16:10 ; எரே. 48:33).

இப்படி மிதிக்கப்பட்ட ரசமானது மேல் தொட்டியிலிருந்து கீழ் தொட்டிக்கு இறங்கி வரும். நன்றாக மிதிக்கப்பட்டபின் திராட்சைப்பழங்களின் தோல்களை தனியாக பிரித்தெடுப்பர். மேலும் தட்டையான ஒரு கல்லைக் கொண்டு மீதியான பழத்தின் பகுதிகளை இன்னும் நசுக்கும்பொழுது ரசமானது மேல் தொட்டியிலிருந்து ஒரு துவாரத்தின் வழியாய் கீழ்தொட்டிக்கு வடிந்துவரும். கீழ்தொட்டியானது சற்று அகலம் குறைவாகவும் ஆழம் அதிகமாகவும் இருக்கும். கீழ்தொட்டியின் அடியி லுள்ள ஒரு துவாரத்தின் வழியாக வடிந்துவரும் ரசத்தை பாத்திரங்களில் சேர்த்துவைப்பர்.அந்தக் கீழ்தொட்டிக்கு வரும் ரசமானது புளிக்கவைக்கப்படும். மேல் தொட்டி யிலுள்ள மீதியான பழங்கள் ஒரு பையில் போடப்பட்டு முழுவதும் ரசம் அதிலிருந்து வரும்வரை நன்றாய் பிழியப்படும். இப்படியாக பிரித்தெடுக்கப் பட்ட ரசமானது கற்சாடிகளிலோ, தோற்பைகளிலோ சேர்த்துவைக்கப்படும் (எரே.13:12 ; 48:11 ; மத். 9:17). அந்நாட்களில் மக்களுக்கு திராட்சை ரசத்தைப் பதப்படுத்தும் முறை தெரியாதபடியால் புளிக்கவைக்கப்பட்ட திராட்சை ரசத்தையே அவர்கள் பயன்படுத்தி வந்தனர்.

**புது திராட்சை ரசம்** (**NEW WINE** -Tirosh): என்ற பதம் வேதத்தில் பயன்படுத்தப்பட் டுள்ளது (மீகா. 6:15 ; ஏசா. 65:8 ; நியா. 9:13). ஆனால் புது ரசம் என்பது புளிக்க வைக்கப்படாத ரசத்தைக் குறித்த வார்த்தையல்ல. மேலும் திராட்சை ரசமானது மனிதனின் மனதைக் களிப்பாக்குகின்றது என்றும் வேதம் உரைக்கின்றது (நியா. 9:13 ; சங்.104:115). என்றாலும் திராட்சை ரசத்தை பொதுவாக குடித்து வெறிப் பதற்கே மக்கள் அந்நாட்களில் பயன்படுத்தியபடியால் வேதமும் அதைப் பல இடங்களில் கண்டித்துக் கூறுகிறது (ஏசா. 5:22 ; 28:7,8 ; ஓசி. 7:5). திராட்சைப் பழத்தைப் பிழிந்து எடுக்கப்பட்ட புதிய ரசத்தைக் கட்டியாகுமளவு காய்ச்சி அதை சர்க்கரைபோல அதை பயன்படுத்திவந்தனர். எபிரெயர்கள் அதைத் தேன் என்றே

அழைத்தனர். செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் புதிய திராட்சை ரசத்தை அப்பங்களோடு சேர்த்து புசிப்பது இஸ்ரவேலரின் வழக்கம். உலர்ந்த திராட்சைப் பழங்களை தயாரிப்பதற்கெனவே திராட்சைத் தோட்டத்தின் ஒரு பகுதியை ஒதுக்கியிருப்பர்.

**உலர்ந்த திராட்சை (RAISINS) :-** திராட்சைப் பழங்களை வெயிலில் உலர வைத்து, அதன் மேல் தோல் காய்ந்துவிடாதிருக்க ஒலிவ எண்ணெயை அதில் தடவி பல முறை திருப்பி வெயிலில் உலர்த்துவர். கொத்துக்களாகவோ தனித்தனியாகவோ உலர்ந்த திராட்சைகளை தயாரிப்பதுண்டு. இப்படி வற்றலாக்கப்பட்ட திராட்சைப் பழங்களை சேர்த்துவைத்து குளிர்கால நேரங்களில் அதை ஆகாரமாகப் புசிப்பது அந்நாட்களில் வழக்கம்(1 சாமு. 25:18 ; 30:12 ; 2 சாமு. 16:1 ; 1 நாளா.12:40). வேதாகம நாட்களில் புத்துணர்ச்சி தரக்கூடிய ஆகாரங்களில் ஒன்றாக உலர்ந்த திராட்சையானது அதிகமாக மதிக்கப்பட்டது.

யூதர்களின் ஜெபப் புத்தகத்தில் தேவன் தந்த எல்லா ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்லும் பகுதியில் திராட்சைச் செடியை தேவன் சிருஷ்டித்ததற்காகவும் நன்றி சொல்லும் குறிப்பு ஒன்று இருக்கிறது. பொதுவாக யூதர்கள் அதிகாலையில் உபவாசத்தோடு ஜெப ஆலயத்திற்கு சென்று தேவனைத் தொழுதுவிட்டு வீட்டிற்குத் திரும்பியதும் ஒரு கோப்பை திராட்சை ரசத்தை எடுத்து அதில் ஆசீர்வாதத்தைக் கூறிய பின் அதைப் பருகுவர். எனவேதான் பெந்தெகோஸ்தே நாளன்று சீடர்கள் மதுபானத்தால் நிறைந்திருக்கிறார்கள் என்று பரியாசம் பண்ணப்பட்டபோது பேதுரு எழும்பி நின்று நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிக்கொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணிவேளையாய் இருக்கிறதே என்று கூறினான் (அப். 2:15). அவ்வளவு அதிகாலையில் ஜெபத்தை முடிக்காமல் எவரும் திராட்ச ரசம் பருகுவதில்லை என்பதை மனதில் கொண்டே பேதுரு இவ்விதமாய் கூறியதாக நாம் கருதலாம்.

**அத்திமரம் (FIG TREE) :-**அத்திமரமானது இஸ்ரவேல் தேசத்தில் மக்களால் அதிகமாக வளர்க்கப்பட்டு வந்தது. அந்த நாட்டின் சீதோஷ்ண சூழ்நிலை இந்த மரம் வளர்வதற்கு ஏற்றதாய் இருப்பதால் மக்கள் அதிகமாக இந்த மரத்தை வளர்த்து வந்தனர். அத்திமரமானது கற்கள் நிறைந்த மண்ணிலே எளிதாக வளரும். வருடத்தின் பத்து மாதங்களும் இந்த மரத்தில் கனிகள் காணப்படும். அத்திமரத்தில் இலைகள் எந்த அளவு காணப்படுமோ, அந்த அளவிற்கு கனிகளும் அதில் காணப்படும். எனவே தூரத்திலிருந்து ஒரு அத்திமரத்தை பார்க்கும் ஒருவர் அதில் ஏராளமான இலைகளை பார்க்கும்போதே அது கனியுள்ள மரமென்று கண்டுகொள்வர்.

அத்திமரத்திற்கு ஏராளமான கிளைகள் இருப்பதால் அத்திமரமானது இலையுதிர்காலத்தில் சின்னல்பின்னலான வலைபோல் தோற்றமளிக்கும். கோடைக்காலத்தில் இந்த எல்லாக் கிளைகளிலும் இலைகளும் கனிகளும் நிறைந்திருக்கும். எனவே வழிப்போக்கர்கள் கோடை உஷ்ணத்தைக் குறைக்கும்படி

இதன் அடியில் அமர்ந்து இளைப்பாறுவர். ஒவ்வொரு வீட்டிலும் கூட நிழலுக்காக மக்கள் அத்திமரங்களை வளர்ப்பதுண்டு (1 இரா. 4:25 ; மீகா. 4:4 ; யோவா. 1:48). அத்தி பழங்களைப் பறித்து அப்படியே சாப்பிடுவது மட்டுமல் லாமல் அவற்றைக் காயவைத்து அடைகளாக செய்தும் மக்கள் விரும்பி புசிப்பர். வெளியிடங் களுக்குப் பயணம் செய்பவர்களும் நெடுநாட்கள் யுத்தக்களத்தில் இருக்கும் யுத்த வீரர்களும், வெளிகளில் தங்கி மந்தையை மேய்க்கும் மேய்ப்பர்களும் தங்கள் வழிக்கு ஆகாரமாக அத்திப்பழ அடைகளைக் கொண்டு செல்வர் (1 சாமு. 25:18)

பாலஸ்தீனா தேசத்திலே அத்தி மரமானது 1.முதல்கனி, 2.கோடைக்காலஅத்தி, 3. குளிர்கால அத்தி என மூன்று பருவங்களில் கனிக்கொடுக்கும்.

***1. முதல் கனி*** **(FIRST FRUIT)**(ஏசா. 28:4 ; எரே. 24:2) :– பொதுவாக ஒவ்வொரு ஜூன் மாதத்திலும் அத்திப்பழத்தின் முதற்கனியானது மரங்களில் காணப்படும். இது முதலாம் பருவம். இந்தப் பருவத்தில் எல்லா மரங்களிலும் பழங்கள் காணப் படுவதில்லை. ஒரு சில மரங்களில் சொர்ப்ப எண்ணிக்கையில் பழங்கள் காணப் படும். இவைகள் வழக்கமாக உள்ள அறுப்பின் காலத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே பழுத்து விடும். கோடைக்கால அத்திப்பழங்களைப் போல் அல்லாது, இவைகள் அளவில் பெரிதாய் சதைப்பற்றோடு இருந்தாலும் கோடைப் பழங் களைவிட ருசியிலும், தரத்திலுமோ குறைவாக காணப்படும். இந்தப்பழங்களைப் பொதுவாக மரத்தின் உரிமையாளர்கள் தங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக் கும் முதற்கனி என்று பரிசாக அளிப்பர் (ஓசி. 9:10 ; எரே.24:2 ; நெகே. 3:12).

***2. கோடைக்கால அத்தி*** **(SUMMER FIG)** :– இவைகள் கோடைக்காலத்தில் விளைந்து நிற்கும் கனிகளாகும். இதுவே மிகுதியாக கனிகளைக் கொடுக்கும் பருவகாலமாகும். முதற்கனியைவிட இதன் அளவும் சதைப்பற்றும் சிறிதாக இருந்தாலும் இதன் ருசியும் தரமும் முதற்கனியைவிட அருமையாக இருக்கும். ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இவைகள் உணவுக்காக அதிகம் பயன்படுத் தப்படும். அதிகமாகப் பழுக்கும் கனிகளைப் பறித்து வீட்டின் மேல்தளத்தில் காய வைத்து, குளிர் காலத்துக்கென அவைகளை சேர்த்துவைப்பர் (1 சாமு. 25:18 ; 30:12).

***3. குளிர்கால அத்தி*** **(WINTER FIG)** (உன்.2:13) :– இது குளிர்காலம் துவங்கி, வசந்த காலத் துவக்கம் வரை மரங்களில் காணப்படும் அத்தியாகும். இலையுதிர் காலமுதல் வருஷத்தின் கடைசிவரைகூட இவ்வகை மரங்களில் பழங்கள் காணப் படும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து அத்திமரத்தில் கனியை எதிர்பார்த்து அதைக் காணாதபோது சபித்தது குளிர்கால அத்தியே ஆகும் (மத். 21:18–22). இந்தக் கனிகள் சதைப்பற்றுள்ளதாய் இருந்தாலும் இதன் வாசனை கோடைக்கால அத்தியின் வாசனையைப்போல் இராது. இதன் விளைச்சல் முதற்கனியைவிட அதிகமாகவும், கோடைக்கால கனியைவிட குறைவாகவும் இருக்கும். நல்ல அத்திமரங்கள் நல்ல கனிகளையும் கெட்ட அத்தி மரங்கள் கெட்ட கனியையும் கொடுக்கும் (எரே. 24:8). கெட்ட கனிகள் சுருங்கி, புழுக்களால் நிறைந்து

ருசியற்றதாய், பிசின் நிறைந்ததாய் பார்ப்பதற்கும் புசிப்பதற்கும் விரும்பத்தகாத வைகளாய் இருக்கும். அத்திமரத்தின் இலைகள் பெரியதாய் இருப்பதால் அந்த மரமானது நிழலுக்காக பெரிதும் பயன்படுத்தப்படும் (யோவா.1:48)..இதினி மித்தமே ஆதாம் ஏவாள் இரு வரும் அத்தியிலையைத் தைத்து தங்களை மூடிக்கொண் டனர் (ஆதி. 3:7). அத்திப் பழத்திற்குக் குணமாக்கும் தன்மையும் இருப்பதால் அதை மருந்தாகவும் மக்கள் பயன்படுத்தினர் (2 இரா. 20:7).

அத்திமரமானது வாதுமை மரங்களைப் போலல்லாமல் அதன் துளிர்க்கும் காலம் சற்று தாமதமாக இருக்கும்.அத்திமரத்தின் சிறிய இளம்கிளைகள் தோன்றி, துளிர் விட்டு அதில் இலைகள் வர ஆரம்பிக்கும்போது வசந்தகாலமானது சமீபமாய் இருக்கிறது என்று மக்கள் அறிந்துகொள்வர் (மத். 24:32; மாற். 13:28). மேலும் மொட்டுவிட்டு பூப்பூக்க ஆரம்பிக்கும்போது அந்தப் பூக்களிலிருந்து விசேஷித்த இன்பமான வாசனை பரிமளிக்கும். இவைகள் மரித்தோரின் சரீரத்தில் பூசப்படு கின்ற விசேஷித்த வாசனை திரவியங்கள் போன்று மனம்வீசுவதால் இந்த வாசனைவர ஆரம்பித்ததும் வசந்த காலம் சமீபமாகிறது என மக்கள் அறிந்து கொள்வர் (உன்.2:13).

அத்திமரத்தின் விசேஷித்த தன்மையானது அது துளிர்விட ஆரம்பிக்கும் பொழுதே பூக்களும் மலர ஆரம்பித்துவிடும். இலைகள் மிகுதியாய் தோன்றி யிருக்கும்போது, கனிகளும் கூடவே அதிகமாய் காணப்படும். வசந்த காலத்தின் முடிவில் சில மரங்களின் நுனிக்கிளைகளில் சில இலைகள் காணப்படும். எனவே இலைகளோடு கனிகளும் கூட இருக்கும் என மக்கள் அறிந்துகொள்வர். லூக். 13:6–9–ல் கூறப்பட்டுள்ள அத்திமரமானது கனிகொடாதபடியால் அதை வெட்டிவிட வேண்டுமென எஜமான் நினைத்தாலும் தோட்டக்காரர் அதைத் தடுத்து நிறுத் தினார். இங்கு கனிக்கொடாத தன்மை அதன் மலட்டுத்தன்மையைக் குறிப்பதல்ல. எனவே தான் தோட்டக்காரர் இன்னும் ஓர் ஆண்டு இருக்கட்டு மென்று கூறினார்.

ஆனால் மாற்கு. 11:13–ல் ஆண்டவர் சபித்த அத்திமரத்தின் தன்மையோ வித்தியாசமானது. அது அத்திப்பழக் காலமாய் இல்லையென்று வேதம் கூறுகிறது. ஆனால் தூரத்திலிருந்து பார்க்கும்போதே அந்த மரத்தில் இலைகள் காணப் பட்டதாக வேதம் கூறுகின்றது. எனவே அந்த மரத்தைப் பார்க்கின்ற எவருமே அதில் கனிகள் இருக்குமென கட்டாயம் கருதுவர். ஆனால் அந்த மரமோ இயற்கைப் பிரமாணத்தின்படி இலைகளோடு கனிகளையும் கொடாதபடியால், அதன் வெளிப் புற தோற்றம் மாய்மாலமானது எனக்கருதி ஆண்டவர் அந்த அத்தி மரத்தை சபித்தார். இது உள்ளானக் கனிகள் இல்லாமல் வெளியான மாய்மால தோற்றத்தில் ஆவிக்குரியவகளாக தங்களை காண்பிக்கும் பரிசேயர்களுக்கு அடையாளமாய் இருக்கின்றது. பரிசேயர்களின் மாய்மாலமும் இந்த அத்தி மரத்தின் தன்மையும் ஒன்றாய் இருந்ததினிமித்தமே அப்படிப்பட்ட மாய்மால வாழ்வைக் கடிந்து கொள்ளும் வண்ணமாய் ஆண்டவர் அத்திமரத்தை சபித்தார்.

## 4. தோட்டங்கள்

இஸ்ரவேல் மக்கள் மற்ற பயிர் வகைகளைப்போலவே தோட்டங்களை அமைத்து பராமரிப்பதில் நாட்டம் காட்டினர். அந்நாட்களிலுள்ள தோட்டங்களுக்கு சுற்றும் மதில்கள், புல் தரைகள் போன்ற அலங்காரங்கள் இல்லாவிடினும், வீட்டு ஓரங்களிலும் மலைச்சரிவுகளிலும் மக்கள் தோட்டங்களை அமைத்து பராமரித்து வந்தனர். தரையானது கற்கள், முட்கள் போன்றவற்றை எடுத்தப்பின் சமமாக்கப் படும். மலைச்சரிவுகளிலுள்ள தோட்டங்களில் படிப்படியாக பல அடுக்குகளாக அமைக்கப்படும். கனி மரங்கள் உள்ள தோட்டங்களுக்கு வேலியடைத்து பாதுகாப்பர். மரங்களைச் சுற்றிலும் கொத்தி, எருவிட்டு, பாத்தி அமைத்து, தண்ணீர் பாய்ச்சி பராமரிப்பர். போதுமான அளவு தண்ணீர் ஒவ்வொரு மரத்திற்கும் பாய்ச்சப்பட்டபின்பு கால்களால் பாத்திகளில் வரும் தண்ணீரை அடுத்த மரத்திற்கு திருப்பிவிடுவர். உபாகமம் 11:10–ல் இதையே வேதம் குறிப்பிடுகிறது.

இஸ்ரவேலர் எகிப்து தேசத்தில் அடிமைகளாய் இருந்த காலங்களில் இப்படித்தான் கீரைத்தோட்டங்களுக்கு கால்களால் தண்ணீர் பாய்ச்சினர்.ஆனால் வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசமோ வானத்தின் தண்ணீரைக் குடிக்கும் செழிப்புள்ள தேசமாய் இருந்தபடியால் அங்கு கால்களால் தண்ணீர் பாய்ச்சும் முறை அதிகமாக இல்லாதிருந்தது. ஆறுகளும், நீரூற்றுகளும் மிகுதியாக இருக்கும் இடத்தில் பொதுவாக மக்கள் தோட்டங்களை அமைத்துக் கொண்டனர். ஏற்றச் சால்கள் மூலம் தண்ணீர் தோட்டங்களுக்கு போதுமான அளவு பாயும்படி செய்ததால் தோட்டங்கள் செழிப்புள்ளதாயும், மிகுந்த கனிகளைக் கொடுப்பதாயும் இருந்தது.

ஒலிவமரம், அத்திமரம், எலுமிச்சை, ஆரஞ்சு, கிச்சிலி, மாதுளை, பனைமரம், வாதுமை,திரபிந்து போன்றகனி விருட்சங்கள் அதிகமாக தோட்டங்களில் வளர்க் கப்பட்டது. ஒலிவமரம், அத்திமரம் போன்றவற்றை போதுமான இடைவெளி விட்டு நடுவதால் இடையிலுள்ள வெளிகளில் கோதுமையை மக்கள் பயிரிட்டனர். சில இடங்களில் ஒரே வகையான மரங்களும், சில இடங்களில் பலவகைப்பட்ட மரங் களும் ஒருமிக்க வளர்க்கப்பட்டன. ஆண்டவர் இயேசு கிறிஸ்து அடக்கம்பண்ணப் பட்ட கல்லறைத் தோட்டத்திலும் ஏராளமான ஒலிவமரங்கள் இருந்தன (யோவா.19:41).

வாதுமை மரமானது ஜனவரி மாதத்தில் குளிர்காலங்களில் பூப்பூக்க ஆரம்பிக்கும். பிப்ரவரி மாத துவக்கத்தில் வீசும் காற்று இந்த மரம் வளர்வதற்கு சாதகமான ஒன்றாகும். இலைகள் தோன்றுமுன்பே இதில் பூக்கள் தோன்றிவிடு வதால் தூரத்திலிருந்து இந்த மரத்தைப்பார்க்கும் போது பூக்கள் மாத்திரம் நிறைந்த புல் மெத்தைபோல் அது காணப்படும். பனைமரமானது உயர்ந்ததாயும், செழிப்புள்ளதாயும், மிகுந்த கனிக்கொடுப்பதாயும் காணப்படும். பொதுவாக கடற்கரையோரங்களிலும் தாழ்வான பள்ளத்தாக்குகளிலுமுள்ள கிராமங்களில் இவைகள் விளைந்து நிற்கும். பனைமரமானது அதன் உயரத்திற்கும் கெம்பீரத் திற்கும் பெயர்பெற்றதாய் இருந்ததால் அரபு தேசத்துப் பாடல்கள் பலவற்றிலும்

பனைமரம் பொதுவாக இடம்பெற்றிருக்கும். சாலமோன் அரசனும் தன் பாடல்களில் பனைமரத்தைக் குறித்து கூறியிருக்கின்றான் (உன். 7:7; எரே. 10:5).

காட்டத்தி மரங்கள் வழியோரங்களில் அதிகமாக காணப்படும். இவைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தனித்தனியே காணப்பட்டாலும் பறந்து விரிந்த கிளைகளோடு பிரமாண்டமான உயரமுடையதாய் இருக்கும். பிரயாணத்தில் களைப்படையும் வழிப்போக்கர்கள் இந்த மரநிழலில் தங்கி இளைப்பாறுவதுண்டு. இதன் கனிகளானது இலையில்லாத கிளைகளிலும் மற்றும் சிறிய கிளைகளிலும் காணப்படும். இவை சுவையற்றதாய் இருக்கும். இதன் கனிகளை ஏழைகள் மாத்திரமே பறித்து புசிப்பர். காட்டத்திப் பழங்களை பொறுக்குவதற்கென சிறுவர்கள் சிறுமிகள் அனுப்பப்படுவதுண்டு (ஆமோ. 7:14).

தோட்டத்தில் வளர்க்கும் மரங்களைத் தவிர காடுகளில் வளரும் பலவிதமான மரங்களும் மக்களுக்கு பயனுள்ளவைகளாய் இருந்தன.

***1. சித்தீம் மரம்*** *(Acacia) :-* சீனாய் மலையிலும், யோர்தான் பள்ளத்தாக்குகளிலும் இந்த மரமானது அதிகாக வளர்ந்து நிற்கும். இது உறுதியுடையதாயும் நீடித்து உழைக்கும் தன்மையுடையதுமாய் இருந்தது. எனவே உடன்படிக்கைப் பெட்டி இந்த மரத்தினால் செய்யும்படி தேவன் கட்டளைப் பிறப்பித்தார் (யாத். 25:10–28; உபா.10:3).

***2. கேதுருமரம்*** *(Cedar-Cedrus libani) :-* வேதத்தில் பல இடங்களில் இந்த மரத்தைக் குறித்து கூறப்பட்டுள்ளது. லீபனோனின் வனங்களில் இந்த மரம் அதிகமாய் காணப்படும். தேவாலயத்தைக் கட்டுவதற்கு தாவீதுராஜா காடுகளிலிருந்த கேதுரு மரங்களை வெட்டி, அதிகமதிகமாய் சேர்த்து வைத்தான். சாலமோனும் ஏராளமான கேதுரு மரங்களை வெட்டி தேவாலயப்பணிக்கென அவைகளை பயன்படுத்தினான் (1 இரா. 5:6–10).

***3. தேவதாருமரம்*** *(Cypress) :-* இம்மரங்கள் இஸ்ரவேலில் அதிகமாய் காணப்பட்ட மரங்களில் ஒன்று. வேதத்தில் சில இடங்களில் இது கொப்பேர் மரமென்றும்(ஆதி. 6:14),சில இடங்களில் மருதமரம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது (1 இரா. 5:8–10 ; ஏசா. 41:19 ; 44:14 ; 60:13).

***4. புன்னை மரம்*** *(Fir Plane -Platanus orientalis) :-* வேதத்தில் ஒருசில இடங்களில் மட்டுமே இம்மரங்களைக் குறித்து நாம் காணலாம். யாக்கோபு புன்னை மரத்தின் கொப்புகளை வெட்டி இடையிடையே வெண்மை தோன்றும்படி பட்டையை உரித்து தன் ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும்போது ஆடுகளுக்கு எதிராக அவைகளைப் போட்டுவைத்தான். இதனால் ஆடுகள் குட்டிகளை பொலிந்ததாய் பார்க்கிறோம் (ஆதி. 30:37; ஏசா. 41:19 ; 60:13).

**கதிர் பொறுக்குதல் (GLEANING) :–** அறுவடை காலங்களில் அறுப்பதற்கெனவும்,கதிர் பொறுக்குவதற்கெனவும் தனித்தனியே வேலையாட்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அறுக்கிறவர்கள் அறுத்துக்கொண்டே முன்செல்ல கதிர்

பொறுக்குகிறவர்கள் கதிர்களை கூடைகளில் வாரிக்கொண்டு சென்று களத்தில் சேர்ப்பர். சிறிய வயல்களில் பொதுவாக வயலின் உரிமையாளர்களே கதிர் பொறுக்கும்வேலையை செய்து வருவதுண்டு. பெரிய வயல்களிலோ அறுப்பதற் கென்றும், பொறுக்குவ தற்கென்றும் வேலையாட்கள் கூலிக்கென நியமிக்கப் படுவர். வயலின் உரிமையா ளர்கள் அவர்களது வேலையை மேற்பார்வையிடுவர்.

கதிர் பொறுக்கும்பொழுது ஏழைகளுக்கென்றும், விதவைகளுக்கென்றும் வயலின் ஒரு பகுதியை அறுவடை செய்யாமல் விட்டுவிடுவர். சில இடங்களிலோ வயலை முற்றிலுமாய் சுத்தம் செய் யாமல் ஏழைகளுக்கென விழுந்து கிடக்கும் கதிர்களையும், தானியங்களையும் விட்டுவிடுவர் (ரூத் 2:3–17). அறுத்த கட்டுகள் சிலவற்றை மறதியாக வயல்களில் விட்டுவிட்டுவந்தால் அதை எடுக்க திரும்ப செல்லக்கூடாது என்பது நியாயப் பிரமாணமாகும் (உபா. 24:19).

வயல்களில் அறுவடை செய்வதைப் போலவே ஒலிவ மரத்தின் பழங்களைப் பறிப் பதகென்று ஒரு குறிப்பிட்ட நாளை நியமிப்பதுண்டு. பொதுமக்களுக்கு அந்த நாளை அறிவித்தப்பின் குறிப்பிட்ட அந்த நாளில் மரத்தின் சொந்தக்காரர்கள் பழங்களை வேலையாட்களை வைத்துப் பறித்துக்கொள்வர். ஒரே இடத்தில் பல மரங்கள் இருக் கும் தோட்டத்தின் உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே தங்களுக் கென நாட்களை நியமித்து பழங்களைப் பறிப்பர் (உபா. 24:19). ஒலிவ மரத்தை உதிர்க்கும்போது ஏழைகளுக்கென சில பழங்களை மரக்கொம்பிலே விட்டு விட வேண்டுமென்று நியாயப்பிரமாணம் கூறுகிறது (உபா. 24:20).அதைப் போலவே திராட்சைப்பழ அறுப்பின்போதும் ஒலிவ பழங்கள் பறிக்கும்போதும் ஏழைகளுக் கென ஒரு பகுதியை விட்டுவிடும்படி தேவன் இஸ்ரவேலருக்குச் சொல்லியிருந்தார்.

**ஒலிவ மரம் (OLIVE TREE):–** இஸ்ரவேல் தேசத்தில் காணப்படும் அதிக முக்கியத் துவம் வாய்ந்த மரங்களில் இதுவும் முதன்மை இடத்தில் இருந்ததாகும். வறட்சி யான மணலும், மிகுந்த சூரிய வெப்பமும் இருக்கின்ற இடத்தில் இம்மரங்கள் நன்றாக வளரும். ஒலிவமரத்தின் எல்லாப் பகுதிகளுமே மக்களுக்கு பயன் உள்ள வைகளாய் இருந்து வருகிறது. ஒலிவ எண்ணெயை உணவுக்காகவும், விளக்கு எரிப்பதற்காகவும் மக்கள் பயன்படுத்துவர். மட்டுமல்லாது சில தைலங்களையும், மருந்துகளையும் இந்த மரத்திலிருந்து தயாரிப்பர். ஒலிவ மரத்தின் கட்டையால் வீட்டிற்குத் தேவையான பொருட்களை செய்வதோடு அதை எரிபொருளாகவும் மக்கள் பயன்படுத்துவர்.

மலைச்சரிவு பகுதிகளில் பொதுவாக ஒலிவ மரங்கள் நன்றாக விளையும். சாம்பல் நிறத்தில் தோற்றமளிக்கும் இதன் இலைகள் அதன் மேல்படும் சூரிய வெளிச் சத்தின் தன்மைக்கேற்ப நிறங்கள் மாறிமாறி தோற்றமளிக்கும். அடர்ந்த நிற முடைய அதின் தண்டுகள் தூரத்திலிருந்து பார்க்கும் பொழுது பளிச்சென கண்களுக்கு காணப்படும். ஒலிவ மரமானது செம்மண் நிலத்திலே நன்றாக விளையும் தன்மையுடையது.

ஒலிவ மரத்தின் இளம் தண்டை எடுத்து காட்டு மரத்திலே ஒட்ட வைத்து அதின் மூலமே புதிய மரங்களை உருவாக்குவர் (ரோம. 11:17–18). இப்படி ஒட்டவைக்கப் பட்ட கிளைகள் ஓங்கி வளர்ந்து பலன்கொடுப்பதற்கு 10 முதல் 30 வருடங்களாகும். பல நூற்றாண்டுகள் வரையும் பலன் கொடுக்கும் மரங்களும் இஸ்ரவேல் தேசத்தில் இருந்தன. புறவினத்து மக்கள் இஸ்ரவேல் கோத்திரத்தோடு ஆசீர்வாதத்திற்கு பங்குள்ளவர்களாய் மாறுவர் என்பதற்கு வேதம் இதை உவமையாக கூறுகின்றது (ரோம. 11:24). மேலும் ஒட்டவைக்கப்பட்ட கிளைகள் மிகுந்த கனிகளைக் கொடுக்கும்படி அதின் கிளையின் ஒரு பகுதியில் அதிக கனிக் கொடுக்கும் வேறு ஒரு மரத்தின் கிளையை ஒட்டவைக்கப்படும். ஓங்கி வளர்கின்ற மரம் 20 முதல் 30 அடி உயரம் வரை வளரும். ஒரு மரத்தில் ஒரு பருவத்திற்கு 250 முதல் 300 பவுண்டு ( 113 கிலோ முதல் 135 கிலோ ) வரை ஒலிவக் கனி சேகரிக்கப்படும். ஒரு மரத்திலிருந்து ஒரு பருவத்திற்கு 6 முதல் 20 காலன் (22 லிட்டர் முதல் 75 லிட்டர் ) ஒலிவ எண்ணெய் சேகரிக்கப்படும்.

பொதுவாக ஒலிவ மரங்கள் நடப்பட்டு ஏழு ஆண்டுகளுக்குப் பின் கனி கொடுக்க துவங்கும். என்றாலும் அதன் முழு விளைச்சலும் 14 வருடங்கள் கழிந்தபின்பே பூரணமாய் கிடைக்கும். ஒன்றுவிட்டு ஒரு ஆண்டு என்ற கணக்கில் ஒலிவ மரம் கனிக்கொடுக்கும் தன்மையுடையது. செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் கூடாரப்பண்டிகையின்போது ஒலிவ மரத்தின் கனி பழுத்திருக்கும். பொதுவாக ஒலிவ மரங்கள் கூட்டமாக வளரும். எனவே ஒரு கூட்ட ஒலி மரங்கள் ஒரு நபருக்கோ அல்லது பலருக்கோ சொந்தமானதாக இருக்கும். எனவே ஒவ்வொருவரும் தங்களுக்கென பழங்களைப் பறிப்பதற்கு ஒரு நாளை நியமித்துக்கொள்வர்.

ஒலிவ மரத்தின் கனிகள் முற்றிலும் பழுப்பதற்கு முன்பாக மரத்தை உலுக்கி கனிகளை உதிர்த்துவிடுவர். சில வேளைகளில் கொம்புகளால் அடித்தும், பனை மரத்தின் மடல்களால் அடித்தும் கனிகளை உதிர்ப்பர் (ஏசா. 17:6;24:13). இப்படி உதிர்த்த பின் மீதமுள்ள பழங்கள் ஏழைகளுக்கும் திக்கற்றவர்களுக்குமென மரங் களிலே விட்டுவிடப்படும். உதிர்க்கப்பட்ட பழங்கள் கூடைகளில் சேர்க்கப்பட்டு தொட்டிகளில் கொட்டப்படும். வட்டவடிவமான அல்லது உயரமான திரிகையை பயன்படுத்தி இந்த ஒலிவக்கனிகளை இடித்து பிழிவர் (லேவி. 24:2). இந்த ஒலிவப் பழங்களை இன்னொரு கூடையில் கொட்டி அதிலிருந்து வடிந்துவரும் எண்ணெயைத் தொட்டிகளில் சேகரிப்பர். சில வேளைகளில் சூடானத் தண்ணீரைத் தெளித்து எண்ணெயை மேலே மிதந்து வரும்படி செய்து, அப்படி மேற்புறம் வரும் எண்ணெயைத் தனியே பிரித்து எடுப்பர். இது முக்கியமான வேலைக்கென்று பயன்படுத்தப்படும் சிறந்த எண்ணெயாகும் (யாத். 27:20). இப்படி பிழிந்த பின்மீதியான ஒலிவக் கனியை மேலும் இடித்து அதிலிருந்து கடைசி எண்ணெயைப் பிரித்து எடுப்பர்.

கிட்டத்தட்ட 20 அடி உயரமுடைய ஒலிவமரங்கள் இஸ்ரவேல் தேசத்தில் சாதார ணமாக காணப்படும். எனவே வழிப்போக்கர்கள் மரங்களில் ஏறி பழங்களைப்

பறித்து உண்பர். ஒலிவ மரத்தின் தண்டில் இருந்து தரையை ஒட்டினாற்போல் 5,6,12 அதற்கும் மேற்பட்ட குருத்துக்கள் ஒவ்வொரு மரத்திலிருந்தும் புதிதாக முளைக்கும். இவைகள் மரத்தைச் சுற்றிலும் வட்டவடிவில் அமைந்திருக்கும். எனவேதான் வேதமும் உன் பிள்ளைகள் உன் பந்தியை சுற்றிலும் ஒலிவமர கன்றுகளைப் போலிருப்பார்கள் என்று கூறுகிறது (சங்.128:3).

சாதாரண மக்கள் தங்கள் அப்பத்தோடு ஒலிவப்பழங்களை சேர்த்து ஆகாரமாக உட்கொள்ளுவர். மேலும் சோப்பு தயாரிப்பதற்கும், சமைப்பதற்கும் ஒலிவ எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. சாலமோன் தேவாலயத்தைக் கட்டுவதற்கு ஒலிவ மரத்தை பயன்படுத்தினான். இந்நாட்களிலும் அலங்காரத்திற்காவும், அணிகலன்களுக் கெனவும் ஒலிவ மரத்தை மக்கள் பயன்படுத்துகின்றனர். ஒலிவ மரம்மட்டு மல்லாது மாதுளம், மருதோன்றி, கந்த வர்க்கம், நளதம் போன்ற செடிகளையும், குங்குமம், வசம்பு, லவங்கம், போன்ற சகலவித தூபவர்க்க மரங்களையும், சந்தன விருட்சங்கள், வாதுமை, தெரபிந்து, வெள்ளைபோளம், கந்தப்பிசின்கள் போன்ற மரங்களையும் வளர்த்து வந்தனர் (ஆதி. 43:11 ; உன். 6:11 ; 1 சாமு. 14:2 ; ஆமோ.7:14).

## 5. வீட்டு விலங்குகள்

இஸ்ரவேல் மக்களில் பெரும்பாலானோர் மேய்ப்பர்களாகவும், பயிரிடும் தொழில் செய்பவர்களாகவும் இருந்தபடியால் தங்கள் வீட்டு உபயோகத்திற்கென செம்மறி ஆடு, வெள்ளாடு, காளை, எருது, பசு, கழுதை, கோவேரி கழுதை, குதிரை போன்ற பலவிதமான மிருகங்களையும் வளர்த்து வந்தனர். செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் மந்தைகளாக பெருகச்செய்து மேய்ப்பது அவர்களது முக்கியமான வருமானத்திற்குரிய தொழிலாய் இருந்தது.

**செம்மறியாடு (SHEEP) :–** பாலஸ்தீனா தேசத்தில் வளர்க்கும் செம்மறி ஆடு மற்ற இடங்களை விட வித்தியாசமானதாக இருக்கும். அவற்றின் தலை கருப்பு நிறமா கவும், உடல் வெள்ளை நிறமாகவும், அவைகளின் வால்கள் மிகவும் பெரியதாகவும், கொழுப்பின் அடர்த்தி அதிகமானதாகவும் இருக்கும். ஒரு செம்மறியாட்டின் வால் ஏறத்தாழ 10 முதல் 15 பவுண்டு ( 4 கிலோ முதல் 6 கிலோ ) எடையுள்ளதாக இருக்கும். செம்மறியாடு பொதுவாக இறைச்சிக்கென வளர்க்கப்பட்டன (1சாமு. 14:32).மேலும் பலி செலுத்துவதற்கெனவும், பால், வெண்ணெய், பாலாடைக் கட்டி போன்றவற்றை பெறவும் இது பயன்படுத்தப்பட்டது (ஏசா. 7:21–22). செம்மறி யாட்டின் தோலானது உடையாகவும், கூடாரம் இடுவதற்கும் பயன்பட்டது (எபி. 11:37; லேவி. 13:47–48). ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கின்ற செம்மறியாட்டின் எண்ணிக்கையை வைத்து அம்மனிதனின் ஆஸ்தி அந்நாட்களில் கணக்கிடப் பட்டது. மட்டுமல்லாது ஒருவரோடு ஒருவர் பரிமாறிக்கொள்ளும் செல்வமாகவும் அது கருதப்பட்டது (ஆதி. 13:5 ; 30:32 ; நீதி. 27:26 ; எசே. 27:21).

**வெள்ளாடு (GOAT):–** பாலஸ்தீனாவில் வளர்க்கப்பட்ட வெள்ளாடானது சீரிய

(Syrian varity) வகையைச் சேர்ந்ததாகும். பொதுவாக கருப்பு நிறத்திலிருக்கும் இந்த வெள்ளாட்டின் கொம்புகளானது வளைந்து பின்புறமாக திரும்பி இருக்கும். அவற்றின் காதுகள் நீளமாக இருக்கும். முரட்டு குணமுள்ள இந்த வெள்ளாடுகள் பல வேளை களில் மரங்களின் பட்டையை உரித்து, மரங்களை சேதமாக்குவதோடு மண்ணைத் தன் கொம்புகளால் கிண்டி கிளறி மண்ணை சேதப்படுத்துவதோடு சில வேளைகளில் காட்டிலுள்ள சில பகுதிகளையும் அழித்துவிடும்.

வெள்ளாட்டின் பாலிலிருந்து தயாரிக்கப்படும் வெண்ணெய், பாலாடைக் கட்டி போன்றவற்றை மக்கள் தங்கள் ஆகாரமாக பயன்படுத்தினர்.வெள்ளாட்டின் தோலை பதப்படுத்தி நாகரீகமான பைகளையும், தண்ணீர் துருத்திகளையும் தயாரித்து உபயோகப்படுத்தி வந்தனர் (ஆதி.21:14 ; யோசு. 9:4). செம்மறியாடு களும் பெண் வெள்ளாடுகளும் பொதுவாக ஒன்றாக மேய விடப்படும் (மத். 25:32). செம்மறியாட்டின் மிருதுவான தன்மையினால் அதை வளர்ப்பதற்கு அதிக கவனம் கொடுக்கவேண்டியிருக்கும்.

## 6. மந்தை மேய்த்தல்

மந்தை மேய்த்தலும் பயிரிடுதலும் பாலஸ்தீன தேசத்தின் மிக முக்கிய தொழில்களாகும். ஒன்றோடு ஒன்று தொடர்புடைய இந்த இரு தொழில்களையுமே அந்த தேசங்களில் உள்ள மக்கள் அதிகமாக செய்து வந்தனர். இந்த இரு தொழில்களால் உண்டான வியாபாரத்தினிமித்தமே பல குடும்பங்கள் போஷிக்கப் பட்டன.பயிரிடுபவர்களுக்கும் தொழில் செய்ய நிலங்கள் தேவைப்பட்டன, மேய்ப் பர்களுக்கும் தங்கள் மந்தையை மேய்ப்பதற்கு நிலங்கள் தேவைப்பட்டன. எனவே இவ்விரு கூட்டத்தாருக்கும் இடையே பல வேளைகளிலும் வாக்குவாதங்களும் சண்டைகளும் நிகழ்ந்தன.

இஸ்ரவேல் தேசம் பள்ளத்தாக்குகளும் மலைகளும் நிறைந்த தேசமாகும். சமவெளிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் மக்கள் பயிரிட்டு வந்தனரென்றாலும் திராட்சைத் தோட்டங்கள், காய்கறி தோட்டங்கள் போன்றவற்றைத் தவிர மற்ற விளைநிலங்களுக்கு பாதுகாப்பான வேலியில்லாத காரணத்தால் பல வேளை களில் ஆடுமாடுகள் விளைந்த பயிர்களை மேய்ந்துவிடும். இதினிமித்தமும் மேய்ப்பர்களுக்கும் பயிரிடும் குடிகளுக்குமிடையே சண்டைகள் நேரிடும். ஒவ்வொரு பருவத்திலும் எல்லோரும் ஒரே விதமான பயிரை பயிரிடுவதால் ஒவ்வொரு மனிதரும் தன் நிலத்தை குறிப்பதற்காக குறிகல்லை நாட்டியிருப்பான்.

மேய்ப்பர்களின் பிரதான வேலையே மந்தைகளுக்கு நல்ல மேய்ச்சலை கண்டுபிடித்து அவைகளை மேயவிடுவதாகும். பள்ளத்தாக்குகளும் மலைகளும் மந்தைகளை மேய்ப்பதற்கு ஏற்ற இடமாயிருந்தன. மலைகளிலுள்ள நிலங்களில் சென்று மேய்க்கும் மேய்ப்பர்கள் அந்த இடங்களை தங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்வதுண்டு. மந்தையின் எண்ணிக்கைக்குத் தக்கதாகவும், ஒவ்வொரு பருவக்

காலத்திற்கு தக்கதாகவும் மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளோடு இடம் விட்டு இடம் பெயருவர். மிக உஷ்ணமான கோடைக்காலத்தில் குளிர்ச்சியான மலை உச்சிகளுக்கும், குளிர்காலத்தில் வெதுவதுப்பான இடங்களுக்கும் மந்தைகளை நடத்திச் சென்று மேயவிடுவதுண்டு.

அடுத்தடுத்து இருக்கும் இரு கிராமங்களுக்கு இடையில் இருந்த பொதுவான நிலங்கள் மேய்ச்சலுக்கென பயன்படுத்தப்பட்டன. மந்தையின் சொந்தக்காரர்களோ, கூலியாட்களோ மந்தைகளை அவ்விடங்களுக்கு நடத்திச் சென்று மேயவிடுவர். விளைநிலங்களில் தங்கள் ஆடுமாடுகளை மேயவிடுபவர்கள் அந்த கிராமங்களிலுள்ள சட்டத்தின்படி தண்டிக்கப்படுவர். இவ்வித சட்ட ஒழுங்குகள் இல்லாத இடங்களில் பலவந்தமாக பயிர் நிலங்கள் சேதப்படுத்தப்பட்டு அவைகள் மந்தைகளுக்கு ஆகாரமாக கொடுக்கப்படும். இதினிமித்தமே ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்ற முற்பிதாக்கள் அந்தந்த இடத்தின் மக்களோடு உடன்படிக்கை செய்தபின்னரே அவர்கள் பகுதிகளைக் கடந்து சென்றனர்.

மந்தை மேய்க்கும் மேய்ப்பர்கள் வருடத்தின் பல நாட்களை வயல்வெளிகளிலும், காடுகளிலும் செலவழிப்பர். மேய்ப்பர்கள் ஒன்றாக சேர்ந்து சென்று மந்தைகளை மேய்க்க செல்வர். மந்தைகள் மேயும் போது ஒருவரோடு ஒருவர் உரையாடி, பாடல்களைப் பாடி, கின்னரம், புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளை வாசித்து மகிழ்வர். இரவு நேரங்களில் மந்தைகளைக் காக்கும் பெரும் பொறுப்பு அவர்களுக்கு இருந்தது. கடும் குளிரினாலும், காட்டு விலங்குகளாலும் மந்தைகள் மடிந்து விடாமல் இருக்க இரவு நேரங்களில் விழித்திருந்து மேய்ப்பர்கள் மந்தையைக் காப்பர் (ஆதி. 31:40 ; யாத். 22:13 ; 1 சாமு. 17:34–35 ; லூக். 2:8).

ஆடுகள் பொலியும் காலத்தில் அவைகளை மேற்பார்வையிடுவதும், பிறந்த குட்டிகளைத் தூக்கி சுமந்து பாதுகாப்பதும் மேய்ப்பனின் முக்கிய வேலையாகும். துஷ்டமிருகங்களால் காயப்பட்ட ஆடுகளை மேய்ப்பர்கள் தூக்கி சுமப்பதோடு அவைகளின் காயங்களுக்கு வைத்தியம் செய்யவும் அறிந்திருக்கவேண்டும். பல மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளை ஒன்றாக மேயவிட்டாலும் ஒவ்வொரு ஆடும் பெயரிட்டு அழைக்கும் தங்கள் மேய்ப்பனின் சத்தத்தை நன்றாக அறிந்திருந்தன (மீகா. 2:12 ; யோவா. 10:3).

***மேய்ப்பனின் உடை*** *(Cloak)* :– மேய்ப்பர்கள் காடுகளிலும் இரவின் பனியிலும் கடந்து சென்று மந்தை மேய்ப்பதால் செம்மறியாடு, ஒட்டகம் அல்லது வெள்ளாட்டுத் தோலினாலான அங்கிகளையே பொதுவாக அணிந்துவந்தனர். இது கொட்டும் பனி மற்றும் மழை நேரங்களில் அவர்களுக்கு பாதுகாப்பான வஸ்திரமாக இருந்து வந்தது. இரவு வேளைகளில் இந்த அங்கிகளையே மூடிப்படுத்துக் கொள்வதுண்டு. இந்த அங்கிகளின் உள்புறத்தில் ஒரு பெரிய பை ஒன்று தைக்கப்பட்டிருக்கும். பிறந்த ஆட்டுக்குட்டியை இந்தப் பைகளில் வைத்தே பாதுகாப்பர். காடுகளில் அடிப்பட்டு நடக்க இயலாத சிறுஆட்டுக் குட்டிகளும் பல

வேளைகளில் இந்தப் பைகளில் வைத்து காக்கப்படுவதுண்டு.

***தோல் பை*** *(Scrip & gourd )* :– கோடைக்காலங்களில் மேய்ச்சலைத் தேடி பல இடங்களுக்கும் செல்லவேண்டியிருப்பதால் மேய்ப்பர்கள் ஒரு மாதம் வரைகூட வனாந்திரங்களில் தங்கவேண்டிய சூழ்நிலைகள் இருந்தன. எனவே தங்களுக்கு வேண்டிய அப்பம், வாற்கோதுமை போன்ற ஆகாரத்தைத் தோற்பை (1சாமு. 17:40) ஒன்றில் சேர்த்துவைத்து தோள்களில் சுமந்து செல்வர். ஆட்டுக்குட்டியின் தோலினால் செய்யப்பட்ட இந்தப் பைகளில் அப்பம், ஒலிவ எண்ணெய், காய்ந்த அத்திப் பழம், பாலாடைக் கட்டி போன்றவற்றை பல நாட்களுக்கு சேர்த்து எடுத்து செல்வர்.

அத்தோடு தண்ணீர் மற்றும் பால் முதலியவற்றை சுமந்து செல்வதற்கு வேறு ஒரு துருத்தியையும் பயன்படுத்துவர். தோலினால் செய்யப்பட்ட இந்தத் துருத்தி உறுதியுள்ளதாயும், தண்ணீர் குவளை போன்ற வடிவமுடையதாயும் இருக்கும். பலநாட்கள் வனாந்திரங்களில் தங்கும் இந்த மேய்ப்பர்களின் உறவினர்கள் இவர்களுக்கென புதிதாக சுட்ட அப்பங்கள், திராட்சை ரசம், பாலாடைக்கட்டி, அத்திப் பழ அடைகள், வெண்ணெய் போன்றவற்றை எடுத்துக்கொண்டு அவர்களைப் பார்ப்பதற்காக வனாந்திரங்களுக்கு தேடிச் செல்வர் (ஆதி. 37:14).

**கோல்** *(Rod)* : மேய்ப்பர்கள் வழக்கமாக தங்கள் கைகளில் ஒரு தடியையும் கோலையும் வைத்திருப்பர். அதற்கான உறையில் போடப்பட்டிருக்கும் இந்த கோலானது அவர்களது வஸ்திரத்தோடு சேர்த்து கட்டப்பட்டிருக்கும். இந்தத் தடிப்பான மரத்தின் கொம்பை கவனமாகத் தெரிந்தெடுப்பர். இளமரம் ஒன்றின் கொம்பு பொதுவாக இதற்கென பயன்படுத்தப்படும். கொம்பு மரத்தோடு இணையும் இடத்தில் பந்துபோன்ற அமைப்பு இருக்கத்தக்கதாக கவனமாய் வெட்டி எடுப்பர். இந்த பந்துபோன்ற பகுதி கோலின் முன்புறம் இருக்கும். அதன் பின்புறம் கையால் பிடிக்குமளவு வழவழப்பாக்கப்பட்டிருக்கும். அதன் நுனியில் ஒரு துளையும் அத்தோடுகயிறும் இணைக்கப்பட்டிருக்கும். இந்த கோல் பக்கவாட்டில் தொங்கும்படி அதைத் தங்கள் இடைக்கச்சையோடு சேர்த்து கட்டிக்கொள்வர். பந்துபோன்றிருக்கும் தலைப்பகுதியில் ஆணிகள் சிலவற்றை பதித்து விடுவர்.

***தடி*** *(Staff )* : மேய்ப்பர்கள் பயன்படுத்தும் தடியானது ஏறத்தாழ 6 அடி நீள முள்ளதாக இருந்தது. கோலும் தடியும் ஒரேவிதமான மரத்திலிருந்து தயாரிக் கப்பட்டது. சில தடிகளின் நுனியில் ஒரு துறடோ அல்லது வளைந்த கொம்போ மாட்டப்பட்டிருக்கும். இவைகள் பாறைகளில் ஏறுவதற்கும், மரத்திலிருந்து இலைகளைப் பறிப்பதற்கும் பயன்படும். வனாந்திர பாதைகளில் நடந்து செல்லும் போது தடையாக நிற்கும் மரக்கிளைகள் கொப்புகளை அகற்றுவதற்கு இந்த தடியை பயன்படுத்துவர். வழியைவிட்டு விலகும் ஆடுகளையும், சண்டையிடும் ஆடுகளையும் இந்தத் தடியினால் அடித்துத் திருத்துவர். மந்தைகள் மேய்ந்துகொண்டிருக்கும்போது இந்தத் தடியின்மேல் சாய்ந்து கொண்டு மந்தையை கண்காணிப்பது மேய்ப்பர்களின் வழக்கம். பண்டைய காலங்களில் இதுபோன்ற தடிகளை வயதான வர்கள்

தாங்கி நடப்பதற்கு பயன்படுத்தினர். தீர்க்கதரிசிகளும் தங்கள் பிரயாணங்களின் போது இவ்வித தடிகளை பயன்படுத்தியதுண்டு (2இரா.4:29). மணற்பாங்கான வழிகளில் நடக்கையில் தாங்கி நடப்பதற்கும், இளைப்பாறும்போது சாய்ந்து கொள்வதற்கும், துஷ்ட மிருகங்கள் எதிர்படும்போது துரத்திவிடுவதற்கும் இந்த தடி பயன்பட்டது (யாத். 21:19–20).

***கவண்கல்*** *(Sling) :* இஸ்ரவேலின் மேய்ப்பர்கள் அனைவருமே கவண்கல்லை தங்களுக்கு ஆயுதமாக வைத்திருந்தனர். தாவீதும் பென்யமீன் புத்திரரும் கவண்கல்லை பயன்படுத்துவதில் பயற்சிபெற்றிருந்தனர் (1 சாமு. 17:49 ; நியா. 20:16). கவண்கல்லானது பொதுவாக வெள்ளாட்டு ரோமத்தால் செய்யப்படும். சதுரம் அல்லது செவ்வக வடிவத்தில் உள்ள தோல் துண்டின் நடுவில் ஒரு சிறிய கீரலிட்டு அதில் கல்லைப் பதிப்பர். கல் அதில் வைத்து அழுத்தப்படும்போது அந்தத் தோலானது கல்லைச் சுற்றிலும் ஒரு சிறிய பைபோல மாறிவிடுவதால் கல் எறியப் படும்பொழுது மிகுந்த வேகத்தோடு செல்லும். இந்தத் தோல் துண்டோடு இரண்டு வார்கள் இணைக்கப்பட்டிருக்கும். கருப்பு வெள்ளை நிறமான ஆட்டுத்தோலினால் இந்த வார்கள் செய்யப்பட்டிருக்கும். திருடர்கள் காட்டுவிலங்குகள் போன்ற வற்றிலிருந்து மந்தையைக் காப்பதற்கு மேய்ப்பர்கள் இந்தக் கவணை பயன் படுத்துவர். மட்டுமல்லாது வழிவிலகிச் செல்லும் ஆடுகளையும் பின்தங்கி நடக்கும் ஆடுகளையும் பயமுறுத்துவதற்கும் இந்த கவண்கல்லை பயன்படுத்துவர். மேலும் தூரங்களைக் குறிப்பதற்கு கவணில் கல்லை வைத்து எறியும் வழக்கம் இருந்ததால் 'கவண்கல் தூரம்' என்ற பதமும் பழக்கத்தில் இருந்து வந்தது.

***மந்தையை காத்தல்***( Shepherding)***:–*** மந்தையின் மேய்ச்சல் பொதுவாக வனாந்திரத்தில் இருப்பதால் இரவும் பகலும் மந்தையை காப்பது மேய்ப்பர்களின் மிக பெரிய தொழிலாய் இருந்துவந்தது. மேலும் பாலஸ்தீனா தேசத்திலுள்ள சீதோஷண சூழ்நிலைக்கு ஏற்றபடி மந்தையை வெவ்வேறு இடங்களுக்கு நடத்தி செல்லுவதும் மேய்ப்பர் களின் கடமையாகும். மந்தையைக் காப்பதற்காக தங்கள் கூடவே நாய்களையும் இவர்கள் அழைத்து செல்வதுண்டு (யோபு. 30:1 ; ஏசா. 56:10,11). முக்கிய மாக மலைப்பகுதிகளுக்கும் தனிமையான இடங்களுக்கும் மந்தையைக் கூட்டிச் செல்பர்கள் ஒன்று அல்லது இரண்டு நாய்களை கூட அழைத்து செல்வர்.

ஓநாய்கள், நரிகள் போன்ற மிருகங்களோடு சண்டையிட்டு அவைகளைத் துரத்து வதற்கென மிகப்பெரிய உருவத்தில் உள்ள காவல் நாய்களையே பொதுவாக மேய்ப்பர்கள் கூட வைத்துக்கொள்வர். இந்த நாய்கள் பகல் வேளைகளில் மேய்ப்பர் கள் கூடவே சென்று துஷ்ட மிருகங்களைத் துரத்திவிடும்.இரவு வேளைகளிலும் மேய்ப்பர்கள் கூடவே இருந்து திருடர்கள் மற்றும் துஷ்ட விலங்குகள் வரும்போது மேய்ப்பர்களை எச்சரிக்கும்.மந்தையின்முன்செல்லும் மேய்ப்பனை பின்தொடர்கின்ற மந்தையின்ஆடுகள் பாதுகாப்பைப் பெற்றிருக்கும். மேய்ப்பன் செல்லும் இட மெங்கும் வழிவிலகாமல்கூடச்செல்லும் ஆடுகள் பொதுவாககாட்டு மிருகங்களால்

சேதப்படுத்தப்படுவதில்லை. மந்தையின் கடைசியில் நடக்கும் ஆடுகளை காப்பதற்கு கூலியாட்கள் கூடச்செல்வதுண்டு.

மேய்ப்பன் மந்தையோடு இருக்கும் வரை ஆடுகள் பயப்படுவதில்லை, மேய்ப்பனைக் காணாதபோது ஆடுகள் பயந்து சிதறி ஓடிவிடும். எனவேதான் ஆடுகளுக்கு சொந்த மேய்ப்பர்கள் தங்கள் மந்தையை விட்டு ஒருபோதும் விலகுவதில்லை. ஆனால் கூலிக்காரர்களோ அடிக்கடி தங்கள் மந்தையை விட்டு விலகிச் செல்வதால் மந்தைகள் எப்பொழுதுமே பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருக்க நேரிடும்.

ஒவ்வொரு மேய்ப்பனும் தன் மந்தையைக் குறித்து நன்றாக அறிந்து வைத்திருப்பான். ஒவ்வொரு ஆட்டுக்கும் தனிப்பெயரிட்டு அழைப்பது மேய்ப்பர்களின் வழக்கம். ஆடுகளின் தோற்றம், சுபாவம், நிறம், அவைகளுக்கு நேர்ந்த சில சம்பவங்கள், பிறந்த இடங்கள் போன்றவற்றை வைத்து அவைகளுக்கு புனைப்பெயரிட்டு அழைப்பர். ஆடுகள் மேய்ந்து கொண்டிருக்கும் பொழுது மேய்ப்பர்கள். அவ்வப்பொழுது தங்கள் குரலை மந்தைகளுக்குக் கேட்கப்பண்ணவேண்டும்.

ஒவ்வொரு மேய்ப்பனும் தனக்கென தனிப்பட்ட ஒருவித சப்தம் அல்லது தொனியை எழுப்பி தன்குரலை தன் மந்தைக்குக் கேட்கும்படி செய்வான். எனவே ஒவ்வொரு மந்தையும் அந்தக் குரல் எழுப்பப்படும்பொழுது தங்கள் மேய்ப்பன் தங்களோடு இருக்கிறான் என்பதை அறிந்துகொள்ளும். கள்ள மேய்ப்பர்கள் வந்து குரல் எழுப்பி ஆடுகளைக் கூப்பிடும்பொழுது அந்த மேய்ப்பனின் சத்தத்தை அறியாத ஆடுகள் அவனை விட்டு ஓடிவிடும்.

மந்தையை காப்பதோடு மந்தைக்கு மேய்ச்சலை அளிப்பதும் மேய்ப்பனின் பிரதான வேலையாகும். நல்ல புல் உள்ள இடங்களுக்கு பாதுகாப்பான பாதைகளிலே ஒவ்வொரு மேய்ப்பனும் தன் மந்தையை நடத்திச் செல்வான்.செல்லும் வழிகளில் மரக்கிளைகளையும், இலைகளையும் பறித்துப்போட்டு தன் மந்தைக்கு இறையாகக் கொடுப்பான். நல்ல புல்லுள்ள இடங்கள் வரும்போது முழு மந்தையையும் அவ்விடத்தில் மேயவிடுவான். மந்தைகள் மேயும்போது மேய்ப்பர்கள் கின்னரம், புல்லாங்குழல் போன்ற கீதவாத்தியங்களை வாசித்து மகிழ்வதுண்டு. மதிய வேளை வரைஆடுகள் மேய்ந்தபின் மலையடிவாரத்திலோ அல்லது மர நிழலிலோ அவைகளை இளைப்பாறச்செய்வான்.பின்பு தண்ணீர் நிறைந்த இடத்திற்கு அவைகளை நடத்திச் சென்று தண்ணீர் காட்டி பின்னும் மேயவிடுவான்.

மாலை வேளைகளில் மந்தைகள் எல்லாம் ஒன்றாக சேர்க்கப்பட்டு அவைகளுக்குத் தண்ணீர் காட்டுவான். பின்பு ஆடுகளை இரண்டு இரண்டாக எண்ணி இலக்கமிட்டபின் எல்லாம் இருக்கிறது என்ற உறுதி கிடைத்தபின் அவைகளை

மலைகளிலுள்ள குகைகளிலோ அல்லது நான்குபுறமும் பாதுகாப்பான சுவர்கள் எழுப்பப்பட்ட இடங்களிலோ அடைத்து வைப்பான். தன் மந்தையில் ஒரு ஆடு

காணமற்போய்விட்டால் அது எந்த ஆடு என்பதை ஒவ்வொரு மேய்ப்பனும் நன்றாக

அறிந்திருப்பான் (யோவா.10:14). காணமற்போன ஆட்டை எப்படியாகிலும் தேடி கண்டுபிடித்து மறுபடியும் மந்தையில் சேர்த்துவிடுவான். இப்படி எண்ணி சேர்க்கப்பட்ட மந்தையை இரவு முழுவதும் பாதுகாப்பான் (எண். 32:16; மீகா.4:8). அந்த சுவர்களின் மேற்பரப்பில் முட்களைப் பரப்பி அவற்றின்மேல் கல்லை வைத்து இவ்விதமாய் பாதுக்காப்பை கொடுப்பது மேய்ப்பர்களின் வழக்கம். மேய்ப்பர்கள் குகைகளின் வாசல்களிலேயே அமர்ந்து இரவெல்லாம் தங்கள் மந்தைகளைக் காப்பர் (யோவா.10:7).குளிர்காலங்களில் வாசல் அருகே மேய்ப் பனுக்கென்று இலைகளால் மூடப்பட்ட ஒரு கூடாரத்தை அமைப்பர். கொட்டும் பனி காலத்தில் இந்தக் கூடாரத்தின் அடியில் அமர்ந்து காவல் செய்வர்.

மந்தையைக் காப்பதற்கு வேறு சில காவலாளிகளும் கூலிக்கு நியமிக்கப்படுவதுண்டு. அவர்கள் கூலி பணமாகவோ அல்லது பால், கம்பளி அல்லது ஆடாகவோ கொடுக் கப்படும் (ஆதி. 30:31–43). கூலிக்காரரான மேய்ப்பர்கள் மேய்க்கும் தொழிலை செய்தாலும் பல வேளைகளில் உத்திரவாதம் இல்லாமல் நடந்துகொள்வர். மிகக் குறைவான கூலியே இவர்களுக்குக் கொடுக்கப்படுவதால் பல வேளைகளில் ஆட்டுக்குட்டிகளை வழிப்போக்கர்களுக்கு விற்றுவிடுவர் அல்லது அவ்வழியே செல்லும் தங்கள் உறவினர் கைகளில் கொடுத்து சந்தையில் விற்றுவிடுவர். ஆனால் தங்கள் எஜமானர்களுக்கு கணக்குக் காட்டும்பொழுதோ ஓநாய்கள் பட்சித்து விட்டதாகவோ, மலைச்சரிவுகளில் விழுந்து விட்டதாகவோ, திருடர்கள் திருடிவிட்டதாகவோ கணக்குக் காட்டிவிடுவர்.

வெள்ளாடுகளைவிட செம்மறியாடுகளுக்கு பாதுகாப்பு அதிக அவசியம். ஏனெனில் ஓநாய், நரி போன்ற விலங்குகள் வரும்போது செம்மறியாடுகள் கூட்டம் வெள்ளாடு கூட்டமாக சேர்ந்து தங்கள் கொம்புகளை முன்புறமாக நீட்டிநின்று அந்த விலகுங்களைத் துரத்திவிடும். ஆனால் செம்மறியாடுகளோ அவ்விதமான கூட்டமாக சேராமல் எதிரியைக் கண்டவுடனே சிதறுண்டு ஓடிவிடுவதால் எளிதில் எதிரிகளுக்கு பலியாகிவிடும் (யோவா. 10:12).

மந்தையை மேய்த்து செல்லும்போது சில ஓடைகள், வனாந்திரத்திலுள்ள சிற்றாறுகளைக் கடக்கவேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும். அவ்வேளையில் வழக்கம்போலவே மேய்ப்பன் சத்தம் எழுப்பிக்கொண்டு முன்செல்லுவான். ஆடுகள் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக அவனைப் பின்தொடர்ந்து வரும். தண்ணீர் ஓட்டத்தின் நடுவே வரும்போதோ நிற்க பெலனின்றி அவைகள் தடுமாறும். அவ் வேளையில் மேய்ப்பன் மிக வேகமாக ஒவ்வொரு ஆட்டையும் பிடித்துத் தூக்கி கரையில் சேர்ப்பான். தண்ணீரில் இழுத்து செல்லப்படும் ஆடுகளையோ பாய்ந்து சென்று வேகமாக பறித்து இழுத்து கரையில் தள்ளுவான். இப்படி இழுத்துச் செல்லப்படும் சில ஆடுகள் கரை சேரும்போது மயக்க நிலையிலும் காணப்படும் என்றாலும் ஒரு ஆடுகூட தண்ணீரில் மடிந்து விடாதபடி எல்லாவற்றையும் கரை சேர்த்துவிடுவான் (சங்.18:16). இப்படி மேய்ப்பன் தன் ஆடுகளைக் கரைச்

சேர்க்கும் காட்சி கண்கொள்ளா காட்சியாக இருக்கும்.

ஆடுகளுக்கு மயிர் கத்தரிக்கும் நாட்கள் மேய்ப்பர்களுக்கு மகிழ்ச்சியான நாட்களாகும். மே, ஜூன் மாதங்களில் ஆடுகளை ஒன்றாக சேர்த்து மயிர் கத்தரிப்பர். புல்வெளிகள் செழித்திருப்பதால் இம்மாதங்களில் நல்ல மேய்ச்சல்கள் ஆடுகளுக்குக் கிடைக்கும்.எனவே வெண்ணெய், பால், பாலாடைக் கட்டி போன்றவைகளும் தாராளமாக இருக்கும். மட்டுமல்லாது இது கோடைக்காலமாய் இருப்பதினால் பகலில் மந்தையை மேய்ப்பதற்கும் இரவில் இளைப்பாறுவதற்கும் ஏற்ற சூழ்நிலையாய் இருக்கும். கிராமத்திலுள்ள மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் அழைத்து பண்டிகை கொண்டாடி மகிழும் காலமும் இதுவே (யோபு. 1:4 ; ஆதி. 31:19 ; 38:13 ; 1 சாமு. 25:1)

❖❖❖

# 11

# தொழிலும் வர்த்தகமும்
## (BUSINESS & TRADE)

மந்தை மேய்ப்பது இஸ்ரவேலரின் முக்கிய தொழிலாய் இருந்ததால் பால் அவர்களது முக்கிய ஆகாரமாகக் கருதப்பட்டது (ஆதி. 18:8). பொதுவாக வெள் ளாட்டுப் பாலை உணவாக பயன்படுத்தினர். பாலைப் பாதுகாப்பாய் வைப்பதற்கு தோல்துருத்திகளே அந்நாட்களில் பயன்பட்டது (நியா.4:19).துருத்திகளில் சேர்த்து வைக்கப்படும் தயிரை வேகமாகக் குலுக்கி அதன்மூலம் வெண்ணெய் தயாரிக் கப்படும்.துருத்திகளில் சேர்த்து வைக்கப்படும் பால் சீக்கிரத்தில் கெட்டுப்போவ தற்கும் வாய்ப்புகள் இருந்தன. பாலை வற்றும்படி காய்ச்சி அதிலிருந்து பாலாடைக் கட்டிகள் தயாரிக்கப்பட்டன (1 சாமு. 17:18; 2 சாமு. 17:29 ; யோபு. 10:10). அந்நாட்களில் சர்க்கரையை தயாரிக்கும் முறைகள் பழக்கத்தில் இல்லாதபடியால் பாலானது பொதுவாக தேனோடு சேர்த்து பருகப்படும் (ஏசா.7:15). மேலும் கட்டியாக உறைந்த தயிரை வடிக்கட்டி உப்பிட்டு காற்றில் காயவைத்து அதையும் மக்கள் தங்கள் ஆகாரமாக பயன்படுத்தி வந்தனர்.

மந்தையும் ஆடு மாடுகளும் செல்வத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது (ஆதி. 13:2). ஆடுமாடுகள் மிகுதியாய் வைத்திருப்பவர்கள் சீமான்கள் என அழைக்கப் பட்டனர் (யோபு. 1:3). ஆடுமாடுகளின் பாலும் இறைச்சியும் அவர்களது உணவாக இருந்தது (ஆதி. 18:7 ; உபா. 32:14). விசேஷித்த பண்டிகையின் போது பலியிடு வதற்கும், திருமண விருந்துகளிலும் மற்ற மகிழ்ச்சி நேரங்களிலும் ஆடுமாடுகளை அடித்து புசித்து பண்டிகைக் கொண்டாடுவதை இஸ்ரவேலர் வழக்கமாய் கொண் டிருந்தனர். மட்டுமல்லாது உழுவதற்கும், போரடிப்பதற்கும் வீட்டில் வளர்க்கும்

மிருகஜீவன்கள் பெரிதும் பயன்பட்டன. குளிர்நிறைந்த அந்நாடுகளில் பதப்படுத்தப்பட்ட மிருகங்களின் தோலினால் செய்த ஆடைகளை மக்கள் பெரிதும் பயன்படுத்தினர். அத்தோடு கூடாரமிடுவதற்கும் மிருகங்களின் தோல் உபயோகப்பட்டது.

**1. ஒட்டகம் (CAMEL)** :– பாலஸ்தீன தேசம் மணற்பாங்கான தேசமென்பதால் ஒட்டகங்கள் அதிகமாக வளர்க்கப்பட்டன. ஆபிரகாமுக்கும் யோபுக்கும் மிகுதியான ஒட்டகங்கள் இருந்தன(ஆதி. 12:16 ; யோபு. 1:3). இஸ்ரவேல் தேசத்திலுள்ள ஒட்டகங்கள் பொது வாக ஒரு திமில் (One hump variety) உள்ளவைகளாக இருக்கும். பாலை வனத்தில் பிரயாணம் செய்வதற்கும் சுமைகளை சுமப்பதற்கும் பொதுவாக இவைகள் பயன்பட்டன. ஏறத்தாழ ஒரு நாளைக்கு முப்பது மைல்கள் நடக்கக்கூடிய இவ்வித ஒட்டகங்கள் 1100 பவுண்டு (500கிலோ) வரையும் சுமைகளை சுமந்து செல்லும். பல நாட்களுக்குத் தேவையானத் தண்ணீரை ஒரே நாளில் குடித்து சேர்த்துவைக்கும் தன்மை இவைகளுக்கு இருப்பதால் தண்ணீரற்ற பாலை வனங்களிலும் இவைகள் சோர்ந்து போகாமல் நடந்து செல்லும்.

ஒட்டகத்தின் பாலானது இஸ்ரவேலரின் ஆகாரமாய் இருந்தது. ஏறத்தாழ ஒரு பெண் ஒட்டகம் ஒரு நாளைக்கு 7 லிட்டர் வரையும் பால் கொடுக்கும் தன்மையுடையது. ஒட்டகத்தின் இறைச்சியை சாப்பிடுவது இஸ்ரவேலரின் நியாயப் பிரமாணத்தின்படி தடைப்பண்ணப்பட்ட ஒன்றாகும் (லேவி. 11:4). ஆனாலும் மற்ற புறவினத்து மக்கள் ஒட்டக இறைச்சியைப் புசித்து வந்தனர். ஒட்டகத்தின் மயிரை உடையாகத் தரிப்பது ஒரு சிலரின் வழக்கம் (மாற். 1:6). ஒட்டகத்தின் சாணமானது எரிபொருளாக பயன்படுத்தப்பட்டது. மேலும் ஒட்டகத்தின் சிறுநீரை தலை மற்றும் தாடியை சுத்தம்பண்ணுவதற்கும் பல் துலக்குவதற்கும் பாலைவனப் பயணிகள் பயன்படுத்தினர். மற்ற மிருகங்களை போல ஒட்டகமானது மனிதர்களோடு பாசம் வைக்கக்கூடிய ஒரு மிருகமல்ல. பாலைவனங்களில் பயணம் செய்யும்போது சில ஒட்டகங்கள் தங்கள் எஜமானரை கீழே தள்ளிவிட்டு வனாந்திரங்களில் வேகமாக ஓடிவிடும். எனவே மிகவும் கடினத்தன்மைக்கொண்ட இந்த மிருகங்களைப் பழக்குவித்து பயன்படுத்தினாலும் பல வேளைகளில் இவைகள் ஆபத்தான மிருகங்களாக மாறிவிடுவதுண்டு.

**2. காட்டுக் கழுதை( WILD DONKEY)** : காட்டுக்கழுதைகளைக் குறித்து பழைய ஏற்பாட்டில் நாம் வாசித்தறிந்தாலும் புதிய ஏற்பாட்டில் அவைகளைக் குறித்து எதுவுமே சொல் லப்படவில்லை (ஆதி. 16:12). ஆனால் வீட்டில் வளர்க்கும் கழுதைகள் மக்களுக்கு மிகுந்த பயனுள்ளவைகளாய் இருந்தன (யாத். 20:17 ; லூக். 13:15). கிழக்கத்திய நாடுகளிலுள்ள கழுதைகள் மேற்கத்திய நாடுகளிலுள்ள கழுதைகளைவிட உறுதியுள்ளதாயும், உருவத்தில் பெரிதாயும் இருப்பதோடு புத்திக் கூர்மையும் உடையவைகள். எனவே அவைகள் எளிதில் பழக்குவிக்கப்பட்டன.சுமை சுமப்பதற்கும் உழுவதற்கும் போரடிப்பதற்கும் இவைகள் பெரிதும் பயன்பட்டன (ஆதி. 42:26 ; ஏசா. 30:24). மேலும் நெடுந்தூரப் பயணத்திற்கும் இவ்வித கழுதைகளை மக்கள் பயன்படுத்தினர். பணக்காரர் ஏழைகள் பாகுபாடின்றி அனைவருமே

கழுதைகளில் பயணம் செய்வது அந்நாட்களில் வழக்கமாகும் (நியா. 10:4 ; 2 சாமு. 17:23). கழுதை களின் இறைச்சியைப் புசிப்பதை இஸ்ரவேலர் அருவருத்தனர். கொடிய பஞ்சகாலத்தில் மாத்திரமே மக்கள் கழுதைகளின் இறைச்சியைப் புசித்ததாக வேதத்தில் காண்கிறோம் (2 இரா.6:25). மேலும் கழுதைகள் ஒருபோதும் பலி செலுத்துவதற்கு பயன்படுத்தப்படுவதில்லை.என்றாலும் தீர்க்கதரிசி சகரியா உரைத்தப்படி ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்து எருசலேமில் பவனி வரும்பொழுது கழுதையின் மீது ஏறியே பவனி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது (சகரி. 9:9).

**3. குதிரைகள் ( HORSES):–** மற்ற மிருகங்களைப் போலவே குதிரைகளும் இஸ்ரவேல் தேசத்தில் பெரிதும் பயன்பட்டது. கி.மு. 1800 – 1550 க்கு உட்பட்ட காலத்திலேயே குதிரைகள் எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேலுக்கு கொண்டு வரப்பட்டன. என்றாலும் புதைப்பொருள் ஆராய்ச்சியின்படி கி.மு. 4000– 3200 கால கட்டத்தில் குதிரைகள் வீட்டு உபயோகத்திற்கு பயன்பட்டதாக கூறப்படு கின்றது. வேதத்தில் முதல்முறையாக யோசேப்பின் காலத்தில்தான் குதிரைகள் இருந்ததாக நாம் காண்கின்றோம் (ஆதி. 47:17). பல நூற்றாண்டுகளாக பாலஸ் தீன மக்கள் குதிரை களின் உபயோகத்தை அறியாதவர்களாக இருந்துவந்தனர். யோசுவா தன் எதிரிகளோடு யுத்தம் செய்யும்போது குதிரைகளின் குதிகால் நரம்பு களை அறுத்து, ரதங்களை சுட்டெரித்ததாக நாம் காண்கின்றோம் (யோசு. 11:9).

தாவீதுக்கும் சாலமோனுக்கும் குதிரைகளும் ரதங்களும் இருந்தன (2 சாமு. 8:4). சாலமோன் எகிப்திலிருந்து குதிரைகளை வரவழைத்து தன் தேசத்திலே அவை களை வைத்துக்கொண்டான். மேலும் வருஷாவருஷம் சாலமோனுக்கு காணிக் கையாக குதிரைகளை பல்வேறு தேசங்களிலிருந்து கொண்டுவருவர். குதிரைகளையும் ரதங்களையும் வைப்பதற்கென்று சாலமோன் பட்டணங்களைக் கட்டினான்(1 இரா.10:25–28). ஏறத்தாழ 4000 குதிரை லாயங்களும் 12000 குதிரை வீரர்களும் சாலமோனுக்கு இருந்தனர் (2 இரா. 18:5).

**4. பிறதொழில்கள் (OTHER BUSINESS) :–** வேட்டையாடுதலும் மீன்பிடித்தலும் கற்காலம் துவங்கியே மக்களது முக்கியத் தொழிலாக இருந்து வந்தது. வேதாகம காலத்தில் வேட்டையாடுதல் எகிப்திலும் மெசபத்தோமியாவிலும் மிக பிரபலமாய் இருந்தாலும் பாலஸ் தீனாவிலோ ஒரு சில மக்களே வேட்டையாடுதலை முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தனர். ஈசாக்கு வேட்டையாடுதலில் பிரியம் கொண் டிருந்தான் (ஆதி. 25:28;27:3). சாலமோனின் பந்தியில் வேட்டையாடி பிடித்த மான்கள் முக்கிய உணவாக பரிமாறப்பட்டன ( 1 இரா. 4:23). கவண்கல், ஈட்டி, வில், அம்புகள் போன்ற உபகரணங்கள் வேட்டையாடுவதற்கு பெரிதும் பயன்பட்டன.

***1. அப்பம் சுடுதல்*** *(Bakeing)*:–பட்டணங்களிலும் கிராமங்களிலும் இந்த தொழில் முக்கியமானதொன்றாயும், அதிகமானதாயும் இருந்து வந்தது. கோதுமை, வாற் கோதுமை போன்றவற்றை இடித்து, சலித்து அதன் மாவினால் அப்பம் சுடுவது அக்காலத்து வழக்கம். அதுவே மக்களின் பிரதான ஆகாரமாகவும் இருந்தது. பெரிய பட்டணங்களில் அப்பம் சுடும் ஸ்தலங்கள் அதற்கென நியமிக்கப்பட்டு

விசேஷித்த அப்பங்கள் அங்கு செய்யப்பட்டு வந்தன. மாவைப் பிசைதல், அப்பம் சுடுதல், வியாபாரம் செய்தல் போன்ற அனைத்தும் ஒரே இடத்தில் நடைபெறும். ஆனால்பின் நாட்களிலோ வீடுகளிலுள்ள ஸ்திரீகள் மாவைப் பிசைந்து, பிசைந்த மாவை உருண்டையாக்கி அப்பம் சுடுபவர்களுக்குக் கொடுப்பர். அப்பம் சுடுபவர்கள் அவைகளை தங்களுக்கு ஏற்றவடிவில், அளவில் தட்டையாக்கி அப்பங்களாக செய்வர்.

இப்படி மாவைப் பிசைந்து அனுப்பும் ஸ்திரீகள் ஒரு கைப்பிடி மாவை எடுத்து மண்ணில் தோய்த்து அல்லது கந்தைத் துணியில் சுற்றி பிசைந்த மற்ற மாவோடு தட்டின் ஒரு ஓரத்தில் வைத்து அனுப்புவர். அப்பம் சுடுபவரோ ஓரத்திலுள்ள இந்த மாவை எடுத்து அப்பத்தை சுடும்போது எரிகின்ற நெறிப்பில் அதைப் போட்டு விடுவர். இது தேவனுக்கு நன்றி சொல்லும்வண்ணம் ஒரு சமய சம்பந்தமான சடங்காக கருதப்பட்டது. ஆனால் அரபு தேசத்திலோ இந்த மாவை 'சாத்தானின் பங்கு' (Satan's portion) எனக்கூறுவர். ஏனெனில் வன்கண் போன்ற தீய சக்திகளின் வல்லமையை சுட்டெரிப்பதற்கு அடையாளமாக இது செய்யப்படுகிறது என அவர்கள் நம்பினர்.

அப்பம் சுடும் கடைகளிலுள்ள அடுப்புகள் பொதுவாக மிகப்பெரியதாக இருக்கும். நீள வடிவிலான கல் தாழ்வாக பதிக்கப்பட்டு,அதன் நடுவிலே கற்களால் தளமிடப் பட்டிருக்கும். அதன் இருபுறமும் நெருப்புக்கட்டைகள் வைக்கப்படுவதற் குரிய இடமிருக்கும். இந்தக் கற்களின்மேல் அப்பத்திற்கான மாவை வரிசையாக அடுக்கி வைத்து அப்பங்களை சுடுவர். மாலை வேளைகளிலே அடுப்பிலுள்ள நெருப்பு சாம்பலும் வெளியே எடுக்கப்படும். ஏழை சிறுவர்கள் சிறுமிகள் உடைந்துபோன கற்சாடிகள், மண் பாத்திரம், மண் ஓடுகள், தட்டையான உலோகம் போன்றவற்றை எடுத்துவந்து இந்தநெருப்பையும், சாம்பலையும் தங்கள் வீடுகளுக்கு வாங்கிச் செல்லுவர். அவர்களது ஏழை பெற்றோர்கள் இந்த நெருப்பையும் சாம்பலையும் வைத்தே தங்கள் மாலை ஆகாரத்தை தயாரிப்பர் **(ஏசா. 30:16).**

அப்பம் தயாரித்து முடித்தபின் இரவு வேளைகளில் எரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மரக்கட்டைகள் இருந்த நிலையிலேயே வைக்கப்பட்டு, அடுப்பானது மூடப்பட்டு விடும். இதனால் மறுநாள் காலை வரை அப்பம் சுடும் கல் சூடாக இருப்பதால் இந்த வேலையை மறுநாள் காலையிலேயே துவங்க வசதியாயிருக்கும். எரிபொருள் மிச்சப்படுவதோடு கல்லை சூடாக்கும் வேலையும் இதனால் குறைக்கப்பட்டது **(ஓசி.7:4–6).** எருசலேமில் அந்நாட்களில் அப்பம் சுடுவதற்கென்றே தனியே வீதிகள் இருந்தன **(எரே.37:21).** சாதாரண அப்பங்களைத் தவிர இனிப்பு கலந்த அப்பங்கள், இறைச்சியோடு சேர்த்து தயாரிக்கப்பட்ட அப்பங்கள், அலங்கரிக்கப்பட்ட அப்பங்கள் போன்றவை விசேஷித்த நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் தயாரிக்கப்பட்டன.

***2.மீன்பிடித்தல்(Fishing):–*** பயிரிடும் தொழில், ஆடுமாடுகள் மேய்த்தல் போன்றவற்றிற்கு அடுத்ததாக பாலஸ்தீனா தேசத்திலே மீன் பிடித்தொழில் பிரதானமாய் இருந்து வந்தது. நைல் நதியிலும், கலிலேயா போன்ற கடல்களிலும் ஏராளமான மீன்கள் இருந்ததால் அவ்விடங்கள் மீன் பிடித்தொழிலுக்கு பெயர்

பெற்றிருந்தனர் (ஏசா. 19:8;நெகே.13:16;ஓசியா.4:3; செப்.1:3). என்றாலும் கலிலேயா கடலே மீன் பிடித்தலுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற இடமாயிருந்தது. மீன்பிடிப்ப வர்கள் இந்தத் தொழிலால் மிகுதியான லாபம் பெற்றாலும் அவ்வப்போது வீசும் புயல் காற்றினால் படகுகள் சேதமடைவதோடு உயிர்சேதமும் அவர்களுக்கு நேரிட்டது.

மீன்பிடிக்கிறவர்கள் வலையையும் தூண்டிலையும் உபயோகித்து மூன்றுவிதமான முறைகளில் அந்நாட்களில் மீன் பிடித்தனர்.

***A. வீசப்படும் வலை*** *(The Casting Net )* :- இம்முறையில் மீன்பிடிப்பவர்கள் கரை யோரத்திலோ அல்லது மார்பளவு தண்ணீரிலோ நின்றுகொண்டு தங்கள் தோள் கள் மேல் இருக்கும் வலைகளை லாவகமாக தண்ணீரில் வீசுவர். இப்படி வீசப் படும் வலையின் ஓரத்தில் உள்ள சுருக்குகளில் இரும்புத்துண்டுகள் பொருத் தப்பட்டிருக்கும். இவை வட்டவடிவில் தண்ணீருக்குள் விழும். வலைகளில் பொருத்தப்பட்டிருக்கும் இரும்பு துண்டுகளின் எடையால் வலையானது, கூம்பு வடிவிலோ, அரைக்கோள வடிவிலோ தண்ணீருக்குள் இழுக்கப்படும். இப்படி விழும் வலையானது மீன்கள் உள்ள இடங்களில் விழும்போது மீன்களை சுற்றிக் கொள்ளும். அவ்வேளையில் மீன்பிடிப்பவர்கள் தண்ணீருக்குள் பாய்ந்து அந்த உலோகமுள்ள பகுதியை கையில் பிடித்து இழுக்கும்போது வலையானது சுருக் குள்ள ஒரு பைபோலாகிவிடும். இந்த வலையை கரையில் இழுக்கும் போது அதில் ஏராளமான மீன்கள் வாரிக்கொள்ளப்பட்டிருக்கும்.

மகதெலாயாவின் மேற்பகுதியில் வெதுவெதுப்பான ஊற்றுகள் ஏராளமாக உண்டு. அப்பகுதிகளில் மீன்கள் கூட்டங்கூட்டமாய் காணப்படும். எனவே இவை களைப் பிடிப்பதற்கு தூண்டில்களில் இரைகளை மாட்டி தண்ணீருக்குள் விடுவர். இந்தத் தூண்டிலை பார்க்கும் மீன்கள் அதிலுள்ள இரையைப்பிடிப்பதற்கு கூட்டமாக வரும். தூண்டிலை மெதுவாக கரையோரம்வரை இழுத்துக் கொண்டு வந்து, கரை யோரத்தில் அவைவந்தபின் வலைகளைப் போட்டு எல்லா மீன்களையும் வாரிப்போடுவர்.

***B. இழுத்துக்கொள்ளும் வலை*** *(The Drag Net)* :- இது பெரியவகை மீன்களைப் பிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் வலையாகும். படகிலிருந்து இந்த வலைகளை வீசுவர். மிகப்பெரிய மீன்கள்மேல் இவைகள் விழும்போது படகிலிருந்தபடியே வலையை சுருக்கி மீன்களை அதில் பிடித்துவிடுவர்.

***C. தூண்டில்*** *(Hooks)* :- மத்திய தரைக்கடல் பகுதிகளில் கோடைக்காலத்தின் இரவு வேளைகளில் அதிகமான மீன்கள் தண்ணீர் மட்டத்திற்கு வரும். படகில் இருந்து வீசப்படும் வெளிச்சத்தை பின்தொடரும்படி இந்த மீன்கள் தண்ணீர் மட்டத்திற்கு வருகையில் முக்கூருள்ள தூண்டில்களை கொண்டு இந்த மீன்களை பிடிப்பர் (ஏசா.29:8; ஆமோ.4:2 ; ஆப. 1:15; மத்.17:27).

***3.வேட்டையாடுதல்*** *(Hunting)*:- இஸ்ரவேல் தேசத்தில் வேட்டையாடுதல் என்பது தொழி லாக மட்டுமல்ல, பொழுதுபோக்காகவும் மக்களால் கருதப்பட்டது. திறமை,

தைரியம், உறுதி இவைகளை வைத்து வேட்டையாடுதலில் வல்லவர்கள் பாராட்டப் பட்டார்கள்.ஈசாக்கு, ஏசா போன்ற முற்பிதாக்கள் வேட்டையாடுதலில் விருப்பமுள்ள வர்களாய் இருந்தது மட்டுமல்ல,வேட்டையாடிப் பிடிக்கப்பட்ட மிருகங்களை விருப்ப மாயும் புசித்தனர் (ஆதி. 27:7).அசீரியா எகிப்து போன்ற தேசங்களில் வேட்டையா டுதல் விருப்பமுள்ள தொழிலாய் இருந்து வந்தது. சிறுத்தைப்புலிகள், நாய்கள், சிங்கங்கள் போன்ற விலங்குகள் பிற விலங்குகளை வேட்டையாடும் காட்சி அந்நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ள சிற்பங்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

மட்டுமல்லாது, சீதோன் தேசத்தில் மரித்தோரை அடக்கம்பண்ணும் சவப்பெட்டி களிலும் இவ்வித காட்சிகள் பொறிக்கப்பட்டுள்ளதை கண்டெடுத்துள்ளனர். ஆகமங்கள், சங்கீதம், தீர்க்கதரிசன புத்தகங்களிலும் வேட்டையாடுதலைக் குறித்து வேதம் குறிப்பிடுகின்றது. பொதுவாக மூன்று விதங்களில் வேட்டையாடும் பழக்கத்தை மக்கள் கைக்கொண்டனர். 1. வில் அம்புகளை பயன்படுத்தி வேட்டை யாடுதல் (யாத்.27:3), 2. கண்ணிகள் வலைகளை விரித்து வேட்டையாடுதல் (ஆமோ. 3:5).3. மான்கள், கரடிகள், ஓநாய்கள், நரிகள் போன்றவற்றைப் பிடிப்பதற்கு குழிகள் மேல் வலைகளை விரித்து அதன்மேல் வைக்கோல், புல் போன்றவற்றை பரப்பி வேட்டையாடுதல் (சங். 35:7;ஏசா.24:18). இவற்றோடு குருவிகள், வாத்து, கவுதாரி, போன்ற பறவைகளைப் பிடிப்பதற்கோ கூடுகள் பயன்பட்டன (எரே. 5:27),

மரங்களில் சிறு சிறு கண்ணிகளை வைத்து குருவிகள் போன்ற சிறு பறவைகளை அதன்மூலம் பிடித்தனர். பாடுகின்ற சில பறவைகள் வீடுகளில் வளர்க்கப்பட்டன. மற்றவைகளை கொத்துக்கொத்தாக கொம்புகளில் கட்டப்பட்டு விற்பதற்காக சந்தைக்குக் கொண்டுசென்றனர். இப்படிப்பட்ட பறவைகள் மிக குறைந்த விலைக்கு விற்கப்படுவதால் ஏழை மக்கள் இதை வாங்கி தங்களுக்கு ஆகார மாக்கிக் கொண்டனர் (மத். 10:29). கவுதாரி போன்ற பறவைகள் எப்போதும் மிக கவனமாய் இருப்பதால் வேடனின் கண்ணிக்கு எளிதாக தப்பிவிடும். சில பறவைகள் வேடனின் காலருகே வந்து விழுந்தால்கூட மரித்ததுபோல் அசைவற்றுகிடக்கும். வேடன் சற்று அப்புறம் சென்றவுடன் சிறகடித்து பறந்துவிடும். இதையே தாவீது தன்னைக்குறித்து கூறும்போது கவுதாரியை வேட்டையாடுவதைப்போல சவுல் தன்னை வேட்டையாடுவதாக கூறியுள்ளான் (1 சாமு. 26:20).

பாம்பாட்டிகளும் ஒவ்வொரு காலக்கட்டத்தில் வசித்துவந்தனர். வினோதமாக குழல் ஊதி பாம்புகளை தங்கள் வளையிலிருந்து புறப்படவைத்து வெளியே கொண்டுவருவதில் இவர்கள் கைதேர்ந்தவர்கள் (சங். 58:5 ; எரே. 8:17). கிராமம் கிராமமாக செல்லும் இவர்களில் சிலர் இதையே தங்கள் தொழிலாய் கொண்டிருப்பர். பாம்புகளைப் பிடித்து தங்கள் கைகளிலும், சரீரத்தின் மேலும் போட்டுக்கொண்டு மக்களுக்கு வேடிக்கை காட்டும் பாம்பாட்டிகளில் பலர் பாம்புகளைப் பிடிக்கும்

போதும், வித்தை காட்டும்போதும் விஷமுள்ள பாம்புகளால் கடிக்கப்பட்டு மரித்துப் போவதுண்டு (எரே. 8:17). பிசாசின் தந்திரத்தையும் மக்கள் காட்டுகின்ற

மாய்மாலமான தந்திர சுபாவத்தையும் வேதம் கண்ணிகளுக்கும், வலைகளுக்குமே ஒப்பிடுகின்றது (சங். 124:6–7 ; பிர. 9:12 ;நியா.8:27 ; நீதி. 26:27).

***4. மண்பாண்டத் தொழில்*** *(Pottery)* :– மத்திய தரைக்கடல் நாடுகளில் உலோகத்தின் மதிப்பு அதிகமாய் இருந்ததாலும், உஷ்ணமான காலத்தில் தோற்பைகளை பயன்படுத்தமுடியாததாலும், மண்பாண்டத்தொழில் பிரசித்திப் பெற்றதாய் இருந்தது. பட்டணங்களிலும், கிராமங்களிலும் உள்ள எல்லா மக்களும் மண் பாண்டங்களை பயன்படுத்தினர். எளிதில் உடைந்துபோகும் தன்மையுடைய இந்தப் பாத்திரங்கள் தண்ணீர் குடிப்பதற்கும், திராட்சைரசம், பால் போன்றவற்றை சேர்த்து வைப்பதற்கும், சமைப்பதற்கும் அதிகமாய் பயன்பட்டது. இஸ்ரவேல் தேசத்தில் மண்பாண்டம் செய்யும் குயவர்கள் ஏராளமாய் இருந்தனர். உஷ்ணமான அந்நாட்டில் வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு குடிப்பதற்கு ஒரு கலசம் குளிர்ந்த தண்ணீர் கொடுப்பது வழக்கமான பண்பாடாய் இருந்தது (மத். 10:42).

மண்பாண்டங்களை செய்வதற்கு களிமண்ணே பொதுவாக பயன்படுத்தப்பட்டது. கல், ஒடுகள் போன்ற பிசிறுகளைப் பிரித்தெடுத்தபின் களிமண்ணானது காலினால் மிதிக்கப்படும். இப்படி மிதிக்கப்பட்டு மென்மையாக்கப்பட்ட களிமண், பாத்திரங்கள் செய்வதற்கென பயன்படுத்தப்படும். செவ்வக வடிவிலான குயவனது மேஜையின் ஒரு புறத்திலே இந்தக் களிமண் வைக்கப்படும். மேஜையின் மேல் ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் இருக்கும். தனக்குத் தேவைப்படும் பொழுதெல்லாம் குயவன் இந்தப் பாத்திரத்திலிருந்து தண்ணீரைத் தெளித்து, களிமண்ணை தனக்கு வேண்டிய பதத்திற்கு மாற்றிக்கொள்வான்.

மண் பாத்திரங்கள் செய்வதற்கு குயவன் பயன்படுத்தும் திரிகையின் நடுப் பகுதியில் செங்குத்தான மரக்கொம்பு ஒன்று இருக்கும். இதன் மேற்புறத்தில் ஒரு சிறிய வட்டவடிவப் பலகையும், கீழ்புறத்தில் ஒரு பெரிய வட்டவடிவப் பலகை யும் உறுதியாக இந்தக் கொம்போடு இணைக்கப்பட்டிருக்கும். எனவே ஒரு பலகையை நகர்த்தும்போது அடுத்த பலகையும் அதைப்போலவே நகரும். கீழ் பகுதியிலுள்ள பலகையை தன் காலினாலும், மேற்புறத்திலுள்ள பலகையை தன் கையினாலும் குயவன் நகர்த்துவான். மேற்புறத்திலுள்ள பலகையின்மேல் களிமண்ணை வைத்து திரிகையை சுற்றும்போது களிமண்ணானது குயவனது விருப்பத்திற்கு இசைந்தவிதமாய் உருவாக்கப்படும். பலவிதமான வடிவங்கள், அளவுகள் உடைய பாத்திரங்களை குயவன் தன் திறமைக்குத்தக்கதாய் உருவாக்கிக் கொள்ளுவான்.

இப்படி திரிகையில் வனையும்போது சில பாத்திரங்கள் குயவன் கையிலே கெட்டுவிடுவதுண்டு. சில வேளைகளில் குயவன் வைக்கும் களிமண்ணின் அளவானது அவன் நினைத்த பாத்திரத்திற்கு தேவையானதைவிட குறைவாகவோ, அதிகமாகவோ இருந்தால் உடனடியாக அதை வேறு பாத்திரமாக அவன் வனைந்து விடுவான். இப்படியாக தன் கையிலுள்ள களிமண்ணை வைத்து எவ்வளவு சிறந்த விதமாய் உருவாக்கமுடியுமோ அவ்வளவு சிறந்த விதத்தில் பாத்திரத்தை

உருவாக்குவது குயவனது விருப்பத்தையும் திறமையையும் பொருத்தது. இப்படி உருவாக்கிய பாத்திரம் ஈரமாக இருக்கும்போதே அதில் தேவையான வர்ணங் களைப் பூசி சூளையில் சுடுவதற்கு ஆயத்தமாக்கிவிடுவான்.

**5. பகற்வேலைக்காரர்கள்** *(Day Labourers)* :- சாதாரண மக்களும் நிரந்தர வருமான மற்றவர்களுமான ஏழைகள் இப்படிப்பட்ட பகல் வேலைகளில் தங்களை ஈடுப்படுத்திக்கொள்ளுவதுண்டு. ஒவ்வொரு பிரதான பட்டணங்களிலும் பட்ட ணத்து வாசலருகே முக்கியமான ஸ்தலம் ஒன்று இருக்கும்.கிழக்கு வெளுப்பதற்கு முன் பகல் வேலைக்காரர்கள் அவ்விடத்தில் ஒன்றுகூடி காத்துக் கொண்டிருப்பர். சூரியன் உதித்ததும் தோட்ட வேலை, கட்டிட வேலை, மரவேலை போன்ற பல வேலை களுக்கென மக்களைக் கூட்டிச்செல்லுவதற்கு வசதிபடைத்த எஜமான்கள் அவ் விடங்களுக்கு வருவர். தங்கள் தேவைக்கேற்றார்போல் ஆட்களைத் தெரிந் தெடுத்து அழைத்துச்சென்று வேலையில் அமர்த்துவர். சூரிய உதயம் துவங்கி அஸ்தமனம் வரை அவர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட வேலையை செய்ய வேண்டும்.

தங்களுக்கு எந்த வேலையுமே கிடைக்காத ஒருசிறு கூட்டமக்கள் சில மணிநேரங்கள் அவ்விடத்தில் காத்திருந்துவிட்டு கிடைக்கின்ற ஏதாவது ஒரு சிறிய வேலைக்கு கடந்துசென்றுவிடுவர். ஒழுங்கற்ற, திறமையற்ற, கடினமாய் உழைக்காத சோம் பேறிகளே பொதுவாக இப்படி கைவிடப்பட்டுவிடுவர். ஒருசிலரோ 11-ம் மணி வேளை வரையும் எந்த வேலையுமின்றி அதே இடத்தில் அமர்ந்து பேசிக் கொண் டிருப்பர். இப்படிப்பட்ட மனிதர்களைக் குறித்தே ஆண்டவர் இயேசு தன் உபதேசத்தில் கூறியுள்ளார் (மத்.20:6-7).

இந்த வேலைக்காரர்கள் காலையிலிருந்து மாலைவரை கடினமாய் உழைத்தால் தான் தங்கள் குடும்பத்தை போஷிக்கமுடியும். மாலையில் தங்கள் கூலியைப் பெற்றுக்கொண்டு அந்தக் கூலியை வைத்தே தங்கள் இரவு ஆகாரத்தை ஆயத்தம் செய்வர். ஏழைகளான சில குடும்பங்களுக்கு அந்த ஒருவேளை இரவு ஆகாரம்தான் முக்கியமான ஆகாரமாய் இருக்கும். எனவேதான் நியாயப்பிரமா ணத்தில் அவன் வேலைசெய்த நாளில்தானே பொழுதுபோகும் முன்னே அவன் கூலியை அவனுக்குக் கொடுத்துவிட வேண்டும். அவன் ஏழையும் அதின்மேல் ஆவுலுமாய் இருக்கிறான் (உபா. 24:14-15).

12

# வியாபாரமும் வியாபாரிகளும்

## (BUSINESS & BUSINESS PEOPLE)

வேதாகம காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் வியாபாரமானது பிரதானத் தொழிலாகக் கருதப்பட்டது. நாகரீக மேம்பாடு அதிகமாக அதிகமாக வர்த்தகமும் வியாபாரமும் வளர்ந்து பெருக ஆரம்பித்தது. தன்வயலிலே தானியத்தை மிகுதியாய் விளைவிக்கும் விவசாயி தன் தேவைக்கு மிஞ்சி அதிகமாய் இருக்கும் பொருட்களை விற்று தன்னுடைய மற்ற தேவைகளான வஸ்திரம், உழவுத்தொழில் உபகரணங்கள், ஆபரணங்கள், வீட்டுக்குத் தேவை யான மரச்சாமான்கள் போன்றவற்றை வாங்குவது வழக்கம். இதுபோல ஒவ் வொரு தொழில் செய்பவர்களும் தங்களுடையதை விற்று தங்களுக்குத் தேவை யான மற்ற பொருட்களை வாங்கிக் கொள்ளுவர்.

மிகுதியாய்த் தயாரிக்கப்படும் பொருட்களை தேவையுள்ள இடங்களில் கொண்டு சென்று விற்கும்படி அவற்றை கொள்முதல் செய்வதற்கு இடைத்தரகர்கள் அந்நாட்களில் தோன்றத் துவங்கினர். இவ்விதமாக வர்த்தகமும் வியாபாரமும் வளரத் துவங்கின. யோசேப்பின் சகோதரர்கள் அவனை இஸ்மவேலரிடத்தில் விற்றுப் போட்டனர். அவர்கள் அவனை எகிப்தியரிடம் அடிமையாய் விற்றுப்போட்டனர் (ஆதி. 37:28,36) இவ்விதமாக விவசாயப் பொருட்கள், அணிகலன்கள், வஸ்திரங்கள், அழகுப் பொருட்கள்,வாசனைத்திரவியங்கள் மட்டுமின்றி மனிதர்களையும் அடிமைகளாக விற்கும் தொழிலும் அந்நாட்களில் நடந்து வந்தது.

ஒவ்வொரு பட்டணத்திலும் வியாபாரிகள் பொதுவாக பட்டணத்தின் மத்தியி லுள்ள சந்தைவெளியில் கூடுவர். பொருட்கள் பரிமாற்றம் செய்யப்படுவதோடு ஒரு நாட்டிலுள்ள செய்தி மற்ற நாட்டிற்கு பரிமாற்றம் செய்யப் படுவதும்

அவ்விடத்தில்தான். மத்திய கிழக்கு நாடுகளில் 'சூக்' (Suq) என்றும் ரோம சாம் ராஜ்யத்தில் 'ஃபோரம் (Forum) என்றும் கிரேக்க நாட்டில் 'அகோரா' (Agora) என்றும் இவ்விடங்கள் அழைக்கப்பட்டன. பண்டைய காலத்தில் இவ்வித சந்தை வெளி யானது பொதுவாக நகரத்தின் வாசலருகே உள்ள மிகப்பெரிய இடத்தில் அமைக் கப்பட்டிருக்கும். இந்த சந்தைவெளிக்கு வந்துசேரும்படி சுற்றிலும் பல வீதிகள் அமைக்கப்பட்டிருக்கும்.

இந்த வீதிகளிலெல்லாலம் வியாபாரிகள் தங்கள் வியாபாரப் பொருட்களை விற்று வாணிபம் செய்வர். ஒவ்வொரு வீதியிலும் ஒரே விதமான பொருட்கள் விற்கப்படும். அப்பஞ்சுடுகிற வீதி (எரே. 37:21), மளிகைக்காரர் குடியிருக்கிற வீதி (நெகே.3:31–32), ஆட்டுவாசல் (நெகே.3:32), மீன்வாசல் (செப்.1:10) இதுபோன்ற பலவிதமான வீதிகள் எருசலேம் பட்டணத்திலும் மற்ற பட்டணங்களிலும் இருந்தன. மக்கள் தங்களிடத்தில் கேட்கும் பொருட்கள் இல்லையெனில் மற்றொரு வியாபாரியிடம் அம்மக்களை வழி நடத்தும் வழக்கமும் அக்காலத்தில் இருந்தது.

பண்டையகால வணிகமுறையைக் குறித்து மிக அதிகமாய் நாம் அறிந்து கொள்ள முடியவில்லையெனினும் கண்டுபிடிக்கப்பட்ட சில அந்நிய நாட்டு புதைபொருட்கள் அக்காலத்திலுள்ள வணிகமுறையை குறித்து நமக்கு அறிவிக்கின்றன. எகிப்து தேசத்திலே மெசபத்தோமியா தேசத்தின் சில பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சீப்புரு தேசத்திலிருந்து கொண்டு வரப்பட்ட விசேஷித்த குவளைகள் பாலஸ் தீனாவிலும், இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட விசேஷித்த பரிமளத்தைல பரணிகள் மெசபத்தோமியாவிலும் கண்டுபிடிக்கப்பட்டபடியால் இந்நாடுகளுக் கிடையே வர்த்தக பரிமாற்றம் இருந்தது என்பது நிரூபணமாகின்றது.

எழுத்து முறைகள் கண்டுபிடிக்கப்படும் முன்பதாகவே (கி.மு.3200) வர்த்தக மானது மிகவும் முன்னேற்றமடைந்திருந்தது. ஆனால் எழுத்தறிவு வந்த பின்பு வர்த்தகம் வேகமாக விரிவடைந்தது. கி.மு.1900–ல் கப்பதோக்கியாவிலே கண் டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் கப்பதோக்கியாவைச் சுற்றியுள்ள நாடுகளில் வர்த்தக முறைகள் எப்படி நடந்தன என்ற குறிப்புகள் காணப்பட்டன. மேலும் அயல் நாட்டு வர்த்தகர்கள் அந்நாட்டிலே வந்து தங்கியிருந்து தூதர்களாக செயல் பட்டதற்கான குறிப்புகளும் அக்கல்வெட்டில் எழுதப்பட்டுள்ளது.

**1. வர்த்தக மார்க்கங்கள்** *(Business Routes)* :– மத்திய கிழக்கு நாடுகளில் நடந்த வர்த்தகமும் வியாபாரமும் அந்நாட்டை பிற நாடுகளோடு பெரிதான அளவில் இணைத்து விட்டிருந்தது. எனவே வியாபாரத்திற்கென புதிய மார்க்கங்களும் பாதைகளும் தரைவழியேயும், கடல்வழியேயும் மக்களால் அமைக்கப்பட்டன. அந்நாட்களின் இந்துப்பள்ளத்தாக்கிலிருந்து (இன்றைய பாகிஸ்தான்) பெர்சியா (இன்றைய ஈரான்), சிறிய ஆசியா (இன்றைய துருக்கி) வழியாகவும், அஜீயன் (Aegean) கடல் வழியாகவும் பிற நாடுகளுக்கு பெரும்பாதைகள் அமைக்கப் பட்டன. வடதிசையில் துர்க்கிஸ்தான் வரையும் தென்திசையில் பெர்சியா, பெர்சிய

வளைகுடா (பண்டைய ஏலாம்) வழியாக, ஆற்றைக் கடந்து மெசபத்தோமியா வரைக்கும் வர்த்தகப் பாதைகள் அமைந்திருந்தன. மெசபத்தோமியாவானது சீரியா, பாலஸ்தீன்,எகிப்து போன்ற நாடுகளோடு பெருவழிப்பாதைகளால் இணைக்கப் பட்டிருந்தது. எகிப்தானது லூபியா, நைல் நதியின் மேற்புறம், செங்கடலின் கரை யோரப்பட்டணங்கள் மற்றும் வடக்கு ஆப்பிரிக்க நாடுகளோடு இணைக்கப் பட்டிருந்தது. அரேபிய பெனிசூலாவானது (இன்றைய ஏமன்) பாலஸ்தீனாவோடும் எகிப்தோடும் இணைக்கப்பட்டுள்ளது.

பெர்சிய பேரரசின் காலத்தில் வர்த்தகத்துக்கென பல சாலைகள் அமைக்கப் பட்டன. ரோம பேரரசின் காலத்தில் இவைகள் அதிகமாய் விரிவுபடுத்தப்பட்டன. ஏறத்தாழ1677 மைல்கள் தூரமுள்ள இராஜ பாதையானது (Royal Road) சூசாவை யும் (Susa) சர்தையையும் (Sardis) ஒன்றாக இணைத்தது. மேலும் சூசாவிலிருந்து பெர்சிபோலிக்கும் (Persipolis) இக்பட்டானாவிற்கும் (Ecbatana) இக்பட்டானாவி லிருந்து கிழக்கு முகமாக காபூல் பள்ளத்தாக்கிற்கும் இந்து தேசத்திற்கும் இந்த சாலைகள் தொடர்ந்தன.மேற்கு புறத்தில் சர்தையுவிலிருந்து எபேசுவுக்கும் சாலைகள் அமைக்கப்பட்டன.

இப்படியாக அஜீயன் (Aegean) கடல் முதல் இந்துப்பள்ளத்தாக்கு வரை இந்த வர்த்த சாலைகள் தொடர்ந்தன. அதே வேளையில் எகிப்திலிருந்து கார்க்கிமிஸ் (Carchemish) வழியாக பாபிலோனுக்கு செல்லும் சாலை சீரமைக்கப்பட்டு பிசிட்டன் (Bisitun) இக்பட்டானா செல்லும் பாதையோடு இணைக்கப்பட்டது. பொதுவாக சூசா விலிருந்து சர்தைக்கு செல்வதற்கு ஏறத்தாழ 90 நாட்களாகும். ஆனால் இந்த பெருவழிப்பாதையில் 111 இடை ஸ்தலங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் குதிரைகள் துரித அஞ்சல்காரர்கள் வசதி செய்து கொடுக்கப்பட்டபடியால் இந்த 90 நாள் பயணமானது ஏழு நாளில் பயணம் செய்வதற்கு சாத்தியமாயிற்று.

ரோமப்பேரரசின் காலத்தில் அமைக்கப்பட்ட சாலைகள் மிகவும் நுணுக்கமான திறனோடு அமைக்கப்பட்டிருந்தபடியால் அவைகளில் பல இன்று வரை பயன் படுத்தப்பட்டு வருகின்றது. அப்பியன் சாலை (Appian Way) (அப்.28:15) இவற்றில் தலைசிறந்ததாகும். அது ரோமாபுரியிலிருந்து புத்தோலி (Port of Puteoli) வழியாக அப்பினே பட்டணத்திற்கு (Appennies) சென்று அட்ரியாட்டிக் கடல் (Adriatic Sea) வரை செல்லும். இக்னேசியன் சாலையானது (Egnatian Road) மற்றுமொரு தலைசிறந்த சாலையாகும். தைரிக்கியம் (Dyrrachium) தொடங்கி மக்கதோனியா வழியாக துரோவா, தெசலோனிக்கே, பிலிப்பு, நியோபோலி வழியாக இந்த சாலை செல்லும். இப்படி ரோமர்களால் அமைக்கப்பட்ட இந்த சாலையானது சுவிசேஷ பணிக்கு பேருதவியாய் இருந்தது. தரைமார்க்கம் மட்டுமல்ல கடல்மார்க்கமும் வர்த்தகத்துக்கு பேருதவியாய் இருந்தது.

மேற்கு புறத்தில் மத்தியதரைக்கடல் நாடுகளுக்கும், பெர்சிய வளைகுடா வழியாக இந்தியாவிற்கும், செங்கடல் வழியாக கிழக்கு ஆப்பிரிக்காவுக்கும், நைல் நதி

வழியாக தென்புற நாடுகளுக்கும் கடல் மார்க்கங்கள் இருந்தன. ஆரம்ப நாட்களில் மரத்தால் செய்யப்பட்ட படகுகளை எகிப்தியர் பயன்படுத்தினர். பின்னாட்களில் "பாப்பிரஸ் நாணல்" (Papyrus Reed) என்ற நாணலைக் கட்டி அதிலே படகுகளை செய்தனர். டெல்டாவிலிருந்து காசா வரை செல்வதற்கு இந்த படகுகள் பயன்படுத் தப்பட்டன. பிற்காலத்தில் மெசபத்தோமியா நாட்டின் கூடைகளைப் போன்று வட்ட வடிவில் அமைக்கப்பட்ட, தெப்பங்களாக கட்டப்பட்டு அனுப்பும் படகுகள் பயன்படுத்தப் பட்டன. கீல், தார் முதலியவற்றால் பூசப்பட்டு காற்றடைக்கப்பட்ட தோல் பைகளை கொம்புகளோடு இணைத்து இவ்விதப் படகுகளை அமைத்தனர். பின்னாட்களில் கப்பல் கட்டும் தொழில் எப்படி வளர்ச்சியுற்றது என்பது அறியப்படவில்லையெனினும் சுமேரியர்கள் கி.மு.2000 ஆண்டுகளுக்கு முன்பாக இந்த தொழிலை செய்து வந்தனர். மூங்கில்கள் பைபி லோசிலிருந்து (Byblos) எகிப்திற்கு கி.மு.2005–லேயே கடல் மார்க்கமாக அனுப்பப்பட்டன என்பதை அறியலாம். ஏறத்தாழ 170அடி நீளமுள்ள 40 கப்பல்கள் இப்படி கடல் மார்க்கமாய் அனுப்பப்பட்டன என்பதற்கு ஆதாரங்கள் இருக் கின்றன. சுமார் 100 ஆண்டுகளுக்கு பின்பாக கண்டெடுக்கப்பட்ட சில ஓவியங்கள் இந்த கப்பல்களின் தோற்றத்தை நமக்கு ஓரளவிற்கு தெரிவிக்கின்றன.

2. **பண்டமாற்றுமுறையும் நாணயங்களும்** *(Trade&Coins)*:–பொதுவாக சந்தை வெளி களில் வியாபாரம் செய்பவர்கள் தாங்கள் கொண்டு வரும் பொருளைக் கொடுத்து அதற்கு ஈடாக வேறு பொருட்களைக் கொள்முதல் செய்வர். தானியத்தைக் கொடுத்து வஸ்திரத் தையும், வெள்ளியைக் கொடுத்து அணிகலன்களையும், எண்ணெயைக் கொடுத்து அப்பங்களையும் வாங்கிச்செல்வது வழக்கம்.சில வேளைகளில் அவர்கள் கொடுக்கும் பொருளின் விலை வாங்கும் பொருள்களின் விலையைவிட குறைவாக இருக்கும் போது நாணயங்களை உடன் சேர்த்துக்கொடுப்பது வழக்கம். உலோகத்தாலான நாணயங்கள் அந்நாளில் பயன்படுத்தப்பட்டன. அதிலும் வெள்ளி, பொன் நாணயங்கள் அதிகமாய் புழக்கத்தில் இருந்தன. ஆகவே "வெள்ளி" என்ற பதமே "பணம்" என்ற பெயரில் மாறியது (ஆதி.17:13).

பணம், நாணயம் என்ற இருவார்த்தைகளும் ஒன்று போல் இருந்தாலும் அதன் பொருள் வேறாய் இருந்தது. பணம் என்பது நிறுத்து கொடுக்கப்படும், ஆகவே அதன் எடைக்குத் தக்கதாக அதன் மதிப்பு இருக்கும். ஆனால் நாணயமோ அதனுடைய தரத்துக்குத் தக்கவும் அதன் எடைக்குத் தக்கதாகவும் மதிக்கப்படும். பெர்சியரின் காலத்தில் பணம் என்பது பொதுவாக உலோகங்களைக் குறிக்கும். அது வளையம், கம்பி, கட்டியான உலோகம், உலோகத்தகடு, தடிகள், பாலங்கள் அல்லது தங்கத்து கள்கள் போன்ற வடிவில் பயன்படுத்தப்பட்டன (யோசு.7:21 ; ஏசா. 13:12). எனவே ஒரு பொருளை வாங்க வேண்டுமென்றால் பணம் என்று அவர்கள் கருதிய இந்த உலோகங்களை நிறுத்துக் கொடுத்து பொருட்களை வாங்குவர். ஆபிரகாம் 400 சேக்கல் வெள்ளியை நிறுத்துக் கொடுத்து எப்பெரோன் கையில் நிலத்தை வாங்கினான் (ஆதி. 23:16).

மத்திய கிழக்கு நாடுகளின் வர்த்தகத்தில் பொதுவாக சேக்கல் (Shekel) என்ற பதம் பயன்படுத்தப்பட்டு வந்தது. சேக்கலின் நிறை ஒவ்வொரு இடத்திற்கும் நாட்டிற்கும் தகுந்தாற்போல் வேறுபட்டாலும் பாலஸ்தீனியர் பயன்படுத்திய சேக் கலின் அளவே பொதுவாக மற்ற இடங்களிலும் பயன்படுத்தப்பட்டது. வெண்கல மானது வெள்ளியை விட சற்றுக் குறைவாக மதிக்கப்பட்டது. தட்டையான தகடுகள் அல்லது வட்டவடிவ தட்டுகள் போன்ற வடிவத்தில் வெண்கலம் பயன்படுத் தப்பட்டது (Kikkar = Talent). தாலந்து என்பது மிக அதிக எடையுள்ள நிறையாகும்.

பாலஸ்தீன தேசத்தில் சேக்கல்லானது ஏறத்தாழ **0.4**அவுன்ஸ் அளவாகும் (195 Grains).(இது ரூ.**20/–**ஆகும்–ஒரு அமெரிக்க டாலரின் மதிப்பு ரூ.**40/–** என்று இருந்தால்) இது 207.7 Grains அளவைவிட சற்றுக் குறைந்த மதிப்புடையது. இந் நாட்களிலுள்ள வெள்ளியின் மதிப்போடு ($1.29/அவுன்ஸ்) ஒப்பிடும் போது ஒரு சேக்கல் வெள்ளி என்பது ஏறத்தாழ **52** சென்ட் (ரூ.**20.80**) ஆகும். இந்தக் கணக்கின்படி ஆபிரகாம் வாங்கிய நிலத்தின் விலையானது **208** டாலராகும் (ரூ.**8320**). யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்காக வாங்கிய வெள்ளியின் அளவு **10.40** டாலராகும் (ரூ.**416**). இரண்டு விதமான சேக்கல்கள் அந்நாட்களில் பழக்கத் தில் இருந்தது. ஒன்று அதிக நிறையுள்ள சேக்கல் (Heavy Shekel), மற்றொன்று திட்ட அளவின்படியான சேக்கல் (Standard Shekel). இராஜரீக அளவானது (Royal Weight) திட்ட அளவைப் போல **2** மடங்காகும்.

பாலஸ்தீனியர்களின் தாலந்தானது **3000** சேக்கல்லுக்கு சமமாகும். அது வெள்ளி உலோகமாக இருந்தால் அதன் மதிப்பு **156** டாலர் (ரூ.**6240/–**). தங்கமாக இருந்தால் அதன் மதிப்பு **42,000** டாலர் (**16,80,000/–**). சாலொமோன் அரசனுக்கு ஆண்டு தோறும் வரும் தங்கத்தின் அளவு மாத்திரம் **666** தாலந்தாய் இருந்தது. இதன் மதிப்பு **2,79,72,000** டாலராகும் (ரூ.**111** கோடியே **88** இலட்சத்து **80**ஆயிரம்). தேவாலயத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்திலிருந்த தங்கத்தின் மதிப்பு **2,52,00,000** டாலராகும் (ரூ.**100** கோடியே **80** இலட்சம்) (2நாளா. 3:8). அசீரிய ராஜாவாகிய செனகெரீப் எசேக்கியாவிடத்திலிருந்து பெற்ற வரியின் அளவு **300** தாலந்து வெள்ளியும் **30** தாலந்து பொன்னுமாகும் (2இரா. 18:14). இதன் மதிப்பானது **13,00,000** டாலரை (ரூ.**5**கோடியே **20** இலட்சம்) விட அதிகமாகும்.

கிரேக்க நாடுகளின் வெள்ளி, தங்கம் இவற்றைத் தகடுகளாக்கி அதிலிருந்து நாணயங்கள் தயாரிக்கும் முறை கி.மு. **600** ஆம் ஆண்டிலிருந்தே வழங்கி வந்தது. லீதியாவின் அரசனான க்ரோயீசஸின் காலத்தில் (கி.மு.**561–546**) முதன் முதலாக தங்கநாணயங்கள் தயாரிக்கப்பட்டன. கோரேஸ் மன்னன் கி.மு.**546**–ல் க்ரோயீசஸை வென்று, நாணயங்கள் தயாரிக்கும் முறையை பெர்சிய தேசத்திற்கு கொண்டு சென்றான். ஆனால் தரியு அரசன் நாட்களில் (கி.மு.**522–486**) தான் நாணயப் புழக்கங்கள் மிக அதிகமாய் இருந்தன (எஸ்றா **2:69** ; **8:27** ; நெகே. **7:70–72**). நாணயங்கள் **130** கிரெய்ன் அல்லது **0.3** அவுன்ஸ் அளவுள்ளதாக இருந்தது. அதன்

தற்போதைய மதிப்பு 10.50 டாலராகும் (ரூ.420/–). தரியு அரசன் காலத்தில் வெள்ளிக்கும் தங்கத்திற்குமுரிய விலை மதிப்பானது 1:13 என்ற அளவில் நிர்ண யிக்கப்பட்டது. பின்னாட்களில் தாலந்து, ட்ராக்மா (Drachma) என்ற கிரேக்க நாணய அளவுகள் பாலஸ்தீன தேசத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன (1 மக்கபேயர் 11:28 ; 2 மக்கபேயர்4:19). கி.மு.141–ல் சீமோன் மக்கபேயருக்கு ஏழாம் அந்தியோகு வெண்கல நாணயங்கள் தயாரிக்கும் உரிமையை அளித்தார் (1மக்கபேயர் 15:6). யூதர்கள் ரோமருக்கு விரோதமாய் கழகம் செய்த போது 1/4, 1/2 சேக்கல் அளவுள்ள வெள்ளியை நாணயங்களாக தயாரித்தனர்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யூத, கிரேக்க, ரோம நாணயங்கள் புழக்கத்தில் இருந்தபடியால் தேவ ஆலயத்தில் இந்த நாணயங்களை மாற்றுவதற்கு தேவைகள் ஏற்பட்டன (மத்.21:12 ; யோவா. 2:15). ஏனெனில் ஆலயத்தின் வரியானது தீருவின் நாணயமாக செலுத்தப்பட வேண்டும். யூத நாணயத்தை (Bronze Lepton "Mite") குறித்து வேதத்தில் ஓரிரு இடங்களில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது (மாற்.12:42 ; லூக். 12:59). இதன் அளவு 1/2 ரோம குவார்ட்ரன்ஸ் (Quadrans) அல்லது 1/64 தினாரியஸ் ஆகும். ரோமர்கள் தினாரியஸ் என்ற வெள்ளி நாணயத்தைப் பயன் படுத்தினர். அரசாங்க பண்டமாற்று முறையில் இதன் மதிப்பானது தங்க ஆரியஸின் அளவில் (Aureus) 1/22 ஆகும். நீரோ அரசனின் காலத்தில் இதன் மதிப்பானது 115 கிரெய்ன் அல்லது 8.39 டாலர் (ரூ.335.60). தினாரியஸ் என்பது ஒரு கூலியாளின் தினசரி கூலியாக கருதப்பட்டது (மத்.20:1–16). இதன் மதிப்பு 1 மணி நேரத்துக்கு 2 டாலர் என்ற முறையில் 1 நாளின் 8 மணி நேர வேலைக்கு 16 டாலராகும். "1 காசு" என்று புதிய ஏற்பாட்டில் கூறப்படும் பணத்தின் அளவானது (மத்.10:29 ; லூக்.12:6) 1/16 தினாரியஸ் அல்லது 2 செண்ட் ஆகும். இது ஏறத்தாழ 45 நிமிட வேலைக்கு கொடுக்கப்படும் கூலியாகும்.

ட்ராக்மா (Drachma) அல்லது 1 வெள்ளிப்பணம் எனக் கூறப்படும் கிரேக்க நாணயமானது தினாரியஸுக்கு சமமாய்க் கருதப்பட்டது. தேவாலயத்தின் வரித்தொகையாக 2 வெள்ளிக்காசுகள் வசூலிக்கப்பட்டது (Di-Drachma). நான்கு வெள்ளிக்காசுகள் என்ற நாணயமானது பொதுவாகப் புழக்கத்தில் இருந்தது (Tetra Drachma). இதன் மதிப்பு கி.மு. 65–ல் 1.32 டாலராகும். இயேசுவும் பேதுருவும் வரிப்பணம் செலுத்துவதற்கு இந்த நாணயத்தையே பயன்படுத்தினர் (மத். 17:27). யூதாஸ் பெற்றுக் கொண்ட 30 வெள்ளிக்கா சானது இந்த நாணய அளவின் படியே அவனுக்குக் கொடுக்கப்பட்டது (மத்.26:15). இதன் மதிப்பானது பொது வாக ஒரு சாதாரண உழைப்பாளியின் நான்கு மாத வருமானமாகும். ராத்தல் என்ற அளவு புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டது (லூக். 19:11–27). இதன் மதிப்பு ஏறத்தாழ 100 வெள்ளி ட்ராக்மாவாகும் (33.54 டாலர் – ரூ.1341.60).

தாலந்து என்ற வார்த்தை வேதத்தில் ஓரிரு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மிகப்பெரிய ஒரு தொகையில் ஒரு விகிதத்தைக் குறிப்பதற்கு இந்த வார்த்தை

பயன்படுத்தப்பட்டது (ஏறத்தாழ 6,000 ட்ராக்மா = 2000 டாலர் = ரூ.80,000). இயேசு கிறிஸ்து தன் உவமையில் கூறும் போது பதினாயிரம் தாலந்து என்ற வார்த்தையை பயன்படுத்தினார் (மத்.18:24). இதன் மதிப்பு ஏறத்தாழ 2,00,00,000 டாலராகும் (ரூ.80 கோடி).அதாவது ஒரு உழைப்பாளி 200 ஆண்டுகள் உழைத்தால் எவ்வளவு சம்பாதிக்க இயலுமோ அதுதான் இந்த அளவாகும். அவ்வண்ணமே இயேசு தாலந்து என்ற பதத்தை மற்றொரு உவமையில் குறிப்பிட்டிருந்தாலும் அதன் மதிப்பும் அளவும் வேறாகும் (மத்.25:14–28).

மத்தியகிழக்கு நாடுகளில் அடிமை சந்தையானது சாதாரணமாக பழக்கத்தில் இருந்தது. யுத்தத்தின் போது வெற்றி பெற்ற நாட்டவர் தோற்றுப்போன மக்களை அடிமைகளாக தங்கள் தேசத்திற்கு கொண்டு வருவது வழக்கம் (ஆதி.14:21). சில வேளைகளில் அடிமைகளை விலைகொடுத்து வாங்குவர் (ஆதி.17:12). யோசேப்பு அப்படித்தான் அடிமையாக விற்கப்பட்டான். அடிமையாக வேலை செய்கிற ஒருவனின் பிள்ளைகளும் அடிமைகளாக மாறி விடுவதுண்டு (ஆதி.15:3). கடன் சுமையினிமித்தம் சிலர் அடிமைகளாவது உண்டு (லேவி. 25:30). கடன் வாங்கினவர்களின் பிள்ளைகளை சிலர் அடிமைகளாய்க் கொள்வதுண்டு (2இரா.4:1). அடிமைகளுக்குரிய உரிமைகள் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நியமிக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப நாட்களில் அடிமைகள் மிகக்குறைந்த விலைக்கு வாங்கப்பட்டாலும் நாட்கள் செல்ல செல்ல மற்ற விலைகள் ஏறுவதைப் போல் அடிமைகளுக் கான விலையும் ஏறத்துவங்கியது. கி.மு.3000 ஆண்டுகளின் பின்பகுதிகளில் ஒரு அடிமையின் விலையானது 10 முதல் 15 சேக்கல் நிறை வெள்ளியாகும். 500 ஆண்டுகளுக்குப் பின்பு யோசேப்பு 20 சேக்கல் வெள்ளிக்கு அடிமையாக விற்கப்பட்டான். இன்னும் 200 ஆண்டுகள் கழித்து 30 வெள்ளியாகவும் பின் 40 வெள்ளியாகவும் இவ்விலை உயர்ந்தது. அசீரிய, பாபிலோனிய, பெர்சிய பேரரசின் காலத்தில் அடிமைகளின் விலையானது 50 முதல் 60 ஆகவும் அதன் பின் 120 சேக்கல்லாகவும் இருந்தது.

அடிமைத்தனம் என்பது அந்நாட்களில் மிகக்கொடியதாய் இருந்தது. அடிமைகள் இறக்கும் முன்பு கொடூரமாய் நடத்தப்படுவர் என்றாலும் சமுதாய, பொருளாதார அமைப்பிற்கேற்ற சில சட்டங்களின்படி இந்த கொடுமைகள் தளர்த்தப்பட்டன. தாலந்துகள், திறமைகள் இல்லாத மக்கள் அதிலும் பெண்கள் பொதுவாக அடிமைகளாக விற்கப்படுவர். பின்னாட்களில் அடிமைகளுக்கு சுயாதீனம் அளிக்கப்பட்டபடியால் அவர்கள் விடுதலையுள்ள மக்களைப் போலவே வீதிகளுக்கு வர முடிந்தது. மருத்துவர்கள், ஆசிரியர்கள் போன்றோரும் பல வேளைகளில் அடிமை களாக இருந்தனர். பின்னாட்களில் புதிய ரோம சட்டங்கள் இயற்றப்பட்டபடியால் அடிமைத் தனத்திலிருந்து மக்கள் விடுதலையாவது கடினமாய் இருந்தது. என்றாலும் காலங்கள் செல்லச்செல்ல அடிமைத்தன முறைமையானது பெருமளவிற்கு நீக்கப்பட்டது.

◆❖◆❖◆❖◆

# 13

# அரசியல் வாழ்க்கை

## (POLITICAL LIFE)

பரிசுத்த வேதாகமமானது தன்னிகரற்ற தலைசிறந்த புத்தகமாய் இருப்பதினால் மக்களுடைய வாழ்க்கையிலுள்ள எல்லா நிகழ்வுகளைக் குறித்த சான்றுகளையும் விளக்கங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. உலகின் எந்த சமய நூல்களிலும் காணக்கிடைக்காத பல குறிப்புகளும் மக்களது வாழ்க்கையோடு இணைந்த நிகழ்வுகளும் சரித்திர, பூகோள, அரசியல், சமுதாய, சமய ஆதாரங்களோடு வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வேதத்தை வாசித்து தெளிவாய் அறிவதற்கு இந்த ஆதாரங்களையும் நாம் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம்.

மத்திய கிழக்கு நாடுகளில் மக்கள் நாடோடிகளாக வாழ்ந்த சமயத்தில் அவர்களுக்கென கட்டணங்களோ, அரசியல் எல்லைகளோ இருந்ததில்லை. இன்றைய நாட்களிலும் அரபு தேசத்தில் உள்ள நாடோடிகள் தங்களுக்கென நிலையான இடமின்றி ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அடிக்கடி இடம் பெயர்ந்து சென்று கொண்டிருக்கின்றனர். இந்த நாடோடிகளின் வாழ்க்கையானது கோத்திரம், குலம், குடும்பம் என்ற பிரிவுகளாக மாத்திரமே குறிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தகப்பனோ அல்லது முதியோர்களோ தலைவனாக இருப்பர். இரண்டு அல்லது மூன்று குடும்பங்களுக்கு தலைவராக அக்குடும்பங்களில் உள்ள முதியோர்கள் இருப்பர். குடும்பப் பிரச்சினைகள் அனைத்துமே இந்த முதியோர்களாலேயே தீர்த்து வைக்கப்படும். ஆனால் நாடோடிகள் போலல்லாது ஒரே இடத்தில் வாழும் மக்களது வாழ்க்கை முறை வித்தியாசமாக வளரத் துவங்கியது. முற்பிதாக்களின் காலம் துவங்கி இந்நாட்கள் வரை

அவர்களது சமுதாய அரசியல் வாழ்வில் பல முன்னேற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

**1. பட்டணங்கள் (CITIES):-** நிலையான இடங்களில் தங்கி வாழும் மக்கள் மதில் சூழ்ந்த பட்டணங்களை தங்களுக்கு வாழ்விடமாகக் கொண்டனர். இந்த பட்ட ணங்களை ஆளுகின்ற அரசனே அப்பட்டணத்தில் தலைவனாகவும் ஆலோசகரா கவும் இருப்பர். யோசுவாவின் தலைமையின்கீழ் இஸ்ரவேலர் கானான் தேசத்தை வென்றபோது அங்கிருந்த பல பட்டணங்களை ஜெயித்தனர். ஏறத்தாழ 31 இராஜாக்களை யோசுவா வென்றதாக வேதத்தில் காண்கிறோம் (யோசு.12:9–24).

பெலிஸ்தியர் 5 பட்டணங்களுக்கு அதிபதிகளாய் இருந்தனர் (யோசு.13:3 ; நியா.3:3 ; 1 சாமு. 5:8). கிபியோனியர் 4 பட்டணங்களுக்கு அதிபதிகளாய் இருந்தனர் (யோசு. 9:17). எகிப்திலே பட்டணங்களெல்லாம் ஒன்றாய் இணைந்து ஒரு ராஜ்யமாக உருவெடுத்தது. ஏறத்தாழ ராஜவம்ச வழியில் கி.மு.3000–ல் ராஜ பரம்பரையின் ஆட்சி எகிப்தில் துவங்கியது. மேற்புற எகிப்தும் கீழ்ப்புற எகிப்தும் படிப்படியாய் இணைந்து ஒரே ராஜ்யமாயின. மெசபத்தோமியாவிலும் கி.மு.3000–ல் ஒரு பட்ட ணத்தார் மறுபட்டணத்தார் மேல் ஆட்சி செலுத்தும் ஆளுகை முறை இருந்து வந்தது. ஆனால் சில காலங்களுக்குப் பின்பு ராஜ பரம்பரையின் ஆட்சி அங்கும் துவங்க ஆரம்பித்தது. இந்த ஆட்சி முறைமையின்படி ஒரு குடும்பத்திலுள்ள அடுத் தடுத்த தலைமுறையினர் ராஜாவாக பதவியேற்று ஆளுவர். அதிலும் தந்தையை அடுத்து மகனும் அதையடுத்து அவரது மகனும் ஆட்சிக்கு வருவது வழக்கமாய் இருந்தது.

**2.ராஜ்யம் (KINGDOMS)** :– ராஜ்யம் என்பது அந்நாட்களில் இருவிதத்தில் ஸ்தாபிக் கப்பட்டது. அரசியல் ரீதியாகவும் இனஅடிப்படையிலும் (Political and the Ethnic) ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.குடும்ப உறவின் அடிப்படையிலல்லாது அரசியல் ரீதியில் மாத்திரம் மக்கள் இணைந்து உருவாக்கும் ஆளுகை ராஜ்யம் என அழைக்கப்பட்டது. எகிப்து, மெசபத்தோமியா, அசீரியா, பாபிலோன் போன்ற ராஜ் யங்கள் இவ்வாறு உருவானவைகளாகும். ஆனால் இன அடிப்படையில் உருவான ராஜ்யங்களோ ரத்த சம்பந்தமான, குடும்ப உறவின் அடிப்படையிலேயே அமைக் கப்பட்டன. இவர்கள் தாங்கள் தோற்கடிக்கும் நாட்டு மக்களைக் கொன்று குவித்து அந்நாட்டைக் கைப்பற்றி தாங்களே அரசாளுவர். அல்லது தாங்கள் ஜெயித்த நாட்டு மக்களை தங்கள் இனத்துக்குள் திருமணம் செய்தோ அல்லது வேறு வழியிலேயோ தங்கள் இன மக்களாக்கிக் கொள்ளுவர். யூத மார்க்கத்தமைந்த பல மக்கள் இந்த அடிப் படையிலேயே யூத மார்க்கத்தில் இணைந்தனர். இஸ்ரவேல் எகிப்தினின்று புறப்பட்ட போது அவர்களோடு மற்றஇனத்தவர்களும் உடன் புறப்பட்டனர்.அவர்கள் இஸ்ரவேலர் மார்க்கத்தோடு சேர்த்துக் கொள்ளப் பட்டனர் (யாத்.12:38).

**3. இஸ்ரவேல் ராஜ்யம் உருவான விதம் (ORIGIN OF ISRAEL )** :– இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட போது ஒரு ராஜ்யமாக அல்லாமல் பல கோத்திரங்கள்

இணைந்த கூட்டமாகவே உள்ளனர். வனாந்தரப் பயணம் முழுவதும் இவர்கள் இவ்விதமாகவே பயணம் செய்தனர்.ஆனால் கானானுக்குள் சென்ற பின்பு இந்த கோத்திர ஆட்சியில் சில மாற்றங்கள் உண்டாயின. கோத்திரப் பிதாக்கள் பட்டணத்து மூப்பர்களாய் மாறினர் (நியா.8:16;1 இரா.21:8). இவ்வித ஆட்சி முறையானது ஏகாதி பத்திய ஆட்சியிலும் தொடர்ந்தது (1 இரா. 8:1 ; 20:7 ; 2 இரா. 10:1 ). இஸ்ரவேலர் சிறைப்பட்டு போன போதும் (எரே. 29:1 ; எசே. 20:1 ) சிறையிருப்பின் பின்னும் (எஸ்றா 10:8,14) புதிய ஏற்பாட்டின் காலத்திலும் (லூக். 7:2–3) இந்த ஆட்சிமுறை தொடர்ந்தது. புதிய ஏற்பாட்டுத் திருச்சபைகளிலும் மூப்பர்களின் தலைமைத்துவம் ஓரளவிற்கு பின்பற்றப்பட்டது.

**4. நியாயாதிபதிகள் (JUDGES):–**கானானுக்குள் இஸ்ரவேலர் சென்ற பின்னர் நியாயாதிபதிகளின் ஆட்சியும் அதையடுத்து அரசராட்சியும் தொடர்ந்தது. ஒவ்வொரு நியாதிபதியும் தேவனால் எழுப்பப்பட்ட ஒரு நபராய் இருந்து ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் மக்களை நியாயம் விசாரித்தனர் (நியா.2:16–18). நியாயாதிபதிகள் இஸ்ரவேல் தேசம் முழுவதையும் ஆளுகிறவர்களாய் இருந்தனர். மக்கள் தேவனை விட்டு பின்வாங்கும் போதெல்லாம் தேவன் ஒரு நியாயாதிபதியை எழுப்புவார். அவர்கள் குறிப்பிட்ட காலம் வரைக்கும் மக்களை கர்த்தரின் பாதையில் நடத்துவர் (நியா. 3:7–9,12–15 ; 4:1–4). அந்த நியாயாதிபதிகளின் காலத்திற்கு பின்பு மக்கள் மீண்டும் பாவ வழியில் செல்லுவர்.அப்போது கர்த்தர் மீண்டும் ஒரு நியாயாதி பதியை எழுப்புவார். இப்படியாக தொடர்ந்தேர்ச்சையாக பல நியாயாதி பதிகள் இஸ்ர வேலரை நியாயம் விசாரித்தனர். ஆண்கள் மட்டுமல்லாது, பெண்களும் நியாயாதிபதிகளாக செயல்பட்டனர்.

**5.அரசர்கள் (KINGS):–** நியாயாதிபதிகளின் காலங்களுக்குப் பின்பு இஸ்ரவேல் மக்கள் மற்ற தேசத்தாரைப் போலவே தங்களுக்கும் ஒரு அரசன் வேண்டுமென்று தேவனிட மும் சாமுவேல் தீர்க்கதரிசியிடமும் முறையிட்டனர் (1சாமு.8:5,20). இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதி சாமுவேலாகும் (1சாமு.8:1,5 ; 2நாளா.19:5).மக்கள் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென கேட்டுக் கொண்டபடியால் கர்த்தர் சாமு வேலை நோக்கி கீசின் குமாரனாகிய சவுலை ராஜாவாக அபிஷேகம் செய்யச் சொன்னார் (1சாமு. 9:15–17 ; 10:1). சவுல் ராஜாவாகவும் இரட்சகனாகவும் மக்களுக் காக யுத்தம் செய்தான். அம்மோனியர், அமலேக்கியர், பெலிஸ்தியர் போன்ற பகை வர்களிடமிருந்து மக்களை இரட்சித்தான்.ஆனால் பெலிஸ்தியருக்கு விரோத மான போரில் மரித்துப் போனான் (1சாமு. 31:1–6).

சவுல் ராஜபரம்பரையில் பிறவாதவனாய் இருந்தும் அரசனானான். தாவீதும் கர்த்த ருடைய அபிஷேகத்தினாலேயே ராஜாவாக மாறினான் (1சாமு.10:1;16:13). ஆனால் தாவீதின் காலத்திற்குப் பின்பு அரசாட்சியில் மாற்றங்கள் உண்டானது. அம்மோனியர், மோவாபியர், ஏதோமியர், பெலிஸ்தியர் போன்ற மக்கள் தாவீதினால் ஜெயிக்கப்பட்டு இஸ்ரவேல் ராஜ்யத்திற்குட்பட்டனர் (2சாமு.8:1–14). இஸ்ரவேல்

மக்களை மட்டுமல்லாது தங்கள் யுத்தத்திற்கு கூலிப்படைகளையும் தாவீது அமர்த்திக் கொண்டான் (2சாமு.8:18;20:23). தாவீதின் காலத்திற்குப் பின்பு அவர் களது குமாரர்கள் அரசாட்சியில் அமர்ந்தனர் (1இரா.1:29–30). தாவீதின் சிங்கா சனத்தில் நித்திய ராஜாவாக இயேசு கிறிஸ்து அமரும் வரை தாவீதின் அரசாட்சி தொடர வேண்டுமென்பதே தேவனின் சித்தமாகும் (2சாமு.7:8–16).

தாவீது முதல் முறையாக யூதா கோத்திரத்தால் ராஜாவாக அபிஷேகம்பண்ணப் பட்டான் (2சாமு.2:4). அதன் பின்பு அவன் எருசலேமை ஜெயித்து அதைத் தனக்கு தலைநகராக்கிக் கொண்டான். எருசலேம் வடக்கு, தெற்கு இரண்டு பகுதிகளுக்கும் நடு மையத்தில் இருந்தபடியால் இருபகுதிகளுக்கும் பொதுவான தலைநகராய் இருந்தது. தாவீது இஸ்ரவேல், யூதா கோத்திரங்களின் மேல் 33 ஆண்டுகள் அரசாட்சி செய்தான் (2சாமு.5:5). தாவீதை அடுத்து சாலொமோன் இஸ்ரவேல், யூதா கோத்திரங்களை ஆட்சி செய்தான் (1 இரா.1:35). சாலொமோனின் குமார னாகிய ரெகொபெயாமின் காலத்தில் அரசாட்சியில் பிரிவு உண்டானது.

வடராஜ்யத்தில் (இஸ்ரவேல்) ராஜபரம்பரையின் ஆட்சியில் யெரொபெயாம் வடபகுதிக்கு முதல் அரசனானான் (1இரா.11:29–31,37). யெரொபெயாமும் யெகூவும் (1இரா.19:16) அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜாக்களாக ஆட்சி செய்தனர். 200 ஆண்டுகளில் இந்த வடராஜ்யத்தில் 19 அரசர்கள் ஆட்சி செய்தனர். இவர்கள் 9 வம்ச வழியைச் சார்ந்தவர்கள். இவர்களில் நான்கு பரம்பரையில் ஒரே ஒரு அரசனும், இரண்டு பரம்பரையில் இரண்டு அரசர்களும் ஆட்சி செய்தனர். உம்ரி வம்சத்தில் 4 இராஜாக்களும், யெகூ வம்சத்தில் 5 இராஜாக்களும் ஆட்சி செய்தனர். வடக்கு தெற்கு ராஜ்யங்களிடையே நல்ல உறவுகள் நிலவிவந்தன. எனவே தெற்கு ராஜ்யத்தின் மக்கள் கர்த்தரை இஸ்ரவேலரின் தேவன் என அழைக்க அஞ்சவில்லை.

இஸ்ரவேலின் ராஜாக்கள் மக்களுக்கு நல்ல ஆலோசகராகவும் இரட்சக ராகவும் விளங்க வேண்டுமென மக்கள் எதிர்பார்த்தனர். மட்டுமல்ல, இஸ்ரவேலில் ராஜாவாகும் எந்த அரசனும் தன்னை தேவனே ராஜாவாக்கினார் என்றும், தான் தேவனுக்கு ஊழியக்காரன் என்றும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாய் இருந்தது. இதை அவன் மறந்து போன போது தீர்க்கதரிசிகள் அவ்வப்பொழுது அவனுக்கு நினைப்பூட்டினர். இக்காரியங்களை அரசன் அறிந்து கொள்ளும்படி "ராஜரீக சங்கீதங்கள்" (Royal Psalms) இயற்றப்பட்டன.

ஒரு அரசன் தான் தேவனுடைய குமாரன் என்றும் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் என்றும் அறிந்திருக்க வேண்டும் (சங். 2அதி ; 2சாமு. 7:14). அவனது சிங்காசனம் தேவனுடைய சிங்காசனம் (சங்.45), அவனது செங்கோல் சீயோனிலிருந்து தேவனால் கொடுக்கப்பட்ட செங்கோல், அவனது வெற்றி தேவனது செயலால் அவனுக்குக் கொடுக்கப்படும் வெற்றியாகும் (சங்.110). எனவே இது போன்ற காரி யங்களை இந்த ராஜரீக சங்கீதங்கள் வழியிட்டு கூறுகின்றன. மட்டுமல்லாது, இந்த சங்கீதங் களெல்லாம் மேசியாவின் நீதியுள்ள அரசாட்சியில்

நடக்கவிருக்கும் காரியங்களை பறைசாற்றுவதாய் இருக்கின்றன. மட்டுமல்லாது, தாவீதின் குமாரனாம் இயேசு கிறிஸ்துவின் ஆட்சியில் நடக்கவிருக்கும் காரியங்களை புதிய ஏற்பாட்டு திருச்சபை அறிந்து கொள்ளும்படி இவைகள் எழுதப்பட்டுள் ளது. மற்ற தேசங்களிலுள்ள மக்கள் தங்கள் அரசனை கடவுளுக்கு சமமாக மதித்து வந்த போதும், இஸ்ரவேல் மக்களும் அரசனும் தன்னை அப்படி நினைக்கக் கூடாது என்ற எச்சரிப்பைப் பெற்றிருந்தனர்.

இஸ்ரவேலை ஆளும் அரசன் அதற்கென்றே பிரத்தியோகமாக அபிஷேகம் பண்ணப்படுவது வழக்கம் (சங்.63அதி). மட்டுமல்லாது, பலி செலுத்துதல் போன்ற சில மத சடங்குகளையும் செய்வதற்கு அவனுக்கு உரிமையிருந்தது. தாவீது கில் காலில் பலி செலுத்தினான் (2சாமு. 6:13). சாலொமோன் தேவனுக்கு பலி செலுத்தி னான் (1சாமு. 3:4). ஆகாஸ் எருசலேமிலும், யெரெபெயாம் பெத்தேலிலும் பலி செலுத்தினர் (2இரா.16:12–13 ;1இரா.12:33). ஆனால் சவுல் அரசன் பலி செலுத்தின போதோ தீர்க்கதரிசியால் கடிந்து கொள்ளப்பட்டு, அரச பதவியிலிருந்து நிராகரிக் கப்பட்டான் (1சாமு.13:13).

தீர்க்கதரிசிகள் அரசர்களை அபிஷேகம் செய்து, பட்டமேற்பு விழா மூலம் அவர்களை ராஜாக்களாக்குவது வழக்கம். அரசன் சாலொமோனும் யோவாஸும் இவ்விதமே அபிஷேகம் செய்யப்பட்டனர் (1இரா.1:32–38 ; 2இரா.11:12–20). இந்த இரு சம்பவங்களிலிருந்தும் நாம் சில காரியங்களை அறிந்து கொள்ளலாம்.

1.அரசர்கள் பொதுவாக அபிஷேகம்பண்ணப்படும் இடத்திற்கு அழைத்துச் செல் லப்படுவர். இதன்படி சாலொமோன் உடன்படிக்கைப் பெட்டியிருந்த இடமாகிய கீகோனுக்கும் (1இரா.1:38–39),யோவாஸ் தேவாலயத்துக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

2. ராஜகிரீடமானது அரசனின் தலையிலே வைக்கப்படும் (2இரா.11:12),

3. தீர்க்கதரிசிகள் அரசனை அபிஷேகம் செய்வர் (1இரா.1:39 ; 2இரா.11:12), இஸ்ர வேலிலும் யூதேயாவிலும் பல இராஜாக்கள் இவ்விதமாய் அபிஷேகம் செய்யப் பட்டனர். இவ்விதமாய் அரசர்கள் அபிஷேகம்பண்ணப்படுவதோடு, இந்நிகழ்ச்சி யின் மூலம் மக்களுக்கும் அரசனைக் குறித்த தெய்வீக பயம் உள்ளத்தில் உண் டாகும் (1சாமு. 24:6–9 ; 26:11 ; 2சாமு.1:14).

4.அரசனை அபிஷேகம் செய்தபின் மக்கள் கரங்களைத் தட்டி கீதவாக்கியங்களை இசைத்து உரத்த சத்தத்தோடு ராஜா வாழ்க என வாழ்த்துவர்(1 இரா.1:34,39 ; 2 இரா.11:12).

5. அபிஷேகம் செய்யப்பட்ட பின்பு அரசனை அரண்மனைக்குள் அழைத்து வந்து சிங்காசனத்தில் அமரச் செய்வர் (1 இரா.1:46 ; 2 இரா. 11:19). இந்த சிங்காசனமானது தாவீதின் சிங்காசனம் அல்லது கர்த்தரின் சிங்காசனம் எனஅழைக்கப்பட்டது.

இந்த சிங்காசனமானது அரசனுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற்கு அடையா ளமாய் இருந்தது (1நாளா. 29:23 ; சங். 89:36 ; 45:6).

6.அரசனை சிங்காசனத்தில் அமரச் செய்த பின்பு அரசாங்க அதிகாரிகள் அனைவரும் அரசனை வணங்கி அவனுக்கு மரியாதை செலுத்துவர் (1 இரா. 1:47).

பல தேசங்களில் ராஜாக்கள் அரசாட்சியில் அமர்ந்த பின் அவர்களது சொந்தப் பெயரால் அழைக்கப்படாமல் அரசாட்சிக்குரியபட்டப்பெயரால் பாரம்பரியமாக அழைக்கப்பட்டனர். உதாரணமாக அசீரிய ராஜாவாகிய பூல், திக்லாத்பிலேசர் என்ற தன் சிங்காசனத்தின் பேரில் அழைக்கப்பட்டான் (1நாளா. 5:26). அது போல எகிப்தை ஆண்ட ராஜாக்கள் அனைவரும் பார்வோன் என்ற சிங்காசனப் பெயராலேயே (Throne Names) அழைக்கப்பட்டனர். யோசியாவின் குமாரனாகிய எலியாக்கீமின் பெயரானது யோயாக்கீம் என மாற்றப்பட்டது (2இரா.23:34). மத்தனியாவின் பெயர் சிதேக்கியா எனவும் மாற்றப்பட்டது (2 இரா.24:17). யோவகாஸ் சல்லூம் என அழைக்கப் பட்டான் (2 இரா.23:30 ; எரே. 22:11). உசியா அசிரியா என அழைக்கப்பட்டான் (ஏசா.1:1 ; 2 இரா.14:21). சாலொமோன் நாத்தான் தீர்க்கதரிசியால் யெதிதியா என அழைக்கப்பட்டான் (2சாமு.12:25).

**6. இராஜாக்களின் திருமண வாழ்க்கை** (KINGS & MARRIAGES) :– ஒரு அரசன் பட்டமேற்று சிங்காசனத்தில் அமர்ந்து ஏற்றகாலம் வந்ததும் ராஜமுறைமையின்படி அவனுக்கு திருமணம் நடைபெறும். அத்திருமணத்தையொட்டி ராஜஸ்திதிக்கு தக்கதாக அரசகுலத் தாருக்கும், மந்திரிகளுக்கும் ராஜ சேவகர்களுக்கும் குடிமக்களுக்கும் விருந்து அளிக்கப்படும். பழைய ஏற்பாட்டுக் காலத்து அரசர் களில் பலரும் பல மனைவி களைக் கொண்டிருந்தனர். மறுமனையாட் டிகள் என அழைக்கப்படும் இவர்களுக் கென அரண்மனையில் ஒரு தனிப்பகுதி ஒதுக்கப் பட்டிருந்தது. அந்தப்புறம் என அழைக்கப்பட்ட அந்தப்பகுதிக்கு விசேஷித்த காவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். பெண்களைத் தவிர வேறொருவரும் அப்பகுதிக்குள் பிரவேசிக்க அனுமதி கொடுக்கப்படுவதில்லை.

ஒரு அரசன் பல மறுமனையாட்டிகளைக் கொண்டிருப்பது அவனது வல்லமைக்கும் செல்வத்திற்கும் அடையாளமாய் இருந்தது. மட்டுமல்ல, பிற தேசங்களோடு அரசியல் ரீதியான உறவு வைத்துக் கொள்ளும்படியாகவும் இப்படி அந்த தேசத்தின் ராஜ குமாரத்திகளை திருமணம் செய்வது வழக்கம். சவுலுக்கு பல மனைவிகள் இருந்தனர் (2சாமு.12:8). தாவீது எபிரோனிலிருந்த போது அவனுக்கு ஆறு மனைவிகள் இருந்தனர். எருசலேமுக்கு வந்த பின்னர் இன்னும் மறுமனை யாட்டிகளைக் கொண்டான் (2சாமு.5:13). ரெகொபெயாமுக்கு 18 மனைவிகளும் 60 மறுமனையாட்டிகளும் இருந்தனர் (2நாளா. 11:21). ஆனால் இவர்கள் அனை வரைக் காட்டிலும் சாலொமோன் அரசன் பல தேசத்தாரோடு அவன் வைத்திருந்த உடன்படிக்கைக்கு அடையாளமாக 700 மனைவிகளையும் 300 மறுமனையாட்டி களையும் கொண்டிருந்தான் (1இரா. 11:3).

ஒரு தேசத்தோடு உடன்படிக்கை செய்வதற்கு அடையாளமாக அந்த ராஜ குடும்பத்தோடு சம்மந்தம் கலப்பது இஸ்ரவேல் தேசத்தில் மட்டுமல்ல மற்ற தேசங்களிலும் வழக்கமாய் இருந்தது. இதினிமித்தம் அந்த ராஜாக்கள் இவர் களுக்கு சகல உதவிகளையும் செய்து யுத்தகாலத்தில் தங்கள் ராணுவங்களையும் அவர்களுக்கு உதவியாக அனுப்பி வைப்பர். தாவீது கேசூரின் ராஜாவுடைய சகா யத்தைப் பெறும்படி அவனது மகளாகிய மாக்காளை திருமணம் செய்து கொண் டான் (2சாமு.3:3) எனக் கூறப்படுகிறது. சாலொமோனும் எகிப்து ராஜாவாகிய பார்வோனின் உதவியைப் பெறும்படிக்கு அவனது மகளை திருமணம் செய்தி ருக்கக்கூடும் (1இரா.3:1).

இஸ்ரவேலின் ராஜாவும் ஆகாபின் தகப்பனுமாகிய உம்ரி தன் குமாரன் ஆகாபை சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தியாகிய யேசபேலுக்கு விவாகம் செய்து கொடுத்தான் (1இரா.16:31). அவர்களுடைய குமாரத்தியாகிய அத்தாலியாள் யூதாவின் ராஜாவாகிய யோராமுக்குக் கொடுக்கப்பட்டாள் (2இரா.8:26). இந்தத்திருமண ஒப்பந்தங்களானது வடக்கு தெற்கு நாடுகளின் அரசர்களுக் கிடையேயான ஒப்பந்தமாகவே இருந்தது. ஆனால் இந்த ஒப்பந்தங்கள் யூதாவின் அழிவுக்கு காரணமாய் இருந்தன (2இரா.11:1–2).

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் அரசர்களின் எந்த மனைவியரும் அரசி அல்லது ராஜஸ்தீரி என அழைக்கப்படவில்லை. ஆனால் பிற தேசத்திலுள்ள அரசர் களின் மனைவியர் ராஜஸ்தீரி என அழைக்கப்பட்டனர். சேபா தேசத்து ராஜஸ்தீரி (பெர்சிய தேசத்து ராஜஸ்தீரி) உன்னதப்பாட்டிலே ராஜஸ்தீரிகள் என்ற வார்த்தை சாலொமோனின் மனைவியர்க்கு பயன்பட்டிருக்கிறது (உன்.6:8). ராஜாக்களின் தாய்மார்கள் சில இடங்களில் ராஜாத்திகள் என அழைக்கப்பட்டனர் (1இரா.11:13 ; எரே. 29:2).

**7. ரோம ஆட்சியும் யூதரும் ( OROMAN GOVERMENT & JEWS) :–** பாபிலோனியரால் எருசலேம் தேவாலயம் அழிக்கப் பட்ட பின்பு யூதர்கள் தங்களுக்கென ஒரு சுதந்தரமான ராஜ்யத்தை அனுபவிக்க முடியாதபடி வாழ்ந்தனர். இவர்கள் நாட்டை ஜெயித்த அரசர்களே இவர்களை ஆளத்துவங்கினர். முதலாவது பெர்சிய பேரரசின் கீழும் அதன் பின்பு மகா அலெக் ஸாண்டர் அவனுடைய வழிவந்த ஆட்சியின் கீழும் வாழ்ந்து வந்தனர். இவர்களது நாட்களில் யூதர்கள் மிகுந்த உபத்திரவத்தை அடைந்தனர். மக்கபேயர்களின் கீழ் வாழ்ந்த காலத்தில் மாத்திரமே சற்று சுதந்திரத்தை அனுபவித்தனர். அதைத் தொடர்ந்து ரோமர்களின் ஆட்சிக் காலத்தில் அடிமைகளைப் போல நடத்தப்பட்டனர்.

கி.மு.63–ல் பம்பேயி ஒரு தேசாதிபதியை பாலஸ்தீனியருக்கென நியமித்தான். கி.மு.47–ல் இதுமேயர் வழி வந்த அந்திபத்தேர் (Antipater) என்ற யூதனை ஜூலியஸ் சீஸர் யூதேயாவின் மேல் தேசாதிபதியாக நியமித்தான். அந்திபத்தேர் அவனது குமாரனாகிய ஏரோதை கலிலேயாவின் மேல் அதிபதியாய் நியமித்தான்.

ஏரோது தனது திறமையினாலும் சாமர்த்தியத்தினாலும் ரோம கவர்னரது மனதைக் கவர்ந்து கொண்டான். யூதேயாவை ஆட்சி செய்த பார்த்தியன் அந்திகோனஸ் (Parthian Puppet Antigonus)–ஐ கி.மு.40 முதல் 37ல் இவன் வென்ற படியால் ரோம சட்டத்தின்படி இவன் யூதர்களின் அரசனாய் நியமிக்கப்பட்டான். எனவே இவன் மகா ஏரோது என அழைக்கப்பட்டான். மட்டுமல்ல இவன் தேசத்தின் வடக்கு கிழக்கு எல்லைகளை விரிவாக்கின படியால் மேலும் ரோம அரசின் நன்மதிப்பைப் பெற்றான். கி.மு.4–ல் இவன் மரித்தபின் இவனது ராஜ்யம் அவனது மூன்று குமாரர்களின் வசமாய்த் திரும்பியது.

இதுவரை இஸ்ரவேலருடைய பழைய ஏற்பாட்டு கால வாழ்க்கைமுறையில் காலங்கள், அளவுகள், வஸ்திரங்கள், அணிகலன்கள், வீடு வாசஸ்தலங்கள், குடும்ப வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை, பண்டிகைகள்,பண்ணைவேலைகள், தொழில் வர்த்தகங்கள், வியாபாரம் மற்றும் அரசியல் வாழ்க்கை போன்ற பல்வேறுபட்ட தலைப்புகளில் செய்திகளை ஆராய்ந்தோம். இந்த செய்திகள் அனைத்தும் உங்களது வேதாகம அறிவை விரிவாக்கியிருக்கும் என்றும் உங்கள் பிரசங்க ஊழியங்களுக்கும் பேருதவியாய் இருக்குமென்றும் கிறிஸ்துவுக்குள் நம்புகின்றேன், இதன் மூலம் நீங்கள் பெற்ற நன்மையையும் இப்புத்தகம் உங்களுக்கு எந்த வகையில் உதவியாயிருக்கிறது என்பதையும் எனக்கு எழுதி தெரிவியுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதித்து பயன்படுத்துவாராக.

**Bible Calls**
வெளியிடும்

# ஆசிரியரின் பிற நூல்கள்


1. வேதாகம விளக்கம் – புதிய ஏற்பாடு
2. வேதாகம விளக்கம் – பழைய ஏற்பாடு
3. வேதாகம அகராதி
4. வேதாகம கால வாழ்க்கை முறை
5.வேதாகமக் குறிப்புகள்
6. பரலோகம் எப்படி இருக்கும் ?
7. நரகம் எப்படி இருக்கும் ?
8. எப்படி ஜெபிக்கவேண்டும் ?
9. எப்படி ஜெபிக்கக்கூடாது ?
10. அசுத்த ஆவிகள் என்ன செய்கின்றன ?
11. தேவதூதர்கள் என்ன செய்கிறார்கள்?
12. மரணத்திற்குப் பின் நடப்பது என்ன?
13. இயேசுவின் டைரி
14. இஸ்ரவேல் கோத்திரக் குறிப்புகள்
15. நெறிந்த நாணல்
16. துர்உபதேசங்கள்
17. ஜெபவாழ்க்கை
18. ஜெபவாழ்வை வளமாக்கும் வழிகள்
19. Dictionary of Bible Names
20. Dictionary of Baby Names
21. Golden Words (Quotations)

# இயேசுவின் இயக்கம்

THE JESUS MISSION

P.O. BOX. 1040, CHENNAI-10, INDIA.
Tel : 91-44-49578080 Cell : 9444498080, 9244448080,
E-mail : thejesusmission@yahoo.com website : www.thejesusmission.org

இயேசுவின் இயக்கம் என்ற இவ்வூழியம் இயேசுவின் அன்பையும், இயேசுவின் வார்த்தையையும், பூமியின் கடைசி மனிதனுக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற தரிசனத்தோடு ஸ்தாபிக்கப்பட்டதாகும்.



## சகோ. Dr. ஆன்ட்ரு தேவ்
## Dr. ஜெயராணி ஆன்ட்ருதேவ்

* நற்செய்திக் கூட்டங்கள் * வேதாகமப் பயிற்சிக் கல்லூரி
* வேதாகம கருத்தரங்கு * பெண்கள் ஊழியம் * இலக்கிய ஊழியம்
* தொலைக்காட்சி ஊழியம் * மருத்துவ முகாம் * கைம் பெண்களுக்கான ஊழியம்

**பைபிள் கால்ஸ் - வேதாகமப் பயிற்சிக் கல்லூரி**

* விசுவாசிகளுக்கான வேதாகமக் கல்லூரி * வாலிபருக்கான வேதாகமக் கல்லூரி
* சிறுவர்களுக்கான வேதாகமப் பயிற்சி * அஞ்சல் வழி வேதாகமக் கல்லூரி

**இம்மாபெரும் பணிக்கு தங்களின் ஜெபமும், ஆதரவும் தேவைப்படுகின்றன.**

உங்களுக்காக நாங்கள் எப்பொழுதும் ஜெபிக்கிறோம் ...

**எமது வங்கி விபரங்கள்:**

*The Jesus Mission, A/C No: 747045396,*
*Indian Bank, Kellys, Chennai - 600010*
*IFS Code: IDIB000K071 / Swift Code : IDIBINBBTSY*

**Watch our Bible TV - www.bibletv.tv**

ANDREW DEV'S

# BIBLE TIMES LIFE STYLE

இது கதை அல்ல நிஜம் !

ஒரு இனத்தின் வாழ்வியல் - எப்படி உலகமனைத்தையும் கவர்ந்திழுத்தது என்பதைக் கூறும் காவியம்.

இது சிந்துசமவெளி நாகரீகமல்ல - மாறாக ஒவ்வொரு மனிதனுக்காகவும் ரத்தம் சிந்தின ஒரு இரட்சகர் வம்சத்தின் நாகரீகம்.

இது ஆதிகால சரித்திரமட்டுமல்ல - ஒவ்வொரு கிறிஸ்தவரும் அறிந்துக் கொள்ள வேண்டிய இஸ்ரவேல் மக்களின் சரித்திர பின்னணியின் கலாச்சாரம்.

இப்புத்தகம் உங்களை இஸ்ரவேலைச் சுற்றிப்பார்க்க அழைக்கவில்லை. இஸ்ரவேலிலே தங்கி வாழும் அனுபவத்தை அளித்துவிட அழைக்கிறது...



சகோதரர் ஆன்ட்ரு தேவ் தேவனால் பயன்படுத்தப்படும் பாத்திரமாவார். இவரும் இவரது துணைவியார் டாக்டர் ஜெயராணியும் இறைவனின் சேவைக்காய் தங்களை முழு நேரமாய் அர்ப்பணித்தவர்கள்.
"இயேசுவின் இயக்கம்" (The Jesus Mission) என்ற ஊழியத்தின் ஸ்தாபகரான இவர், "பைபிள் கால்ஸ்" (Bible Calls) என்ற வேதாகம கல்லூரியின் நிறுவனராகவும் இருக்கிறார்.

இப்புத்தக ஆக்கியோன் கூட்டங்களில் பிரசங்கிப்பதோடு எழுத்துப்பணியிலும் கவனம் செலுத்தி வருகிறார். எளிய நடையுள்ள இவரது புத்தகங்கள் அனைத்தும் கிறிஸ்தவ உலகிற்கு மிகுந்த ஆசீர்வாதமாய் இருப்பதோடு இறையியல் கல்லூரி மாணவர்களுக்கும் சபைப் போதகர்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாய் இருக்கின்றன.

THE JESUS MISSION
Chennai, India

Bible Calls
Publications